அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா எழுந்திராய்
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே குல விளக்கே
எம்பெருமாட்டி யசோதாய் அறிவுறாய்
அம்பரம் ஊடு அறுத்து ஓங்கி உலகளந்த
உம்பர் கோமானே! உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா
உம்பியும் நீயும் உறங்கேல் ஓர் எம்பாவாய்

ஆண்டாள் அருளிய திருப்பாவை, வீட்டையே நிரப்பிக் கொண்டிருந்தது.

மார்கழி மாதக் குளிரில் ஆனந்தமாய் உறங்கிக் கொண்டிருக்கும் எம்பிரானை எழுப்புகையில் அவர் கோபம் கொண்டு விடக் கூடாதே என அச்சம் கொண்டு, அவரது புகழ் பாடி... அவர் திருவடி பற்றி என அவரது நெஞ்சைக் குளிர்விக்க நினைத்தாள் போலும், அந்தச் சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாள்!

"கோவிந்தா!" என்று கூவியழைக்கும் பக்தனின் குரல் கேட்டால், ஆடி ஓய்ந்து படுத்திருக்கையில் கூட, ஓடி வந்து உதவி செய்யும் மாதவன், தன் மனம் கவர்ந்த ஆண்டாள் அழைக்கும் போது, சங்கடப்படுவானா என்ன?

ஆண்டாள் அனுபவித்து எழுதிய வரிகளின் அர்த்தத்தை முழுதாய் உணர்ந்து, அச்சரம் பிசகாமல் பாடிக் கொண்டிருந்தார் ராஜகோபாலன்!

கிருஷ்ணன் என்றால் அத்தனை இஷ்டம் அவருக்கு!

மகன்கள்... பேரன்கள்... பேத்திகள் என்று அனைவருக்குமே ராமநாமம் தான்!

மூத்தவர் - நாராயணன்.

Sitalakshmi's

நடுவே பிறந்தவர் - சேதுமாதவன்.

இளைய மகன் - கமலக்கண்ணன்.

மூத்தவருக்கு ஒரு மகள் (கோதை), ஒரு மகன் (பாலாஜி).

அடுத்தவருக்கு ஒரே ஒரு மகள் - வைஷ்ணவி.

இளையவருக்கு ஒரே ஒரு மகன் - ஸ்ரீனிவாசன்.

அனைவரும் கூட்டுக் குடும்பமாய் ஒன்றாய் வாழ்ந்து வருகின்றனர்.

கிருஷ்ணப் பரமாத்மாவின் பரம பக்தரான ராஜகோபாலன் அவர்களின் குடும்ப அங்கத்தினரது பெயர் அறிமுகம் முடியும்போதே , திருப்பாவையின் இருபத்தியாறாம் பாசுரம் அச்சர சுத்தமாய் பூஜையறையில் இருந்து ஒலிக்கத் தொடங்கிவிட்டது.

"மாலு... சீனுவை எழுப்பிட்டியாடிம்மா?! அப்பா... பூஜை முடிச்சிட்டு வரதுக்குள்ள அவனை ஸ்நானம் பண்ணிட்டு வரச் சொல்லுடி!" என்று பரபரத்தாள், மூத்த மன்னி சாவித்திரி.

"இதோ... போறேன் மன்னி" என்று வேகமாய் இளைய மகனின் அறைக்குள் ஓடினாள், மாலதி. இவர் தான், அந்த வீட்டின் இரண்டாவது மாட்டுப்பெண்.

"டேய்... சீனு! எழுந்திருடா ராஜா! தாத்தா... பூஜை முடிக்கப் போறாருடா கண்ணா... நீ இன்னும் தூங்கிட்டு இருக்கது தெரிஞ்சா... தாம் தூம்ன்னு கத்துவார்டா... ராஜா... எழுந்துக்கோ!" - கட்டிலில் குப்பறடித்துப் படுத்திருந்த இளைய மகனை வேகவேகமாய் எழுப்பினார்.

Sitalakshmi's

“ப்ச்… போங்கோ மாலும்மா! காலேஜ் இருக்கும் போது தான்… தூங்க விட மாட்றீங்கன்னா.. இப்பையுமா?” என்று எரிச்சல் கொண்டபடி, மீண்டும் புரண்டு படுத்தான் ஸ்ரீனிவாசன். வீட்டிற்கு ஒன்று இப்படி இருக்க வேண்டும் போல!

“டேய் கண்ணா! சொன்னாக் கேளுடா… மார்கழி மாசம்… திருப்பள்ளியெழுச்சிக்குப் போகாட்டியும் பரவாயில்லை. பொழுது விடியுறதுக்கு முன்னாடி… பெருமாளையாவது சேவிச்சுக்கோடா. கோடி புண்ணியம் வந்து சேரும் தெரியுமோ?!”

“எனக்கு கோடிக் கணக்கில எல்லாம் புண்ணியமே வேணாம்… கொஞ்சம் போதும். அந்தக் கொஞ்சம்… ஏழு மணிக்கு எழுந்துட்டாலே கிடைக்கும் மாலும்மா…” – ஸ்ரீனி படுக்கையை விட்டு நகர்வதாய் இல்லை.

“பாலாஜி… காலங்கார்த்தாலே எழுந்து… ஸ்நானம் பண்ணிட்டு… பஜனை பாடப் போய்ட்டான்டா! அவனை மாதிரி பஜனைக்குப் போகாட்டியும் போகுது… வீட்டிலயாவது சாமியை சேவியேன்டா…” – விடாமல் பெருமாளின் பக்தியைப் பரப்ப முயன்றாள் மாலதியும்.

“நா ஏற்கனவே சொல்லியிருக்கேன்… பாலாஜி ஒரு தயிர்சாதம்… இந்த ஸ்ரீனி ஒரு சிக்கன் பிரியாணி! அவனை மாதிரியெல்லாம்… என்னால ஜிங்-ஜக் அடிக்க முடியாது” – கோபமாய் வந்தது ஸ்ரீனியின் பதில்.

“அபச்சாரம்! அபச்சாரம்! கிருஷ்ணன் பேரைச் சொல்ல வேண்டிய நேரத்தில… கண்ட கருமத்தையும் சொல்லிண்டு இருக்கியே! பெருமாளே! இந்தப் புள்ளைக்கு… நல்ல புத்தியைக் கொடுக்கப் படாதா?” – வான் நோக்கி கை உயர்த்தி பிரார்த்தித்தார் மாலதி.

“ஹய்யோ! மாலும்மா… அங்க பெருமாள் இல்ல… சீலிங் ஃபேன் தான் இருக்கு… நீங்க கேட்கிற நல்ல புத்தியெல்லாம் அதாண்ட இருக்காது… என்னடா நம்மட்ட இல்லாததை கேட்கிறாளேன்னுட்டு… டொம்முன்னு

Sitalakshmi's

மண்டை மேல விழுந்துடப் போறது! விலகி நில்லுங்கோ!" – ஒருவழியாக படுக்கும் நிலையிலிருந்து உட்காரும் நிலைக்கு மாறியிருந்தான் ஸ்ரீனிவாசன்.

"என் மண்டை மேல ஏன்டாப்பா விழப் போறது? உம் மண்டை தான்... நடுவாப்ல இருக்குது... நல்லா நங்குன்னு விழட்டும்" என்ற மாலதிக்கு சற்றே எரிச்சல் மேலோங்கியது. இவனுடன் மல்லுக்கட்டும் வேலையைத் தன்னிடமே தள்ளும் சாவித்திரியின் மீது கொஞ்சம் கோபம் கூட வந்தது.

"என்னவோ... போடாப்பா, தினமும் தாத்தாட்ட திட்டும் வசவும் வாங்கிக் கட்டிக்கிறியேன்னுட்டு... எழுப்ப வந்தேன். இன்னைக்கும்... திட்டு வாங்குறது தான் உன் விதின்னா... யாரால மாத்த முடியும்" என்று நீட்டி முழக்கிவிட்டு, அறையைவிட்டு வெளியே சென்றுவிட்டார்.

ஒரு மனுஷிக்கும் எவ்வளவு தான், பொறுமை இருக்கும்?!

எதைச் சொன்னாலும்... "ப்ச்... போங்க...", "ஹய்யோ... முடியாது!", "ஒரே போர்!", "நா வரலைப்பா!", "நீங்க போயிட்டு வாங்க. நா வீட்டிலேயே இருக்கேன்...", "எனக்குப் பிடிக்கலை" என்று எதிர்மறையாகவே பேசிக் கொண்டிருந்தால், எரிச்சல் வருவது சகஜம் தானே!

ஸ்ரீனி, ஒரு தனிமை விரும்பி!

அவனுக்கென்று ஒரு உலகம்! அவனுக்கென்று சில பல கருத்துக்கள்! அவனுக்கென்று, பொருக்கி எடுத்தார் போல் இரு நண்பர்கள்! அவனுக்கென்று சில சட்டங்கள்! பற்பல திட்டங்கள்!

அதற்குள் குறுக்கே வரும் யாரையும், அவன் மதித்ததாய் சரித்திரமே இல்லை! ராஜகோபாலன் உட்பட!

Sitalakshmi's

அதற்கு எடுத்துக்காட்டு போல், ராஜகோபாலனின் "சீனு! டேய் சீனு!" என்ற அழைப்பிற்கு, "ம்ம்ம்... வரேன்" என்ற முணுமுணுப்பும், ஆடி அசைந்து அவன் படுக்கையை விட்டு எழுந்து சென்றதுமே எடுத்துக் காட்டு.

சுற்றிலும் தோட்டமும், நடுவே பெரிய வீடுமாய் அமைந்திருக்கும் அந்த வீட்டின் முடிசூடா மன்னர் – ராஜகோபாலன், நடுநாயகமாக போடப்பட்டிருக்கும் சோபாவில் கால் மேல் கால் போட்டு அமர்ந்து, ஒரு கையில் பேப்பரும் மறு கையில் காப்பியுமாய், பேரனை அழைத்தார்.

அவர் அழைத்து, ஐந்து நிமிடங்கள் கழித்து வந்த மகனை, கண்ணாலேயே எரித்துவிடுபவர் போல் பார்த்துக் கொண்டிருந்த கமலக்கண்ணனை அலட்சியமாய் ஒரு பார்வை பார்த்த ஸ்ரீனிவாசன்,

"என்ன? கூப்பிட்டீங்க!" என்றான் எங்கோ பார்த்துக் கொண்டு.

"கூப்பிட்டது நா(ன்)! சட்டத்தில இருக்க... உங்க பாட்டி இல்ல!" – பட்டென வந்தது பெரியவரின் பதில்.

"அதான்... வந்துட்டேன்ல்ல! என்னன்னு சொல்லுங்க..." பின் தலையைக் கையை அலைந்தபடி பேசினான் ஸ்ரீனிவாசன்.

"டேய்! அவரு... உனக்குத் தாத்தாடா! அந்த மரியாதை கொஞ்சம் கூட இல்லாம... ஒழுங்கா மரியாதையா பேசு" – பொறுக்க முடியாமல் இடையே புகுந்தார் கமலக்கண்ணன்.

"கமலக்கண்ணா!" – அந்த ஒரு அதட்டலில், தந்தையாரின் பேச்சு நின்று விட, மகனின் பாவனை தான் மாறியபாடாய் இல்லை.

"இந்த மாசம்... கிருஷ்ணனுக்கு உகந்த மாசம். இந்த மாசத்தில... காலங்கார்த்தால எழுந்து... திருப்பள்ளியெழுச்சி பாடி அவனை

Sitalakshmi's

எழுப்பிவிட்டா... நம்ம வாழ்க்கையில கஷ்டமே எழும்பாதுங்கிறது என்னோட நம்பிக்கை. அந்த நம்பிக்கைக்கு மதிப்பு கொடுத்து... இந்த வீட்டில எல்லாரும் எழுந்து வந்து... சுவாமி தரிசனம் பண்ணிட்டாங்க. வராத... ஒரே ஜீவன் நீ மட்டும் தான்" – "நீ செய்தது தப்பு" என்பதை தெள்ளத் தெளிவாய் விளக்கினார் பெரியவர்.

"அதுக்கென்ன இப்போ?" என்பது போல், ஒரு விரலால் காதைக் குடைந்தபடி, தோட்டத்தில் அசைந்து கொண்டிருந்த அல்லி மலர்ச்செடியை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான் ஸ்ரீனி.

"உன்ட்ட... தான்பா பேசுறேன்" என அவர் மீண்டும் கனைக்க,

"கேட்டுட்டுத் தான் இருக்கேன். உங்களோட திட்டு முடிய... இன்னும் பத்து டயலாக் இருக்கு... அதையும் சொல்லி முடிச்சீங்கன்னா... நா பாட்டுக்குப் போவேன்" – சாவதானமாய் சொன்னான் சீனு.

"அப்படியென்னப்பா... எங்க மேல உனக்கு வெறுப்பு?" – வெளிப்படையாகவே கேட்டார் ராஜகோபாலன்.

"வெறுப்பெல்லாம் இல்ல! நீங்களா ஏதாவது யூகம் பண்ணிக்காதீங்கோ! என்னை என் போக்கில விடுங்க... அவ்வளவு தான்" – நறுக்கென வந்தது பேரனின் பதில்.

"உன் போக்கிலன்னா?" – விளக்கம் கேட்டார் பாட்டனார்.

"நானும் காலேஜ் முடிச்சுட்டேன். எனக்கும்... எது நல்லது... எது கெட்டதுன்னு தெரியும். சும்மா... சும்மா கூப்பிட்டு வச்சு அட்வைஸ் பண்ணிட்டே இருக்காதீங்க. போர் அடிக்குது" என்றான் ஸ்ரீனிவாசன், எரிச்சலை அப்பட்டமாய் முகத்தில் காட்டி.

Sitalakshmi's

“டேய்!!” – தந்தையின் அதட்டலையும் மீறி, கமலக்கண்ணன் குரல் உயர்த்த,

“நாராயணா… இவனை வெளிய அழைச்சிண்டு போ” என்று பெரிய மகனுக்கு ஆணை பிறப்பித்தார் பெரியவர்.

“சரிப்பா… பெரிய மனுஷா! இனிமேல் உனக்கு… நா அட்வைஸ் பண்ணல” என்ற ராஜகோபாலன்,

“நா… யாருக்கும் தப்பான வழில போறதுக்கு அட்வைஸ் பண்ணதில்லை. நல்லா வாழத் தான்… வழி காட்டியிருக்கேன். நா காட்டின வழில போன… உன்னோட பெரியப்பா (நாராயணன்) செக்ரட்டேரியட்ல பெரிய போஸ்ட்ல இருக்கான்… உன்னோட சேதுப்பா (சேது மாதவன்) ஆடிட்டிங்ல கொடி கட்டிப் பறக்கிறான்… உன்னோட அப்பா பேங்க்ல ரீஜனல் ஹெட்டா இருக்கான். உன்னோட அண்ணன்… ஐ.ஏ.எஸ் பாஸ் பண்ணிட்டு… கலெக்டர் போஸ்டிங்காக வெயிட் பண்ணிட்டு இருக்கான்… யாரும் சோடை போகலைடாப்பா” எனப் பட்டியல் வாசிக்க,

“ஹோ! காட்! இதை… இதைத் தான் சொன்னான்! தயவு செஞ்சு… இப்படிப் பேசி… போர் அடிக்காதீங்க…” என்று கையெடுத்துக் கும்பிட்டான் ஸ்ரீனிவாசன்.

“சரிடாப்பா! நா படிக்கச் சொன்ன ஆடிட்டிங்கை தூக்கிப் போட்டுட்டு… கம்ப்யூட்டர் இன்ஜினியரிங் தான் படிப்பேன்னு படிச்சியே? இப்ப… என்னத்த கிழிச்சிட்டே? இன்னமும்… வேலை எதுவும் கிடைக்காம… வீட்டில உக்காந்துண்டு இருக்கே?! நா… சொல்றபடி ஆடிட்டிங் படிச்சிருந்தா… உங்க பெரியப்பனோட ஆபீஸ்லேயே வேலைக்குப் போயிருக்கலாம் இல்ல…” என்று அம்பைக் குறி பார்த்து எய்தார் பெரியவர்.

சுறுசுறுவென முகம் சுருங்கிவிட, “இன்னும் ரெண்டு நாளில… பெங்களூர்ல எனக்கு ஒரு இண்டர்வ்யூ இருக்கு. அதில… எனக்குக் கண்டிப்பா வேலை கிடைக்கும்” என்று சூளுரைத்தான் ஸ்ரீனிவாசன்.

Sitalakshmi's

“மொதல வேலை கிடைக்கட்டும். அப்புறம் பாப்போம்” என்றார் ராஜகோபாலனும், சற்றே ஏளனமாய்.

“இன்னும் ஒரே மாசத்தில... நா ஒரு வேலைக்குப் போய்க் காட்டலை... என் பேரு ஸ்ரீனிவாசன் இல்ல” – சபதமே போட்டான் இளையவன்.

“ஹஹஹா!” என்று சிரித்த பெரியவர்,

“இன்னும் ரெண்டு நாளில வேலை கிடைச்சிடும்ன்னு ரெண்டு நிமிஷத்துக்கு முன்னாடி சொன்னவன், இப்ப என்னடா ஒரு மாசத்துக்குத் தாவிட்ட?! உம்மேலேயே உனக்கு நம்பிக்கை இல்லையா?” என்றார் நக்கலாய்.

என்ன பதில் சொல்வதென்று தெரியாமல், ஸ்ரீனிவாசன் பல்லைக் கடிக்க, “பேரை மாத்துறதா இருந்தா... வேற பேருக்குத் தேடி அலையாத. என் பேரையே வச்சுக்கோ. ஷேமமா இருப்பே!” என்றார் கிண்டலாய்.

“ச்ச்சே!!” – வந்த கோபத்தில் அருகே இருந்த சோபாவின் மீது ஓங்கிக் குத்தினான், ஸ்ரீனிவாசன்.

“சரி... அதை விடு! இந்த வார சனிக்கிழமை... மேல்கோட்டைக்குப் போய்... நம்ம குலதெய்வத்தை தரிசனம் பண்ணிட்டு வரலாம்ன்னு நினைச்சேன். நீ வர... தானே? பெங்களூர் போறன்னா... அங்க இருந்து பக்கம் தான்... அப்படியே வந்துடுறியா?” என்றார் அவர்.

ஒரு நிமிடம் கூட யோசிக்காமல் “இல்ல... நா வரலை!” என மறுத்தான் சீனு.

“அபிஷ்ட்டு! அசடு மாதிரி பேசாத! எம் மேல இருக்கக் கோபத்தை... ஏன் பெருமாள் மேல காட்டுறே? அங்க போயிட்டு வந்தாலே... உனக்கு நல்ல வேலை கிடைச்சிடும். உனக்கு நல்ல வேலை கிடைக்கணும்ன்னு பிரார்த்தனை பண்ணிடு இருக்கேன்... அதுக்குத் தான் எல்லாரும் போறோம்.

Sitalakshmi's

உனக்காக போகும் போது... நீயும் வந்தா நன்னா இருக்கும்டா" – கோபித்துக் கொண்டாலும், அவர் மனம் இளகியது என்பதற்கு இதுவே சான்று.

"நீங்க தானே... பிரார்த்தனை பண்ணின்டேள்! நீங்களே... போயிட்டு வாங்கோ! நா... வரல! எனக்கு... வேலை இருக்கு" – அவர் மனதைப் புரிந்து கொள்ளும் முயற்சியை சிறிதும் மேற்கொள்ளாமல், அங்கிருந்து நகர்ந்தான் ஸ்ரீனிவாசன்.

Sitalakshmi's

அடுத்த நாள் காலை.

காலை உணவை முடித்துக் கொண்டு, வேலைக்குச் செல்பவர்கள் அனைவரும் கிளம்பிச் சென்றுவிட, வீட்டில் சாவித்திரி... மாலதி... வைஷ்ணவி... ராஜகோபாலன் மற்றும் ஸ்ரீனிவாசன் மட்டுமே இருந்தனர்.

“வைஷூம்மா... தாத்தாட்ட இந்தக் காப்பியைக் கொடுத்திடுடி... கண்ணு” என்று சாவித்திரி நீட்ட, மறுக்காமல் அதை வாங்கிக் கொண்டு அடுக்களையை விட்டு நகர்ந்தாள் வைஷ்ணவி.

அடுக்களையைத் தாண்டி நொடியில், “ஹப்பா! காப்பியா? கொண்டா... கொண்டா... ஒரே தலைவலி!” என்றபடி, வைஷ்ணவியின் கையிலிருந்து காப்பி டபராவை வாங்கினான், சீனு. ம்ஹூம், பறித்தான்.

“டேய்... டேய்... அது தாத்தாவுக்கு டா...” என்று வைஷ்ணவி அலற,

“அப்படியா? அப்போ... முதல் டிக்காஷன் ஊத்தி கலந்திருப்பாங்களே! சூப்பர்!!” என்றவன், “ஷ்ஷ்ஷ்ஷ்!!” என்று ஆனந்தமாய் உறுஞ்சிக் குடித்தான் சீனு.

“ஐயோ... எச்சில் பண்ணி குடிக்கிறான்மா!” என்று வைஷ்ணவி முகத்தை அஷ்டகோணலாய் சுளிக்க,

“வவ்வேவே...” என அவளுக்கு அழகு காட்டிவிட்டு, ராஜகோபாலன் அமர்ந்திருந்த சோபாவுக்கு எதிர் சோபாவில் அமர்ந்தவன், காப்பியை “சர்...

Sitalakshmi's

சர்" என உறுஞ்சிக் குடித்ததோடு மட்டுமல்லாமல் கண்ணை மூடி ரசித்துக் கொண்டு வேறு இருந்தான்.

தலையில் ஓங்கி அடித்துக் கொண்ட ராஜகோபாலன், அவனிடத்தில் எதுவும் பேசவில்லை.

ஏதோ, பெருங்குற்றத்தைக் கண்டவள் போல் முகத்தில் அருவெறுப்பைப் படரவிட்டபடி நின்ற வைஷ்ணவியிடம் "வைஷூம்மா... தாத்தாக்கு வேற கப்பில காப்பி வாங்கிட்டு வாடா" என்றார், அவளைத் திசை திருப்பும் பொருட்டு.

அவள் அடுத்த டோஸ் காப்பியை எடுத்துவரும் வரை, ஸ்ரீனிவாசன் தன் காப்பியைக் குடித்து முடித்தபாடில்லை.

"அச்சோ... ஏன்டா இப்படி நடு வீட்டில உக்காந்திண்டு அபச்சாரம் பண்ணிடு இருக்கே! எழுந்து போயேன்டா!" என அவள் எரிந்து விழ,

"போ... முடியாது போடி! எனக்கும்... இந்த வீட்டில பங்கிருக்கு!" என்றான் சீனு, சட்டமாக.

"அப்போ... எனக்கில்லைங்கிறியா..." என வைஷ்ணவி சண்டைக்குப் போக,

"அவனை விட்டுத் தள்ளும்மா. நம்ம... பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் எப்படி இருக்குன்னு பாப்போம்..." என்றார் ராஜகோபாலன்.

Sitalakshmi's

“ஹ்ம்ம்” – மனமே இல்லாமல் சண்டையைக் கை விட்டவள், தாத்தாவின் காலடியில் அமர்ந்து கொண்டாள்.

தன்னருகே அமர்ந்திருந்த பேத்தியின் சிகையை அவர் பாசமாய் கோதிவிட, அவளோ அவரது முட்டிக்கால் மீது கை போட்டு, தலையை மடியில் வைத்துக் கொண்டு, செல்லம் கொஞ்சினாள்.

“என்னடா வைஷு… கண் லேசா சுடுதே! இந்த வாரம்… நல்லெண்ணெய் தேய்ச்சு ஸ்நானம் பண்ணிக்கலையாடா?” என்று அவர் அக்கறையாய் கேட்க,

“இல்ல தாத்தா! காலையில… நேரத்திலேயே குளிக்க வேண்டி இருக்கோ இல்லையோ… அதான் எண்ணெய் வைக்க நேரமில்ல…” என உதடு பிதுக்கினாள் செல்லப் பேத்தி.

"போடா கண்ணாட்டி… அம்மாட்ட நல்லெண்ணைய லேசா சூடு பண்ணித் தரச் சொல்லி எடுத்திண்டு வா. தாத்தா தலையில வச்சு விடுறேன்…" என அவர் கூற,

"நா… ஏற்கனவே ஸ்நானம் பண்ணிட்டேனே தாத்தா" என்றாள் வைஷ்ணவி, வேண்டுமென்றே ஸ்ரீனியைப் பார்த்துக் கொண்டு.

முடிந்த மட்டும் முறைத்த ஸ்ரீனியைப் பார்த்து லேசாய் நக்கலாய் சிரித்தவர், "பரவாயில்லடா கண்ணாட்டி… இன்னைக்கு விட்டா… நாளே இல்ல. நாளைக்கு நாம… ஊருக்குக் கிளம்பணுமோ இல்லையோ! வெளியூருக்குப்

Sitalakshmi's

போற அன்னைக்கு... எண்ணெய் வச்சு தலை முழுகக் கூடாது. அதனால... இன்னைக்கே தேய்ச்சி விடுறேன்..." என விளக்கினார் பெரியவர்.

"ஓகே! வாங்கிண்டு வரேன்!" எனச் சிட்டாய் பறந்தவள், எண்ணையுடன் வருவதற்குப் பதிலாக அன்னையுடன் வந்தாள்.

"அப்பா... கோவிலுக்குப் போயிட்டு வந்துட்டு...திரும்ப ஸ்நானம் பண்றது ஆச்சராம் இல்லையேபா" என்று சாவித்திரி இழுக்க,

"குழந்தைகளுக்கு நல்லதுன்னா...ஆச்சாரத்தை கொஞ்சம் அப்படி... இப்படி நகர்த்தி வச்சுக்கலாம் சாவித்திரி. இன்னைக்கு... எண்ணெய் வச்சு ஸ்நானம் பண்ணாது விட்டான்னா... உடம்பில சூடு ஏறிண்டே இருக்கும். ட்ராவல் பண்றது வேற... உடம்பு சூட்டைக் கிளப்பிவிடும்... அங்க வந்து வயித்து வலி... வாயி வலின்னா என்ன பண்றது சொல்லு ?!" என அவர் காரணக் காரியத்துடன் விளக்கிய ஐந்தே வினாடிகளில், மிதமாய் சுட வைத்த எண்ணையுடன் வந்து சேர்ந்தாள் சாவித்திரி.

வைஷ்ணவிக்கு... நல்ல நீண்ட... அதே சமயம் அடர்ந்த கூந்தல்.

இறுகப் பின்னியிருந்த கூந்தலை அவள் பிரித்துவிட்டுக் கொண்டு அமரவும், கிண்ணத்திலிருந்த நல்லெண்ணையை கையைக் குழியாய் வைத்து ஊற்றிய ராஜகோபாலன், உச்சியில் அதை ஊற்றி, நன்றாக தேய்த்துவிட்டார்.

உச்சியில் தேய்த்ததும், முடியைக் கொஞ்சம் கொஞ்சமாய் ஒதுக்கி, வேர்களில் எண்ணெய் படும் படி, அவர் அழுத்தத் தேய்க்கத் தேய்க்க, வைஷ்ணவியின் கண்கள் சொருகிக் கொண்டே வந்தன.

Sitalakshmi's

"சூப்பரா இருக்கு தாத்தா!" என்றவள் ஒரு ஏகாந்த நிலைக்குச் சென்று கொண்டிருக்க, இதையனைத்தையும் காப்பி காலியானது கூடத் தெரியாமல் பார்த்துக் கொண்டிருந்த சீனு, கடுப்பு நிலைக்குச் சென்று கொண்டிருந்தான்.

"தாத்தா... அப்படியே... சதக்... சதக்ன்னு புடலங்காய் வெட்டுற மாதிரி செய்வேளே! அப்படி செய்ங்கோ தாத்தா!" என்று வைஷ்ணவி சொல்லிக் கொண்டிருக்க,

"ஏய்... வைவா! எழுந்திரு!" என்று அவளைப் பிடித்து இழுத்து விட்டான் சீனு.

"லூசு... லூசு... ஏன்டா தடிமாடு தள்ளி விட்டே? எவ்ளோ சூப்பரா இருந்துச்சு தெரியுமா?" என்று கடிந்து கொண்ட வைஷ்ணவி, மீண்டும் தாத்தாவின் காலடியில் அமர்வதற்கு முற்பட, அவளை ஒரு கையால் விலக்கிவிட்டு, அவள் அமர்ந்திருந்த இடத்தில் தான் அமர்ந்து கொண்டான் ஸ்ரீனிவாசன்.

சப்பணமிட்டு அமர்ந்திருந்தவன், ஒரு முறைக்கு இரு முறை உடம்பைக் குலுக்கிக் கொண்டு தன் நிலைப்பாட்டை உறுதி செய்துகொள்ளவேறு செய்தான்.

அதுவரையிலும், ராஜகோபாலனிடமிருந்து எந்தவிதமான எதிர்ப்போ... இசைவோ வராது போகவே, கழுத்தை மட்டும் திருப்பி அவரைப் பார்த்தவன், "அவளுக்கு மட்டும் தான் மசாஜ் பண்ணி விடுவீங்களா? எனக்கும் பண்ணுங்க" என்றான் சட்டமாக.

Sitalakshmi's

வைஷ்ணவியோ "ஹான்... பாருங்க தாத்தா... என்னைத் தள்ளிவிட்டுட்டு... இவன் உக்காந்துட்டான்... அவனுக்குப் பண்ணாதீங்கோ! சொல்லிட்டேன்!" என்று அழுகையும் அடமுமாய் நின்றிருந்தாள்.

"கொழந்தே ஆசைப்படுறான்டா... கண்ணாட்டி! அவனுக்குப் பண்ணி விட்டுட்டு... உனக்கு இன்னொரு வாட்டி செஞ்சு விடுறேன்..." என்று சமாதானம் செய்தபடியே, கிண்ணத்திலிருந்த எண்ணெயைக் கையில் ஊற்றி, பேரனின் உச்சந்தலையில் வைத்தார்.

கருத்து அடர்ந்திருந்த சிகைக்குள் கைகளைக் கொடுத்து, எண்ணெயை நன்றாகப் படர விட்டவர், பேசாமலிருந்தது சிற்சில நிமிடங்களே!

"என்னடா இது? குருவிக் கூடு மாதிரி இவ்ளோ முடி வச்சிருக்கே?"

"சவரம் பண்ணிக்கிற கடைக்குப் போய்... எத்தனை மாசம் ஆச்சுடா?"

"உன் தோப்பனார்... நன்னா தான்டா சம்பாதிக்கிறான். நீ... அம்பட்டையனுக்கு கொடுக்கிறதுக்கெல்லாம் கணக்கு பண்ண வேண்டியதில்ல..."

"அவன்ட்ட இல்லைன்னாலும்... இந்த ராஜகோபாலன் கஸ்டம்ஸ்ல இருந்து ரிடையர் ஆனவன் தான். அவன்ட்டையும் பணம் இருக்கு! நீ... யோசிக்காம முடியைச் சீர் பண்ணிக்கலாம்"

Sitalakshmi's

“வைஷு குட்டி… இந்த அமேஸான் காடு… அமேஸான் காடுன்னு டிவில எல்லாம் சொல்றாளே… அது மாதிரி இருக்குடி உன் அண்ணாவோட முடி! கையை விட்டா வெளிய வரவே மாட்டேங்கிறது!”

“முடி தான்… இவ்வளவு இருக்கு… எண்ணெயாச்சும் தாராளமா வைக்கப்பிடாதாடாப்பா?! பர… பரன்னு வைக்கப் போரு மாதிரி…”

“இந்தத் தலைக்குள்ள போயிட்டு வந்தா… சீப்பே ஹாண்டிகாப் ஆகிடும் போலடி குழந்தே!” – எண்ணெய் முடியில் பரவியதோ இல்லையோ, ராஜகோபாலனின் பேச்சில்… ம்ஹூம் உபதேசத்தில் சீனுவின் உடம்பில் சூடு பரவியது! சூடு குறைவதற்குப் பதிலாக, சூடு ஏறியது! உடல் சூடு இறங்க, வாலிபச் சூடு ஏறியது!

ஒரு கட்டத்தில், “அச்சோ… கடவுளே! விடுங்க! உங்க மாசாஜும் வேணாம்! உங்க மேசஜும் வேணாம்” என்ற ஸ்ரீனிவாசன், பட்டென இடத்தை விட்டு எழுந்துவிட்டான்.

“டேய்… பாதியோட போகாதடா குழந்தே!” என்று பாட்டனார் அழைத்ததை பேரன் கண்டுகொள்ளாமல் வேறு புறம் நகர, பேத்தியும் கண்டுகொள்ளாமல் வேகமாய் வந்து அவர் காலடியில் அமர்ந்தாள்.

“எனக்குத் தேய்ச்சுவிடுங்கோ தாத்தா! அவன்… போனா போகட்டும்!” என்றாள் தமையனுக்குப் பழிப்பு காட்டியபடி.

Sitalakshmi's

சீனுவுக்கு ஏனோ அங்கிருந்து போகவும் இஷ்டமில்லை. முகத்தில் கர்ணக் கொடூரமாய் ஒரு உணர்ச்சியைக் காட்டியவன், மீண்டும் சோபாவிலேயே அமர்ந்தான்.

இந்த முறை, வைஷ்ணவி கண்ணை மூடித் தூங்குவதற்குப் பதிலாக, “தாத்தா... ஏதாவது கதை சொல்லுங்கோளேன்” எனக் கேட்டாள்.

“ஆமா... நல்லா மூணு லிட்டர் பீப்பா மாதிரி இருந்துக்கிட்டு... மூணு வயசு பாப்பா மாதிரி கதை கேட்கிறதைப் பாரு” என்று சீனு சத்தமாகவே முணுமுணுக்க,

“போடா...” என்ற ஒரே வார்த்தையில் அவனை ஒதுக்கி வைத்தவள், “நீங்க சொல்லுங்கோ... தாத்தா” என்றாள்.

“ஹ்ம்ம்... என்ன சொல்றது? ஹான்... நாச்சியார் திருமொழில வர ஒரு கதை சொல்றேன் சரியா?” எனக் கேட்டு, கதை சொல்ல ஆரம்பித்தார் ராஜகோபாலன்.

“நம்ம... கோதை நாச்சியார் இருக்காளோனோ... அவளோட பன்னெண்டாவது வயசில எழுத ஆரம்பிச்சது தான்... நாச்சியார் திருமொழி”

“ஹ்ம்ம்”

“பண்ணெண்டு வயசிலேயே... அந்தக் குழந்தைக்கு... தமிழ்ல அவ்வளவு புலமை இருந்திருக்குன்னா பார்த்துக்கோயேன்!”

Sitalakshmi's

“ஹ்ம்ம், ஆமா! சிலதுகளுக்கு… இருபத்தியொண்ணு ஆனாலும் அறிவிருக்கிறதில்ல…” என வைஷ்ணவி இடைப்புக,

“ஷ்… கதை கேட்கும்போது… தேவையில்லாத பேச்சு கூடாது” என்று தன் பங்கிற்கும், சீனுவிற்கு ஒரு குட்டு வைத்தார் ராஜகோபாலன்.

“சரி… சொல்லுங்கோ!”

“ஹ்ம்ம்… அந்த வயசிலேயே… அவளுக்கு ரங்கன் மேல தீராத காதல்…”

“ஹ்ம்ம்”

“அப்போ… அவ என்ன தெரியுமா வேண்டிண்டா? ரங்கனே… வில்லிப்புத்தூர் கோனே… என்னை நீ கைத்தளம் பற்றி உன்னோட அழைச்சிண்டு போனினா… உனக்கு பத்து வட்டை அக்காரவிடசல் நேவிதனம் பண்றேன்னு வேண்டிண்டா…”

“ஹோ…”

“ஆனா… அவ மெய்யுருகி பாடினதைக் கேட்ட ரங்கன், நம்ம மேல எவ்வளவு காதல் வச்சிருக்கான்னு வியந்து… உடனே ஓடி வந்து… அவளை அழைச்சிண்டு போய்ட்டார்”

“ஹ்ம்ம்”

Sitalakshmi's

“அதனால... அவளால... அந்த பிரார்த்தனையை நிறைவேத்த முடியல!”

“ஆமா... அப்புறம்? சாமி கோச்சுண்டாரா?”

“சாமின்னு சொல்லிட்டு... கோச்சுண்டாரான்னு கேட்கிறியே? சாமி என்னைக்குமே... யாரையும் கோச்சுக்க மாட்டார். மனுஷாளுக்குத் தான் கோபமும்... தாபமும்” எனப் பேத்தியைக் கடிந்த ராஜகோபாலன், மேலும் கதையைத் தொடர்ந்தார்.

“ஆண்டாள்... ஏழாம் நூற்றாண்டில வாழ்ந்தவ.... தெரியுமோ இல்லையோ!”

“அதையேன் இப்போ சொல்றேள்? புரியல...” என்று வைஷ்ணவி குழம்ப,

“விஷயம் இருக்குடி குழந்தே! அவ ரங்கனோட ஐயிக்கியமாகி... பல நூற்றாண்டுகள் கழிஞ்ச ப்றம்... அவரோட திருமொழியை வாசிச்ச ராமானுஜர், ஆஹா... ஆண்டாள் அக்காரவடசல் நிவேதனம் பண்றேன்னு பாசுரத்தில சொல்லியிருக்காளே... ஆனா... அவ உடனே ரங்கனோட சேர்ந்ததால பண்ணியிருக்க மாட்டா... அவளுக்காக நாம பண்ணிடனும்ன்னு முடிவு பண்ணி, ஸ்ரீவில்லிப்புத்தூருக்குப் பயணமானார்”

“ஹோ!!!! சூப்பர்ல தாத்தா!”

“ஹ்ம்ம்!! ஆமா... அங்க போனவர்ட்ட... அவ்வளவா பணம் இல்ல! அங்க இருக்கவாட்ட எல்லாம்... தர்மம் வாங்கி... பெருமாளுக்கு பத்து வட்டை அக்காரவடசல் செஞ்சு... நைவேத்தியம் செஞ்சார்”

Sitalakshmi's

"ஹ்ம்ம்!"

"அப்போ... அங்க ஒரு அசரீரி கேட்டதாம். என்னன்னு தெரியுமா?"

"என்னன்னு?"

"இவர் என் அண்ணலோ!? திருமணச் சீர் செய்ய வேண்டி வந்தாரோன்னு கண்ணோரம் சிறு கண்ணீர் துளிர்க்க, கை கூப்பி நின்னாளாம் கோதை!"

"சூப்பர் தாத்தா!"

"ஹ்ம்ம்... அந்தக் கோதை மாதிரி நீயும் ஷேமமா இருக்கணும்டி குழந்தே! அந்த ராமானுஜர் மாதிரி... சீனு உனக்கு சீர் செய்வான்" என்றான் ஆசைகள் எட்டிப் பார்த்த முகத்துடன்.

வைஷ்ணவி ஒன்றும் சொல்லாமல் அமர்ந்திருக்க, சீனு சட்டென எழுந்து விட்டான்.

"என்னடா... ஒண்ணும் சொல்லாம போற? செய்வியோ இல்லையோ?" – அவனைப் போகவிடாமல் தடுத்தார் ராஜகோபாலன்.

"நானே... எப்படா வேலை கிடைக்கும் இந்த வீட்டை விட்டுப் பிச்சுக்கிட்டுப் போலாம்ன்னு இருக்கேன்... இதில ஜென்ம ஜென்மத்துக்கும் இந்த வீட்டிலேயே கிடக்கணுமாக்கும்! அதுக்கும் மேல... இந்த வைவாவுக்கு

Sitalakshmi's

அக்க.........................காரவடசல் வேற! ச்சை!" என்று தலையில் அடித்துக் கொண்டு, அங்கிருந்து நகர்ந்து விட்டான்.

போகும்போது "வேலை கிடைச்சதும்... இந்த வீட்டை விட்டுப் போறவன் தான்... கல்யாணமெல்லாம் ஆச்சுன்னா திரும்பிக் கூடப் பாக்க மாட்டேன்!" என்ற இடைச்சொருகல் வேறு.

வைஷ்ணவிக்கு மூசுமூசு என்று அழுகை முட்டிக் கொண்டு வந்துவிட்டது.

பேத்தி அழுவதைக் கண்டவர், "என்னடி கண்ணாட்டி... அக்காரவடசல் கிடைக்காதேன்னுட்டு அழறியா? அழாதடி குழந்தே! நம்ம... ஆஞ்சநேயர் கோவில தருவா" என்று ராஜகோபாலன் செல்லம் கொஞ்ச, "போங்க தாத்தா" என்று சிணுங்கினாள் வைஷ்ணவி.

அன்றிரவு, ஸ்ரீனிவாசன் பெங்களூர் கிளம்பிச் செல்ல, அடுத்த நாள் குடும்பத்தினர் அனைவரும் மேல்கோட்டை கிளம்பிச் சென்றனர்.

குடும்பத்தாரின் பிரார்த்தனையை குறைவின்றி நிறைவேற்ற வழி செய்த கடவுள், ஏனோ அந்தப் பிரார்த்தனைக்கான பலனைத் தான் கொடுக்க மறுத்தார்.

ஆம், ஸ்ரீநிவாசனுக்கு அந்த வேலை கிடைக்கவில்லை.

அந்த வேலை என்றில்லை... அதற்குப் பின்னர் எந்த வேலையும் கிடைக்கவில்லை.

தாத்தாவிடம் சவால் விட்ட ஒரு மாதம் கடந்து... ஒரொரு மாதமாக ஆறு மாதங்கள் ஓடியே போயிருந்தன!

Sitalakshmi's

முடிவில், “வெறும் இன்ஜினியரிங் வச்சுக்கிட்டு எல்லாம் ஒண்ணும் கிழிக்க முடியாதாம். நா... எம்.பி.ஏ படிக்கணும்” என்றபடி வந்து நின்றான் ஸ்ரீனிவாசன்.

கமலக்கண்ணன், கனல்கண்ணனாய் மாறி எம்பி எம்பி அடிக்கத் தயாராக இருந்தார்.

Sitalakshmi's

உணவு வேளையின் போது யார் வீட்டிலிருந்தாலும், ராஜகோபாலன் உணவுண்ண அமர்ந்துவிட்டால், உடன் வந்து உணவருந்தி விடுவார்கள். எழுதப்படாத சட்டமாய் அமலிலிருந்த அந்த விதியை... அவ்வப்போது அல்ல ஏறக்குறைய எப்போதுமே மீறி ஒரே பிரகஸ்பதி, ஸ்ரீனிவாசன் மட்டுமே.

ஆனால், இன்றோ கன்று களம் மாறி பாய்ந்தது!

ஏழரைக்கெல்லாம் இரவு உணவை முடித்துவிடுவது ராஜகோபாலனின் பழக்கம்.

இரவு உணவிற்கும்... தூக்கத்திற்கும் இடையே குறைந்தது இரண்டு மணி நேர இடைவெளியாவது இருக்கவேண்டும் என்ற அவரது எண்ணத்தில் எந்தவிதமான கெடுதலும் இல்லை என்பதால், வீட்டினரும் ஏழரைக்கு உணவருந்த வந்துவிடுவார்கள்.

அந்த வீட்டில், அவசரமாய் உண்டாலும் சரி... நிதானமாய் உண்டாலும் சரி... தரையில் அமர்ந்து தான் உண்ணவேண்டும்.

தரையில் அமர்கையில், கால்களை சம்மணமிட்டு அமர்வதால், உடம்பின் ரத்த ஓட்டம், வயிற்றில் தங்கி, உணவைச் சீக்கிரம் ஜீரணம் செய்ய வைக்கும். இதுவே, நாற்காலியில் அமர்ந்து உண்டால், உடம்பின் ரத்த ஓட்டம், கால்களுக்குப் பாய்ந்து, ஜீரண சக்தியை குறைக்கும் என்ற அறிவியல் உண்மையை அறிந்தவர் என்பதால், எவ்வளவோ பணமிருந்தும் உணவு மேசையை வாங்கிப் போடவில்லை ராஜகோபாலன்.

Sitalakshmi's

என்றும் போல் இன்றும், பந்திப் பாய் விரிக்கப்பட்டு, முதல் தட்டு ராஜகோபாலனுக்கு வைக்கப்பட, "நானும் சாப்பிடுறேன்" என்றபடி அவருக்கு அடுத்ததாய் வந்து அமர்ந்தான் ஸ்ரீனிவாசன்.

அனைவருமே ஒரு நிமிடம் அவனை அதிசயமாய் பார்த்தனர்.

"சீனு... சாப்பிட வா கண்ணா. அம்மா... எல்லாத்தையும் ஒழிச்சுப் போட்டுட்டு படுக்கணும்" என்று சாவித்திரி தொண்டை வறண்டு போகுமளவு கத்தியபின்னரும் வராதவன்,

"நீங்க... ஏன் மன்னி... அவனைக் கெஞ்சினுண்டு இருக்கேள்?மீதமிருக்கதை... தெரு நாய்க்குக் கொட்டிட்டு... படுங்கோ!" என்று கமலக்கண்ணன் வள்ளென்று விழுந்த பின்னர் கொஞ்சமாய் நகர்பவன்,

இன்று ஆளுக்கு முன்னர் வந்தமர்ந்திருந்தால், ஆச்சரியமாய் இருக்காதா என்ன?

"என்னடா... பதினோரு மணிக்கு தடி அடிபோட்டாலும் பசிக்காத வயிறு... இன்னைக்கு ஏழரைக்கே கூவுது?" என்று கேள்வியும், ஆராய்ச்சிப் பார்வையுமாய், அவனை அளந்தார்.

"சாப்பிடலைன்னா தான் கேள்வி கேட்கிறேள்ன்னா... சாப்பிட்டாலும் கேட்கிறேளே!" என அவன் எதிர்க்கேள்வி கேட்க,

"சரிடாப்பா, நன்னா சாப்பிடு!" என்றவர்,

Sitalakshmi's

"சாவித்திரி, மொதல அவனுக்குப் பரிமாறு" என்றார் மருமகளிடம்.

கீரை மொளக்கூட்டல், உருளைக்கிழங்கு காரக்கறி, வெங்காய சாம்பார், தக்காளி ரசம் என்று உணவு கமகமத்தது.

"சாம்பரைக் குளிர விட்டுண்டு சாப்பிடுடா குழந்தே... பிரட்டினாப்ல இருந்தா... விக்கல் எடுக்குமோ இல்லையோ..."

"ரசத்துக்குத் தானே சாதம் விட்டுண்டு இருக்கே? அப்போ... சாதத்தை நன்னா பிசைஞ்சு விடு..."

"சாவித்திரி... புள்ளையாண்டானுக்கு கொஞ்சம் காரக்கறி விடு..." - ராஜகோபாலன் சொல்லிக் கொண்டே இருக்க,

"எனக்கு வேணுங்கிறது... நா வச்சுப்பேன்..." என்று பல்லைக் கடித்தான் ஸ்ரீனிவாசன்.

"சீனு!!" - கமலக்கண்ணன் கத்தியதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல், உணவை உள்ளே தள்ளிக் கொண்டிருந்தான் ஸ்ரீனிவாசன்.

உணவு முடிந்து, மூத்த தலைமுறை ஆண்களும், இளைய தலைமுறையினர் அனைவரும் கூடத்திற்கு வந்துவிட, ஸ்ரீனிவாசன் தன் பேச்சை ஆரம்பித்தான்.

Sitalakshmi's

டீப்பாயில் இருந்த பாக்குத் தட்டிலிருந்து, வறுவல் சீவல்... பாக்கு... ஆகியவற்றை எடுத்து, வாயில் போடுவதில் கவனமாய் இருந்த குடும்பத்தாரிடம் பார்வையைப் பதிக்காமல், வேறெங்கோ பார்த்தபடி, "நா எம்.பி.ஏ படிக்கணும்" என்றான் விட்டேறியாக.

பலருக்கு, அவன் என்ன சொல்கிறான் என்பதே கேட்கவில்லை.

கேட்ட சிலரில், இளைய தலைமுறை பாலாஜியும்... வைஷ்ணவியும் மட்டுமே அடக்கம் என்பதால், இருவரும் அவனை ஒரு மார்க்கமாக பார்த்தனரே ஒழிய, ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் சொல்லியும் என்னவாகிவிடப் போகிறது?!

யாரும் தன் பேச்சைக் கவனிக்கவில்லை என்பதை உணர்ந்தவனாய், "ஹூக்கும்ம்ம்..." என்று லேசாய் செருமியவன், தாத்தாவின் கவனம் வந்துவிட்டது என்பதை உறுதி செய்துகொண்டு, "நா... எம்.பி.ஏ படிக்கணும்" என்றான் மீண்டும்.

தந்தையின் பார்வையைத் தொடர்ந்து, மகன்கள் மூவரது பார்வையும் ஸ்ரீனியின் மீது விழுந்தது.

"ஏன்டாப்பா... இன்ஜினியரிங் வச்சு ஒண்ணும் பண்ண முடியலையோ?" என்றார் ராஜகோபாலன், அவனை விட்டு அகலாத பார்வையுடன்.

தலை கவிழ்ந்து நின்றபோதும், "இன்ஜினியரிங்கை மட்டும் வச்சுண்டு பெருசா... ஒண்ணும் பண்ண முடியாதுன்னு தோணித்து! அதான்.... எம்.பி.ஏ பண்ணலாம்ன்னு..." என்றான் ஸ்ரீனிவாசன்.

Sitalakshmi's

"ஹோ! நானும்... இதையே தானேடாப்பா சொன்னேன்... அப்போ என் பேச்சைக் கேட்டிருந்தா... இந்நேரம் கை நிறைய சம்பாதிச்சு இருக்கலாம்" - வார்த்தையால் அவனைக் குத்தினார் ராஜகோபாலன்.

இதற்கு நடுவே, கமலக்கண்ணனுக்கு பி.பி கண்டமேனிக்கு எகிறிவிட, "நீ... மனசில என்னதான்டா நினைச்சிண்டு இருக்கே? பி.காம் சி.ஏ படின்னு தாத்தா தலைபாடா அடிச்சிண்டப்போ... கம்ப்யூட்டர் தான் என்னோட குல தெய்வம்... ஐ.டி கம்பெனி தான் என் பிறந்தாம்ன்னு தாம்... தூம்ன்னு குதிச்சிண்டு... +2ல கம்ப்யூட்டர் குரூப் எடுத்தே! அப்புறமும்... மார்க் நல்லா வராதப்ப தாத்தா என்ன சொன்னார்? உன்னோட அறிவுக்கு... இன்னமும் நல்ல மார்க் வாங்கலாம்டா... ஒரு வருஷம் பொறுமையா இருந்து... இன்க்ரிமெண்ட் எழுதிட்டு... ஐ.ஐ.டி மாதிரி வெல்-நோன் இன்ஸ்டிடியூஷன்ல சேரலாம்ன்னு சொன்னாரோ இல்லையோ? அதுவும் மாட்டேன்... ஒரு வருஷத்தை வேஸ்ட் பண்ண மாட்டேன்னு ஆட்டமா ஆடி... ஒரு பிரைவேட் காலேஜ்ல என்னோட பாதி சேவிங்க்ஸ் கொட்டி... சீட் வாங்கிச் சேர்ந்தே! இப்ப... என்னன்னா திரும்ப எம்.பி.ஏன்னு வந்து நிக்கிற!? நீ... என்னதான்டா நினைச்சிண்டு இருக்கே? நா... என்ன பணங் காய்க்கிற மரமா?" - தன் பங்கிற்கு, தன் ஆதங்கம்... ஆத்திரம் அனைத்தையும் கூடை கூடையாக கொட்டினார்.

"ஆமா... அப்போ சொன்னேன். அந்த டைம்ல... ஐ.டி நல்ல பூம்ல இருந்தித்து. படிச்சு முடிச்சதும்... நல்ல வேலை கிடைக்கும்ன்னு நினைச்சு சொன்னேன். ஆனா... இப்போ ஐ.டி ரொம்ப டல்லடிக்குது. வேலை கிடைக்கிறதே பெரிய பாடா இருக்கிறச்சே... வேற வழி பாத்து தானே ஆகணும்?" என்றான் ஸ்ரீனிவாசன், கொஞ்சமும் அசராமல்.

Sitalakshmi's

"ஆமா... இப்படி வேற வழி பார்த்துண்டே இருந்தா... ஏகப்பட்ட வழி இருக்குமே தவிர, நீ ஒண்ணுல்லையும் வழி கூடிப் போக மாட்டே! உன்னைச் சுத்தி வழியா இருக்குமே ஒழிய... எதிலையும் போகாம... இதுவா அதுவா... இல்லை புதுசா எதையாச்சும் பாக்கலாமான்னு யோசிச்சுண்டு இருப்பே" என்றார் ராஜகோபாலன், சற்று கடுமையாகவே. வாழ்க்கையின் நிதர்சனத்தை வழிகளால் விளக்கிவிட்டிருந்தார் அப்பெரியவர்.

"அதெல்லாம் இல்ல. எம்.பி.ஏ படிச்சா... கண்டிப்பா நா எதிர்பார்க்கிற மாதிரி வேலை கிடைக்கும்" - முகத்தில் கோபக்கோடுகள் பரவ , அதை குரலிலும் காட்டி பேசினான் சின்னவன்.

"அப்போ! இப்பையும் நோக்கு வேலை கிடைச்சிருக்கு அப்படித் தானே ? ஆனா... அந்த வேலை நீ எதிர்பார்க்கிற மாதிரி இல்லை! அப்படித் தானே ?" - பாயிண்ட்டைப் பிடித்தார் ராஜகோபாலன்.

"ஆஹா! கண்டுகொண்டாரே!" எனத் திகைத்தாலும், "ஆமா! கிடைச்ச வேலையெல்லாம்... நைட் ஷிபிட் வேலை... இல்லைன்னா கால் சென்டர் வேலையா இருக்கு! நேக்கு... அதுக்கெல்லாம் போக இஷ்டமில்ல!" என்றான் ஸ்ரீனிவாசன், சிறு குற்ற உணர்ச்சி கூட இல்லாமல்.

"சின்ன வயசில, இஷ்டத்தைப் பார்த்துண்டு... கஷ்டப்படாது இருந்தேன்னாக்க, வயசாகும் போது... கஷ்டம்... இஷ்டத்தைப் பாக்காம வந்து ஒட்டிக்கும்டா குழந்தே!" என்றார் ராஜகோபாலன்.

"ப்ச்... ப்ளீஸ் தாத்தா! சும்மா... அட்வைஸ் பண்ணிண்டே இருக்காதேளேன். இப்ப... என்னை எம்.பி.ஏ படிக்க வைக்க முடியுமா முடியாதா ?" - வெட்டு ஒன்று துண்டு இரண்டு போல், கத்திரித்து விழுந்தன வார்த்தைகள்.

Sitalakshmi's

"டேய்! என்னடா நினைச்சிண்டு இருக்கே? என் தோப்பனாரை... என் முன்னாடியே மரியாதையில்லாம பேச... நோக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும்?!" - கையை ஓங்கிக் கொண்டு வந்துவிட்டார் கமலக்கண்ணன்.

அதற்குள் மூத்தவர் நாராயணன் தம்பியைத் தடுத்து, தம்பி மகனிடம் திரும்பினார்.

"படிப்பு முடிஞ்சு... ஆறு மாசம் தானே கண்ணா ஆறது? இன்னும்... ரெண்டு... மூணு மாசத்துக்கு வேற வேலை ஏதாவது கிடைக்குதான்னு பாரேன். அப்புறமும் கிடைக்கலைன்னா... எம்.பி.ஏவைப் பத்தி யோசிக்கலாம்" என்றார் தன்மையாக.

அண்ணனுக்கு ஏற்ற தம்பியாய், "ஆமாடா கண்ணா. உன் சம்பாதியத்தில தான்... ஒலை வைக்கணும்ங்கிற நிலைமையில நாம இல்ல. அதனால... நீ பொறுமையா நல்ல வேலையா தேடுடா. அவசரப்பட்டு... முடிவெடுக்காத ராஜா!" என்றார் சேதுமாதவனும்.

"அதைத் தான்... நானும் சொல்றேன். நான் சம்பாதிச்சிண்டு வந்து தான்... இங்க நிறையணும்ன்னு இல்லையில்லையோ? அப்படியிருக்கும் போது... என்னைப் படிக்க வச்சா என்ன?" - அவர்களது பேச்சையே வேறு மாதிரி திருப்பினான் சீனு.

"வார்த்தையைப் புரட்டி... புரட்டிப் பேசுற நாக்கை..." என்று கமலக்கண்ணன் எகிறிக் கொண்டு வர,

Sitalakshmi's

"நீ... கொண்டு வந்து நிறையப் போறதில்ல தான். ஆனா... அதுக்காக எத்தனை நாளைக்குத் தான்... உன் தோப்பனார் நிழலிலேயே இருப்பே ? சுயமா சம்பாதிக்க வேண்டாமோ?" - அவனை இடைவெட்டினார் ராஜகோபாலன்.

"நா... சம்பாதிக்க மாட்டேன்னு சொன்ன மாரியில்ல பேசறேள்! எம்.பி.ஏ படிச்சா... பெரிய உத்தியோகம் கிடைக்கும்... அப்ப சம்பாதிக்கத் தானே போறேன்" - சீனுவிற்கு ஏகப்பட்ட எரிச்சல்.

"பெரிய உத்தியோகம் கிடைக்கும் சரி... ஆனா செலவு பெரிய பணமா இருக்கும். தெரியுமோ இல்லையோ?" - ராஜகோபாலனுக்கும் எரிச்சல் என்பதை அவர் குரலே காட்டியது.

"ஆமா... பெரிய பணம்! இவரு... சம்பாதிக்கிறது எல்லாம்... யாராண்ட கொண்டே கொட்டப் போறாராம்? ஒத்தப் புள்ள எனக்கு...செலவழிக்கச் சொல்லுங்க." - மிக மிக அசால்ட்டாய் பேசினான் ஸ்ரீநிவாசன்.

"சீனு... நீ பேசுறது தப்பு!" - மூத்தவர் நாராயணனின் குரல் கண்டிப்புடன் வெளிவந்தது.

"ப்ச்!!" என்ற உச்சுக் கொட்டலில், முகத்தைத் திருப்பி, அவரது கண்டிப்பாய் கண்டுகொள்ளாமல் விட்டான் சீனு.

மூவரில் மென்மையானவரான சேதுமாதவன், சீனுவின் அருகே வந்து, அவன் தோள் மீது கை போட்டு, "வார்த்தையை... யோசிச்சுப் பேசுடா கண்ணா! ஒன்ஸ் கொட்டிட்டா... அள்ள முடியாது" என்றார் அறிவுரை போல்.

Sitalakshmi's

"சேதுப்பா... நா படிக்கணும்ன்னு தானே கேக்கிறேன். அதுக்கேன்... இத்தன ஆர்ப்பாட்டம் பண்றேள்?" - சலிப்பாய் வந்தது ஸ்ரீனிவாசுக்கு.

"நாலு வருஷம் கஷ்டப்பட்டு படிச்சா படிப்பால... ஒரு புண்ணியமும் இல்லாம போச்சே ராஜா! இப்பையும் அது மாதிரி... ஆயிட்டா?" என அவர் கேட்க,

"அதெல்லாம் ஆகாது! எனக்கு... கண்டிப்பா வேலை கிடைக்கும். உங்க தோப்பனாரையும்... தம்பியையும் காசைக் கணக்கு பண்ணிண்டு உக்காந்திருக்காம... நல்ல காலேஜ்ல நல்ல டிபார்ட்மெண்ட்ல... சீட் வாங்கித் தரச் சொல்லுங்கோ. போதும். வேலையை நான் வாங்கிக் காட்டுறேன்" - சவால் விட்டான் ஸ்ரீனிவாசன்.

"வேலையை... வாங்கிக் காட்டுறேன்னு சவால் விடுறவன்... நீயே படிப்பையும் பாத்துக்க வேண்டியது தானேடா!? என்ட்ட ஏன் வர?" - கமலக்கண்ணன் எகிற,

"நீங்க தானே... என்னைப் பெத்தேள்? இல்ல... தவுட்டுக்கு வாங்கிண்டு வந்தேளா? பெத்தவாட்ட தானே கேக்க முடியும்?" - யோசிக்காமல் வந்து விழுந்தன வார்த்தைகள்.

"டேய்!!!" - அண்ணனின் பிடியிலிருந்து விடுபட்டு வந்த கமலக்கண்ணன், சீனுவை அடித்தே விட்டார்.

"கமலக்கண்ணா?! என்ன பண்ணிண்டு இருக்கே?" என்று ராஜகோபாலன் அதட்டும் போதே,

Sitalakshmi's

"திருப்பி அடிக்க... நேக்கு சத்த நாழி தான் ஆகும்?! அடிக்கட்டுமா?" என்று குரலை உயர்த்தி எகிறினான் சீனுவும்.

குடும்பமே அதிர்ந்து நிற்க, "சீனு!!!!!!!!!!!" என்ற ராஜகோபாலனின் கர்ஜனையில் வீடே ஸ்தம்பித்தது.

ஆனாலும், சீனு அடங்குவதாய் இல்லை.

"கை நீட்டற வேலையெல்லாம் என்னாண்ட வச்சுக்காதேள்! சொல்லிட்டேன்!" என்று ஒரு விரல் நீட்டி மிரட்டியவன்,

"நீங்க தானே என்னைப் பெத்தேள்? அப்ப... நீங்க தான் என்னைப் படிக்க வைக்கணும். படிக்க வைங்க" என்றான் சட்டமாய்.

"முடியாதுடா! உன்னால முடிஞ்சதைப் பார்த்துக்கோ!" - கமலக்கண்ணனும் கத்தினார்.

"முடியாதா? அப்புறம்... என்ன இதுக்கு என்னைப் பெத்துண்டே? எங்கம்மா அழகா இருக்கான்னு பெத்துண்டியா? அப்படியானா... அவள கட்டையில வச்சு எரிக்கும் போதே... என்னையும் எரிச்சிருக்க வேண்டியது தானே? இந்தக் குடும்பத்தில... நிம்மதியில்லாம இருக்கிறதுக்கு... நிம்மதியா போயாச்சும் சேர்ந்திருப்பேன்..." - வார்த்தைகளைச் சுழட்டி வீசினான் ஸ்ரீனிவாசன்.

குடும்பம் முழுமையும் விக்கித்து நின்றது.

Sitalakshmi's

"சிவசிவா..." என்று மாலதி, சத்தமாய் முணுமுணுத்து, காதுகள் இரண்டையும் இரு கைகளாலும் மூடிக் கொண்டார்.

அந்த நொடி, "சீனு!!!" - இருபதை வயதிற்கு சமமாய் எழுபது வயதும் கர்ஜித்தது.

ஸ்ரீனிவாசனின் பேச்சு தடைபெற்று நின்ற ஒரே வினாடியில், ராஜகோபாலன் சூழ்நிலையைத் தன் வசம் எடுத்துக் கொண்டார்.

"நோக்கென்ன? படிக்கணும் அவ்வளவு தானே?!"

"நன்னா படி! உன் தோப்பனார் செலவு செய்வான்! அப்படியே அவன் செய்யலைன்னாலும்... உன் பாட்டனார் நா செலவு செய்றேன்! நன்னா படி!"

ஸ்ரீனிவாசனின் முகம் மலர்ந்து போனது.

ஆனால், ராஜகோபாலன் இன்னமும் பேசினார்.

"ஆனா... ஒண்ணு! சும்மா... ஊர் பேர் தெரியாத காலேஜ்ல... லட்சக்கணக்கில பணத்தைக் கொட்டி... உன்னைத் திரும்பவும் படிக்க வைக்க முடியாது!" - ஆணித்தரமாய் வந்தது ராஜகோபாலனின் பேச்சு.

"அப்போ?" - சுருக்கென கேட்டான் பேரனும்.

"காட் எக்ஸாம் எழுது. ஐ.ஐ.எம் இல்லைன்னா ஐ.எஸ்.பி... இதில கிடைச்சா தான், படிக்க வைப்போம். இல்லைன்னா முடியாது" - முடிவாய் சொல்லிவிட்டார் ராஜகோபாலன்.

Sitalakshmi's

"காட்டா? அதெல்லாம் கஷ்டம்..." என்று சீனு தொடங்க,

"இன்ஜினியரிங் அப்போ செஞ்ச தப்பை... நாங்க திரும்பச் செய்றதா இல்ல. நல்ல காலேஜ்ன்னா படிக்க வைக்கிறோம். இல்லைன்னா... உன் பாடு. இதான் என்னோட முடிவு" - இதற்கு மேல் பேச ஒன்றுமில்லை என்பது போல் கையை உயர்த்தி நிறுத்தினார் ராஜகோபாலன்.

"இதெல்லாம் அநியாயம்" - எதிராய் கொடி பிடித்தான் ஸ்ரீனிவாசன்.

"என்னவா இருந்தாலும்... இதான் என் முடிவு" - முடித்தே விட்டார் ராஜகோபாலன். எழுந்தும் போய்விட்டார்.

அதன் பின்னர், குடும்பத்தினர் ஒவ்வொருவரும் அவனிடம் தனித்தனியாய் பேச, கமலக்கண்ணன் மட்டும் பேசவே இல்லை. அப்போது மட்டுமல்ல எப்போதுமே பேசப் போவதில்லை என்பதை யாருமே அறியவில்லை.

ராஜகோபாலன் படிப்பிற்கு ஒத்துக்கொண்டதே பெரிய விஷயம் என்பதையும், அவர் சொல்படி ஐ.ஐ.எம் அல்லது ஐ.எஸ்.பியில் கிடைக்க வழி செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் வெவ்வேறு விதத்தில் அனைவரும் சொல்ல, ஸ்ரீனிவாசனுமே அதற்கேற்ப தயாராகி விட்டிருந்தான்.

அடுத்த ஆறு மாசமும், "CAT" தேர்விற்கான பயிற்சிகளில் சென்று விட, இந்தியாவில் புகழ்பெற்ற ஐ.ஐ.எம் அஹமேதாபாத்தில் அவனுக்கு அனுமதி கிடைத்தது.

Sitalakshmi's

ஒரு வருடப்படிப்பை அவன் முடிக்கும் முன்னரே, பெங்களூரில் ஒரு பெரிய மென்பொருள் நிறுவனத்தில், கை நிறையச் சம்பளத்துடன் "business consultant" என்ற பதவியும் கிடைத்தது!

அங்கே, ஆரம்பித்தது விதியின் சதி!

Sitalakshmi's

ஐ.ஐ.எம்மில் எம்.பி.ஏ படிப்பு முடிந்து , வீட்டிற்கு வந்திருந்தான் ஸ்ரீனிவாசன்.

தன் சொல்லை மதித்து, ஆறே மாதத்தில் CAT எக்ஸாம் எழுதி, புகழ்பெற்ற அகமதாபாத் ஐ.ஐ.எம்-மில் எம்.பி.ஏ படித்து முடித்து வந்திருக்கும் பேரனைப் பார்க்கையில், பெருமையாகவே இருந்தது ராஜகோபாலனுக்கு.

“பையனிடம்... ஒரு துடிப்பு இருக்கிறது!” என்பதை அவர் உணரவே செய்தார்.

அவனுள் வெறி இருக்கப் போய் தான்... வெறி என்றில்லாமல் இயல்பிலேயே நன்றாய் படிக்கப் போய் தான், அவனால் ஒரு பெரிய கல்லூரியில் சேர முடிந்திருக்கிறது என்பதே அவரைச் சந்தோஷப்படுத்தியது.

“தன் பேரன்... இனி வாழ்க்கையில் முன்னேறிவிடுவான்” என்ற நம்பிக்கையும் அவருள் விதைந்து விட்டிருந்தது. கொஞ்சம் பாரம் கம்மியானது போல், மனமும் லேசாகியிருந்தது.

படிப்பு... பணத்தின் அடித்தளம் மட்டுமே அல்ல! குணத்தின் மேடையும் கூட!

நல்ல வேலைக்கான நுழைவுவாயிலாய் மட்டுமல்லாமல் நல்ல ஒரு மனிதனை நெய்வதும் படிப்பே!

ஒரு மனிதன் மிருகமாய் நடக்கும் வேளைகளிலோ, அவன் தடம் மாறிப் போகும் போதோ “படிச்சவன் தானேடா... நீ?” என்று பிறர் கேட்பதன் காரணமும் – இதுவே!

Sitalakshmi's

தப்பு வழி செல்ல விடாது… ஒரு மனிதனுக்குள் பக்குவத்தையும், நன்னடத்தையை விதைப்பது படிப்பே!

படித்தவன், நாலும் யோசிப்பான்! நியாயமாய் நடப்பான்! நல்வழியில் செல்வான்! என்ற எண்ணங்கள், படிப்பு உண்டாக்கும் பரிமாணத்தால் உருவான வாக்கியங்கள்.

அதே நோக்கில், இந்தியாவின் ஓர் உயரிய பல்கலைகழகத்தில் தேர்ச்சி பெற்று வெளியே வந்திருக்கும் தன் இளவல், பருவ காலத்தில் இருந்த முசுட்டுத்தனத்தை எல்லாம் தொலைத்திருப்பான் என்று நூறு சதவீதம் நம்பினார் ராஜகோபாலன்.

அவனோ, “இல்லை” என்று நிரூபித்தான்.

படிப்பை முடித்துக் கொண்டு வீடு வந்தவன், தன் உடமைகள் அனைத்தையும் பெட்டியில் அடுக்கிக் கொண்டு, “நா பெங்களூர் போறேன்” என்று ஒரு அறிவிப்பு விடுத்தான்.

“நீ… அகமதாபாத்தில் படிக்கிறதா இல்ல… நினைச்சிண்டு இருந்தேன்” என்றார் ராஜகோபாலன், கேள்வியாய்.

“என்னோட படிப்பு முடிந்திடுத்து”

“ஹோ! நேக்குத் தெரியாதே!”

“அதானே… ஆத்துக்கு வந்திருக்கேன். அத வச்சே தெரியலையா?”

Sitalakshmi's

“ஹோ! படிப்பை முடிச்சிட்டு தான் வீட்டுக்கு வரணும்ன்னு இருந்தியோ?”

“ஆமா…”

“ஏன்?”

“ஏன்னா? என்ன கேக்கிறேள்?”

“ஏன்… நடுல வரலைன்னுட்டு கேக்கிறேன்டா…”

“நேக்குப் பிடிக்கலை”

“நோக்கு என்ன பிடிக்கலை…”

“பிடிக்கலைன்னா… பிடிக்கலை… அவ்ளோ தான். விடுங்கோளேன்”

“நாங்க என்ன தப்பு செய்றோம்ன்னு எங்களுக்கும் தெரிய வேண்டாமோ? சொல்லேன்டா கண்ணா”

“தப்பு என்ன தப்பு… நேக்கு தனியா இருக்கத் தான் இஷ்டம்…”

“குடும்பமா இருக்கிறதில என்னடாப்பா குறை கண்டுட்டே நீ?”

“ப்ச்… அச்சோ…”

Sitalakshmi's

“சொல்லுடாப்பா... தெரிஞ்சுண்டு அதுக்கேத்தாப்பல நடந்துப்பேனோ இல்லையோ...”

“சும்மா... கச்கச்சன்னு எப்பப் பாரு நாலு பேரு இருந்துண்டு இருக்கிற இடத்தில என்னால இருக்க முடியாது”

“காலேஜ்ல நோக்கு மட்டுமா பாடம் எடுத்தா? உன் கிளாஸ்ல ஐம்பது... அறுபது பேராவது இருந்திருக்க மாட்டாளா என்ன?”

“ப்ச்! அதுவும்... இதுவும் ஒண்ணா?”

“இல்லையா பின்ன?”

“இல்ல. படிக்கிற இடம் வேற... வசிக்கிற இடம் வேற... ஏதாவது ஓரிடத்தில யாச்சும் ப்ரைவசி இருக்க வேண்டாமோ? எப்பப் பாரு... கூட்டமா இருந்தா நன்னாவா இருக்கு!!”

“ஹோ!!”

“அவ்வளவு தானே! நா கிளம்புறேன்...”

“எங்கடாப்பா? கேட்டேனே”

“அதான் சொன்னேனே... பெங்களூருக்கு!”

Sitalakshmi's

“அங்க என்னத்துக்கு?”

“எனக்கு… அங்க தான் வேலை கிடைச்சிருக்கு”

“ஹோ! வேலை கிடைச்சிடுத்தா? என்னாண்ட ஒரு வார்த்தை சொல்லியிருக்காலாமோன்னோ?!’

“ப்ச்…”

“என்னடா உச்சு…பச்சு… என்னாண்ட வேண்டாம்… உன்னை இவ்வளவு தூரம் படிக்க வச்ச உன் தோப்பனாராண்ட சொல்லியிருக்கணும் சீனிவாசா!”

“படிக்க வச்சது உங்க புள்ளையாண்டான் தான்னாலும்… படிச்சது நாந்தானே!”

“அவன் படிக்க வைக்கலைன்னா… நீ என்னடா செஞ்சிருப்பே?! பரதேசம் போயிருப்பியா என்ன?”

“பிள்ளைங்களைப் படிக்க வைக்கிறது… பெத்தவங்களோட கடமை”

“அப்படியா? அப்பனுக்கு கடமை இருக்க மாதிரி… பிள்ளைக்கு இருக்காடாப்பா”

Sitalakshmi's

"பணம் தானே? மாசமாசம்... அவரு அக்கௌன்ட்ல பத்தாயிரம் ரூபா போட்டுடுறேன். போதுமா?"

"பணமா? உன் பணம்... வந்தாடாப்பா அவன் வாழ்க்கை விடியப் போறது?! அவனுக்கு இருக்க குணத்துக்கு... இந்த ஜென்மா இல்ல... அடுத்த ஜென்மாலையும் நன்னாவே இருப்பான்!"

"நன்னா இருக்கட்டுமே! யாரு வேண்டான்னா! என்னை ஆளை விடுங்கோ! நா... கிளம்புறேன்..."

"நோக்கு சரின்னு பட்டா செய்டாப்பா! ஆனா... பெரியவா காலில விழுந்து சேவிச்சிட்டுப் போ. போற காரியம்... நன்னா அமையும்"

"ப்ச்..." – அலட்சியமான தலை சிலுப்பலுடன் அவரது பேச்சை அலட்சியம் செய்தவன், கூடியிருந்த அனைவரையும் பார்த்து, பொத்தாம்பொதுவாக ஒரு "வரேன்" என்ற முணுமுணுப்போடு கிளம்பிப் போயே விட்டான்.

கூடத்தில் குழுமியிருந்தவர்களில் கமலக்கண்ணனை மட்டும் காணவில்லை.

மகனுக்கு... தந்தைக்கும் பேச்சு ஆரம்பிக்கும் போதே, அறைக்குள் சென்றவர், மீண்டும் திரும்பி வரவில்லை.

தன் அலுவலகத்தில் இருந்து எடுத்து வந்த ஒரு கோப்பை எடுத்து, அதிலேயே கவனத்தைப் பதித்திருந்தவருக்கு, அதிலிருந்த எழுத்துக்களுக்குப் பதிலாக... முதன்முதலில் தன் மடி மீதமர்ந்து ஸ்ரீனிவாசன் எழுதிய "அ... ஆ" வே நிழலாடியது.

Sitalakshmi's

கண்ணுக்குள் இடமில்லாத காரணத்தால், தண்ணீர் தரை தொட, நிழல் மறைந்து, நிஜம் விரிந்தது!

வேகமாய் அதைச் சுண்டிவிட்டவரின் கண்களில் இப்போது, கோப்பின் எழுத்துக்கள் தெளிவாகவே தெரிந்தன.

கூடத்திலோ, ஸ்ரீனிவாசன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த ராஜகோபாலனின் கண்ணோரம், லேசாய் கரித்தது.

கைகளை அகல விரித்து, மேலே அண்ணாந்து பார்த்தவர், "பெருமாளே! அவனை... ஷேமமா வச்சிரப்பா!" என்றார் வேண்டுதலாய்.

வைஷ்ணவி ஓடி வந்து, தாத்தாவின் கையைப் பற்றிக் கொண்டாள்.

அவர் கைகள் நடுங்குவதை உணர்ந்தவளாய், "அம்மா... தாத்தாக்கு கொஞ்சம் ஜாலம் எடுத்திண்டு வாங்கோம்மா" என்று அவள் பதற,

தன் கையை இறுகப் பற்றியிருந்த பேத்தியின் கரத்தை ஆதரவாய் தட்டிக் கொடுத்த ராஜகோபாலன், "நேக்கு... ஒண்ணுமில்லைடா கண்ணாட்டி" என்றார் முயன்று வரவழைத்த புன்னகையுடன்.

"அவன்... போறான் தாத்தா. விடுங்கோ! அவனுக்காக... நீங்க ஏன் வருத்தப்பட்ரேள்?"

Sitalakshmi's

“எங்க… தப்பு செஞ்சோம்ன்னு யோசிக்கிறேன்டா கண்ணாட்டி! உங்களை மாதிரி தான்…அவனையும் வளத்தேன். ஆனா அவன் உங்களை மாதிரி இல்லையேடா கண்ணாட்டி”

“எல்லா விரலும்… ஒரே மாதிரி இருக்கிறதில்லயோன்னோ! அவன்… சுண்டு விரலாட்டம்… பச்சா பையனா இருக்கான்னு நினைச்சுக்கோங்கோ!”

மனம் விட்டுச் சிரித்தார், ராஜகோபாலன்.

“நீ… எந்த விரல்டி கண்ணாட்டி?”

“நான்தான் தாத்தப்பா, கட்டை விரல்! வெற்றியைக் குறிக்கும் வைஷ்ணவி!” என்றாள் கண்ணைச் சிமிட்டி.

“ஹ்ம்ம்… நீ சொல்றதும் ஒரு வகையில உண்மை தான் போல…” என அவர் நெடுமூச்சு விட,

“என்ன தாத்தப்பா? நா கட்டை விரல்ங்கிறது தானே?” என அவள் மீண்டும் கண் சிமிட்ட,

“இல்ல… சீனு சுண்டு விரல்ன்னு சொன்னது!” என்றார் ராஜகோபாலன்.

“சீனுவோட வலது கையில… அவனோட மத்த விரல்களை விட்டு… அவனோட சுண்டு விரல் மட்டும் ஓரமா ஒதுங்கி நிக்கும். அதைப் பாக்கும் போதெல்லாம்… இவனோட மனசும் மூளையும் தனித்துவமா சிந்திக்கும்ன்னு

Sitalakshmi's

நினைச்சு நினைச்சு பெருமைப் பட்டுப்பேன். ஆனா... இப்படி தனியாவே போயிடுவான்னு நினைக்கலை" என்றார் கண் கலங்க.

வைஷ்ணவிக்கும் தொண்டையை அடைத்தது.

"வீட்டை விட்டே போய்ட்ட மாதிரி ஏன் தாத்தப்பா... அழறேள்?! வேலைக்காக வேண்டி... ஆத்தை விட்டு... சொந்த ஊரை விட்டு வெளியூர் போறவா எத்தனையோ பேரில்லையா? அது மாதிரி... நம்ம சீனுவும் பெங்களூர் போயிருக்கான். அவ்வளவு தான்" என்று சமாதானம் செய்தவளுக்கு, தாத்தாவின் அன்பை எண்ணி மனம் உருகியது.

உள்ளுக்குள் எப்படிப்பட்ட பாசமிருந்திருந்தால், ஒரு சின்னச் சுண்டு விரலைக் கூட... அதுவும் அதற்கும் மற்ற விரல்களுக்குமான இடைவேளையைக் கூட கவனித்திருப்பார் என்று ஆச்சரியப்பட்ட அதே மனம், இன்றைய சூழலை எண்ணி அழவும் செய்தது.

சீனுவின் மீது கோபம் கட்டுக்கடங்காமல் வந்தது.

ஆனால், சீனுவோ சந்தோஷமாய்... சொல்லப் போனால் மிக மிக சந்தோஷமாய் இருந்தான்.

தனிக்காட்டு ராஜாவாய் பூரிப்பில் திகைத்தான்! மிருகங்களே இல்லாத காட்டில், ராஜாவாய் இருந்து என்ன புண்ணியம்!? பாவம், இந்த கூஜாவிற்கு... ம்ஹூம் ராஜாவிற்கு அது புரியவில்லை.

"தானே ராஜா! தானே மந்திரி!" என்ற இந்த வாழ்க்கை அவனுக்கு ரொம்பவே பிடித்துப் போனது.

Sitalakshmi's

எம்.பி.ஏ முடித்ததால், அதுவும் பெயர் சொல்லும் நிறுவனத்தில் தேர்ச்சி பெற்று வந்ததால், கை நிறைய சம்பளம் என்பதை விட கை கொள்ளாமல் சம்பளம் என்ற நிலையில் தான் இருந்தது அவனது வேலை.

அவனுக்கென்று ஒரு தனி காபின், நிறுவனத்தார் கொடுத்திருந்த தனிப்பட்ட லாப்டாப், ப்ளாக்பெர்ரி, இவை தவிர ஏகப்பட்ட சலுகைகள்.

சன்மானத்திற்கு ஏற்றார் போல், வேலையும் இருக்கத் தான் செய்தது. இருந்தாலும், அவனுக்கு அது ஒரு சுமையாய் தெரியவில்லை.

அலுவலகத்திற்கு அருகேயே ஒரு தனி பிளாட் எடுத்து தங்கினான்.

விதவிதமாய் உண்டான்.

விதவிதமாய் என்பதை விட, இஷ்டப்பட்டதை உண்டான்.

புதுவிதமாய் உடுத்தினான்.

பிடித்ததை வாங்கினான். வாங்கிக் குவித்தான்.

இஷ்டப்பட்ட நேரத்தில் வெளியே சென்றான். வீட்டிற்கு வந்தான்.

கேள்வி கேட்க யாருமில்லாத இந்த வாழ்க்கை அவனுக்கு, கூண்டை விட்டு வெளியே வந்த கிளியின் உணர்வைக் கொடுத்தது.

Sitalakshmi's

ராஜகோபாலன் சொல்வது போல், அவர் மீதோ... அவன் தந்தை மீதோ அவனுக்கு வெறுப்பென்று எதுவுமில்லை தான்.

பதினைந்து வயதில், அவனது தாயார் காலமானதில் இருந்து, ஏதோ ஒரு ஒதுக்கம். தனக்கும்... அந்த வீட்டுக்குமிருந்த பந்தம் அறுந்துவிட்டார் போல், அவனுக்குள் ஒரு ஒதுக்கம்.

கமலக்கண்ணன், எல்லா ஆண்களையும் போல... பேச்சில் அன்பைக் காட்டுபவர் அல்ல என்பதால், தந்தையிடம் அவ்வளவாய் ஒட்டவில்லை ஸ்ரீனிவாசன்.

மகள் – தந்தை, மகன் – தாய் – இந்தப் பந்தப் பிணைப்புகள் தான், உலகப் பிரசித்தி. இதில் மாற்றம் நிகழ்வது, ஆயிரத்தில் ஒன்றாய் இருக்கலாம். அவ்வளவே.

உலக நியதிக்கு, சற்றும் தப்பாமல், தாயிடமிருந்த ஒட்டுதல், தந்தையிடம் சீனுவிற்கு வரவில்லை. சின்னதாய் ஒரு இடைவெளி.

தாயார் இறந்ததும், அது கொஞ்சம் கொஞ்சமாய் பெரிதாகத் தொடங்கியது.

அதுவும், சீனு நல்ல மார்க் வாங்கும் போது, ஒரு 'குட்" கூடச் சொல்லாத கமலக்கண்ணன், அவன் ஏதாவது தப்பு செய்துவிட்டால், குடும்பத்தினர் முன்னிலையில் கன்னாபின்னாவென்று கத்துவது, அந்த இடைவெளியை அதிகப்படுத்தியது.

Sitalakshmi's

கமலக்கண்ணனுக்கும், மகன் நன்றாய் படிப்பதில் பெருமையே! ஆனால், அதை… மனதிற்குள்ளேயே வைத்துக் கொள்வாரே ஒழிய , வெளியே ஒரு வார்த்தை கசிய விடமாட்டார்.

மனதைப் படிக்க, சீனு என்ன மந்திரவாதியா?!

மற்றவர் முன்னிலையில், தன்னை அவமானப்படுத்தும் தந்தையைக் கண்டாலே அவனுக்கு எரிச்சலாய் வர ஆரம்பித்தது.

இதுவே, ஒரு மூன்று வயது குழந்தையோ… இல்லை ஐந்து வயது குழந்தையோ என்றால், தாத்தாவிடமோ… இல்லை வீட்டிலிருக்கும் மற்ற பெரியவர்களிடமோ சென்று அழுதிருக்கும். இல்லை, ஆறுதல் தேடியிருக்கும்.

ஆனால், பதினைந்து வயது நிரம்பிய நிலையில்… சீனுவின் மனம் தானே சிந்தித்து, தன்னை அவர்களிடமிருந்து ஒதுக்க ஆரம்பித்தது.

அப்பா என்ன சொன்னாலும், கேள்விகள் எதுவுமின்றி மூக்கின் மீது வந்தமரும் கோபம், கொஞ்சம் கொஞ்சமாய் விரிவடைந்து, அந்த வீட்டில் யார்… எந்த புத்திமதி சொன்னாலும், மூக்கின் மீது சிம்மாசனமிட்டு அமர்ந்து கொண்டது.

அதிலும், பதின்பருவம் வர வர… தாத்தாவின் பேச்சுக்கள் எல்லாம் உச்சக்கட்ட எரிச்சலையே உண்டாக்கின.

Sitalakshmi's

“சத்த நாழி… நொச்சு நொச்சுன்னு பேசாது சும்மா இருங்கோளேன் ” என்று காதைப் பொத்திக் கொண்டு கத்தவேண்டும் போல் தோன்றும். எப்போதடா இந்த வீட்டை விட்டு வெளியேறுவோம் என்ற எண்ணம் அவனுள் வலுப்பெற ஆரம்பித்தது.

“ச்சே… அட்வைஸ்ங்கிற பேர்ல… ஏன் தான் இப்படி அறுத்துத் தள்ரா!” – அனைத்து பருவ வயதினரின் ஏகோபித்த கருத்து , ஸ்ரீனிவாசனுள்ளும் விஸ்வரூபம் எடுத்தது.

“பீட்சா… பர்கர்… கோக்… இதெல்லாம் உடம்புக்கு கெடுதிடா! சாப்பிடாதே!”

“இதென்னடா துணி… கோனாமானா… கொக்கரவட்டின்னுட்டு! முதல… மாத்திண்டு வா”

“சாதத்தை… நன்னா பிசைஞ்சு விட்டுக்கோ! அப்பத் தான்… ரசம் சேரும்”

“இந்த செல்ஃபோன் கருமாந்திரத்தில… என்னடா இருக்கு? அதையே… சதா சர்வகாலமும் நோண்டிண்டே இருக்கியே?! சத்த நாழி… அதைக் கீழ வைக்கப்பிடாதா?”

“நேரத்துக்குப் படுத்து… நேரத்துக்கு எழுந்துக்கணும்டா, சீனு! சூரியன் எழும்புறதுக்கு முன்னாடி எழுந்து படிச்சேன்னு வைய்யு… மனசில நன்னா பதியும். தெரியுமோ?”

Sitalakshmi's

இப்படியாப்பட்ட பேச்சுகளை எல்லாம், இனிமேல் கேட்கவே வேண்டாம் என்பதே பெருத்த நிம்மதியைக் கொடுக்க, மனம் சிறகடிக்க, பெங்களூரைச் சுத்தி வந்தான், ஸ்ரீனிவாசன்.

இந்த நிலையில் தான், வைஷ்ணவிக்கு கல்யாணம் முடிவாகி இருப்பதாக அவனுக்கு தகவல் வந்தது.

அவனுடைய, பெரியப்பா பிள்ளை பேஸ்புக்கில் மெசேஜ் அனுப்பியிருந்தான்.

“அவளுக்குக் கல்யாணம் நிச்சயமான நமக்கென்ன?” என்ற பாவனையில், அந்த மெசேஜிற்கு ரிப்ளை கூட அனுப்பாமல், வெறுமனே பார்த்து விட்டு, சும்மா இருந்துவிட்டான் ஸ்ரீனிவாசன்.

இரு வாரங்களில் மீண்டும் ஒரு மெசேஜ்.

“உன் முகவரி தா. பத்திரிக்கை அனுப்ப வேண்டும்” என்றிருந்தது.

“எதுக்கு? நா... தனியா நிம்மதியா இருக்கது... அவாளுக்கு எல்லாம் பிடிக்கலையா? இங்கயும் வந்து... டார்ச்சர் பண்ணப் போறாளா?” என்று வேகவேகமாய் ரிப்ளை டைப் செய்தவன், ஒரு வினாடி யோசனைக்குப் பின்னர், பாக்ஸ்பேசை இடைவிடாது அழுத்தி, அதை அழித்தான்.

சற்று நேரம், கணினியையே பார்த்துக் கொண்டிருந்தவனின் கைகள், தாமாய் தனது முகவரியை அதில் அடித்தன.

Sitalakshmi's

பத்திரிக்கையும் வந்தது.

ஸ்ரீனியும், அந்தக் கல்யாணத்திற்குப் போனான்.

போனான் தான், ஆனால் கல்யாணத்திற்கு முந்தின நாளோ... இரண்டு நாள் முன்னாடியோ செல்லவில்லை. திருமணத்தன்று காலை, நேரடியாக மண்டபத்திற்குச் சென்றான்.

கால் டாக்சியை விட்டிறங்கி, மண்டபத்திற்குள் நுழையும் போது, “தப்பு பண்ணிட்டோமோ? இங்க வந்திருக்கக் கூடாதோ?” என்று மனம் சுனங்க, அவன் திரும்பி விடலாமா என்று யோசிக்கும் போது,

“என் ஃபிரண்ட்ஸ் எனக்காக தான் வந்திருக்கா... அவா முன்னாடி என்னை அவமானப்படுத்தாதேள்பா. கொஞ்சங்கூட நன்னா இல்ல... சொல்லிட்டேன்” – அப்பட்டமான எரிச்சல் தாங்கிய ஒரு குரல், அவனைத் தடுத்தி நிறுத்தியது.

“அட... நம்ம இனம் போல” என்று சீனுவின் முகம் பிரகாசிக்கும் போதே,

“இனம் என்னடா இனம்?! இவள் தான் உன் இணை!” என்று ஆணையிட்டான், அனந்தன்.

Sitalakshmi's

“உறவோவியம்” – அத்தியாயம் 5

தன் “இனத்தின்” பக்கம் திரும்பிய ஸ்ரீனிவாசனின் பார்வை, அங்கேயே நிலைத்து நின்றது.

இருபத்தியிரண்டு… இருபத்திமூன்று வயதை ஒத்த ஒரு பெண், அவளது தந்தையுடன் காரசாரமாய் விவாதத்தில் ஈடுபட்டிருந்தாள்.

அவள் திருமணமாகதவள் என்பதை அவளது புடவைக் கட்டை வைத்தே அறிந்து கொண்டவன், உள்ளுக்குள் பரவிய சிறு நிம்மதியுடன் அவர்களது பேச்சைக் கவனித்தான்.

சுமாரான உயரம், நல்ல நிறம், முதுகு வரை நீண்டிருந்த முடி, கோபத்தில் குத்தாட்டம் போடும் கண்கள், சிவந்திருந்த உதடுகள் என்று அவளைப் பார்க்கவே சுவாரஸ்யமாய் இருந்தது ஸ்ரீனிக்கும்.

ஆனால் அவனது ரசனைக்குக் குறுக்கே வந்தார், அப்பெண்ணின் தந்தை.

“உன்னை யாரு…அவாளை எல்லாம் விஜய் கல்யாணத்துக்கு அழைக்கச் சொன்னது?” – உச்ச ஸ்தாதியில் இரைந்து கொண்டிருந்தார், கமலக்கண்ணன் வயதை ஒத்த ஒருவர்.

“அவா எல்லாம்… என் ஃபிரண்ட்ஸ். என் அண்ணா கல்யாணத்துக்கு… அவாளை அழைக்கப்படாதா என்ன?”

“ஒழுங்கானாவளா இருந்தா… அழைக்கலாம். ஆனா… அவா நடையும் உடையும்!?? ஈஸ்வரா!!! பாக்க சகிக்கலை! நேக்கு அசிங்கமா இருக்குடி”

“நோக்கு இருந்தா… இருந்துட்டுப் போறது. நேக்கு இல்ல!” என்று பட்டென பதில் சொன்னவள்,

“உங்களை மாதிரி… எட்டு முழ வேஷ்டியை பஞ்சகச்சம் மாதிரியா கட்டிண்டு வருவா?! எல்லாரும்… ஆபிஸ் போறவா! ஃபார்மல் வேர் தானே போட்டுண்டு வந்திருக்கா!? அப்புறம் ஏன்… காச் மூச்சுன்னு கத்றேள்” – வள்ளென்று விழுந்தாள், இளையவள்.

“ஆமா… ஃபார்மல்! பெரிய ஃபார்மல்! நல்ல மஞ்சக்கலர்ல ஒரு சட்டை… அதில பச்சைக் கலர்ல ஒரு கோடு! கருமம்! இன்னொருத்தனைப் பாரு… முழு கருப்பு கலர்ல சட்டை போட்டுண்டு வந்திருக்கான். துக்க வீட்டுக்கா வந்திருக்கான்… கல்யாண வீட்டுக்கு வரவன்… இப்படியா உடுத்திண்டு வரது? நோக்குன்னு… ஃபிரண்ட்ஸ் அமையுறாளே! கருமம்! கருமம்!” என்று தலையில் அடித்துக் கொண்டார் பெரியவர்.

“அப்பா…!!!” – பதில் பேச முடியாமல் போகவே, பல்லை நறநறவென கடித்தாள் மற்றவள்.

“சீக்கிரம் சாப்பிட்டுட்டு… அவாளைக் கிளம்பச் சொல்லு! பாக்கிறவா எல்லாம்… உம் பொண்ணுக்கு ஆண் சிநேகிதம் நிறையவோன்னு கேட்டு வைக்கிறா!? பதில் சொல்ல முடியல” என்றவர், தன் வெற்று மார்பின் மீதிருந்த மேல் துண்டை, உதறிப் போட்டபடி, வேகமாய் உள்ளே விரைந்தார்.

“ச்சே!!! எப்படா… இந்த வீட்டை விட்டுப் போவோம்ன்னுட்டு இருக்கு… எப்பப் பாரு… திட்டிண்டே இருக்கார்” – முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, அவள் கர்ஜிக்க,

உள்ளே சென்ற மனிதர், மீண்டும் மகளிடம் வந்தார்.

“எவனையாவது இழுத்துண்டு ஓடிப் போயி… என் மானத்தை வாங்கிறாத” என்றார் கடுகடுப்பாய். கூடவே, பெண்ணின் தலையில் நங்கென்று ஒரு குட்டு வேறு விழுந்தது.

“அப்பா… இது டூ மச்! கல்யாண ஆத்தில… வச்சு… ஏன் இப்படி இன்டிசன்ட்டா பிகேவ் பண்றேள்!” – ஆத்திரத்தில், கண்கள் பளபளத்தன, அந்தப் பாவைக்கு.

“டிசன்சி பத்தி… யாரு பேசறதேன்னு இல்லாது போச்சு” என்று அவரும் தன் பங்கிற்கு கத்திவிட்டு, உள்ளே சென்றுவிட, அவர் போவதையே பார்த்துக் கொண்டிருந்தவளின் கண்களில், ஒரு தீவிரம் இருந்தது.

அந்த சமயம், ஸ்ரீனிவாசன் அவளருகே சென்றான்.

“ஹலோ!!” என்று அழைப்புடன் ஆரம்பித்தவன், தன்னை அறிமுகப் படுத்தக் கூட முயலவில்லை. நேரடியாக விஷயத்திற்கு வந்துவிட்டான்.

“வயசாகிட்டாலே இப்படித் தான்! யாரைடா… எதுக்குடா திட்டலாம்ன்னு இருப்பா… போல! என் தோப்பனாரும் இப்படித் தான்… என்ட்ட அவர் பேசறதே… திட்டுறதுக்காக தான்” என்றான் அறிமுகமாய். அதிசயமான அறிமுகம் தான்.

எதிரே நின்றவள், விழி விரித்துப் பார்க்க, “நம்ம ஏஜ் பசங்களோட மென்டாலிட்டி… இவா யாருக்குமே புரிய மாட்டேன்றது! இவா… காலத்து அளவிலேயே சிந்திச்சிண்டு… இதைச் செய்யாத… அதைச் செய்யாதேன்னு கண்டிஷன் போட்டுண்டு… ச்சே! இந்த… ட்வென்டியத் சென்சுரில… கேர்ள்ஸ் – பாய்ஸ் ஃபிரண்ட்ஷிப்ங்கிறது… நம்ம லைப்ஸ்டைலோட கலந்த ஒரு விஷயம். அதைப் போய்… கொச்சைப் படுத்திண்டு! ச்சே! அவா… இப்படிப் பேசப் பேசத் தான்… நமக்கும் அவா சொல்ற மாதிரி செஞ்சா என்னங்கிற மெண்டாலிட்டி வந்துடுறது… ஹ்ம்ம்” என்றான் ஒரே மூச்சாக.

அவன் பேசுவதை ஒரு சுவாரஸ்யத்தோடு பார்த்திருந்தவள், “நீங்க யாரு?” என்றாள் குறுகுறு பார்வையுடன்.

“ஹோ! சாரி! உங்க தோப்பனாரோட பேச்சே… மனசில ஓடிண்டு இருந்ததா… அதில என் பேரைச் சொல்லவே மறந்துப் போயிட்டேன்” – நெற்றியில் லேசாய் தட்டியபடி, மன்னிப்பு கோரியவன்,

“நா ஸ்ரீனிவாசன், பிசினஸ் கன்சல்டன்ட்டா இருக்கேன்” எனத் தன்னை அறிமுகம் செய்து கொண்டான்.

“ஹோ! இங்க…? மாப்பிள்ளையாத்து சைடா? இல்லை… பொண்ணாத்து சைடா?” – அவளுக்குமே அவனிடம் விவரம் அறியவேண்டும் போல் ஒரு ஆர்வம் எழுந்தது.

“நா, வைஷ்ணவி… அதான் கல்யாணப் பொண்ணு இருக்கா இல்லையோ… அவளோட சித்தப்பா பையன்” என அவன் அறிமுகம் செய்துகொள்ள,

“ஹோ! அண்ணான்னு சொல்லுங்கோ!” என்றவள்,

“நா… மாப்பிள்ளை விஜய் இருக்கானோ இல்லையோ… அவனோட சொந்தத் தங்கை. பேரு… பத்மா… பத்மாவதி!” என்றாள் புன்னகையுடன்.

“பத்மாவதி! சூப்பர் பேரு… போங்க!” என்று சிலாகித்தவன்,

“வொர்க் பண்றேளா?” என விசாரணைக்கான வலையை விரித்தான்.

“ஹ்ம்ம். ஆமா… சாப்ட்வேர்ல இருக்கேன்” என்றவளும், தன் பக்க விசாரணையைத் தொடங்கினாள்.

“மன்னிக்கு அண்ணன்கிறேள்… ஆனா… நேத்தெல்லாம் உங்களைக் காணலியே?!” என அவள் கொக்கி போட,

“இன்னைக்கே வந்திருக்க மாட்டேன் பத்மா! என்னவோ போய்த் தான் பாப்போமேன்னு வந்தேன். வந்துட்டும்… ஏன்டா வந்தோம்கிற மாதிரி தோணிண்டே இருந்தப்போ… உன்னைப் பார்த்தேனா… கடகடன்னு உள்ள வந்துட்டேன்” என்றான் அவனும், மறையாமல்.

“ஹோ!” – புருவம் உச்சி மேடு வரை உயர்ந்து சுருங்கியபோதும், கண்களில் புன்னகை அவளைக் கேட்காமலேயே வந்து அமர்ந்து கொண்டது.

“ஏன்? ஆத்துல இருக்கவாளோட சண்டையா?” – குரலை லேசாய் தழைத்து அவள் வினவ,

“ப்ச்… அவாளுக்கும் நேக்கும் பல விஷயத்தில ஒத்து வரதில்ல. கிட்ட இருந்து… தினம் தினம் சண்டை போடறதை விட… தூர இருந்துக்கிறது பெட்டெர் இல்லையோன்னோ! அதான்… வேலை கிடைச்சதும்… தனியா போயிட்டேன்” என்றான் அவன்.

“ஹ்ம்ம்! கரெக்ட்!” என்றவளின் குரலில் சிறிதாய் ஒரு ஏக்கம் இருந்தது.

அதை உணர்ந்து அவன் கேட்கும் முன்னர், அவளே அதை வெளியிட்டாள்.

“நேக்கும்… பெங்களூர்ல வேலை கிடைச்சது. ஆனா… அப்பா தான்… போகப்படாதுன்னு சொல்லிட்டார். இப்ப இருக்க வேலையை விட… ஏய்ட் தௌசண்ட் ஜாஸ்தியா தரேன்னு சொன்னா… ஆனா… போக முடியல!” என்றாள் வருத்தத்தோடு.

“வாவ்! ஏய்ட் தௌசண்ட் ஜாஸ்தியா? சூப்பர் பத்மா! பெங்களூர்… எவ்ளோ நல்ல ஊரு தெரியுமா? இங்க சென்னை மாதிரி… கசகசன்னே இருக்காது… சூப்பர் கிளைமேட்!” – பெங்களூருக்கு ப்ராண்ட் அம்பாசிடர் ஆனான், ஸ்ரீனிவாசன்.

“பச்ச்! என்ன செய்றது? அதான்… அப்பா வேண்டான்னு சொல்லிட்டாரே?! ஹ்ம்ம்… அதை விடுங்கோ! உள்ள போலாமா… என் ஃபிரண்ட்ஸ் எல்லாம் வெயிட் பண்ணிண்டு இருப்பா…” என்றவள், முன்னே நடக்க, ஸ்ரீனிவாசனும் பின் தொடர்ந்தான்.

பத்மா முன்னே செல்ல, பின்னே வந்த ஸ்ரீனிவாசனை முதலில் பார்த்தவர், நாராயணன் தான்.

“டேய், சீனு! வாடா கண்ணா” என்று வாயார அழைத்தப்படி, அவனருகே வந்தவர்,

“தங்கை கல்யாணத்துக்கு… இப்பத் தான் வரதா? நேத்தே வந்திருக்கப்படாதாடா? தாத்தா தேடிண்டே இருந்தார் தெரியுமோ?” என்றவர்,

“பாலாஜி… சீனு வந்துட்டான்டா. தாத்தாவாண்ட சொல்லு” எனத் தன் மகனை வேறு ஏவினார்.

ஸ்ரீனிவாசனுக்கு வந்ததே அப்படியொரு எரிச்சல்!

எதற்கா? நாராயணன் அவனிடம் பேசவந்ததுமே, சிறு தயக்கத்திற்குப் பின்னர், தன் நண்பர்களைத் தேடிச் சென்று விட்டாள் பத்மாவதி.

“ச்சே! எப்பப் பாரு… இவாளோட பிரச்சனை தான்” என்று உள்ளுக்குள் கறுவிய ஸ்ரீனிவாசனை, விரைந்து வந்து தழுவிக் கொண்ட ராஜகோபாலன், “டேய்… சீனு கண்ணா! வந்துட்டியாடா! எங்க வராது போய்டுவியோன்னு… வருத்தப்பட்டுண்டு இருந்தேன்” என்றார் பாசம் மிகவுற.

“விடுங்கோ!” – சங்கடத்தை முகத்தில் காட்டி, அவரிடமிருந்து விலகினான் ஸ்ரீனிவாசன்.

அவனது உடல்மொழியே அவன் இன்னமும் மாறவில்லை என்பதை உணர்த்த,

“சாப்பிட்டியாடா ராஜா?” என்றார் அவர் வாஞ்சையாக.

அதற்குள், சாவித்திரி… மாலதி… சேதுமாதவன்… கோதை (நாராயணனின் மகள்) என அனைவரும் ஸ்ரீனியைத் தேடி வந்து விட்டிருந்தனர்.

“சீனு… எப்படிடா இருக்கே?”

“இளைச்சுட்டியேடா ராஜா…”

“வேலையெல்லாம் எப்படிடா இருக்கு?”

“ஒண்ணும் சிரமமில்லையே!”

“தங்கற இடமெல்லாம் சௌகரியமா இருக்கோன்னோ?” – இப்படி ஏகப்பட்ட கேள்விகளுடன் அவனை அவர்கள் தாக்க, ஸ்ரீனிக்கு பத்மாவதியை தவறவிட்டதை நினைச்சு, எரிச்சல் கட்டுக்கடங்காமல் எழுந்தது.

“இவாளை யார் இப்போ வரச் சொன்னா?” என்று மனம் கோபத்தில் கொப்பளிக்க, அதை அவன் முகத்தில் வாயிலாக உணர்ந்தவராக, “புள்ளையாண்டான்… இப்பத் தான் வந்திருக்கான். போய்… சாப்பிட்டுட்டு வரட்டும். கன்னியாதானம் முடிஞ்சதும்… ஆற அமர பேசிக்கலாம்” என அவர்களை அவரவர் வேலையைப் பார்க்க அனுப்பிவைத்தார்.

“சரிடா… சீனு! சாப்பாட்டை முடிச்சிண்டு… வா” என்றபடி அனைவரும் கிளம்பிவிட,

“ஹ்ம்ம்” என்று முனங்கி வைத்தான், ஸ்ரீனிவாசன்.

ராஜகோபாலன் மட்டும் அவனுடன் நின்றிருந்தார்.

“நேக்கு… பசிக்கறது” – மறைமுகமான அறிவிப்பு ஒன்றை அவன் வெளியிட,

சட்டென சிரித்த ராஜகோபாலன், “இதோ… நானும் கிளம்புட்டேன்டாப்பா. நீ… நன்னா சாப்பிட்டுட்டு வா. வந்த கையோட… வைஷுவைப்

பார்த்து…ரெண்டு வார்த்தைப் பேசிடு! நீ… வந்திருக்கேன்னு தெரிஞ்சாலே… கொழந்தே ரொம்ப சந்தோஷப்படுவா” என்றதோடு சென்றும் விட்டார்.

எப்போதடா நகர்வார் என்று காத்துக் கொண்டிருந்த ஸ்ரீனிவாசன், பத்மாவதி சென்ற திசையில் வேகமாய் விரைந்தான்.

ஆனால், அவளைத் தான் காணவில்லை.

“ச்சே!” என அவன் கையை உதறும் போதே, மூளைக்குள் ஒரு மின்னல் வெட்ட, வேகமாய் உணவு கூடத்திற்குள் நுழைந்தான்.

உள்ளே நுழைந்தவனை, “சாப்பிடுங்கோ… தம்பி” என்றழைத்த மேற்பார்வையாளரின் பேச்சே, ஸ்ரீனியின் காதில் விழவில்லை.

அவனது ஒட்டுமொத்த செயல்திறனும் கண்ணுக்குள் பாய்ந்திருக்க, நாலா பக்கமும் சுழன்ற அவன் கண்கள், பத்மாவதியைத் தேடின.

ம்ஹூம்! ஸ்ரீனிவாசனின் பார்வையில் அவனது பத்மாவதி சிக்குவேனா என்றாள்!

“ஹய்யோ!!! மிஸ் பண்ணிட்டேனே” என்று தலையில் அடித்துக் கொண்டு அவன் திரும்பும் போதே,

“ஹல்லோ!” – மறையாத புன்னகையுடன் அவனையே பார்த்தபடி நின்றிருந்தாள் பத்மாவதி.

“ஹே!! உன்னைத் தான் தேடிண்டு இருந்தேன்… எங்க உன் ஃபிரண்ட்ஸ் எல்லாம்… கிளம்பிட்டாளா?” என ஸ்ரீனிவாசன் பரபரக்க,

“ஹ்ம்ம்… ஆமா… இன்னும் சத்த நாழி இருந்தா… அவா முன்னாடியே அப்பா எதுனா சொல்லிடுவார். அதான், போன பந்திலேயே சாப்பிட்டுப் போகச் சொல்லிட்டேன். பாவம்… அண்ணாவைப் பார்த்து கிபிட் கூடக் கொடுக்காம போய்ட்டா! ப்ச்” என்று வருத்தம் கொண்டாள் பத்மவாதி.

“ஹோ! சோ… சாட்!” என்ற சீனுவிற்கும், வருத்தமாக இருந்தது.

“நமக்குன்னு வந்தவாளை… இப்படி அனுப்புறது சங்கடமா தான் இருக்கும்” என்று ஆறுதல் சொன்னவன்,

“சரி… நடந்தது நடந்துடுச்சு. நீ… சாப்பிட்டியா இல்லையா?” என்றான் கரிசனமாய்.

“இன்னுமில்லை. நீங்க?” என அவள் வினவ,

“நானும் சாப்பிடலை… சேர்ந்து சாப்பிடலாமா?” எனக் கேட்டான், ஸ்ரீனிவாசன், ஆர்வமாய்.

“ஹான்!!!” என ஒரு நிமிடம் திகைத்தவள்,

“உன் தோப்பனார் என்ன சொல்லுவாருன்னு யோசிக்கறியா? அப்படின்னா சரி… நா மட்டும் சாப்பிடப் போறேன்” என்ற அவனது ஏமாற்றம் நிரம்பிய வாக்கியத்தில்,

“அதெல்லாம் இல்ல. வாங்கோ… சாப்பிடலாம்” என்று வீம்பாய் அவனுடன் நடந்தாள்.

கடைசி வரிசையில், ஓரமாய் இருந்த இரண்டு இலைகளில் இருவரும் அமர்ந்தனர்.

சாப்பாடு உள்ளே சென்றதோ இல்லையோ, விஷயங்கள் அனாசயமாய் பரிமாறப்பட்டன.

கோமளவல்லி – பலராமன் தம்பதியரின் இரு செல்வங்களில், பெண் செல்வம், பத்மாவதி.

என்னதான் ஒரே பெண்ணாய் இருந்தாலும், வீட்டில் நடைபெறும் கெடுபிடிக்கு அளவே இல்லை.

நங்கநல்லூர் கோவில் ஒன்று அர்ச்சகராய் பெருமாளுக்கு சேவை செய்யும் பலராமனுக்கு, ஆச்சாரம்… ஆச்சாரம்… ஆச்சாரம்… இது மட்டுமே உயிர் மூச்சு!

இதை மீறி, யார் என்ன செய்தாலும்… அவர் ருத்ர மூர்த்தி தான்!

சீனுவின் வீட்டில் அட்வைஸ் மழையென்றால், பத்மாவின் வீட்டில் திட்டு மழை!

ராஜகோபாலன், கண்டிப்பே ஒழிய, கடுகடுப்பு கிடையாது! கமலக்கண்ணன்… கடுகடுப்பு காட்டினாலும், அது தவறு நடக்கும் போது மட்டுமே!

ஆனால், பத்மாவின் வீட்டில் கண்டிப்பே கடுகடுவென்று தான் சொல்லப்படும்.

“செய்யாதே! இதைச் செய்தால், இன்னின்ன கஷ்டங்கள் வரும்…” என்ற அறிவுரைக்குப் பதிலாய்,

“ஏன் செய்றே?” என்ற கொட்டுத் தான் விழும்.

கோமளவல்லி வாயில்லா பூச்சி! அவளுக்கு பெருமாளையும், அடுத்த படியாய் பலராமனையும் மட்டுமே தெரியும்! சம்பாதிக்கும் காசை, ஒரு பைசா விடாமல் வீட்டிற்குக் கொண்டு வரும் கணவனிடம் குறை காண அவளுக்குத் தெரியவில்லை. பிள்ளைகள் முணுமுணுத்தாலும், “அப்பா… நல்லதுக்குத் தான் சொல்வார். கேட்டு… நடங்கோ” என்பதோடு முடித்துவிடுவார்.

பிறப்பிலேயே சாதுவான விஜய், காலம் மாற மாற, அப்பாவின் சொல்லிற்கு இடமில்லாமல், தானுண்டு தன் வேலையுண்டு இருந்துவிட, பத்மாவதி தான் தடுமாறிப் போனாள்.

தன் வயதை ஒத்த பிள்ளைகளைப் போல், அவள் இருக்க முயன்றால், திட்டு… திட்டு… திட்டு மட்டுமே!

அதனால், எதற்க்கெடுத்தாலும் திட்டு தான்!

படிக்கும் வரை தான் இப்படியென்றால், படிப்பை முடித்ததும் கெடுபிடி இன்னும் அதிகமானது.

ஏற்கனவே தன் பேச்சைக் கேட்காத பெண், வேலைக்குச் சென்று… கையில் நாலு காசு பார்த்ததும், தன்னை முழுதாய் மதிக்க மாட்டாள் என்ற எண்ணம் மனதினுள் வேரூன்ற, தொட்டதற்க்கெல்லாம் அவளைக் குற்றம் சொல்ல ஆரம்பித்தார் பலராமன். இன்றைக்கு செய்தாரே, அதைப் போல்!

தன்னைப் போலவே ஒரு ஜீவன் என்ற நினைப்பு, இருவருக்குள்ளுக்கும் பிரவேசிக்க, உணவு முடிந்து கை அலம்பும் போது, இருவரது கைப்பேசி எண்களும் முறையே கை மாறின.

அதன் பின்னர், காதல் கைபேசி தாண்டி கரைபுரண்டது என்பதை விலாவாரியாக விளக்க வேண்டுமா என்ன?

“உறவோவியம்” – அத்தியாயம் 6

ஒரு மாதம் கழித்து

பத்மாவதியின் கைப்பேசி “நான் போகிறேன்… மேலே! மேலே! பூலோகமோ எந்தன் கீழே!!” என்று இரைந்து சத்தம் எழுப்ப,

“டி… கோமளா… உன் புத்திரியோட ஃபோன்ல வர பாட்டைப் பார்த்தியோனோ! நான் போறேன்… மேலே மேலேவாம்… அபிஷ்ட்டு! ” என்று தலையில் அடித்துக் கொண்ட பலராமனை ஒதுக்கித் தள்ளிவிட்டு, கைப்பேசியை எடுத்தாள் பத்மா.

“அந்தக் காலத்தில… வீட்டு போன்ல பேசணும்னா கூட, என் தோப்பனாராண்ட… கெஞ்சிண்டு நிக்கணும். இப்பப் பாரு… ஆளுக்கு ஒரு செல்போனை வச்சிண்டு… அதிலேயே காலத்தைப் போக்கிடுறா. ஹ்ம்ம்… அந்த செல்போன்ல என்னதான் இருக்கோ…” என்று அவர் பாட்டுக்குப் பேசிக்கொண்டே இருக்க,

அதையெல்லாம் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல், கைப்பேசியைத் தூக்கிக் கொண்டு மொட்டை மாடிக்கு ஓடிவந்துவிட்டாள், பத்மாவதி.

சனிக்கிழமையன்று… அதுவும் மதியம் இரண்டு மணிக்கு அழைக்கிறானே என்று ஆச்சரியமாய் இருந்தது பத்மாவுக்கு.

இந்த ஒரு மாதப் பழக்கத்தில், சனிக்கிழமைகளில் அருகே இருக்கும் தமிழ் மெஸ் ஒன்றில் மூக்குப் பிடிக்க உண்டுவிட்டு, குப்பறப் படுத்து குறட்டை விடும் நேரம்… இந்த நேரம் என்று அவளுக்குத் தெரியும். அப்படிப்பட்ட அதி முக்கியமான நேரத்தில், அழைக்கிறானே என்று வியந்தபடி, கைப்பேசியை உயர்ப்பித்து, “ஹலோ! என்ன இந்த நேரத்தில கூப்பிடுறேள்?” என அவள் கேட்கும் முன்னரே,

“ஹே, பத்ஸ்!!! ஒரு சூப்பர் நியூஸ் சொல்லப் போறேன்” என்று குதூகலித்தான், ஸ்ரீநிவாசன்.

“என்ன நியூஸ்? இன்னைக்கு… தமிழ் மெஸ்ல உங்களுக்குப் பிடிச்ச பீன்ஸ் பருப்பு உசுளி போட்டாளா?” என வம்பு செய்தாள் பத்மாவதி.

உற்சாகம் பொங்கி வழிய சிரித்த ஸ்ரீனிவாசன், “ஹே! ச்சே! அதை விட… சூப்பர் விஷயம்!” என்றான் துள்ளலுடன்.

“ஹோ! அப்போ… அவியலா?” என்று பொய்யாய் வியந்தாள், மீண்டும்.

“ஹே! சாப்பாடு இல்ல பத்ஸ்! வேற…” என்று சற்றே சலித்துக் கொண்டாலும், அவனது உற்சாகம் குறையவில்லை.

“ஹ்ம்ம்… புதுசா ஏதாவது ஸ்மார்ட்ஃபோன் வாங்கினேளா?” – மூளையைக் கசக்கி அவள் யோசிக்க,

“போன வாரம் தானே, பழைய ஃபோனை மாத்திட்டு… லேட்டஸ்ட் சாம்சங் கலாக்சி வாங்கினேன்… மறந்திட்டியா?” – அவளது பதில் தப்பு என்று சுத்தி வளைத்துக் கூற முயன்றான் ஸ்ரீனிவாசன்.

“ஏன்… இந்த ஒரு வாரத்துக்குள்ள புதுசா வேற ஃபோன் வந்திருந்தாலும்… சொல்றதுக்கு இல்லையே! நீங்க தான்… நினைச்சாப்ல மாத்திடுரேளே” என்று அங்கலாய்த்த பத்மாவின் குரலில், கொஞ்சமாய் பொறாமை எட்டிப் பார்த்தது.

“ப்ச்… அதை விடு! பேசிண்டு இருந்த விஷயத்துக்கு வா…”

“ஹ்ம்ம்! நீங்களே சொல்லிடுங்கோளேன்!” – செல்லமாய் சிணுங்கினாள் பத்மாவதி.

“என்னோட… யு.எஸ் ட்ரிப் கன்ஃபார்ம் ஆகிடுத்து!!” – சந்தோசம் கொப்பளிக்க, ஆனந்தமாய் கூறினான் ஸ்ரீனிவாசன்.

“ஹே சூப்பர்! சூப்பர்!! அதுக்குள்ளே வந்துடுத்தா?” – பத்மாவதிக்குமே சந்தோசம் தான்.

“ஹ்ம்ம். இப்பத் தான் என்னோட மேனேஜர் கால் பண்ணி… அடுத்த வாரத்தில கிளம்புற மாதிரி பார்த்துக்கோங்கோன்னு சொன்னார்”

“ஹோ!!! அப்போ… விசா எல்லாம் ரெடி ஆகிடுத்தா?”

“என்ன கேள்வி கேட்கிறே? விசா இல்லாது… டிக்கெட் எல்லாம் போடுவாளா என்ன?” – குரலில் சிறு நக்கல் இருந்ததோ?!

“என்னண்ட சொல்லவே இல்லையே!?” – அவளது வார்த்தைகளில் சிறு கோபம் தெறித்ததோ?!

“என்னத்த சொல்லலைங்கிற?” – இப்போது கொஞ்சம் எரிச்சலில் படபடத்தான் ஸ்ரீனி.

“விசா வந்ததைத் தான்…” – அவளுக்கும் எரிச்சலே!

“பிசினஸ் விசா வரதெல்லாம் பெரிய விஷயமா என்ன?”

“இருந்தாலும்…” – சிறிதோ பெரிதோ, தன்னிடம் சொல்லவில்லையே என்று வருத்தமாக இருந்தது பத்மாவுக்கு.

“இதோ பாரு… பத்து! ஒன்னொன்னையும் உன்னண்ட சொல்லிண்டு இருக்க முடியாது. நீயும்… எங்காத்து ஆளுங்க மாதிரி ஆரம்பிக்காதே!” – எரிச்சல் மறைய, கடுகடுப்பில் கடுப்படிதான் ஸ்ரீனிவாசன்.

“ஹ்ம்ம்…” – அவனது கோபத்தில், முகம் சற்றே சுருங்கிப் போனது பத்மாவிற்கு.

“ட்ரிப் கன்ஃபார்மான விஷயத்தை… நோக்குத் தான் மொதல சொல்றேன். ஆனா… நீயானா… அதைச் சொல்லலை… இதைச் சொல்லலைன்னு மொகத்தைத் தூக்கி வச்சுக்கிற!”

“சரி… ஓகே! விடுங்கோ!” – தானும் சமாதானமாகி, அவனையும் சமாதானப்படுத்தும் வகையில், அதை ஒதுக்கி வைத்தவள், “எப்போ கிளம்புறேள்?” என்றாள் உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு.

“மண்டே… டியூஸ்டேவே போயிடலாம்ன்னு பார்க்கிறேன். எதுக்கு… டைம் வேஸ்ட் பண்ணனும்”

“ஹ்ம்ம்!! நாளனைக்கே கிளம்பிடுவேளா?”

“ஆமா, பத்து!!”

“என்னை விட்டுப் போறோம்ன்னு உங்களுக்கு… ஒரு இதுவே இல்லையாண்ணா?”

“இப்ப… மட்டும் உன்னோடவே வா இருக்கேன்? நீ… சென்னைல இருக்க, நா பெங்களூர்ல இருக்கேன். அதில… எங்க உன்னை விட்டுப் போறது? பெங்களூருக்குப் பதிலா… சிகாகோ! அவ்வளவு தானே”

“ஹ்ம்ம்!!”

“சரி… பத்து! கிளம்புறதுக்கான ஏற்பாடெல்லாம் செய்யணும்… நா ராத்திரி உன்னண்ட பேசறேன்” என்று கைப்பேசியை வைத்துவிட்டான் ஸ்ரீனிவாசன்.

அன்றிரவு மட்டுமல்ல, அவன் அமெரிக்கா கிளம்பிச் சென்றபின்னரும், பத்மாவிடம் அவனால் சரிவர பேச முடியவில்லை.

இரவு – பகல் வித்தியாசம் ஒரு காரணமென்றால், வேலை மற்றொரு காரணம்.

மீட்டிங்… மீட்டிங்… மீட்டிங்… என்று காலை நேரம் போய்விட, மாலை நேரத்தில் இந்தியாவில் இருக்கும் நபர்களுடன் கான்ஃபிரன்ஸ் கால் என்று இறக்கை கட்டிக் கொண்டு பறந்தது.

இதில், கிடைக்கும் பத்து நிமிடம்… அரை மணி நேரம் இடைவேளையில், பத்மாவுக்கு அழைக்கத் தான் செய்தான். ஆனால், அப்பேச்சு முழுவடிவம் பெறவே இல்லை.

“ஹய்யோ!” என்றிருந்தது பத்மாவிற்கு.

விஜய் கல்யாணத்தன்று பேசத் தொடங்கியவன், பத்தே நாட்களில் “ஹே… உன்னண்ட ஒரு விஷயம் சொல்லணும்…” என்று ஆரம்பித்தான்.

அவளுக்குமே, என்ன சொல்லப் போகிறான் என்பது புரிந்து போயிற்று. இந்தக் காலத்துப் பெண்களுக்கு… அறிவிற்கு என்ன குறைச்சல்?!

“ஹ்ம்ம் சொல்லுங்கோ!!”

“ஹ்ம்ம்… நேக்கு… உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு பத்து”

“ஹ்ம்ம்!!”

“என்ன ஹ்ம்ம்? நோக்கு… என்னைப் பிடிச்சிருக்கு தானே?”

“ஹ்ம்ம்…”

“ஆமா… இல்லைன்னு எதுனா ஒண்ணு சொல்லு, பத்து” என்று கொஞ்சினான் ஸ்ரீனி, காதல் மன்னனாய் மாறி.

“பிடிக்கலைன்னாக்க… உங்களண்ட பேசிண்டு இருப்பேனா? இல்ல.. பத்துன்னு கூப்பிட விட்டிருப்பேனா?” – அப்பைங்கிளியும் கொஞ்சிற்று.

“ஹோ!!! அப்போ… பிடிச்சிருக்கு?” – குறும்பாய் உதிர்ந்த வார்த்தைகளில், குதூகலமாய் மலர்ந்தன ஸ்ரீனியின் அதரங்கள்.

“ஆமா… ஆமா… ஆமா…! நீங்க விஷயத்துக்கு வாங்கோ…”

“விஷயம்… என்ன விஷயம்… நாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கலாமா… இதான் விஷயம்”

“ஆஹா! கல்யாணத்தை… என்ன கடலைமிட்டாய் சாப்பிடுற மாதிரி சொல்றேள்?!”

“அப்புறம்…அதென்ன கடலைப் புரட்டுற மாதிரி பெரிய விஷயமா?”

“பின்ன இல்லையா? என் தோப்பனாரை சம்மதிக்க வைக்கணும் இல்லையா? அதே பெரிய விஷயம் தானே?”

“எங்காத்தில இருந்து மாட்டுப்பொண் எடுத்திருக்கிறவர், உன்னை எங்காத்துக்கு மாட்டுப்பொண்ணா அனுப்ப மாட்டாரா என்ன?”

“ஹ்ம்ம்….”

“என்ன ஹ்ம்ம்? நோக்கு… இஷ்டமா இல்லையா?”

“இஷ்டம் தான்…”

“அப்போ ஓகே. புது ப்ராஜெக்ட் விஷயமா… என்னை அமெரிக்கா அனுப்புறதா இருக்கா… அந்த ட்ரிப் முடிஞ்சதும், வீட்டில பேசிடலாம்” – சுலபமாய் வழி கண்டான், ஸ்ரீனி. இந்த விஷயத்தில் எதிர்ப்பு கிளம்பதற்கு வாய்ப்பே இல்லை என்று அவனது மனம் அடித்துச் சொன்னது. ஏற்கனவே சம்மதியாக இருப்பவர்கள், இன்னொருமுறை சம்மந்தி ஆகப் போகிறார்கள். அவ்வளவு தானே?!

ஆனால், பத்மாவுக்குக் கொஞ்சம் என்ன… நிறையவே கலக்கம் தான்.

“ஒத்துப்பாளா? அப்பா… ஏற்கனவே நொட்டு சொல்லிண்டு இருப்பார். லவ்… அது… இதுன்னா தாம் தூம்ன்னு குதிக்கப் போறார்”

“அப்படி… அவர் தாம் தூம்ன்னு குதிச்சாக்க… நாமளே டும்… டும்… டும் கொட்டிண்டுடுவோம்”

“ஹய்யையோ! அப்பாவை மீறிண்டா?!!”

“அவர் மாட்டேன்னு சொன்னா தானே… மீறிண்டு பண்ணப் போறோம். நேக்கு… என்னவோ ஆத்தில எல்லாருக்கும் சந்தோஷமா இருக்கும்ன்னு தான் தோண்றது! நாம… பண்ண விஷயத்திலேயே… இதான் அவாளுக்குப் பிடிச்ச விஷயமா இருக்கப் போறது. நீ… வேணும்னாக்க பாரேன்!”

“அப்படிங்கிறேள்?!!” – சந்தேகமாய் இழுத்தாள் பத்மாவதி.

“ஆமா… பத்து! நாம… என்ன மதம் மாறி… ஜாதி மாறியா கல்யாணம் பண்ணிக்கப் போறோம்ன்னு சொல்றோம். அவாளே ஜாதகம் பார்த்து… மனுஷாளை விசாரிச்சு… உங்க குடும்பத்துக்கும் எங்க குடும்பத்துக்கும் ஒத்து வரும்ன்னு நினைச்சு தானே, உங்க அண்ணாவுக்கும் என் தங்கைக்கும் கல்யாணம் பண்ணா?! அப்படி இருக்கும்போது… நம்மளை மட்டும் பண்ணப்படாதுன்னு சொல்லிடுவாளா என்ன?” – குரலில் உறுதியுடன் மொழிந்தான் ஸ்ரீனிவாசன்.

அவன் என்னவோ, கல்யாண விஷயத்தை… கட்டிக் கற்கண்டை டியமண்ட் கற்கண்டாய் மாற்றுவது போல் தித்திப்பாகவும், சுலபமாகவும் பேசி முடித்துவிட்டான் தான். ஆனால், பத்மாவிற்கு ஒரு மாதிரி “கிலி”யாகத் தான் இருந்தது.

ஆனால், அவன் அமெரிக்கா சென்ற இந்த பதினைந்து நாள் இடைவேளையில், “கிலி”எல்லாம் இறக்கை கட்டிக் கொண்டு பறந்துவிட, நெல்மணிக்குக் காத்திருக்கும் பச்சைக்கிளியாய் ஸ்ரீனியின் வரவிற்காக காத்திருந்தாள் பத்மாவதி.

அவனும் வந்தான்.

“இந்தப் பதினஞ்சு நாளும்… உன்னாண்ட பேசாம இருந்தது நேக்கு பைத்தியம் பிடிச்ச மாதிரி இருந்தித்து.. பத்து! முடியலடி!” என்று குரல் கரகரக்க, அவளிடம் பேசினான்.

“நேக்கும் தான். நீங்க… மொதல உங்காத்தில பேசுங்கோ…” என்று அடைத்த தொண்டையை சரி செய்துகொண்டு, அவனை அடுத்தக் கட்டத்திற்கு காலடி எடுத்துவைக்கச் சொன்னாள், பத்மா.

“ஹ்ம்ம். பேசறேன். இந்த சனிக்கிழமையே ஆத்துக்கு வந்து… பேசி முடிச்சிடுறேன்” என்று உறுதி கொடுத்தவன், அதன் படி சனிக்கிழமை காலை சென்னைக்கு வந்திறங்கினான்.

எள் விளக்கின் ஒளியில், கருப்பு வஸ்திரம் மினுமினுக்க, சனி பகவான் விவகாரமாய் சிரித்தார்.

வாசல் தெளித்து, கோலம் போட்டுக் கொண்டிருந்த மாலதியின் “டேய்… சீனு!! வாடா!” என்ற சந்தோஷ வரவேற்பைத் தொடர்ந்து, முழு குடும்பமும் அவனை வரவேற்றது.

முன்னர் போல் முகத்தைச் சுளிக்காமல், அவர்களிடம் இரண்டு வார்த்தை பேசியவன், “தாத்தா எங்க?” என்றான், கண்ணைச் சுழற்றியபடி.

“இன்னைக்கு… ஆஞ்சநேயருக்கு திருமஞ்சனம்டா கண்ணா. அதனால,,, கோவிலுக்குப் போயிருக்கார்” என சாவித்திரி சொல்லவும்,

“ஹோ! நானும் ஸ்நானம் பண்ணிண்டு… கோவிலுக்குக் கிளம்புறேன்” என்றான் ஸ்ரீனிவாசன்.

குடும்பத்தினர் அனைவரது கண்களும் அண்டாவைப் போல் விரிந்து, ஆனானப்பட்ட ஸ்ரீனிவாசனையே சங்கடப்பட வைத்தது.

“என்னடா இது… புதுசா?” – வாய் விட்டே கேட்டு விட்டான் பாலாஜி.

என்ன பதில் சொல்லுவான்?

“அதெல்லாமில்லை” என்று முணுமுணுத்துவிட்டு, அறைக்குள் ஓடி மறைந்தவன், முதல் வேலையாக “rchd hom. wll tlk 2 grandpa soon” என்று பத்மாவுக்கு குறுஞ்செய்தி அனுப்பினான்.

பத்தே நிமிடத்தில் குளித்துக் கிளம்பி, கோவிலுக்குக் கிளம்பியவனின் கையில் காப்பி டம்ப்ளரை கொடுத்த சாவித்திரி, “வேலைக்குப் போனதும்… புள்ளையாண்டானுக்கு பொறுப்பு வந்துடுத்து பார்த்தியா… மாலு” என்று சிலாகித்தார்.

“தேமே” என்று இழித்து வைத்தவன், காப்பியை ஒரே மடக்கில் ஊற்றிக் கொண்டு, கோவிலுக்கு ஓடினான்.

பொது இடத்தில் வைத்துப் பேசினால், கை நீட்டி விட மாட்டார் என்ற எண்ணம் போலும்! கில்லாடி தான்!

அவன் கோவிலுக்குள் அடி எடுத்து வைத்த சமயம், ராஜகோபாலனும் கமலக்கண்ணனும் வெளியே வந்து கொண்டிருந்தனர்.

“தாத்தா” என அவன் அழைக்க,

“டேய்… சீனு கண்ணா” என்று சந்தோஷத்தில் இரண்டடி வேகமாய் எடுத்து வைத்தார் ராஜகோபாலன்.

ஆனால், கமலக்கண்ணனிடம் சந்தோஷத்தின் முகவரி சின்னதாய் கூட இல்லை.

சட்டென முகம் சுருங்க, “நா ஆத்துக்குப் போறேன்பா. நீங்க… பேசிட்டு வாங்கோ” என்று தகப்பனாரிடம் கூறியவர், மகனின் முகத்தை ஏறிட்டுக் கூடப் பார்க்காமல் விறுவிறுவென வெளியே சென்றுவிட்டார்.

“கமலக்கண்ணா… புள்ளையாண்டான் வந்திருக்கான். ரெண்டொரு வார்த்தை பேசப்படாதாடா?” என்ற ராஜகோபாலனின் பேச்சு, காற்றுக்கே இரையானது.

தந்தை போவதைக் கண்ணில் கோபம் பொங்கப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீனிவாசன், “நா… உங்களண்ட தான் பேச வந்தேன்” என்றான் கடுகடுப்பாய்.

“என்னடாப்பா பேசணும்? பி.ஹெட்ச்டி படிக்கப் போறியா என்ன?” – நக்கலாய் சிரித்தார் ராஜகோபாலன்.

“அதெல்லாமில்ல. இது… என்னோட கல்யாண விஷயம்” – இருந்த கோபத்தில், முன்னுரை பின்னுரைக்கெல்லாம் ஸ்ரீனிக்கு நேரமே இருக்கவில்லை. நேரடியாக விஷயத்திற்கு வந்துவிட்டான்.

“அப்படிப்போடு! படிச்சு முடிச்சாச்சு… வேலையும் கிடைச்சாச்சு… அடுத்து கல்யாணம் தான்னு முடிவு பண்ணிட்டியோ?” – கை கொட்டி நகைத்தார் பெரியவர்.

“$$$$$$$$” – ஸ்ரீனியின் முகம் இஞ்சி தின்ற டைனோசர் போல் ஆகிற்று.

“ஆமா… இருபத்திமூணு வயசிலேயே என்னடாப்பா கல்யாணம்!? இன்னும்… பாலாஜிக்கே முடியலையே” – பெரிய பேரன் இருக்கையில், சின்னவனுக்கு எப்படி திருமணம் செய்வது என்று யோசித்தார் ராஜகோபாலன். நியாயம் தானே!

“அவனுக்கு முடியுற வரைக்கும் எல்லாம்… என்னால காத்திண்டு இருக்க முடியாது”

“நோக்கு முடியாதா? இல்ல… நீ லவ் பண்ற பொண்ணுக்கு முடியாதா?” – வயதில் மூத்தவர் என்பதை நிரூபித்தார் ராஜகோபாலன்.

“அட! கண்டுபிடிச்சுட்டாரே!” என்பதை விட, “எப்படி கண்டுபிடிச்சார்?” என்பதே மனதைக் குடைய, அதை ஒதுக்கி விட்டு அவருக்குப் பதில் சொல்வது கடினமாய் இருந்தது சீனுவிற்கு.

அவன் தயங்கி நிற்பது ராஜகோபாலனுக்கு கேலியாய் இருந்தது போலும்.

“பொண்ணு தானே?” – சிறு ராகத்துடன், நக்கலாய் இழுத்தார் அப்பெரியவர்.

சட்டென நிமிர்ந்த சீனு, தீப்பார்வை ஒன்று பார்த்தான்.

“சரி…சரி. பொண்ணு யாரு?” என அவர் நேரடியாய் விஷயத்துக்கு வர,

“நம்ம ஆளுங்க தான். வேற மதமோ… ஜாதியோ இல்ல” – எதிர்ப்பு எதனால் கிளம்பும் என்பதை யோசித்து, அதற்கு வழியமைக்காதபடி பீடிகை போட்டான் ஸ்ரீனிவாசன்.

“யாருன்னு சொல்லு” – இதில்லாமல் என்னை அசைத்து விட முடியாது என்பது போல், அடுத்த கேள்வியைக் கேட்டார் பாட்டனார்.

“பத்து… ச்சே… பத்மாவதி. நம்ம வைஷுவோட நாத்தனார்” என்று விவரம் கூறிய ஸ்ரீனிவாசன், அவரது முகத்தையே கூர்ந்துப் பார்த்தான், படபடப்புடன்.

“அந்தப் பொண்ணா? அவளைத் தான்… பாலாஜிக்குக் கேக்கிறதா இருக்கோம்!!” – ஆகப்பெரிய குண்டு ஒன்றை தூக்கிப் போட்டார், ராஜகோபாலன்.

கூடவே, “வைஷ்ணவியண்ட சொல்லி… அவா மாமனார்ண்ட கேக்கச் சொல்லியாச்சே. இன்னைக்கு… விஷயம் சொல்றதா சொல்லியிருக்கா. அவர் சரின்னு சொன்னா… நாளைக்கு நானும் உன் பெரியப்பாவும் பேசலாம்ன்னு இருந்தோம். இப்போ… வந்து இப்படி சொல்றியே?” என அவர் கூறியபோது, சீனு கோபத்தின் உச்சியில் இருந்தான்.

“உறவோவியம்” – அத்தியாயம் 7

“என்னது? பாலாஜிக்கு கேட்டிருக்கேளே? யாரைக் கேட்டுண்டு… பொண்ணு கேட்டேள்” – இளம்கன்று துள்ளிற்று.

“யாரைக் கேட்டுண்டு… பொண்ணு கேட்கணும்? உன்னைக் கேட்டுண்டா?” – கொம்பு சீவிய காளை மாடு, சற்றே உறுமிற்று.

“பின்னே கேக்க வேணாமோ? அதெல்லாம்… நேக்குத் தெரியாது… பத்மாவை நேக்குத் தான் கல்யாணம் பண்ணி வைக்கணும். பண்ணி வைக்கிறேள். அவ்வளவு தான்” – ஸ்ரீனிவாசனால் அந்த அதிர்ச்சியை இலகுவாய் எடுத்துக் கொள்ள முடியவில்லை. ஏற்கனவே, முன்னே போனால் முட்டி… பின்னே வந்தால் உதைத்துக் கொண்டிருப்பவன்,

இப்போது கள்ளச்சாராயம் குடித்த கழுதை போல், எந்தப் பக்கம் போனாலும் உடம்பைச் சிலுப்பிக் கொண்டு, உக்கிரமாய் நின்றான்.

அவன் கோபத்தை உணர்ந்தவர் போல், "ஆத்துக்குப் போய் பேசிக்கலாம். வா" என்றார் அவன் தோள் தொட்டுத் திருப்பி.

"கையை விடுங்கோ!" என்று ஒரே தட்டில், அவரது கையைத் தட்டிவிட்டவன்,

"எப்பவே நேக்கு… ஒரு முடிவு தெரிஞ்சாகணும்" என்றான் பிடிவாதமாய்.

"உன் அவசரத்துக்கெல்லாம் என்னால ஆட முடியாதுடாப்பா. வேணும்னா ஆத்துக்கு வா… பேசிக்கலாம்" என்றவர், ஆஞ்சநேயரைப் பார்த்து ஒரு கும்பிடு போட்டுவிட்டு, தன் அங்கவஸ்திரத்தை சரி செய்து கொண்டு, வீட்டை நோக்கி நடையைக் கட்டினார்.

ஸ்ரீனிக்கு வந்த கோபத்திற்கு, அங்கேயே உருண்டு பிரண்டு அழலாமா என்று வந்தது. ஆனால், காரியம் ஆகவேண்டும். இப்படியொரு வில்லங்கத்தை அவன் எதிர்பார்த்திருக்கவே இல்லை. சுலபமாய் முடிந்துவிடும் என அவன் கண்ட கனவில், மின்னாமல் முழங்காமல் ஒரு இடியைத் தூக்கிப் போட்டுவிட்டாரே என்று தாத்தா மீது தான் கோபமாய் வந்தது.

அந்தக் கோபம் இம்மி கூடக் குறைந்துவிடாமல், அதை இழுத்துப் பிடித்துக் கொண்டு, தாத்தாவின் பின்னே நடந்தான் ஸ்ரீனிவாசன்.

"வந்தவன்… பெருமாளை செவிச்சிட்டு வாடா. நானும்… நம்ம ஆமும் எங்கேயும் ஓடிட மாட்டோம்" என்று ராஜகோபாலன் சொன்னதைப் பல்லைக் கடித்தபடி கேட்டவன், ஆஞ்சநேயரைப் போய் தரிசனம் செய்திருப்பானா என்ன? அவனுக்கு… ஆஞ்சநேயரை விட… பத்மாவதியின் மேல்லல்லவோ நாட்டமாய் இருந்தது!

ஆஞ்சநேயர் புன்முறுவல் பூக்க, சனியோ சீனியை சீண்டிப் பார்க்க சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தார்.

"சொன்னது கேட்கப்படாதுன்னு முடிவு செய்துட்டே! ஹ்ம்ம்!" என்று சலித்துக் கொண்டதோடு, ராஜகோபாலனும் நிறுத்திக் கொண்டார்.

வீடு வந்து சேர்ந்துவிட, புறங்காலை கழுவிக் கொண்டு, வீட்டினுள் நுழைந்தார் ராஜகோபாலன்.

“சாவித்திரி, கொஞ்சம் ஜலம் எடுத்திண்டு வாம்மா” என்றார் அங்கிருந்த ஊஞ்சலில் அமர்ந்தபடி.

“இந்த வைஷூ கண்ணாட்டி இருந்தா… நா வந்த நிமிஷமில்லாது ஜலத்தை எடுத்திண்டு வந்து நீட்டுவா, அவ இல்லாது… வீடே வெறிச்சோடிப் போனமாதிரி இருக்கு” என்றார் பாசத்துடன்.

மாலதி, மடிசார் தலைப்பை எடுத்து கண்ணைத் துடைத்துக் கொள்ள, “அசடு… இதென்ன கண்ணைக் கசக்கிண்டு? பொண்ணு… புக்காத்தில நன்னா இருக்கவேணாமா? கண்ணைத் துடை” என்று மருமகளை அதட்டினாரே ஒழிய, அவருக்குமே தொண்டையை லேசாய் செரும வேண்டியிருந்தது.

“நீங்க…கலங்கறச்சே, நேக்குத் தாங்கலையே அப்பா” என்றார் மாலதி, அழுகையை அடக்கியபடி.

“வயசாகிடுத்தோனோ… பிரியமா இருந்தவாளை விட்டுட்டு இருக்க முடியலை” என்றார் அவர், இன்னமும் சரி வராத குரலுடன்.

பிறந்தது முதல் பிரிந்தே இராத மகளை விட்டிருப்பது மாலதிக்குப் பெரும் கஷ்டமாய் இருக்கவே, அதை மறைக்க அவர் அரும்பாடுபட,

“அவளண்ட…. இப்படி அசட்டுப் பிசட்டுன்னு அழுது வைக்காத. குழந்தே… நம்மளை நினைச்சிண்டு ஆம்படையானோட ஒண்டாம இருந்துடப் போறது” என்று அறிவுறுத்தினார், ராஜகோபாலன்.

“அவ… நன்னா இருந்தா போதும்ப்பா. நேக்கு… லோகத்தில வேறென்ன வேணும்” – தன்னை அடக்கிக் கொண்டு, அடுக்களைக்குள் சென்றுவிட்டாள் மாலதி.

நம் பொறுமையின் சிகரம்… ச்சே தப்பாய் சொல்லிவிட்டேனோ… பொறுமையின் மடு, “தாத்தா… ஆத்துக்கு வந்து பேசலாம்ன்னு சொன்னேளே… இப்ப என்னடான்னா வைஷூ புராணம் பாடிண்டு

இருக்கேள். சீக்கிரமா... ஃபோன் பண்ணி... வைஷுவை பேச வேணாம்ன்னு சொல்லுங்கோ” என்றான், அவசர அவசரமாய்.

அவனது குரலில் தென்பட்ட அவசரமும், அவன் குரல் உயர்த்திப் பேசிய விதமும், வீட்டினர் அனைவரையும் கூடத்தை எட்டிப் பார்க்கும்படி செய்தது.

“சீனிவாசா... நா சொல்றதை சத்த நாழி பொறுமையா கேளு. நோக்கு... இருபத்திமூணு வயசே இன்னும் முடியலைடா”

“இன்னும் பத்து நாளில முடிஞ்சிடும்...” – பட்டென பதில் கொடுத்தான், பேரன்.

“சரி... இருபத்தினாலே முடியலையோ இல்லையோ? அதுக்கு இன்னும்... பன்னெண்டு மாசம்... பத்து நாள் இருக்கோ இல்லையோ?” – சுருக்கென வந்தது அவரது கேள்வி.

“பச்ச்! வயசென்ன வயசு? அதையே பேசறேளே! ஒரு குடும்பத்தை... நல்லபடியா நடத்துற அளவுக்கு... நேக்கு சம்பளம் வரது. அது போறாதா என்ன?” எனக் கேட்ட ஸ்ரீநிவாசனுக்கு, “உத்தியோகம் புருஷலட்சணம்” என்ற வாக்கியம் மட்டும் நினைவில் நின்றது போலும்.

“பணம் மட்டும்... குடும்பம் நடத்தப் போறாதுடா கண்ணா. பொறுமை வேணும்” – கால் மேல் கால் போட்டு, ஒரு ராஜாவைப் போல் ஊஞ்சலை அலங்கரித்த ராஜகோபாலன், அழுத்தம் திருத்தமாய் கூறினார்.

“ப்ச்!” – அலட்சியமாய் சீனு உதடு பிதுக்க,

“பொறுமை இல்லாட்டியும் போறது. பக்குவமானும் வேணும். குடும்பஸ்தன் ஆகுற பக்குவம்... உன்னண்ட சுத்தமா இல்ல” என்றார் தீர்மானமாய்.

“ப்ச்! சும்மா... சைகாலஜி பேசிண்டு இருக்காதேள். நேக்கு... பத்மாவைக் கல்யாணம் பண்ணி வைப்பேளா மாட்டேளா?” – கை நீட்டிக் கேள்வி கேட்டான் பேரன்.

குடும்பமே அதிர்ந்து நின்றது.

அப்பாவின் பின்பக்கமாய் நின்றிருந்த நாராயணன், ஓடி வந்து ஸ்ரீனிவாசனின் கையைத் தட்டிவிட்டார்.

“சீனு… என்னடா இது? தாத்தாவண்ட… இப்படியா பேசறது? பொறுமையா பேசுடா… ராஜா”

“விடுங்கோ பெரியப்பா. நானும்… எத்தனை வாட்டி கேட்டுட்டே தெரியுமா? சும்மா… பக்குவம்… பொறுமைன்னுட்டு கதை சொல்லிண்டு இருக்கார்” என்று எரிச்சல் பட்டான், ஸ்ரீனிவாசன்.

“எத்தனை வாட்டிடா கேட்டே? ரெண்டே வாட்டி தானே கேட்டே! அதுவும்… அதட்டி உருட்டி ஆர்டர் தானே போட்டே! போருமையாவா கேட்டே?” – ராஜகோபாலனும் சளைக்காமல் பேசினார்.

“ரெண்டு வாட்டி கேட்டாச்சோ இல்லையோ. பண்ணி வைக்க வேண்டியது தானே?” என எகிறினான் ஸ்ரீனி.

“உனக்கான பதிலை… நான் சொல்லலைன்னு சொல்லு பாப்போம். விஜயோட தங்கையை பாலாஜிக்குக் கேட்டு விட்டிருக்கேன்னு சொன்னேன் தானே?” என அவர் பொறுமையாக சொல்லிக் கொண்டிருக்கும் போதே,

“அதைத் தான்… வேணாம்ன்னு ஃபோன் பண்ணிச் சொல்லுங்கோ. பாலாஜிக்கு வேணாம்… சீனுக்கு தாங்கோன்னு கேளுங்கோ. அவ்வளவு தானே” – சுலபமாய் சொல்லிவிட்டான், சின்னவன். ஆனால், சுண்டைக்காய் பறிக்கும் காரியமா கல்யாணம்? பாவம், அறியாத சிறுவன்!

“பெரியவன் இருக்கையில… சின்னவனுக்கு எப்படிடா கேக்கிறது? அவாளும் யோசிக்க மாட்டாளா என்ன?” – நயமாய் தான் பேசினார் ராஜகோபாலனும்.

“பாலாஜிக்கு… வேற எடத்தில பேசுங்கோ. நேக்கு… பத்மா தான் வேணும்” – ஒரே பிடியாய் நின்றான் ஸ்ரீனிவாசன்.

“புரியாது பேசறயே, கண்ணா! ஒண்ணு சொல்லி விட்டப் பின்னாடி… அதை மாத்த முடியாதுடா. நன்னா இருக்காது” – எப்படியாவது இவனுக்குப் புரிய வைத்துவிட மாட்டோமா என்ற பரிதவிப்பு அவருக்கு.

“ஏன்… நன்னா இருக்காது…” – சீனுவும் தன் நிலைப்பாட்டை விட்டு இறங்குவதாய் இல்லை.

“அவாளும்… நோக்கும் இருபத்திநாலு வயசு தானே ஆறதுன்னு யோசிப்பா தானே? பொண்ணுக்கும் புள்ளைக்கும் குறைஞ்சது… ரெண்டு மூணு வருஷமானும் வித்தியாசம் இருக்கனும்ன்னு நினைக்க மாட்டாளா? அதுவுமில்லாம… நீயும் இப்பத் தான் சம்பாதிக்க ஆரம்பிச்சு இருக்கே… வாழ்க்கை இப்பத் தான் தொடங்கியே இருக்கு… டக்குன்னு ஒரு சுமை வந்தா தாங்குவியோ மாட்டியோன்னு யோசிப்பா தானே?” – பெண் வீட்டுப் பக்க நியாயத்தையும் எடுத்துக் கூற முயன்றார் பாட்டனார்.

“நீங்களா ஏதானும் சொல்லாதேள்! அவா… வீட்டில என்னோட வேலையையும் சம்பளத்தையும் மொதல சொல்லுங்கோ. பாலாஜி வேணாம்… சீனுவே எங்க பொண்ணுக்கு ஆம்படையானா வரட்டும்ன்னு அவாளே சொல்லுவா” – தன் வேலையைப் பற்றிய கர்வம், ஸ்ரீனியின் பேச்சில் துள்ளி விளையாடியது. படித்து முடித்த கையோடு, முக்கால் லட்சத்திற்கும் மேல் சம்பளம் வாங்கும் தன்னை விட உயர்ந்த மாப்பிள்ளை அவர்களுக்குக் கிடைத்துவிடுவானா என்ன என்ற எண்ணம் அவனுக்கு.

“சீனு!!!” – இதுவரை பேரன் புரியாமல் பேசுகிறான் என்றெண்ணிக் கொண்டிருந்த ராஜகோபாலன், தன் பெரிய பேரனை அவன் தாழ்த்திப் பேசவும், முகம் இறுகிப் போனார். பெரிதாய் வார்த்தைகளை விட்டுவிடாமல், “சீனு” என்ற ஒரே அதட்டலில் அவனை எச்சரித்தும் பார்த்தார்.

ஆனால், அவன் அடங்குவதாய் இல்லையே!

“நா சொன்னதைச் சொல்லுங்கோ… எடுத்த உடனேயே லட்சக்கணக்கில சம்பாதிக்கிற மாப்பிள்ளை… போகப் போக கோடிக்கணக்கில கொடி கட்டிப் பறப்பான்னு அவளாக்குத் தெரியும். வைஷ்ணவியோட ஆத்துக்காரரும் ஐ.டில தானே இருக்கார். அவரண்ட சொல்லுங்கோ… அக்கௌன்டன்ட்டை விட பிசினஸ் கன்சல்டன்ட் ஜாஸ்தியாவே சம்பளம் வாங்குவான். மாசத்தைக்கு ஒரு முறை… அமெரிக்கா… யூரோப்ன்னு பறப்பான். நம்ம தங்கையும் நன்னா இருப்பான்னு அவாளே ஒத்துண்டுடுவா. பாலாஜியைக்

கட்டிண்டா… சென்னையிலேயே தான் வெந்து வழியணும். வரவுக்கு… செலவுக்கு இழுத்துண்டு… எல்லாத்துக்கும் கணக்குப் பாத்துண்டு இருக்கனும்ன்னு அவாளே என்னைத் தான் கன்சிடர் பண்ணுவா. நீங்க வேணா பாருங்கோ” என்று அவன் சொல்லச் சொல்ல, தன் அறைவாயிலில் நின்று கேட்டுக் கொண்டிருந்த பாலாஜியின் முகம் சிறுத்துக் கொண்டே வந்தது.

அடுக்களையிலிருந்து, “ஹ்ஹ்ஹ்ஹீஇக்க்க்….” என்று ஒரு விசும்பல் சத்தம், சன்னமாய் வெளியே கேட்டது.

என்னதான், முந்தானை தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டிருந்தபோதும், ஒரு தாயின் மனக்கஷ்டம் காற்றில் பரவி, கூடத்திலிருந்தவர்களின் செவியை நிறைத்தது.

தன் முன்னிலையிலேயே, பிள்ளையைக் குறைத்துப் பேசினால் எந்தப் பெற்றவளால் தாங்க முடியும். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சல்லவா?!

சின்னப் பேரனின் பேச்சினால் சுருங்கிய பெரிய பேரனின் முகம், மனதை ரணமாக்க,

அதைவிடவும் “என் பிள்ளையை எப்படிடா தாழ்த்திப் பேச உனக்கென்னடா தகுதி இருக்கிறது?” என்று சண்டைக்கு வராமல், தங்களுக்குள்ளேயே மருகும் நாராயணன் – சாவித்திரி தம்பதியரின் வேதனை, ராஜகோபாலனின் நெஞ்சைக் கத்தி கொண்டு அறுத்தது.

வேகம் கொண்டு ஊஞ்சலில் இருந்து எழுந்தவர், “வாயை மூடுடா. நானும்… சின்னப் பையனாச்சேன்னுட்டு பொறுமையா பேசிண்டு இருக்கேன். நீ… என்னடான்னா… துள்ளிண்டே இருக்கியே!” என்றபோது, அந்த வீடே அதிர்ந்தது போலிருந்தது! அப்படியொரு ஆளுமை அக்குரலில்!

ஆனால், நம் சிங்கம் அடங்குமோ!? பெரிய சிங்கத்தின் முடியை சீப்பால் வாரி… சிடுக்கெடுக்கத் தயாராய், சீறிக் கொண்டு நின்றது.

சில வினாடிகள், நிசப்தத்தில் மறைய, “நானொண்ணும் பொய்யா… புரட்டலையே! உண்மையைத் தானே சொன்னேன்” என்றான் சீனு, எங்கோ பார்த்துக் கொண்டு.

“விளாசிடுவேன் படவா! வாயை மூடப் போறயா இல்லையா?” – ராஜகோபாலனுக்கு வந்த ஆத்திரத்துக்கு அளவே இல்லை.

அந்த நேரம், வீட்டுத் தொலைப்பேசி அலறியது.

“அதை யாரானும்… எடுங்கோளேன்” – பேரனின் மேலிருந்த எரிச்சலில் சிடுசிடுத்தார் பாட்டனார்.

வேகமாய் ஓடிச்சென்று எடுத்த சேதுமாதவன், “வைஷூ, சொல்லும்மா” என்றது தான் தாமதம்,

“வைஷுவா? என்னண்ட கொடுங்கோ” என்று ஓடிச் சென்று தொலைப்பேசியை வாங்கினான், ஸ்ரீனிவாசன். இல்லையில்லை, பறித்தான்.

எடுத்த வினாடியில்லாமல், “பத்மா கல்யாண விஷயமா… உன் மாமனாரண்ட பேசிட்டியா என்ன?” என்று படபடத்தான்.

“ஏய்… சீனு? நீயா? நீ… என்ன இங்க? பெங்களூர்ல இருந்து வந்திருக்கியா என்ன? ஆமா… கல்யாணத்துக்கு வந்துட்டு என்னைக் கூடப் பாக்காம போயிட்டியே! நேக்கு… உன் மேல ஏகத்துக்கும் கோபம் தெரியுமோ?” – விவகாரம் புரியாமல் வளவளக்க ஆரம்பித்தாள் வைஷ்ணவி.

“ப்ச்… எவ்வளவு முக்கியமான விஷயம் பேசிண்டு இருக்கேன். சும்மா… அச்சு…. பிச்சுன்னு பேசிண்டு. பத்மா கல்யாணம் பத்தி… பேசினியா இல்லையா?” என்று பேச்சைக் கத்தரித்தான் ஸ்ரீனிவாசன்.

“பத்மா கல்யாணமா? பத்மாவை நோக்கு… எப்படி தெரியும்?” – பழைய மாவிற்கு, மீண்டும் ஒரு முறை கரண்டி போட்டு, சூடாய் இட்லி வார்க்கத் தொடங்கினாள் வைஷ்ணவி.

“பெருமாளே! நேக்கு… வர எரிச்சலுக்கு…!” என்று பல்லைக் கடித்தவன்,

“பேசினியா இல்லையா?” என்றான் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பது போல்.

ஏதோ கொஞ்சம் புரிவது போலிருந்தது வைஷ்ணவிக்கு.

கொஞ்சம் சிரிப்பு கூட வருவது போலிருந்தது. முயன்று தன்னை அடக்கியவள், “என் புக்காத்தில… பொண் எடுத்து… பொண் கொடுக்கிற பழக்கமில்லையாம். என் மாமனாரோட அக்காவை ஒராத்தில கொடுத்து… அதே ஆத்தில இருந்து அவரோட அண்ணாவுக்கு மன்னி எடுத்தாளாம். ஆனா… ரெண்டே வருஷத்தில… அக்காவும் மன்னியும் அடுத்தடுத்து பெருமளாண்ட போய்ட்டா போல. அதனால… ராசியில்லைன்னுட்டு… மாமா ஒத்துக்கலை. பத்மாவுக்கு வேற இடத்தில தான்… பாக்கிறதா இருக்கா” என்றாளே பார்க்கலாம், சற்று முன்னே ராஜகோபாலன் போட்ட இடியை விட இந்த சதி பெரும் சத்தத்துடன்… அதே சமயம் சேதாரத்துடன் ஸ்ரீனியின் தலையில் இறங்கியது!

அடுத்த ஐந்தாவது நிமிடம், வீட்டை விட்டு வெளியேறினான் ஸ்ரீனிவாசன். ஒருவரிடமும் ஒரு வார்த்தை கூட சொல்லிக் கொள்ளாமல்.

அதையடுத்த ஐந்தாவது நாள், “ஆபீஸ் போன… பத்மா ஆத்துக்கு வரல, தாத்தா. மாமாவும் அவரும் தேடப் போயிருக்கா” என்று தொலைப்பேசியில் பதறினாள், வைஷ்ணவி.

ஆறாவது நாள் காலை, பத்மாவுக்கும் ஸ்ரீனிவாசனுக்கும் திருமணம் முடிந்துவிட்டது என்ற செய்தி, இரு வீட்டாரையும் நிலைகுலைய வைக்கும் வண்ணம் வந்து சேர்ந்தது!

“உறவோவியம் – அத்தியாயம் 8″
ஸ்ரீனிவாசன் – பத்மாவதியின் திருமணம் முடிந்து, ஒரு வாரகாலம் ஆகியிருந்தது.

இந்த வாரகாலத்தில், பெருத்த கலவரம் நடக்கும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளதாக, கணவன் – மனைவி இருவருமே எண்ணினர்.

வைஷ்ணவியின் திருமண சமயத்தில், தன் முகவரியை அவர்களிடம் பகிர்ந்து கொண்ட நினைவில், தன் வீட்டிலிருந்து யாரேனும் வந்து,

வாக்குவாதத்தில் ஈடுபடுவர் என்று நூறு சதவீதம் நம்பிக்கையாய் இருந்தான், ஶ்ரீனிவாசன்.

பத்மாவதியும் அப்படியே. தகப்பனார் வராமல் போனாலும், தமையனேனும் தன்னைத் தேடி வருவான் என்றெண்ணியிருந்தாள். அப்படி வந்தால், அவனிடம் என்ன விதமான பதில் சொல்லவேண்டும் என்றெல்லாம் யோசித்து… யோசித்தே, தலையெல்லாம் வலிப்பது போலிருந்தது பத்மாவிற்கு.

“ஏன்னா… அவா நம்மளைத் தேடிண்டு வரவே இல்லையே! அவாட்ட விஷயம் போனுச்சா இல்லையா? அப்பா… காச்ச் மூச்சுன்னு கத்திண்டு… என்னை வந்து இழுந்துண்டு போய்டுவாரோன்னு நான் பயந்திண்டு இருந்தா… என்னன்னா… ஆள் அரவமே இல்லாது இருக்கா” – தன் ஆதங்கத்தைக் கணவனிடம் கொட்டினாள் பத்மாவதி.

ஶ்ரீனிக்குமே, நடப்பதை நம்ப முடியவில்லை.

தன் திருமணம் விஷயம் தெரிந்ததும், தாத்தாவோ அப்பாவோ வரவில்லை என்றாலும்… பெரியப்பாவும் சேது அப்பாவும் வருவார்கள், அப்படியே இல்லையென்றாலும் ஃபோனில் சமாதானமேனும் பேசுவார்கள் என்று எதிர்பார்த்திருந்தவனுக்கு, சற்று ஏமாற்றம் என்று தான் சொல்லவேண்டும்.

ஏமாற்றம் ஒரு புறம் என்றாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளும் மனநிலை அவனிடமில்லை.

“விட்டது சனின்னு இருக்காளோ என்னவோ? நம்மளை வேணாம்ன்னு நினைக்கிராவளை பத்தி… நோக்கு என்ன? நம்ம லைப்பை நாம பாப்போம்” என்று மனைவியிடம் படபடத்தான், ஶ்ரீனி.

“ஹ்ம்ம்ம்ம்” என்று இழுத்தபோதும்,

வீட்டை விட்டு வெளியேறிய தன்னை, தேடக் கூட இல்லையே என்ற வருத்தம் பத்மாவதியிடம் மண்டத் தொடங்கியது.

போனால் போகட்டும் என்று எண்ணும் அளவிற்குத் தான் தேவையில்லாதவள் ஆகிவிட்டோமா? என்ற கேள்விக்கு விடை தெரியாமல் தவித்தது அப்பெண்மனம்.

“போய்த் தொலையட்டும். சனியன் ஒழிஞ்சது” என்று சந்தோஷப்படுகிறார்களோ என எண்ணி… எண்ணி மனம் வருந்தியது.

ஓடி வந்த தன்னை அவர்கள் தேடவில்லை என்பது தப்பாய் தெரிந்த அவளிற்கு, தான் ஓடி வந்ததே தவறென்று தெரியவில்லை! பாவம்!

அவளைப் பொறுத்தவரை, காதலித்தாள்… காதல் வீட்டில் தெரிவிக்கப்பட்டது… அவர்கள் மறுத்தார்கள்… ஓடி வந்துவிட்டாள். அவ்வளவே!

ஓடி வந்து தான் செய்த தப்பை விடவும், ஓடி வந்தவளைப் பின்தொடர்ந்து ஓடி வராத குடும்பத்தார் மீது பெரும் குற்றம் இருப்பது போல் தோன்றியது.

“ஏன்னா… நாம என்ன அவ்வளவு பெரிய தப்பா செய்துட்டோம். ஒழிச்சு விடுறதுக்கு!? ஒரே ஜாதில… ஒரே குலத்தில… சொல்லப் போனா… ஒரே கோத்திரத்தில தானே கல்யாணம் செய்திண்டிருக்கோம்! சும்மா… ராசி… ஊசி… பாசின்னு இவா நம்ம காதலை உள்ள அமுக்கி தைக்காது இருந்திருந்தா… நாம ஏன் ஓடி வரப்போறோம். சொல்லுங்கோ! முப்பது வருஷத்துக்கு… முன்ன… ரெண்டு பேர் இறந்து போனான்னா… இப்பையும் அப்படியா நடக்கும். சயின்ஸ் எவ்வளவோ இம்ப்ரூவ் ஆகியிருக்க இந்தக் காலத்தில… ஏன்னா இப்படி பழைய பஞ்சாகத்தையே படிச்சிண்டு இருக்கா… ” – தன் மனக் குமுறல் முழுதையும் கணவனிடம் கொட்டி முடித்தாள் பத்மாவதி.

“அதான்… அவா பழைய பாட்டே படிக்கிறான்னு தெரியறதோனோ… அப்புறமென்ன? புலம்பாது… சும்மா இரு” என்று அதட்டியவன்,

“நம்மளை… வேண்டாம்ன்னு ஒதுக்கினவா முன்னாடி… நாம நல்லா வாழ்ந்து காட்டணும். பொறுமையில்லை… பக்குவமில்லைன்னுட்டு கிளாஸ் எடுத்திண்டு இருந்த எங்க தாத்தா முன்னாடி, வீடு… கார்… லக்சூரியஸ் லைப்ன்னு எல்லாத்தையும் சம்பாதிச்சுக் காட்டணும்” என்றான் ஸ்ரீனி, மிகவும் தீவிரமடைந்த குரலில்.

“ஹ்ம்ம்!!!” – அவனளவிற்குத் தீவிரமாய் இல்லாவிட்டாலும், பத்மாவதிக்கும், தன்னை வேண்டாம் என்று தூக்கி எறிந்தவர்கள் முன்னிலையில் நல்ல வசதியாக வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற எண்ணம் திடமாகவே இருந்தது.

அதன் முதல்படியாக, பத்மா வேலை பார்த்துக் கொண்டிருந்த நிறுவனத்திற்கு, வாய்க்குள் நுழையாத பெயர் கொண்ட வியாதியை குறிப்பிட்டு… அதனால் வேலையை விடுவதாக ஈமெயில் அனுப்பினார்கள். காசு கொடுக்கையில், வாய்க்குள் நுழையாத வியாதி என்ன… மனித உடம்பிற்குள் வந்தே இராத வியாதி இருப்பதாய் கூட, மெடிக்கல் சர்டிபிகேட் கிடைக்குமே!

அவளது நிறுவனமும், அவளது ராஜினாமாவை ஏற்றுக் கொண்டது.

சர்வீஸ் லெட்டெர் வந்த நாளில்லாமல், ஸ்ரீனியின் நிறுவனத்திலேயே பத்மாவிற்கும் வேலைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

சிபாரிசு என்றில்லாமல், பத்மாவுமே நன்றாக வேலை செய்யக் கூடியவள் என்பதால், சுலபமாகவே வேலை கிடைத்தது.

அதன்பின்னர் தான், ஸ்ரீனி நிம்மதியாக மூச்சே விட்டான்.

“ஹே பத்ஸ்… எனக்கு இப்பத் தான் சந்தோஷமா இருக்கு… ” – பத்மாவதியை இறுக அனைத்துக் கொண்டு அவன் சொல்ல,

“நேக்கும் தான்… வேலை கிடைக்குமா கிடைக்காதான்னு கவலையா போச்சு. ஆத்துலேயே… உக்காந்திண்டு இருக்கறது மூச்சு முட்றது” என்றாள் பத்மாவதி, அவன் மார்பில் முகம் சாய்த்து.

“ரெண்டு பேருக்கும்… ஒரே ஆபீஸ் வேற, அதான் எனக்கு இன்னமும் சந்தோஷமா இருக்கு பத்ஸ்! ஒண்ணாவே கிளம்பிப் போயிட்டு… ஒண்ணாவே வந்துடலாம்” – நிம்மதியில் மலர்ந்தன ஸ்ரீனியின் உதடுகள்.

“ஹ்ம்ம்… இந்த பத்து நாளும் ஒரே கடியா இருந்துச்சுன்னா. நீங்க பாட்டுக்கு… காலையில ஒன்பது மணிக்கெல்லாம் கிளம்பிப் போய்டுறேள்… திரும்பவும் ஏழு மணி… எட்டு மணிக்குத் தான் வரேள்.

நா… மட்டும் மொட்டு… மொட்டுன்னு உக்காந்திண்டு இருந்தேன்” – கடந்த பத்து நாளின் பாதிப்பு, பத்மாவை விட்டு விலகுவதாய் இல்லை.

“ஹே! ராத்திரி நடந்ததை எல்லாம்… நினைச்சிண்டே இருந்திருந்தா… பொழுது நன்னா போயிருக்கும் தானே?” என்று ஸ்ரீனி, அவளது கன்னம் நிமிண்ட,

“ஹே! ச்சீஈ….போங்கோ… அதைப் போய்… அச்சோ…” – அழகாய் வெட்கம் கொண்டாள் பத்மாவதி.

“பத்ஸ்… சூப்பரா வெக்கப்படுறேடி…” என்ற ஸ்ரீனியின் வலது கையிலிருந்த வேலைக்கான உத்தரவு, காற்றில் பறந்தது. ஏனா? அவனது வலது கை தான், பத்மாவின் இடுப்பை வளைத்திருந்ததே!

“அச்சோ… இதென்ன விளக்கு வைக்கிற நேரத்தில… விடுங்கோ…” – அவனது பிடியைத் தகர்த்த முயன்றாள் பத்மா.

“ஹ்ம்ம் விடுற மாதிரியா இருக்கே?” என்ற ஸ்ரீனியின் உதடுகள், பத்மாவின் கழுத்து வளைவில் புதைந்தன. வெகு ஆழமாய்.

அங்கே, சுரந்த தேன்மதுரம்… சொர்க்கத்தின் வாசற்படியாய் அமைய, மெல்ல மெல்ல முன்னேறின அவனது கைகளும், உதடுகளும்.

உதடுகள், பத்மாவின் கன்னத்தில் தன்னை நிலை நிறுத்திய நேரத்தில், கைகள் அவளது முதுகில் மெல்லிசை வாசித்தன.

“சொன்னா… கேளுங்கோ! இந்த நேரத்தில… சாமிக்கு விளக்கேத்தி வைக்கணும்ன்னா… வேண்டாம்ன்னா…” என்று சின்னக் குரலில் கொஞ்சினாள், பத்மா.

“அவாளை… பழைய பஞ்சாங்கம்ன்னு சொல்லிட்டு… நீ பழைய பஞ்சாங்கம் மாதிரி பேசாதே, பத்ஸ்!” என்றவன், அவளை இன்னும் இறுக்கத் தன்னுடன் இறுக்கிக் கொண்டான்.

“அதில்லைன்னா…”

“பெருமாளுக்கு… கோடிக் கணக்கானவா விளக்கேத்தி வச்சிருப்பா… நீ ஒராள் ஏத்தலைன்னா ஒண்ணும் தப்பில்லை…” என்றவன், தன்னுடன்

ஒட்டிக் கொண்டு நின்றவளை, நின்ற நிலையிலேயே தூக்கியபடி படுக்கையறை நோக்கிச் சென்றான்.

“ஹ்ம்ம்! சொல்றது கேக்கமாட்டேங்கிறேள்… என்னாமோ செய்ங்கோ…” என்று சலித்துக் கொள்வது போல் பாவனை செய்தாலும், பத்மாவிற்குமே மோகத்தில் மனம் லயிக்கத் தான் செய்தது.

தன்னவனின் அருகாமை… உலகத்தையே மறக்கச் செய்துவிட, அவனுடன் ஒண்டவே செய்தாள் அவளும்.

“டக்…” – படுக்கையறைக் கதவு அடைந்தது.

“டக்…” – படுக்கையறை விளக்கு அணைந்தது.

“இச்…” – படுக்கையறை களியாட்டத்தின் முதல் அச்சாரம் போடப்பட்டது.

அதன் பின்னர், அந்த அறையை விட்டு அவர்கள் வெளியே வர, மூன்று மணி நேரத்திற்கு மேலானது என்பது வேறு விஷயம்.

இரவு பத்து மணியளவில், குளியலறையை விட்டு வெளியே வந்த பத்மாவதி, இன்னமும் படுக்கையை விட்டு எழமாலிருந்த ஸ்ரீனியின் வயிற்றில் லேசாய் குத்தினாள்.

“இன்னும்… எழுந்துக்க மனசு வரலையாக்கும். எழுந்திருங்கோ… பசிக்கிறது… வெளிய போய் சாப்பிட்டு வரலாம்” என்றாள், உடையை சரி செய்தபடி.

“ஆத்தில தான்… சமைக்கிறது வேண்டிய சாமானெல்லாம் இருக்கே… நீயே எதையானும் செய்யேன்” என்றான் அவன் சோம்பேறித் தனமாய்.

“இதோ… பாருங்கோ, நா முன்னமே ஒரு வாட்டி சொல்லிட்டேன். நேக்கு… சமைக்க வாரதுன்னுட்டு… நூட்லஸ் தான் போடத் தெரியும். தோசை மாவிருந்தா… தோசை வாக்கத் தெரியும். அவ்வளவு தான். வேறொண்ணும் தெரியாது…” – பசி கோபமாய் மாறி, எதிரே இருந்த புலியைப் பதம் பார்த்தது.

“ப்ச்… நீயெல்லாம் பொம்மனாட்டி தானே? ஒரு உப்மா கூடவா கிண்ட மாட்டே?” – பசியும் சோம்பேறித்தனமும், போட்டிப் போட்டுக் கொண்டு நாக்கைச் சுழற்றி அடித்தன.

“ஆஹா… நன்னா இருக்கே! பொம்மனாட்டி தான்… சமைக்கணுமா என்ன? ஏன்… ஆம்படையான் சமைச்சா உப்மா வரமாட்டேன்னு பாத்திரத்தோடவே ஒட்டிண்டுடுமா என்ன? நீங்க… கிண்டறது தானே?” – பத்மாவும் சளைக்காமல் பதில் சொன்னாள்.

“ப்ச்… ஒரு உப்மாவுக்கு இந்த கத்தா கத்துவே” என்று சலித்துக் கொண்டே எழுந்தவன்,

“பீட்சா… எதாவது ஆர்டர் பண்ணிடு, பத்மா. நேக்கு… வெளிய போக சலிப்பு இருக்கிறது” என்றபடி, மீண்டும் படுத்துக் கொண்டான்.

“ப்ச்… இப்போவே மணி பத்தாகிடுத்து… இனிமே எப்ப கொண்டு வருவானோ” – என்று கோபித்துக் கொண்டபோதும், பத்மா சமையல்கட்டிற்குள் சென்று அடுப்பை மூட்டவில்லை. வரவேற்பறைக்குள் சென்று, பீட்சா ஹட் நம்பரைத் தான் அழுத்தினாள்.

வாழ்க்கை… பீட்சா பர்கரில் மட்டுமல்லாது… கர்நாடகா அக்கி ரொட்டி… ஆந்திரா பெசரட்டு… மைசூர் மசாலா தோசா… கேரளா புட்டு… தமிழ்நாடு இட்லி என்று வெவ்வேறு சமையற்கலையில் காலம் தள்ளத் தொடங்கியது.

பத்மா வேலைக்குச் செல்லத் தொடங்கியதும், இந்த நடைமுறை வெகு சுலபமாய் நடந்தேற ஆரம்பித்தது.

காலையில், இருவரும் ஒரு டம்பளர் காப்பியைக் கலந்து குடித்துவிட்டு, அலுவலகம் சென்றுவிடுவார்கள்.

அங்கே இருக்கும் கேன்ட்டீனில் காலை உணவு.

மதியம், பக்கத்திலிருக்கும் ஏதாவது உணவகத்தில் அல்லது கேன்ட்டீனிலேயே மதிய உணவு.

மாலையில், அங்கேயே சூடாய் சுக்கு காப்பி அல்லது பில்ட்டர் காப்பி. இல்லையேல் “சத்துள்ள” ராகி மால்ட்!

இரவு உணவை, முன்னதாக வீடு திரும்பிடும் பத்மாவதி பார்த்துக் கொள்வாள். பார்த்துக் கொள்வாள் என்றால் சமைப்பாள் என்று அர்த்தமில்லை. வரும் வழியிலிருக்கும், “எக்ஸ்செல்லென்ட் ரோட்டி ஹோம்”மில், இருவருக்கும் பார்சல் வாங்கி வருவாள். அப்படியில்லையேல், பீட்சா ஆர்டர் கொடுப்பாள். ஒருவேளை, ஸ்ரீனி சீக்கிரமே வீடு திரும்பிவிட்டால், உணவிற்கு வெளியே செல்வார்கள். அப்படியே இல்லையென்றால், தனக்கு தெரிந்த நூடில்ஸை செய்து வைப்பாள்.

அவர்களுக்கு, இது பெரிய விஷயமாக தெரியவில்லை.

ஒன்றிரண்டு முறை, “பொம்மனாட்டின்னா சமைக்கத் தெரிய வேண்டாமோ” என்று எகிறிப் பார்த்த ஸ்ரீனிவாசன்,

“அப்ப… நா வேலையை விட்டுட்டு… வீட்டிலேயே இருக்கட்டுமா? சொல்லுங்கோ… இருக்கட்டுமா?” என உச்ச ஸ்தாதியில் கத்தத் தொடங்கவும், அமைதியாகிவிட்டான்.

அவனுக்கு, அவளது வேலையும்… அதன் மூலமாக வரும் சம்பளமும் தேவையாக இருந்தது.

இருவரது வருமானமும் இருந்தால் தானே, அவன் கண்ட கனவு படி… பெரிய வீடு… கார்… லக்சூரியஸ் லைப் என்று வாழ முடியும்.

அவனது சம்பளத்தை வைத்து, மகிழ்ச்சியாகவே வாழலாம் தான். ஆனால், சின்னதாய் ஒரு ஃபிளாட் வாங்கலாம்… கொஞ்ச பட்ஜெட்டில் ஒரு கார் வாங்கலாம். அவ்வளவே.

ஆனால், அவனது ஆசை அதுவல்லவே! பெரிய வீடாய்… சென்னையிலிருக்கும் அவனது தாத்தாவின் வீட்டைப் போல் பெரிய வீடாய் வாங்கவேண்டும் என்பதே அவனது ஆசை.

பத்து குடுத்தனக் காரர்களுள் ஒருவராய் இருக்க அவனுக்கு விருப்பமில்லை.

தனியாய்… அழகாய்… பெரிதாய்… சுற்றியும் தோட்டத்துடன்… கீழும் மேலுமாக ஒரு குட்டி அரண்மனை போல் வீடு வாங்கவேண்டும்.

அதற்கு, அவனது சம்பளம் மட்டுமே பத்தாது.

பத்மாவினதும் வேண்டும். சாப்பாட்டிற்காக பார்த்துக் கொண்டு, வீட்டைக் கோட்டை விட்டுவிடக் கூடாது என்ற எண்ணம் அவனுக்கு.

அதைவிடவும், சமைக்கவே தெரியாத பத்மா சமைக்கும் உணவை உண்ணும் கொடுமையை விட, வெளி உணவே மேல் என்று உள்ளுணர்வு அச்சுறுத்த, “நீ… சமைக்கவே வேண்டாம் தாயே” என்று மானசீகமாய் கும்பிடு போட்டவன், அதன் பின் வாய் திறந்திருப்பானா என்ன?

நாட்களும் ஓடின.

ஸ்ரீனிவாசனின் ப்ராஜெக்ட்டில், மீண்டுமொரு முறை யூ.எஸ் செல்லும் வாய்ப்பு வர, பிசினஸ் சைடில் தான்… டெக்னிகல் சைடில் பத்மா என்ற ரீதியில், கணவனும் மனைவியும் அமெரிக்கா பறந்தனர்.

அரசலும் புரசலும் என்றாலும், செழித்து வந்த பணம்… இருவரையும் இழுத்துச் சென்றது.

ஆறு மாத அமெரிக்க வாசத்தின் விளைவாய், பெங்களூர் மாநகரத்தை விட்டு “சற்று” தள்ளியுள்ள ஒரு “பாஷ்” ஏரியாவில், தன் குட்டி அரண்மனையை வாங்கினான் ஸ்ரீனிவாசன்.

அமெரிக்காவில் சம்பாதித்த பணம், “டோக்கன் அட்வான்சிற்கு” சரியாகிவிட, இருவரது பெயரிலும் வங்கிக் கடன் வாங்கி, வீட்டைத் தங்களது பெயரில் மாற்றிக் கொண்ட இருவரது முகத்திலும், பெருமிதத்தின் சாயல்.

“உறவோவியம்” – அத்தியாயம் 9

இருவருக்குமே வீடு வாங்கியதில், ஏகப்பட்ட பெருமை.

தங்களது பணத்தில்… தங்களது உழைப்பில்… அதுவும் இவ்வளவு சிறு வயதில், இவ்வளவு பெரிய வீட்டைக் கட்ட முடிந்திருக்கிறது என்பதே பெரும் சாதனையாய் தோன்றியது அவர்களுக்கு.

உடன் வேலை செய்வோர், கூடப் படித்தவர்கள், நெருங்கிய நண்பர்கள் என்று தங்களுக்குத் தெரிந்தவர்களைக் கூப்பிட்டு, அந்த வீட்டில் ஒரு விருந்து கொடுத்தனர்.

சாதனை செய்து என்ன புண்ணியம்? அதை உலகறிய செய்ய வேண்டாமோ?

விருந்துக்கு வந்தவர்களில், ஸ்ரீனிக்குத் தெரிந்தவர்கள் என்று பார்த்தால்… பத்து பேர் மட்டுமே. பத்மாவின் நண்பர்கள் தான், ஏராளமான பேர் வந்திருந்தார்கள். சென்னையில் இருந்து, ஒரு படையே வந்திருந்தது.

வந்தவர்கள் அனைவரும், பாடிய ஒரே பாட்டு.

“ஹே… செம லக்கிடி நீ! ரெண்டு பேரும்… சூப்பர் சேலரி! சூப்பர் டூப்பர் வீடு… நாங்கெல்லாம் ஒரு ஃபிளாட் வாங்கவே முழிச்சிட்டு இருக்கோம்… நீங்க ஆறே மாசத்தில பங்களாவே வாங்கிட்டீங்களே! சூப்பர் போ” என்பதை வேறு வேறு விதமாய் பாடினர்.

ஆனால், ஒரே நபர் – லாவண்யா மட்டும் தனித்து நின்றாள்.

“பத்து… என்னை நீ ஒரு நல்ல ஃபிரண்டா தானே நினைக்கிற?” என்று அவள் ஆரம்பிக்க,

“ஹே! என்னடி… திடீர்ன்னு? நேக்குன்னு… ஃபிரண்ட்ஸ் மட்டும் தானேடி இருக்கீங்க? அப்பா… அம்மா… அண்ணான்னு யாருமே இல்ல… ஸ்ரீனியும் நீங்களும் தானே இருக்கேள்?” என்றாள் பத்மா.

“இருக்கோம் சரி… ஆனா…” என அவள் இழுக்க,

“ஹே… ஏன்டி… இப்படி இழுத்துண்டு இருக்கே? சொல்லு… நமக்குள்ள என்ன?” என ஊக்கினாள் பத்மாவதி.

“ஹ்ம்ம். சரி” என்றவள், ஒரு நெடுமூச்சை எடுத்து வெளியேற்றிவிட்டு,

“இவ்வளவு பெரிய வீடு… உங்க ரெண்டு பேருக்கும் தேவையா பத்து?” என்றாள் முதல் கேள்வியிலேயே தாக்குதலை ஆரம்பித்து.

“சூப்பர் வீடு!”, “பெரிய வீடு!”, “தனி வீடு!”, “தோட்டத்துடன் கூடிய வீடு!” என்று அனைவரும் புகழ்ந்த அவர்களது வீட்டை, எதிர்த்து வந்த முதல் விமர்சனத்தில் திடுக்கிட்டுப் போனாள் பத்மாவதி.

“ஹே என்ன லாவ்ஸ்?! வீடு நன்னா இல்லையா என்ன?” என பதறியவளை,

“நா நல்லா இல்லைன்னு சொல்லல, பத்து. இவ்வளவு பெரிய வீடு தேவையான்னு கேட்டேன்! முதல… இவ்வளவு பெரிய வீட்டை… சுத்தம் பண்றது எவ்வளவு கஷ்டம்ன்னு தெரியுமா? கீழ… மேல… தோட்டம்… மொட்டை மாடின்னு தினம் தினம் சுத்தம் செய்யணும். அப்படியே இல்லைன்னாலும்… ரெண்டு நாளைக்கு ஒரு வாட்டியாவது சுத்தம் செய்யணும்…”

“!!!!!!” – பத்மாவின் முகத்தில் அதிர்ச்சியின் ரேகைகள்.

“சுத்தம் செய்றதை விடு… ஆளு வச்சுப் பார்த்துக்கலாம். ஆனா… ஸ்ரீனி இனிமேல் அடிக்கடி வெளிநாடு போவாருன்னு வேற சொல்ற. அவரு வெளிநாடு போயிருக்க நேரத்தில… நீயா எப்படி இந்த வீட்டில இருப்பே? ஒராளா… இவ்வளவு பெரிய வீட்டில பயமில்லாம இருந்திருவியா?” என லாவண்யா முகத்துக்கு நேராய் எதிரே இருக்கும் வாழ்க்கையை விளக்கவும், பத்மாவிற்கு கண் முன்னே பூச்சி பறப்பது போலிருந்தது.

அவள் திருதிருவென்று விழித்துக் கொண்டிருப்பதை உணர்ந்த லாவண்யா, “உன்னை… டிஸ்கரேஜ் பண்றதுக்காக சொல்லல பத்து. இந்த வீட்டை வாடகைக்கு விட்டுட்டு… இப்போ இருக்க ஃபிளாட்லேயே இருங்களேன், பத்து. நல்ல வாடகையும் வரும்… அதை வச்சு ஈ.எம்.ஐ கொஞ்சம் சமாளிக்கலாம். பிரச்சனையும் இல்லை” என்று, நல்லவிதமாக அறிவுரையும் கொடுத்தாள்.

பத்மாவுக்கும், அவள் சொல்வதில் ஏதோ நியாயம் இருப்பது போலிருந்தது.

வீட்டை சுத்தம் செய்வது கூட அவளுக்குப் பெரும் கவலையாய் தெரியவில்லை. ஸ்ரீனி வெளிநாடு செல்லும் நாட்களில், தான் மட்டும்

தனியாக இருக்கவேண்டும் என்ற நினைப்பே, அவளுக்குள் பெரும் பீதியைக் கிளப்பியது.

பீதி தெளிவதற்குள், ஸ்ரீனியின் முன்னே ஆஜரானாள் பத்மா.

“ஸ்ரீனி… நாம இந்த ஆமை வாடகைக்கு விட்டுடலாம். சரியா? இப்போ… இருக்க ஆம்லேயே இருந்துக்கலாம்” என்றாள் படாரென விஷயத்தை உடைத்து.

எப்போதுமே, ஒரு முடிவைச் சொல்கையில், “இது தான் பிரச்சனை… இந்த இந்தப் பிரச்னையை சரி செய்வதற்காக இந்த முடிவை எடுத்திருக்கிறேன். இந்த முடிவினால்… இன்ன இன்ன நன்மைகள் வரும்” என்று காரணக்காரிய விளக்கத்தோடு சொல்லிவிட்டோமேயானால், எதிரே இருப்பவருக்கும் நமது நோக்கம் புரியும்.

விளக்கேற்றுவதற்கு முன்னர், திரி திரித்து… எண்ணெய் ஊற்றி… திரியை அதில் போட்டு… எண்ணெயில் அதை தோய்த்து… திரியின் நுனியை நன்றாய் தூண்டிவிட்டு… அல்லது கொஞ்சம் கற்பூரத்தை திரியின் நுனியில் வைத்து… அதன் பின்னரே தீப்பட்டியை எடுத்து, தீக்குச்சியைக் கொளுத்த வேண்டும்.

அதை விட்டுவிட்டு, விளக்கை தயார் செய்யாமல், டபாலென தீக்குச்சியை உரசிக் கொண்டு நின்றால், எண்ணெயும் திரியும் எங்கிருந்து வரும்?

தீக்குச்சி நம் கையைத் தான் சுடும்.

அது தான், நடந்தது இப்போதும்!

“என்னடி உளறிண்டு இருக்கே? நா… எவ்வளவு ஆசைப்பட்டு… பிரயத்தனப்பட்டு வாங்கியிருக்கேன் தெரியுமா?” – ஸ்ரீனிக்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை.

“வாங்கியிருக்கேன் இல்ல… வாங்கியிருக்கோம். என் பேரையும் சேர்த்து தான்… லோன் வாங்கியிருக்கே ஞாபகம் வச்சுக்கோ…”

“ஹே… ரொம்பப் பேசாத பத்மா, உன்னோட சம்பளம் வெறுமனே இருபத்தியஞ்சு தான். என்னது… உன்னை விட மூணு மடங்கு ஜாஸ்தியாக்கும்”

“ஜாஸ்தியா இருந்தா… அதை வச்சே வாங்கியிருக்க வேண்டியது தானே? ஏன்… என்னதைக் கேட்டேள்?” – ஊசி கொண்டு குத்தினாள், பத்மா.

“கொடுத்துடுறேன்டி தாயே! இன்னும்… ஆறே மாசம்… யூ.எஸ் போயிட்டு வந்தேன்னு வச்சுக்கோ… உன் பணத்தைத் திருப்பிக் கொடுத்துடுவேன். இன்னும் பத்து நாளில கிளம்புறேன் பாரு…” என்று தன்மானத்தில் முகம் சிவக்கக் கத்தினான், ஸ்ரீனிவாசன்.

“என்னது… பத்து நாளில போறேளா? பின்ன நானு…”

“நீ… என்ன நீ? எதுக்கு… இவ்வளவு பெரிய வீடு வாங்கியிருக்கு. இங்க இரு…”

“தனியாவா? என்னால முடியாதுப்பா…”

“வேற என்ன செய்யச் சொல்றே?”

“என்னையும் கூட்டிண்டு போங்கோ…”

“உன்னையுமா? நானே… இந்த வாட்டி, இந்த ப்ராஜெக்ட்காக போகலை… வேற ப்ராஜெக்ட்ல அப்ளை பண்ணி… இப்பத் தான் அவா சரின்னே சொல்லியிருக்கா. இதில… நீ எப்படி வருவ?” என்று எரிச்சல் குரலில் வார்த்தைகளைத் துப்பிய ஸ்ரீனிக்கு, பத்மாவின் “வீட்டை வாடகைக்கு விட்டுவிடலாம்” என்ற சேதியே பொறுமையைப் பார்க்கச் செய்திருந்தது. அதற்கும் மேலாய், அவள் பணத்தைப் பற்றி பேசவும், நெஞ்சம் ரோடு போடும் தாராய் தகதகத்தது.

“என்னையும்… அந்த ப்ராஜெக்ட்ல எடுத்துக்கச் சொல்லுங்கோ. நானும் உங்களோட வரேன்” என்றாள் பத்மா, கோபமாய். அவளுக்கு, அவன் மட்டுமாய் அமெரிக்கா செல்கிறான் என்பதே பெரும் kaduppaai இருந்தது. அவன் வெளிநாடு செல்வான் என்பது தெரிந்த விஷயம் தான் என்றாலும், ஆறு மாதம் தொடர்ந்து செல்வான் என்பது அவளுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது.

“இதென்ன… காயலாங்கடைன்னு நினைச்சிண்டியா? ஒரு கடையில எடுத்துக்கலைன்னதும்… அடுத்த கடைக்கு எடுத்திண்டு போக…” – இவனுக்கு வேறு உவமையே கிடைக்கவில்லை போலும்! கஷ்டகாலம்!

“என்னை… பழைய இரும்புன்னு சொல்றேளா?” – பத்ரகாளியின் கொள்ளுப் பேத்தியாக உருமாறி நின்றாள் பத்மாவதி.

“அப்படித் தான் வச்சுக்கோயேன். பழைய இரும்பில இருக்க துருவாட்டம்… நைய்யு… நைய்யுன்ன்ட்டே இருக்கியே” – எரிந்து விழுந்தான் ஸ்ரீனிவாசன்.

சண்டை வளர்ந்து கொண்டே சென்றதே ஒழிய, முற்று பெறவே இல்லை.

பகல் தாண்டி… இரவு கடந்து… வாரங்கள் ஓடிய போதும், இருவரும் முறைத்தபடியே இருந்தனர். சமயம் கிடைக்கும் போதெல்லாம், ஒருவரை ஒருவர் குத்திக் கொண்டே அலைந்தனர்.

ஆனால், ஸ்ரீனிவாசன் அந்தப் பெரிய வீட்டை விட்டு வருவதாய் இல்லை.

அவனது “கௌரவத்திற்காக” முதல் சின்னமாய் திகழும் அந்த வீட்டை விட்டு வர, அவன் துளியும் விருப்பப்படவில்லை.

“இனிமேல்… இங்க தான் இருக்கப் போறோம். இதில நோக்கு… இஷ்டமில்லைன்னா… நீ மட்டும் தனியா இருந்துக்கோ… நா இங்க இருந்துக்கிறேன்” எனக் கணவன் கூறிவிட, பத்மாவதி திகைத்துப் போனாள்.

வேறு வழியில்லாமல், அவர்களது ஜாகை அங்கே மாறியது.

முதல் தொல்லை, வீட்டு வேளைகளில் ஆரம்பித்தது.

ஊரை விட்டு தள்ளி என்பதால், வேலைக்கு ஆள் வருவது பெரும் கஷ்டமாய் இருந்தது.

அவர்களுக்கும் ஏரியா புதிது என்பதால், யாரிடம் கேட்பது என்றும் புரியவில்லை. ஃபிளாட் என்றால், செக்யூரிட்டி… அயர்ன் கடைக் காரன்… சூப்பர்மார்கெட் என்று நாலு இடத்தில் விசாரிக்கலாம். ஆனால், இங்கேயோ… வெங்காயம்… தக்காளி வாங்கக் கூட, ஒரு கிலோமீட்டர் செல்ல வேண்டியிருந்தது.

வீடுகளும், அவ்வளவாய் இல்லை. தள்ளி… தள்ளி… அங்கொன்றும் இங்கொன்றுமாய் இருந்தது.

“என்னால… பெருக்கித் துடைக்க முடியலைன்னா, நீங்க கொஞ்சம் ஹெல்ப் பண்ணுங்கோளேன்” என்று ஸ்ரீனியை அழைத்தால்,

“ஹே! தொடப்பத்தை எடுத்து… தூசி அடுச்சிண்டு இருந்தா… ஆபீஸ்ல கொடுத்திருக்க வேலையெல்லாம் யாரு பாப்பா? நாளைக்கு… நேக்கு ஒரு முக்கியமான ப்ரெசென்ட்டேஷன் இருக்கு” என்று இரைந்தான் அவன்.

“அப்போ… ஏதானும் வேலைக்காரளையானும் செட் பண்ணி விடுங்கோ” – கிட்டத்தட்ட கெஞ்சினாள், பத்மாவதி.

“அதெல்லாம் பொம்மனாட்டி வேலைடி… சமைக்கத் தான் மாட்டேங்கிற… இதைனாலும் பாக்கப்படாதா?” எனப் பல்லைக் கடித்தான், கணவன் காரன்.

“ச்சை….” – வந்த எரிச்சலுக்கு, அவனது கழுத்தை நெரித்துக் கொன்று விடலாமா என்று கூட வந்தது பத்மாவதிக்கு.

அடுத்த பிரச்சனை – சோறு! ஊட்டா! சாப்பாடு! மீல்ஸ்!

முன்னர் இருந்த ஏரியாவில், பத்தடிக்கு… பத்தடி ஏதாவது சாப்பாட்டுக் கடை இருக்கும். ரோட்டி… பானிப்பூரி… உபஹார்… தர்ஷினி… மெஸ்… முக்கியமாய் பீட்சா ஹட்… மக் டொனால்ட்ஸ் என்று தெருவெங்கும் உணவகங்கள் தான். வேலைநாளின் போதும் சரி, விடுமுறையின் போதும் சரி, அவர்களது வயிற்றை ஒன்றில்லாவிட்டால் இன்னொன்று நிரப்பிவிடும்.

ஆனால், இங்கோ?!

காய் கடைக்கே ஒரு கிலோமீட்டர் நடக்க வேண்டும் என்றால், அந்தக் காயை சமைத்து விற்கும் கடைக்கு இரண்டு கிலோமீட்டருக்கு மேல் நடக்கவேண்டியிருந்தது.

காலையில் வேலைக்குச் சென்றால், இரவு பதினொன்று… பன்னிரண்டு என்று வீடு திரும்பும் ஸ்ரீனி, அலுவலகத்திலேயே உணவை முடித்துக் கொண்டு வந்துவிட,

ஆறு மணி… ஏழு மணிக்கு வேலை முடிந்துவிடும் நிலையில், பத்மாவின் பாடு தான் திண்டாட்டமாய் மாறிப் போனது.

அலுவலகம் போகும்போது, அவனுடன் வண்டியில் செல்பவள், திரும்பி வருகையில் அலுவலகப் பேருந்தில் வருவாள்.

பிரதானச் சாலையில் இறங்கி, வீட்டிற்குக் கிட்டத்தட்ட ஒன்றரை கிலோமீட்டர் நடக்கவேண்டும். அதைக் கடக்கும் முன்பே, பசி வயிற்றைக் கிள்ளிவிடும். நடு வழியில் எதையாவது வாங்கிச் செல்லலாம் என்றால், அந்தப் பகுதியில் இருக்கும் ஒரே ஒரு ஹோட்டலில் ஈயும் காக்கையும் தான் வாடிக்கையாளர்களாய் அமர்ந்திருப்பர். அதைப் பார்க்கும்போதே, உமட்டிக் கொண்டு வர, ஓடியே போய்விடுவாள்.

வீட்டிற்குப் போனதும், பசி கபகபவென்று வர, அடுத்து அவள் உதிர்க்கும் வார்த்தை “ஹலோ…பீட்சா ஹட்?” என்பது தான்.

வாரத்தில் இரண்டு நாட்கள் பீட்சா என்பது போய், கிட்டத்தட்ட ஐந்தாறு நாட்கள் பீட்சா தான்.

பீட்சா போர் அடிக்கையில், நூடில்ஸ்.

வாழ்க்கை பீட்சா காட்டிய வழியில் செல்ல, ஸ்ரீனி அமெரிக்கா செல்லும் நாளும் வந்தது.

“சொன்னா புரிஞ்சுக்கோங்கன்னா… என்னால ஆத்தில தனியா இருக்க முடியாதுன்னா” என ஆரம்பித்தாள் பத்மாவதி.

“படுத்தாத பத்மா. இருக்க முடியாதுனாக்க… வேலையை விட்டுட்டு என்னோட வா” என்று எரிந்து விழுந்தான் ஸ்ரீனிவாசன்.

“வேலையை விட்டுட்டா? வேலையில இருக்கும் போதே… நீங்க மதிக்க மாட்டேங்கிறேள். இதில வேலையில்லாம இருந்தா… என்னைய சமையல்காரி ஆக்கிடுவேள்” – வள்ளென்று விழுந்தவளை முறைத்த ஸ்ரீனி,

“அப்பன்னா… ஏதானும் ஹாஸ்டல்ல போய் இருந்துக்கோ…” என்றான்.

“ஹாஸ்டல்ல போய் இருக்கத் தான்… உங்களைக் கட்டிண்டேனா?” – ஆவேசமாய் பேசிய பத்மாவின் கண்களில் ஆத்திரம்.

“பின்ன என்னதான்டி பண்ணச் சொல்றே?” – சலிப்புடன் முகத்தைத் திருப்பினான் ஸ்ரீனிவாசன்.

“ஒண்ணு… உங்களோடவே என்னைக் கூட்டிண்டு போங்கோ. இல்லையா… நீங்களும் இங்கேயே இருங்கோ” – தன் எதிர்பார்ப்பை வெட்டு ஒன்று துண்டு இரண்டாக வெட்டிப் போட்டாள் பத்மாவதி.

“வேலையை விட்டுட்டு வான்னு சொல்றேனோ…” என்று ஸ்ரீனி ஆரம்பிக்க,

“வேலையை விட முடியாது. உங்க ப்ராஜெக்ட்லேயே… டெக்னிகல் சைடுல கூட்டிண்டு போங்கோ” எனக் கூறி அவனைப் பேச விடாமல் தடுத்தாள், அவன் துணைவி.

“அதெல்லாம் முடியாது பத்மா. ஏற்கனவே, அந்தப் ப்ராஜெக்ட்ல இருந்தவாளையே இன்னும் அனுப்பலையாம். புதுசா… உன்னை அனுப்பினா பிரச்சனை வரும்ன்னு பயப்படறா” – தன் நிலையையும் விளக்கினான் ஸ்ரீனிவாசன்.

“அப்பன்னா…போகாதேள்” என பத்மா முடித்துவிட, ஸ்ரீனி ஆயாசமாய் வந்தது.

“ச்சை… ஏன்டா கல்யாணம் பண்ணிண்டோம்ன்னு இருக்கு. என்னோட… கேரியர் பாத்ல என்னை வளர விட மாட்டேங்கிறியே?” என்று எரிந்து விழுந்தான் அவன்.

அவளும், “நேக்கும் தான்… ஏன்டா கல்யாணம் பண்ணிண்டோம்ன்னு இருக்கு” என்று தொடங்க, வாக்குவாதம் முற்றத் தொடங்கியது.

முற்றிய வாக்குவாதம், ஒரு கட்டத்தில் முற்றும் பெற்றது.

அந்த முற்றுப் புள்ளியின் தொடக்கம் – ராணி!

ராணி?!!? – ஸ்ரீனியின் வீட்டில் நியமிக்கப் பட்டிருக்கும் புது வேலைக்காரி! வேலைக்காரர்கள் பிடித்துக் கொடுக்கும் ஒரு ஏஜென்சி மூலமாக, ஸ்ரீனி கண்டுபிடித்த நபர்!

அவரது வேலைப்பட்டியல் இதோ!

1. காலையில் ஏழு மணிக்கு வந்து, முறைவாசலிட வேண்டும்.
2. இருவருக்கும் காப்பி கலந்து கொடுக்க வேண்டும்.
3. காலை டிப்பன் செய்ய வேண்டும்.
4. இருவரும் கிளம்பிச் சென்றதும், வீட்டைக் கூட்டிப் பெருக்கி, துடைக்க வேண்டும்.
5. துணி துவைக்க வேண்டும்.
6. பாத்திரம் கழுவ வேண்டும்.
அதன் பின்னர், அவர் வீடு சென்று விடலாம்.
பொழுது சாய்ந்ததும், ஆறு மணியளவில் மீண்டும் வந்தால் போதும்.
7. பாத்திரங்களை அடுக்கி வைத்து, துணி மடித்து என்று இதர வேலைகளை முடிக்க வேண்டும்.
8. அலுவலகம் முடிந்து வரும் பத்மாவதிக்கு, ஏதாவது ஸ்நாக்ஸ்… காபி செய்து கொடுக்கவேண்டும்.
9. இரவு உணவைச் செய்துவிட்டு, வீடு சென்று விடலாம்.
10. இந்த வேலைகளின் இடையே, வாரத்திற்கு இரண்டு முறை, சுற்றியுள்ள தோட்டத்தைச் சுத்தம் செய்து வைக்கவேண்டும்.

பீட்சா கடைக்காரன், வாழ வேண்டாமோ?! அதற்காக, வாரத்தில் ஒரு நாள் விடுமுறை.

இத்துடன் சேர்த்து, ஸ்ரீனி வெளிநாடு செல்லும் நாட்களில், பத்மாவிற்குத் துணையாக, இரவு வீட்டிலேயே தங்கிவிட தனி சம்பளம்.

அவர் தங்குவது மட்டுமல்லாது, அந்த ஏரியாவில் இரவு ரோந்து வரும் கூர்க்காவைத் தனியாக கவனித்து, தங்கள் வீட்டை “ஸ்பெஷல்”லாக காவல் காக்கும்படி, கேட்டுக் கொண்டான் ஸ்ரீனிவாசன்.

இத்தனை ஏற்பாடுகளின் பேரில், தன் பொறுப்பு முடிந்துவிட்டது என்றெண்ணியவனாய், அமெரிக்கா கிளம்பிச் சென்று விட்டான் அவன்.

ஆனால், அவனது பொறுப்பின் அளவு… பத்மாவின் வயிற்றில் வளரத் தொடங்கிய பிள்ளையால் பெரிதானது!

“உறவோவியம்” – அத்தியாயம் 10

ஸ்ரீனிவாசன் அமெரிக்கா கிளம்பிச் சென்ற மூன்றாவது நாள், பத்மாவதிக்கு கர்ப்பத்தின் அறிகுறிகள் தெரியத் தொடங்கின.

காலையில் எழுந்தவுடன், ஆளைத் தள்ளியது. பேஸ்ட்டை வாயில் வைத்தால், குமட்டியது. எதையும், உண்ணப் பிடிக்கவில்லை. மொத்தத்தில், உடம்பு தன் பிடியில் இல்லை என்பதை உணர்ந்த பத்மாவின் மூளை, வேகமாய் ஒரு கணக்கு போட்டது. அதற்க்கான விடையும், வினாடிகளில் விளங்கிவிட, பத்மாவிற்கு ஒரே குழப்பம்!

குழப்பம் எதற்கா? – குழந்தை உருவானதை எண்ணி, மகிழ்வதா இல்லையா என்று தான் குழப்பம்!

ஆம், தன் வயிற்றில் ஒரு கரு வளர்கிறது என்ற விஷயம்… பத்மாவிற்கு அப்படியொன்றும் பூரிப்பை அளித்துவிடவில்லை.

அவளது முதல் உணர்ச்சி வெளிப்பாடு, “ஹய்யோ… குழந்தையா? இப்பவேவா?” என்பதாகத் தான் இருந்தது.

குழந்தை என்று வந்துவிட்டால், மருத்துவர்… பரிசோதனை… பிரசவம்… பேறுகால விடுமுறை என்று ஏகப்பட்ட விடுமுறைகள் எடுக்க வேண்டுமே என்ற எண்ணம் மேலோங்க, அலுவலகத்தில் அடுத்து வரவிருக்கும் பதவியுயர்வை எண்ணி, மனம் கொஞ்சம் தடுமாறியது.

இன்னொரு முக்கியமான விஷயமாய், ஸ்ரீனிவாசன் வேறு இங்கில்லை.

தனியாக, இக்குழந்தையைப் பேணிக் காக்க முடியுமா என்று அச்சமாகவே இருந்தது. மருத்துவர் வீட்டிற்குச் செல்வது, ஸ்கேன்… டெஸ்ட்… என்று அலைவது… இதையெல்லாம் தனியே செய்ய முடியுமா என்று கேள்வி எழுந்தது.

எல்லா விதமான சிந்தனைகளும் மனதை குடைந்தபோதும், இப்போது இந்தக் குழந்தை அவசியமா? அழித்துவிடலாமா? என்ற எண்ணம் ஏனோ அவள் மனதில் எழவில்லை.

ஆனால், சில காலம் சென்றதும்… “இந்தக் குழந்தையைப் பெற்றுக் கொண்டே இருக்க வேண்டாமோ?” என்றெண்ணும் அளவுக்கு, அவள் நோகப் போவதை அவள் அறியாளில்லை.

மொத்தத்தில், குழந்தை உருவானதில்… பத்மாவதி ஒன்றும் அகமகிழ்ந்து… பூரித்துப் போய்விடவில்லை என்பதே இதன் சாராம்சம்.

கர்ப்பம் என்பது தன் அளவுக்கு உறுதியானதும், ஸ்ரீனிக்கு அழைத்தாள்.

அழைப்பு எடுக்கப்பட்டதும், “ஹலோ…” என அவள் ஆரம்பிக்க,

“இந்த நேரம்… எனக்கு offshore கால் இருக்கும்ன்னு நோக்குத் தெரியாதா? சீனியர் மேனேஜர்ஸ் எல்லாம் லைன்ல இருக்கா… நீ இந்தப் பக்கம் செகண்ட் கால்ல வந்து… பீன்… பீன்னு என்னை அதில concentrate பண்ண விட மாட்டேங்கிற. அப்புறம் கூப்பிடு” என்று பல்லைக் கடித்துவிட்டு, அழைப்பைத் துண்டித்தான் ஸ்ரீனி.

பத்மாவிற்கு வந்ததே ஒரு கோபம்!

“பெரிய இவன்! என்னவோ… ஆன்சைட் போயிட்டானாம்… பீத்திக்கிறான். நானும் தான்… ஆன்சைட்ல இருந்தேன்… இப்படியா அலட்டிண்டு இருந்தேன்…” என்று பல்லைக் கடித்தவள், வேலைக்குக் கிளம்ப ஆரம்பித்தாள்.

விடிகாலையிலேயே வேலைக்கு வந்துவிட்டிருந்த ராணி, “அம்மா… இன்னைக்கு என்ன சமைக்கட்டும்?” என்று கேட்டபடி வந்தார்.

“ஹ்ம்ம்… நேக்கு எதுவுமே சாப்பிடத் தோணலை ராணி. வெறுமனே… ஓட்ஸ் பண்ணுங்கோ போதும்…” என்று பத்மா, சலித்தபடி சொல்ல

“என்னாச்சும்மா? உடம்புக்கு எதுவும் செய்யுதா?” என்று கரிசனமாய் வினவினார் அவர்.

“ஹ்ம்ம்! ரெண்டு மூணு நாளாவே… ஒழுங்கா சாப்பிட முடியல. உமட்டிட்டே வர்றது” எனக் கூறிய பத்மாவிற்கு, முதன்முதலாய் குழந்தை உருவான விஷயத்தை ஒரு வேலைக்காரியிடம் சொல்ல மனம் வரவில்லை.

ஆனால், இரு குழந்தைகளுக்குத் தாயான அப்பெண்மணி, சட்டென கண்டு கொண்டார்.

“பிள்ளை உருவாகியிருக்காம்மா?” என்று ஆவலே உருவாய் அவர் கேட்டபோது,

பத்மாவதி சற்று நேரம், பெக்க... பெக்கவென முழித்துக் கொண்டு நின்றாள்.

“நானே நினைச்சேன். முந்தியவிட... சோர்ந்து தெரியுறீங்களே, என்ன விஷயம்ன்னு கேட்கலாம்ன்னு நினைச்சுட்டே இருந்தேன். ஆனா... புள்ளைன்னு உறுதியா நினைக்கல” என்றவர்,

“அய்யாட்ட சொல்லிட்டீங்களாம்மா?” என்றார் வெளிப்படையாய் தென்பட்ட ஆர்வத்துடன்.

“இனிமேல் தான்....” என பத்மாவதி, பட்டும்படாமல் முணுமுணுக்கவும்

“அம்மா – அப்பாட்ட சொல்லிட்டீங்களா?” என யோசியாமல் கேட்டவர்,

சட்டென நாக்கைக் கடித்துக் கொண்டு, “மன்னிச்சுக்கோங்கம்மா. வீட்டாளுங்களோட தான்... உங்களுக்குக் கூட்டில்லையே! அதை மறந்துட்டுக் கேட்டுட்டேன். தப்பா எடுத்துக்காதீங்க” என்றார் தயவாக.

அவரது பேச்சில் முகம் சுருண்டு விட, “ஹ்ம்ம் பரவாயில்ல” என்றவள், தன் வேலையில் கவனத்தைச் செலுத்தத் தொடங்க, ராணி ஒரு சங்கடமான உணர்வுடன் அங்கிருந்து நகர்ந்தார்.

காலை உணவை முடித்துக் கொண்டு, மதியத்திற்கு அவர் செய்து வைத்திருந்த புளியோதரையையும்... பீன்ஸ் துவட்டலையும் எடுத்துக் கொண்டு அலுவலகம் சென்ற பத்மாவதியின் கண்ணும் காதும் கைப்பேசியிலேயே இருந்தன.

என்னதான், ஸ்ரீனியைத் திட்டினாலும்... அவனது அழைப்பிற்காக மனம் ஏங்கத் தான் செய்தது.

“ஃபோன் பண்ணியிருந்தியே... என்ன விஷயம்”ன்னு கேட்டு, திரும்ப ஒரு ஃபோன் பண்ணக் கூடாதா? என்று ஏக்கம்,

“ச்சே... offshore manager க்கு கொடுக்கிற முக்கியத்துவத்தில... ஒரு பெர்செண்ட் கூட எனக்குத் தர மாட்டானா?” என்ற வருத்தமாய் மாறி,

“அவன்ட்ட தான் முதல சொல்லணும்ன்னு நினைச்சு…ராணிட்ட கூட வெளிப்படையா சொல்லாம இருந்தேனே! எனக்கு… அவன் மேல இருக்க லவ்ல கொஞ்சம் கூட… அவனுக்கு என் மேல இல்லையா?” என்ற கோபத்தில் வந்து நின்றது.

அந்தக் கோபம்… ஒரு மணி நேரம் சென்றபின்னரும் கூட அவனிடமிருந்து எந்த அழைப்பும் வரவில்லை என்றதும்,”அவனா பேசட்டும்! அப்போ… தான் சொல்லணும். இனிமே… நானா ஃபோனே பண்ண மாட்டேன்” என ஈகோவாக மாறியது.

ஒருவழியாக, மதியம் பன்னிரண்டு மணிக்கு அழைத்தான் ஸ்ரீனிவாசன்.

“ஹ…………………………..லோ…” என்ற வார்த்தைக்கு இடையே பெரிய கொட்டாவி ஒன்றை வெளியேற்றி, “நான் தூக்கத்தில் இருக்கிறேன்” என்று சொல்லாமல் சொல்லியபடியே, மனைவியுடன் பேச ஆரம்பித்தான்.

“ஹலோ!” – பத்மாவதியின் ஈகோ, அவளது பதிலை சுருங்கச் செய்தது.

“ஹா………… கால் பண்ணியிருந்தியே…” – ஸ்ரீனிக்கு அடுத்த கொட்டாவி அதற்குள் வந்துவிட்டிருந்தது.

“உங்க ஆன்சைட் கால் எல்லாம் முடிஞ்சிடுத்தா?” – பத்மாவின் குரலில் ஒரு குத்தல்.

“ஹ்ம்ம்… எல்லாம் முடிஞ்சிடுது. நீ… விஷயத்தைச் சொல்லு… தூங்கணும்… காலையில நிறைய வேலை இருக்கு” – எரிச்சல் கொண்டான் ஸ்ரீனி.

“நோக்கு மட்டும் தான் வேலை இருக்கா என்ன? நேக்கும் தான் இருக்கு… என்னவோ ரொம்பப் பண்றேளே” – இருந்த கடுப்பையெல்லாம் வார்த்தையாக்கி, கைப்பேசி வழியே பொழிய விட்டாள் பத்மாவதி.

“ப்ச்… நேக்கு சண்டை போன்ற அளவுக்கு தெம்பில்லை. ஃபோனை வச்சிடவா…” எனக் கேட்ட ஸ்ரீனி, “ஹாஆஆஆஆஆஆஆஆ…” என மீண்டும் ஒரு கொட்டாவியை வெளியிட்ட வேளையில்,

“நேக்கும் தான் இல்ல. உங்களோடவே மல்லுக்கட்ட முடியல… இதில… உங்களோட புள்ளையாண்டானோட வேற மல்லுக்கு நிக்கணும் போல. ச்சே” என்று தன் கர்ப்பத்தை சொல்லி முடித்தாள் பத்மாவதி.

கொட்டாவி விடுவதில் மும்மரமாய் இருந்த ஸ்ரீனிக்கு, அவள் சொன்னதில் பாதி புரியவில்லை. மீதியை, கொட்டாவியின் சத்தம் முழுங்கிவிட்டிருந்தது.

“என்ன சொன்னே? நேக்கு… சரியா கேக்கல… புள்ளையா? புள்ளைன்னா சொன்னே?” என்று கேட்ட ஸ்ரீனிக்குப் பதிலாய்,

“ஆமா… அப்படித் தான் சொன்னேன்” என்று நறுக்குத் தெறித்தாள் பத்மாவதி.

“ஹோ!!! ப்ரெக்னன்ட்டா இருக்கியா? ஹோ காட்!!” என்றான் ஸ்ரீனிவாசன். “தட்” என்று அவன் முன்னந்தலையில் அடித்துக் கொள்வது, பத்மாவிற்கும் கேட்டது.

“அதுக்குள்ள எப்படி? நாம… pre-cautious ஆ தானே இருந்தோம்…” என்று ஸ்ரீனி பரபரக்க,

“நேக்குத் தெரியல… ஆனா… இது கர்ப்பம் தான். நேக்கு உறுதியா தெரியும்” என்றாள் பத்மாவதி, தனக்குமே இது ஆச்சரியம் தான் என்பதைக் குரலில் வெளிப்படுத்தி.

“பச்ச்… வீட்டுக் கடனைக் கொஞ்சம் சரி பண்ணிண்டு… ஃபாமிலி ப்ளான் பண்ணலாம்ன்னு நினைச்சிண்டு இருந்தேனே! ச்சே…” – வாழ்க்கையைப் பற்றி தான் போட்டு வைத்திருந்த கணக்கை, ஸ்ரீனி எடுத்துவிட,

“நேக்கும்… இந்த அக்டோபர்ல டீம் லீட் ப்ரோமோஷன் வர்றது. அதுக்கு அப்புறம்… கன்சீவ் ஆகியிருந்தா ஈஸியா இருந்திருக்கும். இப்போன்னா… மெட்டர்னிட்டி லீவ்ல போய்டுவேன்னுட்டு… தர மாட்டா” என்று தன் கணக்கை கடை விரித்தாள் பத்மாவதி.

“பச்ச்!!! டீம் லீட் ப்ரோமோஷன் வந்திருந்தா… ஏதாவது ஆன்சைட் கேட்டிருக்கலாம்…. ஹ்ம்ம்… இப்போ என்ன பண்றது?” என்ற ஸ்ரீனியுமே,

“இப்போதைக்கு இந்தக் குழந்தையை கலைத்துவிடலாம்” என்று சொல்லவில்லை. ஏனோ, சொல்ல மனம் வரவில்லை போலும்.

“சரி… விடு. நடந்துடுத்து. இனிமே… என்ன செய்றதுன்னுட்டு பாக்கலாம்” என்றவனிடம்,

“நேக்கு… தனியா இருக்க ஒரு மாதிரி இருக்குன்னா. நீங்க… இங்க வந்துடுறேளா?” என மெல்ல கேட்டாள் பத்மாவதி.

“என்னது? இந்தியா வரதா? என்ன விளையாடுறியா? இப்போ தான்… இங்க வந்திருக்கேன்… அதுக்குள்ள இந்தியா போறேன்னு சொன்னேனாக்க, எவ்வளவு பெரிய பாட் இம்ப்ரெஷன் விழும் தெரியுமா? அதுக்கப்புறம்… ஆன்சைட் தான்கோன்னு வாயைத் திறந்து கேக்கவே முடியாது” – ஸ்ரீனி படபடவென பொரிய

“இங்கவே உங்களுக்கு நெறைய சம்பளம் தானே? அதை வச்சுண்டு… இருக்க முடியாதா? இந்த டைம்ல யாருமில்லாது… நா தனியா ஒத்தாளா என்ன செய்வேன்… ச்சொல்லுங்கோ” – தன் நிலையை எடுத்துச் சொல்லிவிட, பத்மாவும் தான் முயன்றாள்.

“எதையானும் உளறாத பத்மா! இந்தியால வாங்குற சம்பளமும்… இங்க வாங்குறதும் ஒண்ணா? இங்க இருந்தாக்க… இன்னும் ஒரே வருஷத்தில… ஆத்துக்கு வாங்கின கடனை முழுசா அடைச்சுடலாம் தெரியுமா? அங்க இருந்தா… இன்னும் இருபது வருஷத்துக்கு லோனே கட்டிண்டு இருக்கணும்… வாழ்க்கை முழுசும் கடன்காரனா இருக்கச் சொல்றியா?” என்றவனின் குரலில், கோபம் கொப்பளித்தது.

“இல்லைன்னா… குழந்தை பிறந்ததும் ஆன்சைட் போகலாம்ன்னா. நா… மட்டுமா சிரமப்படுவேனோ இல்லையோ…” என்ற பத்மாவிற்கு, தனியே பிரவசத்தை எதிர்கொள்வதை எண்ணி பெரும் பயம் கிளம்பியது.

“சிரமம் என்ன சிரமம்? அதான்… ராணி இருக்காங்களோ இல்லையோ? பிரசவம் வரைக்கும் வேணும்ன்னா… அவாளை… வீட்டோடவே இருக்கச் சொல்லிடு. எவ்வளவு பணம் கேக்கிறாளோ கொடுத்திடு. என்னால… இந்த கோல்டன் ஆப்பர்ச்சூனிட்டியை விட்டுட்டு வர முடியாது” – ஆணித்தரமாய் மறுத்தான் ஸ்ரீனிவாசன்.

“ராணி… வீட்டில பாத்துப்பா சரி. ஆனா… ஹாஸ்பிடல் போக வேணாமா? நா… எப்படின்னா போறது? கொஞ்சம் புரிஞ்சுக்கோங்களேன்…”

“நோக்குத் தான் பத்மா புரிய மாட்டேன்றது. என்னோட படிச்சவாளுக்கு கிடைக்காத வாய்ப்பு… நேக்கு கிடைச்சிருக்கு. அவா எல்லாம்… வெறும் இன்ஜினியரிங் முடிச்சிட்டு… மூணு வருஷம்… நாலு வருஷம்ன்னு வெயிட் பண்ணி, ஆன்சைட் வரதுக்கு எவ்வளவு கஷ்டப்படுறா தெரியுமா? நேக்கு… ஆறே மாசத்தில இந்த oppurtunity கிடைச்சிருக்கு. நோக்கேன்னடா… பிசினஸ் கன்சல்டன்ட்… பெரிய வீடு வாங்கிட்டே… நினைச்சா ஆன்சைட் போறன்னு எல்லாரும் என்னைப் பாத்து… அந்து அந்து விழறா தெரியுமா? இப்போ… அங்க வந்தா… அவா முன்னாடி அசிங்கப்பட்டுண்டு நிக்கணும். தெரிஞ்சுக்கோ” என்று படபடத்தவன்,

“நோக்கென்ன? டாக்டரண்ட தனியா போகணும்ன்னு கவலையா இருக்கா? நோக்குத் தான் ஏகப்பட்ட ஃபிரண்ட்ஸ் இருக்காளே… அவாள்ள யாரையானும் கூட்டிண்டு போ. வேணும்ன்னா… ஒரு கார் வாங்கித் தந்துடுறேன். டிரைவர் வச்சுண்டு… எங்க வேணும்னாலும் போயிட்டு வா. உன் ஃபிரண்ட்ஸ் வரலைன்னா… ராணியைக் கூட்டிண்டு போ” என்றதோடு, அழைப்பை வைத்தே விட்டான்.

“ச்சை” என்ற ஆத்திரத்தை விட, அழுகை தான் நிரம்பி வந்தது பத்மாவதிக்கு.

அந்த அழுகை கொடுத்த உந்துதலில், கோபம் தலைக்கேற, ஸ்ரீனியை மீண்டும் அழைத்தாள் பத்மாவதி.

“ஹலோ….” – அந்த ஒரு ஹலோவிலேயே, “ஏன் அழைத்தாய்?” என்ற கேள்வியையும், கூடுதலாய் சலிப்பையும் உள்ளடக்கி வெளியிட்டான் ஸ்ரீனி.

“நீங்க என்ன தான் நினைச்சிண்டு இருக்கேள்? உங்களை… நம்பித் தானே… எங்காத்தை விட்டு… என் தோப்பனாரை எதிர்த்திண்டு… உங்களைக் கட்டிண்டேன். இப்போ… என்னடான்னா… என்னவோ என் பாடுங்கிற மாதிரி பேசுறேளே” – அவனுக்கும் மேலாய் பத்மாவதி பொரிய,

“நீ மட்டுமா… ஆத்தில இருக்கவாளை எதிர்த்திண்டு… கல்யாணம் பண்ணிண்டே? நானும் தானே, எங்காத்தில இருக்கவாளை எதிர்த்திண்டு… உன்னைக் கட்டிண்டேன்” – மல்யுத்தம் போல், வார்த்தைக்கு வார்த்தை திருப்பிக் கொடுத்தான் ஸ்ரீனிவாசன்.

“கட்டிண்டேள்… சரி! ஆனா… இப்போ நா உண்டாயிருக்கிறச்ச… நீங்க பாட்டுக்கு அங்க இருந்தா என்ன அர்த்தம்? நேக்குத் தெரியாது… நீங்க இங்க வாங்கோ” – “வந்தே ஆகவேண்டும்” என்ற பிடிவாதம் அவள் குரலில் நிரம்பி வழிந்தது.

“என்னால வர முடியாது, பத்மா. வேணும்னாக்க… வேலையை விட்டுட்டு நீ இங்க வா” என்றான் ஸ்ரீனி, ஆணித்தரமாக.

“வேலையை விடறதா? வேலை பாத்துண்டு இருக்கும் போதே… உங்க ஆட்டம் தாளலை. இதில… வேலையை விட்டுட்டு வீட்டில இருந்தா… உங்களுக்கும் உங்க புள்ளைக்கும் என்னைய வேலைக்காரி ஆக்கிடுவேள்” – பட்டென திருப்பிக் கொடுத்தாள், பத்மாவதி.

“பொம்மனாட்டின்னா… ஆத்துக்காரனையும் புள்ளையையும் பாத்துக்க பாத்தியப்பட்டவ தானே? என்னவோ… லோகத்தில யாரும் செய்யாததை செய்யப் போறவளாட்டம் பேசாதே”

“பொம்மனாட்டிக்கு சில கடமை இருக்கிறாப்ல… ஆம்படையானுக்கும் சில கடமை இருக்கு… தெரியுமோ? பொண்டாட்டி… உண்டாகியிருக்கையில… கூடவே இருந்து அவளைப் பாத்துக்கிறது ஆம்படையானோட கடமை… அதுனாலும் உங்களுக்குத் தெரியுமா?”

“என்னவோ… நேக்கு மட்டுமானும் நா இங்க சம்பாதிக்கிற மாதிரி பேசிண்டு இருக்க? நோக்கும்… வரப் போற புள்ளைக்கும் தானே எல்லாம் சேத்து வச்சுண்டு இருக்கேன்…”

“ஆமா… நல்லா சேர்த்தேள்….”

“சும்மா… வளவளன்னுட்டு பேசிண்டு இருக்காத பத்மா. நா… இப்போதைக்கு இந்தியா வர ஐடியால இல்ல. அதுக்காக… உன்னைத் தனியாவும் விட்டுற மாட்டேன். நோக்கு… என்ன வேணுமோ…. எது

சௌகரியமா இருக்குமோ… அதை சொல்லு. செஞ்சு தரேன். அதை விட்டுட்டு… இந்தியா வந்துடுங்கோன்னு பாட்டுப் பாடுறதை விட்டுடு” என்றவன், அத்தோடு விட்டிருக்கலாம். சனியின் சீண்டலில் சிக்கிக் கொண்டவன் ஆகிற்றே. வாய்… இன்னும் கொஞ்சம் நீண்டு வைத்தது.

“அப்படியே… நோக்கு தனியா இருக்கப் பிடிக்கலைன்னா… வேலையை விட்டுட்டு இங்க வந்துடு. நீ வாங்குற இருபதாயிரம் சம்பளம்… எனக்கிங்க ரெண்டே நாளில கிடைச்சிடும்” என்றான் கொஞ்சம் கர்வமாய்.

பத்மாவின் ஈகோ முழுதாய் அங்கே தூண்டி விடப்பட்டது.

“அப்படி… உங்களண்ட யாசகம் கேட்டு வாழணும்னு நேக்கொண்ணும் அவசியம் இல்லை” என்று திருப்பிக் கொடுத்தவள்,

“உங்க புள்ளைக்கு வேண்டியதை செய்ங்கோ… நேக்கு வேண்டியதை நா பாத்துக்கிறேன்” என்றாள் காட்டமாய்.

அத்தோடு விடாமல், “உங்களை விட… ஒரு ஆயிரமாவது சம்பளம் கூட வாங்கிக் காட்றேன்… பாருங்கோ” என்று சூளுரைத்துவிட்டு, அழைப்பை வைத்தாள்.

இருவருக்குமிடையே ஏற்பட்ட “ஈகோ”விற்கு மத்தியில் வளரத் தொடங்கியது, ராஜகோபாலன் வீட்டு நான்காம் தலைமுறை.

கரு வளர… வளர, கீழ்கண்ட மாற்றங்களும் நடந்தேறின.

1. பத்மாவதியின் பெயரில், புதிதாய் ஒரு ஃபோர்ட் ஐகான் வாங்கி நிறுத்தினான் ஸ்ரீனிவாசன்.
2. உமேஷ் என்ற நபர், முழு நேர டிரைவராக நியமிக்கப் பட்டார்.
3. ராணி, முழு நேர வேலைக்காரியாக மாறிப் போனார்.
4. சென்னையிலிருக்கும் தன் வீட்டிற்கு, பத்மாவின் கைப்பேசியிலிருந்து ஒரு அழைப்பு போயிற்று. அதை எடுத்த தாயிடம், “அம்மா…” என்ற வார்த்தையை அவள் உதிர்க்க, “பத்து…” என்று தான் தொடங்கினார் கோமளவல்லி. அதற்குள், தொலைப்பேசி கைமாற, “உன்னைத் தான் தலை முழுகிட்டோமே? அப்புறம்… என்னத்துக்கு ஃபோன் போடற? இத்தனை நாள்… இல்லாம… இன்னிக்கென்ன புதுசா ஃபோன்? ஹோ…

முழுகாம இருக்கியா? நாக்கு… அம்மா ருசியைத் தேடுதோ… ” என்று தந்தையார் படபடக்க, “ச்சை” என்ற எரிச்சல் வார்த்தையுடன் ஃபோனை வைத்தவள் தான், தன் சென்னை வீட்டு எண்ணையே கைப்பேசியில் இருந்து அழித்துவிட்டாள்.

“இவா தயவில்லாம வாழ முடியாதாக்கும்” என்ற ஈகோ, பத்மாவை தலை நிமிர்ந்து நிற்கச் செய்தது. பிரசவத்தைத் தனியாக எதிர்கொள்ளவும் செய்தது.

ராஜகோபாலனின் அச்சாய், பிள்ளையும் பிறந்தது!

“உறவோவியம்” – அத்தியாயம் 11

பிரசவத்திற்கு ஒரு வாரம் முன்னர், பதினைந்து நாள் விடுமுறையில் பெங்களூர் வந்து சேர்ந்தான் ஸ்ரீனிவாசன்.

அந்த மட்டுக்கும், பத்மாவிற்கு சந்தோஷமாகவே இருந்தது.

ஒராளாக பிரசவத்தை எதிர்கொள்ள முடியுமா என்ற பயத்திலேயே இருந்தவளுக்கு, அவனது வருகை இதமாகவே இருந்தது.

பல மாதங்கள் சென்று பார்ப்பதாலோ… இல்லை உள்ளே இருந்த குழந்தையால் சுரந்திருந்த கூடுதல் ஹார்மோன்களாலோ… இல்லை உடலும் மனமும் சோர்ந்திருந்த நேரத்தில் தனித்திருந்த காரணத்தாலோ, நள்ளிரவு தாண்டி அமெரிக்காவிலிருந்து வீடு வந்த ஸ்ரீனிவாசனை, வாசல் வரைச் சென்று வரவேற்றவள், அவன் வீட்டினுள் நுழைந்த மறுவினாடி வேகம் கொண்டு அணைத்துக் கொண்டாள்.

ஸ்ரீனி, இதைச் சுத்தமாக எதிர்பார்க்கவில்லை.

எப்போது ஃபோன் செய்தாலும், “தனியா இருக்கேன்… தனியா இருக்கேன்…” என்று புலம்பித் தள்ளுவதும், எரிச்சல் குரலில் ஒரு வார்த்தையும் இரண்டு வார்தையுமாய் அவனை வதைப்புதமாய் இருந்தவள், இப்போது ஓடி வந்து கட்டிக் கொள்வதைக் கண்டவனது கைகளும், அவளை அணைத்துக் கொண்டன.

“பத்ஸ்…” என்றவனின் குரலிலும், பல மாதங்கள் அவளைப் பிரிந்திருந்த தாபம், தனித்து ஒலித்தது.

“நேக்கு… ரொம்பக் கஷ்டமா இருந்துச்சுன்னா” என்றவளுக்கும், தொண்டையை அடைத்துக் கொண்டு வந்தது.

“நேக்கும் தான் குட்டி… என்ன செய்யறது சொல்லு! நம்ம லைப் நல்லா இருக்கணும்ன்னு தானேடா…” என்றான் அவன், மனைவியின் முடி கோதி.

“ஹ்ம்ம்… பிரசவத்துக்கானும் நீங்க வந்துட்டா தெம்பா இருக்கும்ன்னு நினைச்சிண்டே இருந்தேன். கடைசி நிமிஷத்தில… எதையானும் சொல்லி… வராது இருந்துண்டுவேளோன்னு பயமா இருந்துச்சு…”

“நேக்கும்… உன்னோட இருக்கணும்ன்னு தான் ஆசை, பத்ஸ். ஆனா… நீயே சொல்லு… இந்த மாதிரி இன்னொரு oppurtunity கிடைக்க… இன்னும் எத்தனை நாள் காத்திண்டு இருக்கணுமோ தெரியாதில்லையா? கிடைச்ச வாய்ப்பை… யூஸ் பண்ணிக்க வேண்டாமா?” என்று தன் பக்க நியாயத்தை எடுத்துக் கூற முயன்றான், ஸ்ரீனி.

“ஹ்ம்ம்….” – அரை மனதாய், பத்மா தலையசைக்க

“இப்போ பாரு… ஆத்துக்காக வாங்கின லோன்ல முக்கால் வாசி அடைச்சாச்சு. இன்னும்… அஞ்சு வருஷத்துக்கு மட்டும் இன்ஸ்டால்மெண்ட் கட்டினோம்ன்னா போதும். அப்புறம்… வீடு முழுசா நமக்கு சொந்தம். கமிட்மென்ட் முடிஞ்சது பார்த்தியா…” என்றான் அவன், இன்னும் கூடுதல் விளக்கம் கொடுத்து.

“ஹ்ம்ம்…”

“என்னடா… இன்னும் ம்ம்… ஆம்..ன்னு இழுத்துண்டு இருக்கே! இப்போ மட்டும் அங்க போகலைன்னு வச்சுக்கோயேன்… நம்ம குழந்தை இருபது வயசாகுற வரைக்கும் லோனே கட்டிண்டு இருக்கவேண்டியது தான். இப்போ பார்த்தியானா… நம்மளோட ஏர்நிங் முழுசும்… குழந்தைக்குத் தான். அவன்… ஆசைப்பட்டதை எல்லாம் வாங்கிக் கொடுத்து… ராஜாவாட்டம் வளக்கலாம்” என்றான் ஸ்ரீனி, கண்ணில் கனவுடன்.

பத்மாவதி, தனது “ஹ்ம்ம்…”-ஐ கைவிட்டுவிட்டு, அவனை அண்ணாந்து பார்த்தாள். கண்ணில் ஒரு ஆச்சரியத்துடன்.

“ஆமா… பத்ஸ்! என்னை மாதிரி… உன்னை மாதிரி… அப்பாவண்ட… தாத்தாவண்ட திட்டு வாங்கிண்டு நம்ம குழந்தை வளரக் கூடாது. அவன் ஆசைப்படறதை எல்லாம் வாங்கிக் கொடுக்கணும்… திட்டவே கூடாது… நினைச்சதை பண்ணுடா ராஜான்னு அவனை ஃப்ரீயா விடணும்… அவன் ஹாப்பியா இருக்கணும்…” என்றான் ஆசையும் வேகமுமாய்.

கண்ணில் அப்படியொரு வெறி. வெறி என்பதை விட, “எனக்கு கிடைக்காத சந்தோசம்… என் குழந்தைக்குக் கிடைத்தே ஆகவேண்டும்” என்ற பிரயத்தனம்.

அவனிடம் கொண்ட கோபங்கள்… ஈகோ… எல்லாவற்றையும் பின்னே தள்ளிக் கொண்டு, தங்கள் பிள்ளையைப் பற்றிய அவனது கனவு, பத்மாவையும் அசைக்கவே செய்தது.

அதற்காக, அவளது கோபமோ… ஈகோவோ முழுதாய் மறைந்துவிடவில்லை.

அலைக்கு அடியே சென்ற பிளாஸ்டிக் காகிதமாய் சற்று நேரம், கண்ணை விட்டு மறைந்தது. அடுத்த அலை வருகையில், எழுவேன் என்ற குறிப்புடன்!

இப்போதைக்கு, குழந்தையைப் பற்றிய அவனது சிந்தனையும்… அவனது செயல்களும் மனதிற்கு இதமாகவே இருந்தது என்பதை அவளால் மறுக்க முடியவில்லை.

அதை மறையாது வெளியிடும் வண்ணம், அவனை இறுக அணைத்துக் கொண்டவள், “பிரசவம் வரைக்கும்… இங்க தானே இருப்பேள்?” என்றாள் சிறு ஏக்கத்துடன்.

“கண்டிப்பா…” என்று உறுதி கொடுத்தவன், அதன் படியே இருக்கவும் செய்தான்.

அமெரிக்காவில் இருந்து, அவளுக்கென்று வாங்கி வந்திருந்த பொருட்களை அவன் கடை விரித்த போதும், பத்மாவதியின் கோபம் கடலில் போட்ட கல் உப்பாய் கரைந்து தான் போனது!

அவ்வளவு பொருட்கள்! காஸ்ட்லியான ஹாண்ட்பாக்! ஐ-பாட்! ஐ-போட்! மேக்-அப் செட்! விதவிதமான சிறு கைப்பைகள்! ஃபாசில் வாட்ச்! என்று ஏகப்பட்ட பொருட்கள்!

“ஆசை” இல்லாதவன் இதையெல்லாம் வாங்கி வாருவானா என்று தன்னைத் தானே கேள்வி கேட்டு, அவனை வக்கலாத்து வாங்கும் அளவிற்கு, பத்மாவின் மனதிலிருந்த கோபம் பின்னுக்குப் போயிருந்தது.

அவளுக்கும் மட்டுமல்ல, பிறக்கப் போகும் குழந்தைக்கென்று அவன் வாங்கி வந்திருந்த பொருட்களைக் கண்டவள், மலைத்துத் தான் போனாள்.

சிறு குழந்தை போடுவது போல், இருபது… இருபத்தியைந்து உடைகள். பற்பல பொம்மைகள்… கிலுகிலுப்பையிலேயே நாலு வகை… டெட்டி பேரில் இரண்டு… குழந்தையைக் குளிக்கவைக்கவென்று ஒரு தொட்டி… குழந்தைத் தூங்க வைக்க ஒரு தொட்டில் என்று ஏகப்பட்டது.

பத்மாவிற்கு சிரிப்பாக வந்தது.

“இதெல்லாம் எப்படி எடுத்திண்டு வந்தேள்? ஃப்ளைட்காரா தர… லகேஜ் அலவன்சை விட… ஜாஸ்தியா இருக்கும் போலவே…” என அவள் சிரிக்க,

“எக்ஸ்ட்ரா பே பண்ணினேன்டி…” – இது ஒரு கேள்வியாக்கும் என்பது போல் பதில் சொன்னவன், “குழந்தை பிறக்கும் போது… வேறென்ன வேணும் பத்ஸ்… சொல்லு, நா போய் வாங்கிண்டு வந்துடுறேன்” என்றான் ஆர்வத்துடன்.

“அதெல்லாம்… அந்த நேரத்தில பாத்துக்கலாம்….” என பத்மா முடிக்க,

“ஹ்ம்ம்… என் புள்ளை பிறக்கும் போதே… அவனுக்கு வேண்டியதெல்லாம் இருக்கணும். எதுக்காகவும் அவன் ஏங்கவே கூடாது” என்றான் ஸ்ரீனி, தீர்மானமாய்.

அத்தீர்மானத்தின் படி, குழந்தைக்கு வேண்டியது என்று அவன் நினைத்த அனைத்தையும் வாங்கிக் குவித்தான்.

குழந்தைக்கென்று ஒரு அறையை ஒதுக்கி, அதை ராணியை விட்டு சுத்தம் செய்யச் சொன்னான்.

பிறக்கவே செய்திராத குழந்தைக்கு, கார் வடிவத்தில் ஒரு படுக்கை… சுவர் முழுதும் கார்டூன் சித்திரங்கள்… மரத்திலான ஒரு அழகான தொட்டில் என்று வீடே அமளி துமளி பட்டது.

பிரசவ நேரமும் வந்தது.

விடுமுறை போட்டிருந்தமையால், மருத்துவமனையில் பத்மாவுடனே இருந்தான்.

சுகப்பிரசவத்தில், ஆரோக்கியமாய் ஆண் குழந்தை பிறந்ததும், மருத்துவமனையில் வேலை செய்வோர் மட்டுமல்லாமல்… அங்கிருந்த அனைவருக்குமே இனிப்பு கொடுத்து, கொண்டாடினான்.

“என் பையன்… என் பையன்…” என்று பூரிப்புடன் வளைய வந்தான்.

ஓய்ந்து போய் படுத்திருந்த பத்மாவின் அருகே சென்று அமர்ந்தவன், அருகே படுத்திருந்த குழந்தையின் விரல்களை வருடியபடி, “தேங்க்ஸ் பத்ஸ்… ஐ பீல் சோ ஹாப்பி” என்றான் ஆத்மார்த்தமாய்.

பத்மாவிற்கும் சந்தோஷமாய் இருந்தது.

இது நாள் வரையில், அவன் வரவில்லை… வரவில்லை என்று அடித்துக் கொண்ட மனம், இவ்வளவு அன்பைச் சுரக்கத் தான்… அங்கே இரவு பகல் பாராமல் உழைத்தான் போலும் என்று சமாதானம் செய்து கொண்டது.

அதையே அவனும் பிரதிபலித்தான்.

“இதுவே ஆன்சைட் போகாம… ஆத்துக்கு வாங்கின கடனை அடைக்காம… ஒரு குழந்தை பிறந்திருந்தா… நா இவ்வளவு சந்தோஷமா இருந்திருப்பேனா தெரியாது. ஆனா… எந்தவிதமான பெரிய கமிட்மெண்ட்லையும் சிக்கிக்காது… குழந்தைக்கு நினைச்சதை செய்ய

முடியுதுங்கிற ஃபீலிங்கே ரொம்ப நன்னா இருக்கு… பத்ஸ்! ஐ லவ் திஸ்!” என்றான் அவன், பத்மாவின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு.

பத்மாவிற்கு அவன் சொல்வதில் நியாயம் இருப்பது போல் தோன்றியது!

நியாயம் போல் என்ன போல்… நியாயமே தான் என்று அடித்துச் சொல்வது போல், “இன்னும்… ஒன் மந்த்க்கு அங்க வேலையிருக்கு. ஆனா… நேக்கு… இந்தக் குட்டிப் பையனை விட்டுப் போகவே மனசில்லை தெரியுமோ?” என்றான் அவன்.

தன் சொல்படியே, “கடைசி ஒரு மாதத்திற்கான வேலையை இங்கிருந்தே செய்கிறேன்” என்று மேலாளாரிடம் கூறி, அதற்கும் சம்மதம் வாங்கினான்.

வாழ்க்கை ரம்மியமாய் மாறி விட்டது போலிருந்தது பத்மாவிற்கு.

ஆண்மைக்கு இலக்கணமாய் கணவன், குறை சொல்ல முடியா வேலை, குண்டு கன்னமும்… உருண்டை முகமுமாய் ஒரு அழகிய குழந்தை, பெரிய வீடு, நல்ல சம்பளம், கார், வீட்டு வேலையைக் குறைவின்றி செய்ய நம்பகமான வேலையாள் என்று சகலவிதமான சௌகரியங்களுடன் ஒரு செழிப்பான வாழ்க்கை. இதைவிட, ஒரு பெண்ணிற்கு என்ன வேண்டும்?!

என்ன ஒரே குறை! சில சமயம்… ஸ்ரீனியின் அளவு மீறிய பேச்சு தான்!

ஆனால், இருக்கும் நிறைகளைப் பார்க்கும் போது… அவனது பேச்சு ஒன்றும் குறையாய் தெரியவில்லை.

வாழ்க்கை நன்றாகவே சென்றது.

தங்கள் பிள்ளைக்கு “வேதாந்த்” என்று பெயரிட்டனர்.

ஸ்ரீனி, அமெரிக்கா… ஆப்ரிகா என்று பறந்துவிடாமல், பெங்களூரிலேயே இருந்தான்.

ராணியின் துணையோடு, பத்மாவும் குழந்தையை நல்லபடியாகவே பார்த்துக் கொண்டாள்.

“ராணி…” என்ற அழைப்பு மறைந்து “ராணியம்மா…” என்ற அழைப்பு உதயம் பெருமளவிற்கு, ராணி அவர்கள் குடும்பத்தில் ஒருத்தியானார்.

“என்னவோ… வயித்தை தள்ளிண்டு இவாட்ட வருவேங்கிற மாதிரி பேசினாரே! இப்போ… மூஞ்சியைக் கொண்டே எங்கே வச்சுப்பாராம்…” என்று தந்தையின் பேச்சை நினைத்து, ஒரு ஏளனம் எழுந்து, அவளது மனத்தைக் குளிரச் செய்தது.

மூன்று மாதங்கள் கடகடவென ஓடிவிட, பத்மாவின் பிரசவ கால விடுமுறை முடிவிற்கு வந்தது. இன்னும் ஒரு மாதத்திற்கு, அதை நீட்டித்துக் கொள்ளலாம் என்ற வசதி இருந்தபோதும், சீக்கிரமே வேலைக்கு சேர்வது அவளது பதவியுயர்விற்கு வழி வகிக்கும் என்றெண்ணினாள் பத்மா.

அதை, ஸ்ரீனியும் ஒத்தே பேசினான்.

“ராணிம்மா… வேதுவை நன்னாவே பாத்துப்பா. சோ… நீ வேலைக்குப் போ, பத்ஸ்! நடுல வந்து ஃபீட் பண்றதுன்னா… கார் எடுத்திண்டு வீட்டுக்கு வந்துட்டுப் போ… அவ்வளவு தானே? இதுக்காக… ஏன் லீவை எக்ச்டண்ட் பண்றே?” என அவனும் அவளது மனநிலையையே பிரதிபலிக்க, சந்தோஷமாய் கிளம்பினாள் பத்மா.

இரு வாரங்கள், மதியம் ஒரு மணியளவில் வந்து குழந்தைக்கு பால் கொடுத்துவிட்டு சென்றவள், மூன்றாம் வாரத்திலிருந்து, தாய்ப்பாலை “breast pump” கொண்டு பீய்ச்சி எடுத்து, இரண்டு… மூன்று “sterilized container” களில் ஊற்றி வைத்து, வேலைக்கு ஒன்றாய் பிள்ளைக்குக் கொடுக்கும் படி ராணியம்மாவிடம் அறிவுறுத்திவிட்டு, வேலையில் தன் கவனத்தைச் செலுத்தினாள்.

சிற்சில சண்டைகள் தவிர, வாழக்கை ரம்மியமாகவே சென்று கொண்டிருந்தது. வேதாந்திற்கு, மூச்சிரைப்பு வரும் வரை.

நடு இரவில், மூச்சு விட முடியாமல் திணறிய குழந்தையை அள்ளிக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடினால், இரண்டு நாட்கள் அட்மிட் செய்துவிட்டு, “ஒன்றும் பிரச்சனையில்லை. அதிக நேரம்… வெளியே வைத்திருக்காதீர்கள். அடிக்கடி குளிக்க வைக்காதீர்கள்” என்ற அறிவுரையோடு வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

குழந்தை தேறி வந்தான்.

ஆனால், ஒரே வாரத்தில் மீண்டும் மூச்சிரைப்பு வந்தது!

“உறவோவியம்” – அத்தியாயம் 12

இரவு மணி – ஒன்பது பத்து.

ஸ்ரீனி – பத்மா இருவரது படுக்கையறையில், கட்டிலுக்கு அருகே மரத் தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தான் வேதாந்த்.

இரவு, அவனுக்குப் பால் புகட்டிவிட்டு, டயப்பர் போட்டு, தங்கள் அறையிலேயே உறங்க வைத்துக் கொள்வாள் பத்மாவதி.

அன்றும், நடைமுறை வழக்கப்படியே காட்சிகள் அரங்கேறின.

குழந்தையைப் பால் கொடுக்க, மடியில் போட்டவளுக்கு, என்னவோ வித்தியாசமாக இருப்பது போலிருந்தது.

குழந்தை வேறு, உடம்பை முறுக்கிக் கொண்டு… ஓரிடத்தில் படுக்க முடியாமல், கையைக் காலை உதைத்துக் கொண்டே இருந்தான்.

பாலுக்குத் தான் அழுகிறான் போல என்றெண்ணியவளை, தன் உடைகளைத் தளர்த்திக் கொண்டு, அவனைப் பால் குடிக்க வைத்தாள்.

ஆனால், பிள்ளையால் ஒரு நிமிடத்திற்கு மேல், பாலைக் குடிக்க முடியவில்லை.

“ஹஹ்ஹ்ஹஹ…” என்று மூச்சுக்கு சிரமப்பட்டுக் கொண்டு, தாயின் மார்பகத்திலிருந்து முகத்தை விளக்கிக் கொண்டான் செல்வன்.

“என்னடா குட்டி… கொஞ்சம் குடிடா…” எனக் கொஞ்சியவள், மீண்டும் பிள்ளையை மார்புக்காம்பருகே இட்டுச் சென்றாள்.

இப்போதும், ஒரு நிமிடத்திற்கு குறைவாகவே தாயின் மார்பிலிருந்து சுரக்கம் அமுதத்தைப் பருகினான், பிள்ளை.

அச்சிறு பிள்ளைக்கு மூச்சு விட முடியவில்லை.

வேகமாய் தாயின் மார்பை விட்டு, தன் வாயை எடுத்துக் கொண்ட சின்னக் குழந்தை… வாயை அகலத் திறந்து, “ஹ்ஹஹாஆஆஅ” என்று வாயால் மூச்சு விட்டு, தன் உயிரைத் தக்க வைத்துக் கொண்டது.

“என்னடா தங்கம்… ஏன் இப்படி மூச்சு விடுறே?” என்றபடியே நெஞ்சை நீவிவிட்ட பத்மா,

“ஏன்னா… கொழந்தே திரும்பவும் மூச்சுக்கு சிரமப்படுறானே!!” என்றாள் கவலையாய்.

“மருந்து… மாத்திரையெல்லாம் ஒழுங்கா கொடுத்தியோனோ? டாக்டர் சொன்னதில… எதையானும் மறந்திருப்பே… அதான் இப்படி வரது” என்று மனைவியைக் குறை சொன்ன ஸ்ரீனிவாசன், குழந்தையைக் கவனித்துக் கொள்ளும் ராணியம்மாவை அழைத்து விவரம் கேட்டான்.

“ராணிம்மா… வேதுக்கு… மருந்தெல்லாம் வேளாவேளைக்கு கொடுக்கிறேளா இல்லையா? இன்னும்… கொழந்தைக்கு சரியா வரமாட்டேன்றதே!” என்று அவன் சிடுசிடுக்க,

“இல்லய்யா. எல்லா மருந்தும் ஒழுங்கா கொடுத்துடுறேன். இன்னைக்குக் கூட… டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்தில ஒரு பாட்டில் காலியாகிடுச்சு… உமேஷை விட்டு வாங்கிட்டு வரச் சொல்லிக் கொடுத்துட்டேன்ய்யா” என்று விவரம் சொன்னார் அவர்.

“ஹ்ம்ம். சரி. இனிமேலும் ஒழுங்கா கொடுங்கோ…” எனக் கூறி, அவரை அனுப்பி வைத்தவன்,

“டாக்டர் கொடுத்த நேசல் ட்ராப்சை விடு… பத்மா. ஏர் ப்ளாக் இருந்தா… கிளியர் ஆகிடும்” என மனைவியை ஏவினான்.

அவன் சொன்னது போலவே செய்தவள், குழந்தை சீராக மூச்சு விடத் தொடங்கியதும், மீண்டும் பால் புகட்டினாள்.

இந்த முறை, முக்கால் மணி நேரத்திற்கும் மேலாய்… செல்வன் தாயின் மார்புக்காம்புகளை விடவில்லை. பாவம், பிள்ளைக்கு அவ்வளவு பசி போலும்.

அரைத் தூக்கத்தில் இருந்த பிள்ளையின் முன்னந்தலையை வருடி விட்டவள், பிள்ளையைத் தூக்க முயன்றாள்.

ஆனால், அவன் வரவில்லை.

தாயின் ஸ்பரிசத்தில் விழித்துக் கொண்டவன், மீண்டும் தன் உதடுகளால் தாயின் காம்புகளை இறுகப் பற்றிக் கொண்டான்.

“அச்சோ… ரெம்ப பசியாடா கண்ணா…” என்று தாய்க்கும் உருகித் தான் போனது.

தூக்கம் பாதி… பசி மீதியுமாய், அவனது வயிறு நிறையும் வரை, தாயை விடாமல் பற்றிக் கொண்டான் சின்னப் பையன்.

ஒருவாறாக, அவன் அசந்து தூங்கிவிட்டான் என்பதை அறிந்து கொண்டவள், அவனை மெல்ல தூக்கி, தொட்டிலில் போட்டாள்.

சரியாக, ஒரே மணி நேரம்.

“ஹ்ம்ம்… ஹ்ஹ்ஹ்ஹ்ஹ்ம்ம்ம்ம்ம்” என்று சிறு சிறு முனங்கலில், ஸ்ரீனி – பத்மா இருவரது தூக்கமும் கலைந்தது.

“ஏன்னா… கொழந்த… அழறான் போல. பாருங்கோளேன்…” என்றபடி பத்மா திரும்பிப் படுக்க,

“பச்ச்… நீ பாருடி…” என்று வேறு பக்கம் படுத்துக் கொண்டான் கணவன்.

“நா… இப்பத் தான் படுத்தேன். பாருங்கோ…ப்ளீஸ்” – அவளும் வேறு பக்கம் படுத்துக் கொண்டாள்.

“பசிக்காக தான் அழுவானா இருக்கும். நீ… பாருடி…” என்றபடியே அவன் உறக்கத்தைத் தொடர,

“ப்ச்… பாருங்கோன்னா… நேக்கு தலையை வலிக்கறது” என்று எரிச்சல் பட்டாள் பத்மாவதி.

இருவரும், “நீ… நான்” என்று போட்டுக் கொண்டிருந்த வேளையில், குழந்தையின் முனங்கல் அழுகையாய் மாறியது.

ஒரு கட்டத்தில், “மூசு… மூசு” என்று அவன் மூச்சுக்குத் தவிப்பது வெளிப்படையாகவே தெரிய, இருவரும் அடித்துப் பிரண்டு எழுந்தனர்.

“எழுந்து பாருங்கோன்னா… கேக்கிறேளா…” என்று வைதபடி குழந்தையை வாரி எடுத்தாள் பத்மா.

“நீ… பாக்க வேண்டியது தானே!” என்று ஸ்ரீனி தொடங்க,

“ப்ச்… சண்டை போட்டுண்டு இருக்காதேள். கொழந்த கஷ்டப்பட்ரானோ இல்லையோ… அந்த நேசல் ட்ராப்ஸ் எடுங்கோ” என்று அவனை ஏவினாள் பத்மா.

ஆனால், இந்த முறை நேசல் ட்ராப்ஸ்க்கெல்லாம் பிள்ளையின் மூச்சுத் திணறல் அடங்கவில்லை.

மூசு… மூசு என்று, மார்பு மேலும் கீழும் இறங்க, மேல் மூச்சாகவே எடுத்துக் கொண்டிருந்தது பிள்ளைக்கு.

மூக்கு வழியே சுவாசிக்க முடியாமல், வாய் வழியாகவே சுவாசிக்க முயன்று கொண்டிருந்தான் வேதாந்த. அதுவுமே, ஒரு கட்டத்தில் கஷ்டமாய் இருக்க, உடம்பு தூக்கிப் போடத் தொடங்கியது.

அரண்டு போயினர் பெற்றோர் இருவரும்.

அடித்துப் பிரண்டு பிள்ளையைத் தூக்கிக் கொண்டு, இருபத்திநான்கு மணி நேர மருத்துவமனை ஒன்றிற்கு ஓடினர்.

அங்கிருந்த பணி மருத்துவர், “குழந்தைகளுக்கான மருத்துவர் வரும் வரையில், குழந்தையின் மூச்சுத் தினரலைக் கட்டுப் படுத்த, ஆக்சிஜன் மாஸ்க் போட்டு உறங்க வைக்கலாம். அவர் வந்ததும், மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று பார்ப்போம்” எனக் கூறி, குழந்தையை அட்மிட் செய்தார்.

ஆறடி படுக்கையில், அரையடி குழந்தை படுத்திருக்க,

அச்சிறு உருவத்திற்கு ஆக்சிஜன் ஏற்றப்படுவதைக் கண்ட பெற்றோர் இருவருக்கும் நெஞ்சு துடித்தது.

“ஹய்யோ!!! என்னோட குழந்தைக்கா இப்படி?” என்று மனம் ரணப்பட்டுப் போனது.

அதிலும், ஆக்சிஜன் லெவல் கம்மியாக இருக்கிறது என்றும், அதற்கு இரு ஊசிகள் போடச் சொல்லி, உயர் மருத்துவரிடமிருந்து ஆணை வந்திருப்பதாகவும் கூறி, அப்பிள்ளையின் கையில் மருத்துவர்கள் நரம்பைத் தேடியபோது, சப்தநாடியும் ஆடியது ஸ்ரீனிக்கு.

சிறு குழந்தை அல்லவா, நர்ஸ் கையை அழுத்திப் பிடித்ததும், வீரிட்டு அழ ஆரம்பித்தான்.

நர்ஸை, ட்ரிப்ஸ் மாட்ட விடாமல், கையையும் காலையும் நாலாபக்கமும் உதைத்தான்.

அவனுடன் மல்லுக்கட்டி, கையில் ட்ரிப்ஸ் மாட்ட முடியாமல் போகவே, கையில் மாட்டுவதை விட்டுவிட்டு, காலிற்கு குறி பார்த்தனர் மருத்துவரும் செவிலியப்பெண்ணும்.

ஒருவர் காலை அழுத்திப் பிடித்துக் கொள்ள, மற்றொருவர் காலை லேசாய் முறுக்கி, அந்த சிறு உடம்பில் “நல்ல” நரம்பைத் தேடினர்.

ஒரு வழியாக, நரம்பைக் கண்டுபிடித்து… அதில் ஊசியை மாட்டியவர்கள், பிள்ளை காலை அசைப்பதால்… ஊசி நகர்ந்துவிடக் கூடாது என்பதற்காக, ஒரு அட்டையை வைத்து, காலையும் அந்த அட்டையையும் சேர்த்துக் கட்டினர்.

ஸ்ரீனிக்கு, தன் நரம்பு மண்டலத்தில் நண்டு நர்த்தனம் நாடுவது போல், உடலெங்கும் வலித்தது.

“ஹய்யோ! பத்து… என்னடி இப்படி பண்றா? வேதுவைப் பார்க்கவே கஷ்டமா இருக்கே” என்று கதறியபடி மனைவியின் புறம் திரும்பியவன், திகைத்து நின்றான்.

கண்ணிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வழிந்தோட, கண்ணாடி வழியே பிள்ளையை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்த பத்மாவின் உருவம், ஸ்ரீனியை என்னவோ செய்தது.

“பத்து…” என அவன் மெல்ல நெருங்க,

“நேக்கு… நெஞ்செல்லாம் வலிக்கறதேன்னா…” என்றபடி, கணவனின் மார்பில் சாய்ந்து, கதறினாள் பத்மா.

“குட்டிக் கண்ணன்-ன்னா அவன். அவனைப் போய்…. ச்சே… எப்படி ஊசி போடுறா பார்த்தேளா?! என்னால… சகிச்சுக்கவே முடியல…” என்றவளுக்கு, அடுத்த நாள் காலை விடிந்ததும் விடியாததுமாய் மருத்துவர் வந்து போட்ட குண்டில், உலகமே இருட்டு மயமானது.

ஏகப்பட்ட பரிசோதனைகள் செய்த மருத்துவர், அதன் முடிவுகளை கையில் வைத்துக் கொண்டு, பெற்றோர் இருவரையும் அழைத்தார்.

“டாக்டர்… எங்க பையனுக்கு என்ன பிரச்சனை?” – படபடப்பு குறையாமல் ஸ்ரீனி கேட்க,

“ஹ்ம்ம். சொல்றேன். மொதல உக்காருங்க” என இருக்கையைக் காட்டினார் மருத்துவர்.

அவரது குரலில் தென்பட்ட இலகுவில்லா தன்மை, வயிற்றில் புளியைக் கரைக்க, இருவரும் ஒருவரை ஒருவர் பீதியுடன் பார்த்தபடி, இருக்கையில் அமர்ந்தனர்.

“டாக்டர்…” என்று ஆரம்பித்த பத்மாவைக் கையமர்த்தியவர்,

“உங்க ரெண்டு பேர் குடும்பத்தில… யாருக்காவது வீசிங் ப்ரொப்லெம் இருக்கா?” என்றார்.

“…….”

“……..” – பலமான யோசனையில் ஆழ்ந்தனர் இருவரும்.

முடிவில் “இல்லையே!!” என்றனர் ஒருசேர.

“உங்கப்பா-அம்மான்னு இல்லை… அம்மா வழி தாத்தா – பாட்டி… அப்பா வழி தாத்தா – பாட்டி… அவங்களோட அப்பா – அம்மா” என்று அவர் துருவ,

மீண்டும் சில நிமிட நேரம் யோசித்தவர்கள், “இல்லை” என்றனர் திடமாய்.

இப்போது யோசிப்பது மருத்துவரின் முறையாகிற்று.

“பட்… உங்க பையனுக்கு சிவியர் வீசிங் இருக்கு…” என்றார் யோசனையின் ஊடே.

“வீசிங்கா? அப்பன்னா… ஆஸ்துமாவா டாக்டர்…” என்று பத்மா பதற,

“ஹ்ம்ம். ஒரு விதமான ஆஸ்துமா…”

“திடீர்ன்னு எப்படி டாக்டர், வீசிங் வந்துச்சு? எட்டு மாசமா… நல்லா தானே இருந்தான்” என்ற ஸ்ரீனிக்கு, பெங்களூர் குளிரிலும் வேர்ப்பது போலிருந்தது.

“ஹ்ம்ம். அதான்… எனக்குப் புரியல. யூஷுவலா… ஹெரிடிட்ரியா தான்… வீசிங் வரும். it is mostly a genetical disorder. அப்படியே, ஹெரிடிட்டி மூலமா வரலைன்னா… ரொம்ப நேரம் தூசில நிக்கிறவங்க… லைக்… பஞ்சு மில்லில வேலை செய்றவங்க… ரோடு போடறவங்க… இல்லைன்னா கோல்ட் அலர்ஜி உள்ளவங்க… இப்படி தான் வீசிங் வர சான்ஸ் இருக்கு. ஆனா… இந்தச் சின்னக் குழந்தைக்கு எப்படி?” என அவரும் பலமாகவே யோசித்தார்.

“அவனை… நாங்க அதிகமா வெளிய கூட கூட்டிண்டுப் போறதில்லை டாக்டர். வீக்டேஸ்ல… எங்க தோட்டத்தில… அப்படியே இல்லைன்னா எங்க ஏரியாலேயே தான் வாக்கிங் கூட்டிண்டுப் போவோம்” என்று அவசரப்பட்டாள், தாய்.

“வீக் எண்டுல?” – கேள்வியாய் நிறுத்திய மருத்துவருக்கு, ஸ்ரீனி பதில் கூறினான்.

“மால் தான் டாக்டர் போவோம்… எப்பாயானும் கோவில்… இல்லைன்னா பார்க். லாங் டிரைவ் கூட எங்கையும் போனதில்லை” என அவன் முடிக்க,

“அவனுக்கு… வெளி ஃபூட் கூடத் தரதில்லை டாக்டர். ஆபீஸ் போனாலும்… அவனுக்குரிய பாலை… எடுத்து ஸ்டெரிலைஸ் பண்ணி வச்சுட்டுத் தான் போவேன். வெளிய போனாலும்… கார்ல உக்காந்து நான்தான் ஃபீட் பண்ணுவேன். யூஷுவல் மில்க் கூட… கொடுக்க ஆரம்பிக்கல. முழுசா… என்னோட ஃபீடிங்ல தான் இருக்கான்…” என்று தாயாய் தவித்தாள், பத்மா.

“ஓகே! ஓகே! கூல்… ஒன்னும் பிரச்சனையில்லை. இனிமேல் கவனமா பார்த்துக்கோங்க… நிறைய நேரம் வெளிய வச்சுக்காதீங்க. அதிக நேரம்… தண்ணில குளிக்க வைக்காதீங்க. நல்ல வெதுவெதுன்னு தண்ணி ஊத்துங்க. முக்கியமா ஈவினிங்ல குளிக்க வைக்க வேணாம். கிளைமேட் குளிர்ச்சியா இருக்கிறதால, என்னதான் வெது வெதுன்னு தண்ணி ஊத்தினாலும், சாயந்திரம் குளிக்க வைக்கிறதை அவாய்ட் பண்ணிடுங்க” என்று நீளப் பட்டியல் வாசித்தவர்,

“முக்கியமான விஷயம். நீங்க ஃபீட் பண்றதால… உங்க ஃபூட்ல இருந்தும்… குழந்தைக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பிருக்கு. அதனால, நீங்களும் கோல்ட் பிடிக்காம… கவனமா இருங்க” என்று எச்சரித்து அனுப்பினார்.

இரு நாட்கள் பின்னர், குழந்தையை டிஸ்சார்ஜ் செய்து வீட்டுக்கு அழைத்து வந்தனர்.

ஒரு வாரம், நன்றாக இருந்தான் பிள்ளை.

ஸ்ரீனி – பத்மா இருவருமே, கொஞ்சம் ஆசுவாசமாய் மூச்சு விட ஆரம்பித்தனர்.

அன்று, வேலை சீக்கிரம் முடிந்துவிட்டதால், நான்கு மணிக்கே வீடு வந்து சேர்ந்தாள் பத்மா.

வந்ததும், கை கால் கழுவிவிட்டு, பிள்ளையைத் தூக்கியவள் அதிர்ந்து போனாள்.

பிள்ளையின் பின்னந்தலையில் ஈரம் கோர்த்து இருந்தது.

சற்று நேரம் முன்னர் தான், பிள்ளை குளிக்கவைக்கப் பட்டிருக்கிறான் என்பதை, அந்த ஈரம் அப்பட்டமாய் படம் பிடித்துக் காட்டிவிட,

“ராணி… ராணி…” என்று கூவி அழைத்தவள்,

“என்ன ராணி… இது? சாயந்திரத்தில… குளிக்க வைக்காதேள்ன்னு எத்தனை வாட்டி ச்சொன்னேன். ஏன் இப்படி செய்றேள்?” என்று எரிந்து விழுந்தாள்.

“இல்லைம்மா… காலையிலேயே குளிக்க வச்சுட்டேனே…” என்று அவர் மறுக்க,

“சும்மா… கதை சொல்லாதீங்கோ! இந்தா… பின்பக்கமெல்லாம் ஒரே ஈரம்… சரியா துடைக்கக் கூட இல்லை. அப்பன்னா… காலையில இருந்து குழந்தை ஈரத்திலேயேவா இருக்கான்?” என்று அவரை பிலுபிலுவென்று பிடித்த பத்மா,

“இனிமே… சாயந்திரம் குழந்தையை குளிக்க வச்சேள்ன்னு தெரிஞ்சது… நா என்ன செய்வேன்னு நேக்கே தெரியாது” என்று காச் மூச்சென்று கத்திவிட்டு, குழந்தையை அள்ளிக் கொண்டு அறைக்குள் சென்றாள்.

ஸ்ரீனி வந்த நிமிடமில்லாமல், நடந்ததை கூறியவள், “வர… வர… ராணி ரொம்பப் பொய் சொல்றாளோன்னு நேக்கு சந்தேகமா இருக்கு. பேசாம… ஒரு cctv கேமரா வச்சுடலாமான்னா? நாம வீட்டில இல்லாதப்ப… அவா என்ன செய்றான்னு நமக்குத் தெரியுமோனோ” எனப் படபடக்க,

“ச்சே… ஒரு நாள் என்னவோ தெரியாம செஞ்சிருப்பா, பத்து! ராணி… அப்படியாப்பட்டவ இல்லை… நம்மளை விட குழந்தையை கண்ணா பாத்துக்கிறா” என வேலைக்காரிக்காக வக்காலத்து வாங்கினான், ஸ்ரீனிவாசன்.

“என்னவோ… போங்கோ! வேதுக்கு… இனி ஒரு வாட்டி வீசிங் வரட்டும்… அப்புறம் இருக்கு…” என்று கோபம் தலைக்கேற கத்தியவளை, ராணியின் அருமை பெருமைகளைக் கூறி அடக்கி வாசிக்க வைத்தான் ஸ்ரீனிவாசன்.

பத்மாவின் வாய் முஹூர்த்தம் போல், இரண்டே நாளில் குழந்தைக்கு மீண்டும் ஒரு வீசிங் வந்தது.

இந்த முறை, மூச்சு விடச் சிறமபட்டதில், உடம்பெல்லாம் நீல நிறம் கொண்டு விட்டது குழந்தைக்கு!

அரண்டு போயினர், இருவரும்!

குழந்தையைத் தூக்கிக் கொண்டு, மருத்துவமனைக்கு ஓடினால், அந்த டாக்டர் பேசிய பேச்சுக்கு அளவே இல்லாமல் போனது.

“நீங்கெல்லாம் படிச்சவங்க தானே? எத்தனை வாட்டி… குழந்தையை வெளிய கூட்டிப் போகாதீங்கன்னு சொன்னேன். இப்ப என்னடான்னா… ஆக்சிஜன் லெவல் கம்ப்ளீட்டா டிராப் ஆகிடுச்சு. இன்னும் கொஞ்ச விட்டா… குழந்தையோட உயிருக்கே ஆபத்தாகியிருக்கும்” என்று சகட்டு மேனிக்கு, இருவரையும் திட்டித் தள்ளினார் மருத்துவர்.

சராசரி மனிதனுக்கு 80 சதவீதம் இருக்க வேண்டிய ஆக்சிஜன் லெவல், வேதாந்திற்கு 60 சதவீதமாக குறைந்து போயிருந்ததே, மருத்துவரின் திட்டிற்கு காரணம்.

இந்த முறை, ஒரு வார மருத்துவமனை வாசத்திற்குப் பின்னர் வீடு வந்து சேர்ந்தான் பிள்ளை.

ஏகப்பட்ட அறிவுரைகளும், சிற்சில மிரட்டல்களுமாய் குழந்தையை ராணியிடம் விட்டுவிட்டு, இருவரும் வேலைக்குச் செல்லத் தொடங்கினர்.

இப்போது, விதி வேறு வழியில் விளையாடியது.

ஒரு நாள், ப்ராஜெக்ட் லஞ்ச் ஒன்றிற்காக பெங்களூர் நகரத்தின் வேறொரு மூளைக்குச் சென்றிருந்தனர் பத்மாவின் குழுவினர்.

அதை முடித்துக் கொண்டு, அனைவரும் அலுவலகம் செல்ல, பத்மாவிற்கு மட்டும் வீட்டிற்குச் சென்றால் தேவலாம் போலத் தோன்றியது.

மேலாளரிடம் கேட்டு அனுமதி வாங்கியவள், ஒரு ஆட்டோவை பிடித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள்.

ஆட்டோவிற்குப் பணம் கொடுத்துவிட்டு, வீட்டுப் பக்கமாய் தலை திருப்பியவள், திகைத்துப் போனாள்.

ஏனா? பெரிய பூட்டொன்று அவர்களது வீட்டு மெயின் கேட்டில் தொங்கியதைப் பார்த்து, திகைக்காமல் என்ன செய்வாள்?!!

“இந்த நேரத்தில… எங்க போனாங்க?” என்ற கேள்வியைத் தவிர, வேறெதையும் எண்ணத் தோன்றவில்லை பத்மாவிற்கு.

காய் வாங்க… மளிகைப் பொருள் வாங்க… என்று அவர்கள் வெளியே செல்ல வேண்டிய அவசியமே இல்லாமல், வீட்டிற்குத் தேவையான

அனைத்தையும் ஞாயிற்றுக்கிழமையன்று வாங்கி வந்து, குவித்து விடுவார்கள் ஸ்ரீனியும் அவளும்.

அப்படியிருக்கையில், வெளியே செல்ல வேண்டிய அவசியம் என்ன? அதுவும், கைக்குழந்தையை வைத்துக் கொண்டு.

எண்ணங்கள் அக்கேள்வியை விட்டு வெளியே வர மறுத்தது!!

என்ன ஏதென்று எதுவும் புரியாமல், ஸ்ரீனிக்கு அழைப்பு விடுத்தாள் பத்மா.

“ஹலோ… என்ன பத்மா இந்த நேரத்தில… வேலையா…” என்று சலிப்புடன் ஆரம்பித்தவனை,

“வேதுவைக் காணல. ராணி… வீட்டைப் பூட்டிட்டு எங்கேயோ போய்ட்டா” என்று கத்தரித்தாள் பத்மா.

“என்னது? என்ன உளற?”

“உளறல… வீடு பூட்டியிருக்கு”

“பூட்டியிருக்கா? நீ… எங்க அங்க போன?”

“ப்ச். அதுவா முக்கியம்… வீட்டில ராணி இல்ல. வேதாந்தும் இல்லைன்னு தான் நினைக்கிறேன்”

“ஒருவேளை அவனை உள்ள வச்சு பூட்டிட்டு…” – இதைச் சொல்லும் போதே, ஸ்ரீனிக்கு தொண்டை வரண்டது.

“அவனை உள்ள வச்சுப் பூட்டிட்டு… இவ எங்க போனா?” – பத்மாவின் குரலில் கடுப்பு நிரம்பி வழிந்தது.

“ஆமா…” – ஸ்ரீனிக்கும் திகைப்பாய் இருந்தது.

ஆனாலும், சற்றே சுதாரித்துக் கொண்டு “பக்கத்தில எங்காயானும் போயிருப்பாளா இருக்கும். சத்த நாழி வெயிட் பண்ணிப் பாரேன்…” என்று அவன் கூற,

“என்னன்னா உளறிண்டு இருக்கேள்?! குழந்தையை… எங்கேயும் வெளிய கூட்டிண்டு போகப்படாதுன்னு சொல்லியிருக்கோமா இல்லையா?” –

பத்மாவிற்கு, ஸ்ரீனி ஏன் வேலைக்காரிக்கு சப்போர்ட் செய்கிறான் என்ற எரிச்சல்.

“ஆமா… சரி இரு. நா…வரேன்…” என்றவனை,

“ஏன்னா… ஏன்னா…” என்று கூவி அழைத்துத் தடுத்தாள்.

“என்ன பத்மா…” – அவன் சலிப்புடன் பதில் கூற,

“உமேஷோட வராதேள். உங்க ஃபிரண்ட்ஸ் யாரானும் இருந்தா… அவா கார்ல வாங்கோ” எனக் கூறி, அவனது சலிப்பைத் திகைப்பாய் மாற்றினாள் பத்மாவதி.

“ஏன்டி… உமேஷ் என்ன தப்பு செஞ்சான்?” – ஸ்ரீனி விழிக்க,

“நேக்கு என்னவோ… டவுட் ஜாஸ்தியாகிண்டே போறது. நீங்க… அவனண்ட விஷயத்தைச் சொல்லாம… முடிஞ்சமட்டும் அவன் கண்ணில படாது… வீட்டுக்குக் கிளம்பி வாங்கோ” என்றவள், “சீக்கிரம்” என்ற வார்த்தையுடன் அழைப்பை வைத்துவிட்டாள்.

ஸ்ரீனிக்குப் புரிவது போலவும் இருந்தது. புரியாதது போலவும் இருந்தது. ஆனால், பத்மாவின் சொல்லை மீறவும் மனம் வராமல் போகவே, தன் நண்பனின் காரை எடுத்துக் கொண்டு, வீட்டை நோக்கிச் சென்றான்.

அங்கே, குறுக்கும் நெடுக்குமாய் தெருவை அளந்தபடி நின்றிருந்த பத்மா, இன்னமும் ராணியும் வேதாந்தும் வீடு வரவில்லை என்பதை உறுதி செய்தாள்.

“என்ன பத்மா இது? புது… பூதமா இருக்கு? எங்க போயிருப்பா…” என்று அவன் பதற,

“நேக்கும் தெரியலையேன்னா” என்று அவனுடன் சேர்ந்து மறுகினாள் மனைவியுமே.

“பக்கத்து ஆத்தில கேட்டுப் பாக்கலாமாடி…” என்று ஸ்ரீனி, சுற்றும் முற்றும் பார்க்க,

“அவாள்ல ஒருத்தரைக் கூட நமக்குத் தெரியாதேன்னா…” என உதடு பிதுக்கிய பத்மா, “வாங்கோ… எங்கயானும் தேடிட்டு வரலாம்” என்றாள் அவனை காரை நோக்கித் தள்ளியபடி.

“தேடிட்டு வரதா? குழந்தையை எடுத்திண்டு… ஓடியிருப்பாங்கிறியா? புளியைக் கரைக்காதேடி…” என்று ஸ்ரீனி அதிர,

“தெரியலையே… ஆனா… இங்கேயே நின்னுண்டு இருக்கிறதால ஏதானும் செய்ய முடியுமா என்ன? சும்மா போய் பார்த்துட்டு வருவோம்” என உந்தியவள், அவன் காரை தங்கள் அலுவலகம் இருக்கும் பக்கம் திருப்பவும்,

“இல்ல… அந்தப் பக்கம் போகாதேள். ஆப்போசிட் சைட் போங்கோ…” என்றாள் தீவிரமாய்.

“ஏய்…என்னடி…. அவா குழந்தையை கடத்தியிருப்பாங்கிற மாதிரியே பேசுறியே? பயமா இருக்குடி” – சிறு பிள்ளை போல் முகம் வெளுத்தது ஸ்ரீனிக்கு.

“நானே பயந்துண்டு இருக்கேன்… நீங்க வேற டென்ஷன் பண்ணாதேள். ஒட்டுங்கோ பார்ப்போம்…” என்றவள், கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

“வேது…. சின்னப் பையன்டி… அவனைப் போய் கடத்தியிருப்பாளா… ஹய்யோ… அவா அவ்வளவு மோசமானவளா என்ன?” – ஸ்ரீனிக்கு உடம்பு நடுங்கியது.

“ஹய்யோ… பத்து… என்னால முடியலையே..” என்றவன்,

“வீட்டுக்கு வந்திருப்பாடி. திரும்பப் போய்… வீட்டில ஒரு வாட்டி பாத்துட்டு வந்துடுவோமா?” என்றான் சிறு பிள்ளை போல்.

“ப்ளீஸ்ன்னா… கொஞ்சம் தூரம் போய்ப் பார்ப்போம். இல்லைன்னா போலீஸ்ல கம்ப்ளைன்ட் கொடுத்துடலாம்…” என பத்மா திட்டவட்டமாய் சொல்ல,

“போலீசா? பத்து… என்னடி சொல்றே? நம்ம பையனை… நிஜமாலுமே கடத்திட்டாளா?” என்றவனின் கைகளில், கார் நடுங்கியது.

“தெரியலையே!!!!!!!!!!!!!!!!!!!!!!!! சும்மா புலம்பாம… வண்டியை ஒட்டுங்கோ” என்று கண்ணை மூடிக் கொண்டு இரைந்தவள், கண்ணைத் திறந்து பார்த்தபோது, அவளது பார்வை நிலைக்குத்தி நின்றது.

கண்கள்… அகன்று திறந்திருக்க,

அதிர்ச்சி என்ற உணர்ச்சி அதில் அப்பியிருக்க,

மூக்கு விடைத்திருக்க,

மூச்சு வருவதும் போவதும் தெரியாமல் ஓரிடத்தில் சிக்கி நிற்க,

வாயை “ஆஅ….”வென்று திறந்திருக்க,

உடம்பின் ஓரோர் அணுவும் தன் ஓட்டத்தை நிறுத்தியிருக்க,

நெஞ்சம் தன் துடிப்பை மின்னலுக்கு ஈடாய் மாற்றிக் கொண்டிருக்க,

வலது கை உயர்ந்து, ஸ்ரீனியின் தோளை மெல்லத் தொட்டது.

“என்ன பத்து… கார் ஓட்டும் போது…” என்றவன், தன் தோளிலிருந்த அவளது கை சற்றே நகர்ந்து… ஆட்காட்டி விரல் விரிந்து… ஓரிடத்தைச் சுட்டிக் காட்டவும், அந்த இடத்தைக் கவனித்தான்.

கவனித்தவனின் பார்வை உறைந்து நிற்க, கால்கள் பிரேக்கை கிரீச்சிட்டு அடித்தன.

உலகமே தன் இயக்கத்தை நிறுத்தியது போல், அகிலமும் நின்று போனது இருவருக்கும்.

பத்மாவின் விரல் காட்டிய திசையும், ஸ்ரீனியின் பார்வை நிலைக்குத்திய இடமும் ஒன்றாய் சங்கமிக்க, இருவரது சங்கமத்தில் உருவான வேதாந்த்தை, கையில் வைத்தப்படி பிச்சை எடுத்துக் கொண்டிருந்தாள் ஒருத்தி!

“உறவோவியம்” – அத்தியாயம் 13

தங்கள் குழந்தை, நடு ரோட்டில்… அழுக்குச் சட்டையுடன்… வீல் வீலென்று கத்திக் கொண்டு… பசியில் வாடி வதங்கி… தூசியின் மத்தியில்

பிச்சை எடுத்துக் கொண்டிருப்பதைக் காண, எந்தப் பெற்றோருக்குத் தான் சகிக்கும்!?

தினம் தினம், நூறு ரூபாய் சம்பாதிக்கும் ஒரு கூலித் தொழிலாளி கூட, தன் குழந்தையைப் பிச்சை எடுக்க விட்டு, தன் வயிற்றுப்பாட்டை நிறைவு செய்து கொள்ள மாட்டான்.

குடிப்பது கூழானாலும்… கஞ்சியானாலும், தன் குழந்தை பசியில் வாடுவதை எந்தவொரு “நல்ல” மனிதனும் விரும்புவதில்லை.

தான் உண்ணாவிட்டாலும், தன் குழந்தைகள் வயிறு நிறைய உண்ண வேண்டும் என்பதற்காகவே, வீட்டு வேலை செய்யும் பெண்கள் எத்தனை ஆயிரம் பேரோ!

தன் பெண்ணோ… பிள்ளையோ, நன்றாக படித்து… பட்டம் பெற வேண்டும் என்பதற்காக, முதுகு ஓடிய உழைக்கும் மனிதர்கள் ஆயிரம் ஆயிரம்!

ஒரு புள்ளியில், பணம் இருக்கிறதோ இல்லையோ… குழந்தையின் வாழ்வை மையப்படுத்தியே தான், இந்த உலக மனிதர்களின் வாழ்க்கை சுழல்கிறது!

“நான்தான் கஷ்டப்பட்டேன். என் குழந்தையேனும் நன்றாக இருக்க வேண்டும்” என்ற உந்துதலே, பலரை உழைக்க வைக்கிறது. சம்பாதிக்க வைக்கிறது. முக்கியமாய், வாழ வைக்கிறது.

அப்படியிருக்கையில், வாழ்க்கையில் உயர்ந்த நிலையில் இருக்கிறோம் என்ற எண்ணம் கொண்டிருந்த பத்மாவிற்கும்… ஸ்ரீனிக்கும், தங்கள் குழந்தை பிச்சை எடுப்பதைக் காண்கையில் எவ்வளவு வேதனையாக இருந்திருக்கும்!?

வேதனை என்பது அங்கே சிறிய வார்த்தையாக மாறிப் போனது!

பெற்றோர் இருவரது நெஞ்சிலிருந்தும் ரத்தம் வடிந்தது!

“ராஜா”வைப் போல் வளர்க்க வேண்டும் என்றெண்ணிய தங்கள் பிள்ளையை, இப்படியொரு சூழ்நிலையில் பார்ப்பது அவர்களது உணர்வு மண்டலங்களை ஸ்தம்பித்துப் போக வைத்தது.

யாருக்காக… ஓடியோடி சம்பாதித்தார்களோ, யாரை “ராஜகுமாரன்” போல் வாழ வைக்க வேண்டும் என்று வெளிநாட்டில் போய் நாயாய் உழைத்தார்களோ, யாருக்காக பெரிய வீட்டைக் கட்டி வைத்தார்களோ… அந்தக் குழந்தை… ஹய்யோ!!!!

தங்கள் கண் முன்னே நடப்பதை, இருவராலுமே ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

“பெருமாளே!!!” – உள்ளிருக்கும் வேதனையில் ஸ்ரீனியால், வேறெதையும் பேச முடியவில்லை. கடவுளின் நாமம் கூட, வெகு சிரமப்பட்டு வெளியே வந்தது.

ஸ்ரீனியின் நிலை இதுவாக இருக்க, பத்மாவின் நிலை வேறு மாதிரியாக இருந்தது!

காலை முழுதும் பால் குடிக்காமல், பசியில் வாட வைத்து, வெயிலில்… வாகன இரைச்சலுக்கு நடுவே பிச்சை எடுத்ததால் தான், பிள்ளை இரவு நேரத்தில்… அவளிடம் அத்தனை நேரம் பால் குடித்திருக்கிறான் என்பது உரைக்க, நெஞ்சில் சுருக்கென்று ஒரு வலி பாய்ந்து விழ, மார்பில் சுரந்த பாலெல்லாம் கட்டிக் கொண்டது.

சொல்லொண்ணா வேதனையை தாயுள்ளம் சுரக்க, நெஞ்சத்தை ஈட்டிக் கொண்டு யாரோ குத்துவது போல், துவண்டு போனாள் பத்மாவதி.

பெற்றோர் இருவரும், தாங்கள் கண்ட காட்சியின் தாக்கத்தை விட்டு வெளியே வரமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தனர்.

அவர்கள் இருவருக்கும் அதிர்ச்சி… வேதனை… வலி எல்லாமே! ஆனால், பின்னால் நிற்கும் வாகன ஓட்டிகளுக்கு என்ன வந்தது!

நடு ரோட்டில் காரை நிறுத்திக் கொண்டு, பிரம்மைப்பிடித்தவன் போல் அமர்ந்திருக்கும் ஸ்ரீனிக்கு, பின்னிருந்து ஒலித்த ஹாரன் ஒலிகளோ,

“யோவ்… வண்டியை எடு” என்ற அர்த்தத்தில் சொல்லப் பட்ட வாக்கியங்களோ எதுவுமே கேட்கவில்லை.

அவனது மனம்… மூளை… உடல் என்று அனைத்துமே செயலிழந்து நின்றன.

“தன் மகனா… தன் மகனையா… தன் வேதுவையா?” என்று மனம், பிச்சைக்காரியின் கையிலிருந்த மகனை விட்டு நகர மறுத்துக் கொண்டிருக்கையில், காலும் கையும் எங்கனம் வேலை செய்யும்?!

ஜன நெருக்கடி மிகுந்த பெங்களூரில்… அதுவும் ஓரோர் சிக்னலிலும் ஐந்து நிமிடம்… பத்து நிமிடம் என்று நிற்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் மக்கள், இரண்டு நிமிடங்களுக்கும் மேலாய் வழியை மறித்துக் கொண்டு நிற்கும் ஒரு வாகனத்தைப் பொறுத்துக் கொள்வார்களா என்ன?

அவனவன், ஏகவசனத்தில் கத்தத் தொடங்க, இண்டு… இடுக்குகளில் நுழைந்து, ஸ்ரீனியின் கார் அருகே வந்த ஒரு பைக்காரன், கார் கண்ணாடியைத் தட்டி “சார்… சார்…” என்று இரைந்தான்.

ம்ஹூம்… ஸ்ரீனியின் நிலைக்குத்திய பார்வை, நிலைக்குத்திய பார்வையாகவே இருந்தது.

அவனுக்குப் பதிலாய், பத்மா சுதாரித்தாள்.

வேகம் கொண்டு, காரை விட்டு இறங்கியவள், தங்கள் காரை நோக்கி விரைந்து கொண்டிருந்த ட்ராபிக் இன்ஸ்பெக்டரை தள்ளிக் கொண்டு, ரோட்டின் மறு ஓரத்திற்கு ஓடினாள்.

அவள் ஓடிவருவதை கண்ட அந்தப் பிச்சைக்காரி பெண், தன்னை நோக்கித் தான் தாக்குதல் வருகிறது என்பதை உணர்ந்தவளாய், சாலையின் மறுபுறம் நோக்கிப் பாய்ந்தாள்.

“ஏய்…. என் புள்ளையைக் கொடுடி” என்று கத்தியபடி பத்மா அம்பென பாய, அங்கிருந்த பலரின் கவனம் முழுதும் பத்மாவின் மீது பாய்ந்தது.

அழுக்குத் துணி ஒன்றை தூளி போல் மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு, அதில் பிள்ளையைப் போட்டிருந்த அந்தப் பெண், பிள்ளையை இறுக அணைத்தபடி, மின்னலென பாய்ந்தாள்.

“ஏய்… நில்லு… என் குழந்தை…” என்று கத்திக் கொண்டு பத்மாவதி ஓட, சாலையின் மறுபக்கத்தில் இருந்த ஒட்டுக் கூடத்திலிருந்து ராணி ஓடி வந்தாள்.

வந்தவள், “ஹா…………………………………………………..” என்று அதிர்ந்து நிற்க,

“ஹெல்ப்! ஹெல்ப்! யாராவது வாங்க…” என்று தன்னை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களை நோக்கி, பத்மா கத்த,

நம் நாட்டில் மனிதாபிமானம் முழுதாய் மறைந்துவிடவில்லை என்பதை நிரூபிப்பது போல் சில இளைஞர்கள் வண்டியை விட்டு இறங்கி வந்தனர்.

“சார்… என் குழந்தை…. என் பேபி….. வேதும்மா… அவனை என்னண்ட கொடு….” என்று கத்தியபடி பத்மா பைத்தியம் போல் ஓட,

அந்தப் பிச்சைக்காரியும் தன்னால் முடிந்தமட்டும் வேகத்துடன் ஓடினாள்.

பத்மாவின் வார்த்தைகளின் அர்த்தம் முழுதாய் புரியவில்லை என்றாலும், குழந்தைக்காக ஓடுகிறாள் என்பது புரிய, அங்கிருந்த இளைஞர்களின் ஒருவன் வண்டியை எடுத்துக் கொண்டு, அந்தப் பிச்சைக்காரியைத் துரத்தினான்.

தாய்மொழியைத் தாண்டியதன்றோ தாயின் தவிப்பு!

பத்மா ஓட, கூடவே இரண்டு மூன்று பேரும் அவளுடன் ஓடினர்.

பைக் இளைஞன் அவர்களை முந்திக் கொண்டு, வண்டியில் வளைந்து நெளிந்து ஓட, கூடியிருந்து வேடிக்கை பார்த்த மக்களில் சிலர், அந்தப் பிச்சைக்காரியை பிடித்து நிறுத்தினர்.

அதற்குள், வண்டியில் சென்ற இளைஞன் அவளை அடைந்துவிட, தன் மார்போடு கட்டியிருந்த பிள்ளையை எடுத்து அவன் கையில் கொடுத்தவள், அவர்களது பிடியிலிருந்து விடுப்பட்டு ஓட முயன்றாள். அவளது செயல்களே, அவளது தப்பை எடுத்துக் காட்டிவிட, யாரும் அவளை விடுவதாய் இல்லை.

சரியாக நான்கே வினாடிகளில், அவளைப் பிடித்து வைத்திருந்த இடத்தை நெருங்கிய பத்மா, அந்த இளைஞனின் கையிலிருந்த பிள்ளையை வேகமாய் வாங்கினாள்.

“தேங்க்ஸ் சார்….” என்றபடி வாங்கியவள், அவனது முகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை.

அவளது உயிரின் ஓரோர் அணுவும்… தத்தம் கவனத்தை, அவளது அணுவிலிருந்து உருப்பெற்ற உயிரின் மீதே வைத்திருந்தன.

“வேது கண்ணா…………………………………………..” என்று கதறியவள், அவனை மார்போடு அணைத்துக் கொண்டு, “ஊஊஊஊஊஓ” வென்று கத்தித் துடித்தாள்.

“ஹய்யோ! என் குழந்தே…. பெருமாளே… என் குழந்தே…” என்று மருகிய தாயின் ஸ்பரிசத்தை உணர்ந்த அச்சிறு பிஞ்சு, “ந்ங்க்கா….. ங்கா….” என்று தாயோடு ஒட்டிக் கொண்டது.

குழந்தை பசித்து அழுதால் தான், நிறைய பிச்சை விழும் என்ற காரணத்தால், பிள்ளைக்குப் பாலே கொடுத்திருக்க மாட்டார்கள் போலும்.

பசியில் வாடியிருந்த அக்கன்று, தன் மார்போடு அணைத்துக் கொண்டு கதறிய தாயின் மார்பகங்களை நக்கியது.

அந்த நொடி…பத்மா உயிருடன் செத்துப் போனாள்!

“வேது… வேது… ” என்பதைத் தவிர அவளால் எதையுமே யோசிக்கவும் முடியவில்லை பேசவும் முடியவில்லை.

தன் வயிற்றில் உதித்த மணிமுத்தின் முகத்தில் முத்த மழை பொழிந்தவளுக்கு, அங்கம் அதிர்ந்தது.

உலகம், அந்த இடத்திலேயே தன் இயக்கத்தை நிறுத்திவிட்டு, தன்னை நோக்கி பரிகாசம் செய்வது போலிருந்தது அவளுக்கு.

காலையிலிருந்து எதையும் உண்டிராத பிள்ளையோ, தாயின் மார்பிலிருந்து தனக்கு ஏதேனும் உணவு கிடைக்காதா என்ற ஏக்கத்துடன், அவளது மார்புப்பக்க உடையை ஈரமாக்கிக் கொண்டிருந்தான்.

அங்கிருந்து, எந்தவொரு உணவும் வராமல் போகவே, அச்சின்னஞ்சிறு பிஞ்சு முகத்தை அண்ணாந்து, தாயைப் பார்த்தது.

“ங்கா…. ம்ம்ம்…..ஙாஆ..” என்று அவன் ஓசை எழுப்ப, பத்மாவின் மனதிலிருந்த ஆசையலைகள் அனைத்தும் வேரறுந்து போய்விட, “கண்ணா… பசிக்குதாடா… ராஜா? ஹய்யோ!!!!!!! அம்மா… பால் தரேன்டா” என்று பிள்ளையின் கன்னம் வருடியவளின் கண்ணிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வழிந்தோடியது.

மறைவிடம் தேடி நிமிர்ந்தபோது தான், தன்னைச் சுற்றி நடந்த களேபரமே அவள் கண்ணில் பட்டது.

பத்மா, வேதாந்தை நோக்கி ஓடிய வேளையில், ஸ்ரீனியை நோக்கி விரைந்திருந்தார் போக்குவரத்துக் காவலாளி.

பிரம்மைப் பிடித்தவன் போல் அமர்ந்திருந்தவனை, அவர் உலுக்கி எழுப்ப, பெரும் பிரளயத்தில் இருந்து வெளிவருபவன் போல் விழித்து எழுந்தவன், “ஹய்யோ!!!!!!!!!!!!!!!!” என்று முகத்தை மூடிக் கொண்டு அழுதான்.

காவலாளி என்ன இவனுக்கு அண்ணனா? அப்பனா? அவன் அழுவதைப் பார்த்து உருகுவதற்கு?!

“வண்டியை எடு” என்று கன்னடத்தில் இரைந்தார், அவர். நடு ரோட்டில் நின்ற ஸ்ரீனியின் வாகனத்தால் கிட்டதட்ட ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு ட்ராபிக் ஜாம் ஆகிவிட்டிருந்தது.

ஆனால், அவரது மிரட்டலோ…விரட்டலோ ஸ்ரீனியின் மனதில் பதியவே இல்லை.

“சார்… சார்… என் பையன் சார்… பிச்சை எடுக்க விட்டிருக்காங்க சார்…” என நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அவன் கதற,

“மொதல வண்டியை எடுய்யா… அப்புறம் பாக்கலாம்” என்ற அர்த்தத்தில், கத்தினார் அவர்.

ஸ்ரீனிக்குத் தான் உலகமே புரியவில்லையே. தன் உலகம் என்று அவன் எண்ணியிருந்த மகனை, பிச்சைக்காரத் தோற்றத்தில் கண்டவனுக்கு, என்ன செய்வது… என்ன பேசுவது என்றே தெரியவில்லை.

அவன் வாழ்வின் அஸ்திவாரமே, சுக்கு நூறாய் நொறுங்கிவிட்டது போலிருந்தது அவனுக்கு.

அந்த நேரம், பத்மாவதியும் வேறு சிலரும் குழந்தையை நோக்கி ஓடிக் கொண்டிருந்த நேரம்.

“சார்… என் குழந்த சார்… ” என்று கதறியவன், அங்கிருந்து நகர முற்பட,

“யோவ்… வண்டியை மொதல ஓரமா நிறுத்திட்டு போய்யா” – கன்னடத்தில் கன்னாபின்னாவென்று கத்தத் தொடங்கினார் காவலாளி.

சட்டென, அங்கிருந்த ஒருவர் முன்வந்து, “சாவியைக் கொடுங்க சார். நான் வண்டியை அந்தப் பக்கம் நிறுத்துறேன். நீங்க போய்… குழந்தையைப் பாருங்க” என்றார் ஸ்ரீனியின் தோள் தட்டி.

“நீங்க போய்… குழந்தையைப் பாருங்க… ” என்று அவரது வாக்கியத்தில், பிள்ளையைப் பார்க்கச் செல்லவேண்டும் என்பதே அவனுக்கு உரைத்தது.

சூழ்நிலையின் தாக்கத்தில் மரத்துப் போயிருந்த மூளை, அப்போது தான் வேலை செய்யவே ஆரம்பித்தது.

வேகமாய் பத்மாவும் குழந்தையும் நின்றிருந்த இடத்தை நோக்கி ஓடியவனின் கண்களில், ஒட்டு வீடு ஒன்றிலிருந்து ராணி எட்டிப் பார்ப்பது, “ஹய்யோ” என்ற அலறலுடன் அவள் வேறு பக்கம் ஓடத் துடிப்பதும் கண்ணில் பட்டது.

குழந்தையைப் பார்ப்பது முக்கியமாய் பட்டபோதும், ராணியைப் பிடிப்பது அதை விட முக்கியமாய் பட, ராணி ஓடிய பக்கமாய் விரைந்தான் ஸ்ரீனிவாசன்.

“ஏய்… நில்லு… உன்னை நம்பின பாவத்துக்கு எவ்வளவு பெரிய துரோகம் செஞ்சுட்டே” என்று கத்திக் கொண்டே ஓடினான் ஸ்ரீனிவாசன்.

பிள்ளையை நோக்கி ஓடிய பத்மாவிற்குக் கிடைத்த உதவிக்கரம், ஸ்ரீனிக்குக் கிடைக்கவில்லை.

அந்த நேரத்தில், பிள்ளையை வைத்திருக்கும் பிச்சைக்காரி மீதும்... அவர்களைத் துரத்திச் செல்லும் பிள்ளை மீதுமே அனைவரது கண்களும் இருக்க, ஸ்ரீனிவசனையோ ராணியையோ கவனித்தார் யாருமில்லை.

யாரது உதவியும் இல்லையென்றாலும், ஸ்ரீனி ராணியைத் துரத்துவதை நிறுத்தவில்லை.

“ஏய்... நில்லுடி...படுபாவி” என்று கத்தியபடி, தன்னால் முடிந்தமட்டும் வேகமாய் ஓடினான்.

ஐ.டி வேலையினால் எப்போதும் உட்கார்ந்தே இருந்த காரணத்தாலும், வேலை... வேலை என்று வேலையின் பின்னே ஓடியதால் உடற்பயிற்சி செய்யாத காரணத்தாலும், நினைத்ததை... நினைத்த நேரத்திலெல்லாம் உண்ட காரணத்தினாலும்... உடம்பு பொது பொதுவென்று ஊதிப் போயிருந்தது ஸ்ரீனிக்கு.

சோம்பிப் போன உடம்பைத் தூக்கிக் கொண்டு ஓட முடியாமல் ஓடியபோதும், தன் குழந்தையை இப்படியொரு நிலைக்கு ஆளாக்கிவிட்டாளே என்ற கோபத்தையே புத்துணர்ச்சி பானமாக்கி, உண்ட வீட்டிற்கு ரெண்டகம் செய்த துரோகியை நோக்கி ஓடினான் ஸ்ரீனி.

பிள்ளையின் மேலிருந்த அபரீதமான பாசம், அவனுக்காக... அவனது நல்வாழ்விற்காக என்று ஓடி ஓடி பணம் சேர்த்த வேகம் என்று அவனை வீறு கொண்டு ஓட வைத்தது.

அவனுக்கும்... ராணிக்கும் சிற்சில அடிகள் தூரமே என்றிருந்த நிலை அது.

“ஏய்... மரியாதையா நின்னுடு...” என்று கத்தியவன், ராணியை நெருங்க ஓரடி இருந்த சமயம், எங்கிருந்தோ வந்த ஆட்டோ ஒன்று அவனை உரசிச் சென்றது.

கண்ணிமைக்கும் நேரத்திற்குள், அதிலிருந்து எட்டிப் பார்த்த ஒருவன், உருட்டுக்கட்டையை ஸ்ரீனியை ஓங்கி வீசினான்.

என்ன நடக்கிறது என்பதை உணர்ந்து, ஸ்ரீனி அந்த உருட்டுக்கட்டையின் அடியிலிருந்து தப்பிக்கும் முன்னர், அந்த உருட்டுக்கட்டை அவனது நெற்றியைப் பதம் பார்க்க, “ஆஆஆஆஆஆஆஆஅ” என்ற அலறலுடன் கீழே சரிந்தான் ஸ்ரீனிவாசன்.

அவன் தாக்கப்பட்ட இரண்டாவது வினாடி, ராணி அந்த ஆட்டோவில் ஏறிப் பறந்துவிட்டாள்!

“உறவோவியம்” – அத்தியாயம் 14

களேபரம் நடந்த இடம், நான்கு ரோடுகள் ஒன்றாய் சேரும் ஓர் சந்திப்பு. ‘சுத்த’ தமிழில் சொல்வதென்றால், “ஜங்க்ஷன்”.

பெங்களூரில் “சில்க் போர்டு” தாண்டிவிட்டாலே, அதை ஹைவே ஆக்கிவிடுவார்கள். ஆதலால், அங்கே ஒரு ரோடு இருக்கிறதென்றால்… அதற்கொரு சர்வீஸ் ரோடு இருக்கும். ஆகையால், போக வர என்று இரண்டு பிரதான சாலைகள். இரு மருங்கிலும் சர்வீஸ் சாலைகள். இந்த சாலைகள் நீள வாக்கில் ஓட, அந்த நான்கு சாலை சந்திப்பின் மற்ற இரண்டு சாலைகள், அகல வாக்கில் ஓடின.

ஒரு பக்க பிரதான சாலையில் வந்து கொண்டிருக்கையில் தான், அந்த சிக்னலில் வேதாந்தை வைத்துக் கொண்டு பிச்சை எடுப்பதைக் கவனித்தார்கள் பத்மாவும் – ஸ்ரீனியும்.

பிள்ளையைப் பிடிக்க பத்மா ஓடியது… அகல வாக்கில் உள்ள சாலையில்.

ராணியைப் பிடிக்க ஸ்ரீனி ஓடியது… நீள வாக்கில் உள்ள மற்றொரு பிரதான சாலையின் அருகே உள்ள சர்வீஸ் ரோட்டில்.

இதனால் சொல்லப்படுவது என்னவென்றால், ஸ்ரீனி அடிப்பட்டு கீழே விழுந்த விஷயம், பத்மாவிற்கு தெரியாது என்பதே! ஹப்பா!!

தன் மார்ப்புப்பக்க உடையை, பிள்ளை ஈர்மாக்குவதைக் காணும் தாயின் உள்ளம் கல்லாய் இருந்தால் கூட, கண்ணீராய் கரைந்து விடும். இங்கே பத்மா ஒன்றும் கல்லில்லையே! அலங்காரக் கண்ணாடி அவ்வளவே! அந்தக் கண்ணாடியிலிருந்த மினுமினுப்பு எல்லாம், வேதாந்தின் “ங்கா…”வில் தண்ணீர் ஊற்றப்பட்ட வண்ணமாய்… கரைந்தோடியது.

பிள்ளை… அவளது சுடிதாரைப் பற்றி இழுத்தபடி, “ங்கா… ங்கா…” என்று அழ அழ, பத்மா வீழ்ந்தாள்.

அதுவும், கையைக் கொண்டு வந்து… அவள் மார்பகத்தில் வைத்து… “ஹ்ஹ்ஹ்ஹ்ஹ்ம்” என்று பிள்ளை கேட்ட வினாடி, அந்தத் தாயின் உள்ளம் தவிப்பில் துவண்டு போனது.

தான், “ங்கா…” என்று கேட்டபின்னரும், சுடிதாரைப் பிடித்து இழுத்த பின்னரும், அம்மாவிடமிருந்து பால் வராமல் போகவே, பிள்ளை சிணுங்கத் தொடங்கினான்.

“ஈஈ….இஊஊஉ” என்று அவன் சிணுங்கத் தொடங்க, பத்மாவின் கண்கள் மறைவிடம் தேடி சுழன்றன.

பைக்கில் வந்து, அந்தப் பிச்சைக்காரியைப் பிடிக்க உதவி செய்தானே ஒரு இளைஞன், “குழந்தைக்கு பசிக்கறது போல. அதோ… அங்க… சின்னதா ஒரு குடிசை வீடு தெரியறது. அதான் மறைவா இருக்கு… அங்க போய் பால் கொடுக்கிறேளா??” எனக் கேட்டான், அங்கிருந்த சிறு ஓலை வீட்டைக் காட்டி.

அவனுக்கு நன்றி கூடச் சொல்லத் தோன்றாமல், பிள்ளையை மார்போடு அணைத்துக் கொண்டு, அங்கே ஓடினாள் பத்மா.

அது ஒரு சாப்பாட்டு கடை. அங்கே நடந்த கலவரத்தை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களுள், அந்தக் கடையின் முதலாளியம்மாவும் ஒருவர் என்பதாலும், பிள்ளை பசியால் அழுவதைக் காணப் பொறுக்காமலும், வெளியே போடப்பட்டிருந்த பெஞ்சில் முதுகு காட்டி அமரப் போன பத்மாவை, உள்ளே வந்து அமரும் படி சொன்னார்.

அவளும், பிள்ளையைத் தூக்கிக் கொண்டு உள்ளே விரைந்தாள்.

அலுவலகத்திலிருந்து விருந்துக்குச் சென்றதால், அனார்க்கலி சுடிதார் ஒன்றை அணிந்திருந்தாள் பத்மா. உயரமாய் இருப்பவர்களுக்கு… முழங்கால் தாண்டி… இரண்டு இன்ச்சும், குட்டையாய் இருப்பவர்களுக்கு… நைட்டி போலவே இருக்குமே, அப்படியாப்பட்ட சுடிதார் அது. ஃபிரில்…

ஃபிரில்லாக… முழங்கால் தாண்டி… அறையடிக்குத் தொங்கிக் கொண்டிருந்தது. அதுவும், மார்புப்பக்கம் ஏகப்பட்ட ஜமிக்கி வேலை வேறு.

அந்த சுடிதாரைப் போடும்போது உண்டாகும் பரபரப்பு… படபடப்பு, அனைவரும் தன்னை ஒருமுறையேனும் திரும்பிப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம், எல்லாமே குழந்தை பாலுக்காக அவளையே ஏக்கமாய் பார்த்துக் கொண்டிருந்ததில் உடைந்து நொறுங்கிப் போனது.

“வீல்… வீல்” என்று அழுதாலும், தன் வயிற்றுக்கான உணவைக் கொடுக்கக் கூடியவள் இவள் மட்டுமே என்ற எண்ணத்தில், தாயின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த செல்வமகனின் பார்வையில், அவளது செல்வச் செழிப்பெல்லாம் சின்னாபின்னமாய் சிதறிப் போனது.

“ச்சே… இந்த டிரஸ் வேற… ” என்றவளுக்கு, அழுகையையும் ஆத்திரத்தையும் விட, குற்ற உணர்ச்சியே மேலோங்கி இருக்க, அந்த உடையை தளர்த்திக் கொண்டு, பிள்ளைக்குப் பால் கொடுக்க பெரும்பாடு பட்டாள் பத்மாவதி.

“ஹய்யோ…. இது வேற… ” என்றவளால், அந்த உடையைத் தளர்த்தவே முடியவில்லை. உடலில் எழில் வளைவுகளை எடுத்துக் காட்டவென, சிக்கென வாங்கியிருந்த உடையை இரண்டு இன்ச் கூட தகர்த்த முடியாமல் போகவே, அழுகையாய் வந்தது பத்மாவதிக்கு.

“ஹய்யோ… கொழந்த அழறானே… என்னால பால் கூடக் கொடுக்க முடியலையே” என கோபமும் அழுகையுமாய் வர,

தாயின் தவிப்பை உயர்த்தும் வண்ணம், “ஆஆஆ…. ஆஆ….” எனக் கத்தத் தொடங்கினான் பிள்ளை.

“இருடா… கண்ணா…ஒரே நிமிஷம்” என்று கையைக் குவித்து, அவனிடம் கெஞ்சியவள், பெரும்பாடு பட்டு உடையைத் தளர்த்தி, பிள்ளையைத் தூக்கி மடியில் போட்டுக் கொண்டு, அவனுக்குப் பால் புகட்டத் தொடங்கினாள்.

காலை ஏழரை மணிக்கு பத்மாவிடம் குடித்திருந்த பாலிற்குப் பின்னர், பிள்ளையின் வயிற்றில் ஒன்றுமே இருக்கவில்லை.

பிள்ளை பசியில் அழுதால் தானே, பிச்சை பிரமாதமாய் விழும்.

ஒட்டிப் போயிருந்த பிள்ளையின் வயிற்றைப் பார்த்த பத்மாவிற்கு, இன்றைய தினம் விருந்தில் உண்ட பதர்த்தங்களின் நினைவு வந்து, வயிற்றைப் பிரட்டிக் கொண்டு வந்தது.

“ஹய்யோ… என் குழந்தையைப் பட்டினி போட்டுட்டு… நா மட்டும் சாப்பிட்டு இருக்கேனே…”

“எத்தனை நாள்… எத்தனை மணி நேரம் இப்படி பாலுக்காக அழுதானோ?”

“ஹய்யோ பெருமாளே! இந்தப் பாவத்தை எங்கே கொண்டே தொலைப்பேன்…” என்று அரற்றிய மனதிலிருந்து ரத்தமே கண்ணீராய் வடிந்தது.

மடியில் போட்டு, தாய் மாரைத் தந்த வினாடி, அந்தச் சின்னஞ்சிறு பாலகன், தன் சிறு மலர் உதடுகளால்… பாலைக் குடிக்க ஆரம்பித்தான்.

பிள்ளை பால் குடித்த வேகத்தைக் கண்ட பத்மாவிற்கு, “பிச்சைக்காரனுக்கு பால் சோறு கிடைத்த கதையாக…” என்ற வாசகம் எக்குதப்பாக நினைவு வர, தொண்டை விடைத்து… தலையிலும் மார்பிலும் மாறி மாறி அடித்துக் கொண்டு, “ஒ…ஊஒ…” என்று கதறி அழுதாள்.

தான் அழுத அழுகையில், அந்த கடையை நடத்தும் பெண்மணி உள்ளே ஓடிவந்ததைக் கூட உணராமல், “ஹய்யோ… கண்ணா… உன்னை ராஜா மாதிரி வளக்கணும்ன்னு நினைச்சிண்டு இருந்தோமே… இப்படி நடுரோட்டில… பசியோட… ஹய்யோ… என்னை மன்னிச்சிடுடா… கண்ணா…” என்று அவள் கதறித் துடிக்க,

அந்த முதிய பெண்மணியின் கரம், ஆதரவாய் பத்மாவின் தோளில் விழுந்தது.

திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள், பத்மாவதி.

“ஹாலு கொடம்மா… மகு அல்லலுலே…” என மென்மையாய் வற்புறுத்தியவர், “கூகல்லி யம்மா…!” என்றார் அவளது கன்னத்தை லேசாய் துடைத்துவிட்டு.

அந்த நொடி… பத்மாவதியின் இமைக்கு வெளியே அப்பெண்மணி நின்றாலும், இமைக்குள்ளே அவளது தாயின் பிம்பம் மின்னியது!

“அம்மம்மம்மாஆஆஆஆஆஆஆஆஆ” – உள்ளமும் உடலும் ஒருங்கே குலுங்கிப் போனது.

அதில், பிள்ளை தன் பாலிற்கான ஆதாரத்தை இழந்துவிட, “ஹ்ஹ்ஹ்ஹ்ஹாஅ…..” என்று அழ ஆரம்பித்தது.

சட்டென சுயஉணர்வு பெற்றவளாய், புறங்கையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு, “இல்லடா கண்ணா… இல்ல…அழாத… இந்த குடி” என்று பிள்ளையைச் சரியாய் வைத்துக் கொண்டாள் பத்மாவதி.

வேதாந்த் அவளிடமிருந்து பருகிய ஓரோர் சொட்டு பாலும், பத்மாவிற்குப் பாடமாய் அமைந்தது.

அச்சிறு உருவம், தன் பலம் முழுதையும் திரட்டி, தாயின் மார்புக்காம்புகளிலிருந்து பாலை உறுஞ்ச… உறுஞ்ச, பத்மாவதியின் உற்சாகம் முழுதும் உறுத்தலாய் மாறிப் போனது.

“சப்… சப்…” என்ற சத்தத்துடன், ஆனந்தமாய் அவன் குடித்த ஓரோர் சொட்டுப் பாலும், “சப்…சப்” என்று அவளது கன்னத்தில் அடியாய் இறங்கியது!

ஓரோர் அடியின் முடிவிலும், “நீயெல்லாம் ஒரு அம்மா…” என்ற கேள்வி மலையாய் எழுந்து, “தூ…” என்று முகத்திலேயே துப்பியது.

அவளது கர்வம்… அலட்சியம்… தன்னிடம் என்ன இல்லை என்ற அகங்காரம்… நான் பணத்தால் உயர்ந்தவள் என்ற இறுமாப்பு… வீடும் காரும் பேங்க் பாலன்சும் தான் வாழ்க்கையை நிர்ணயிக்கும் பொருட்கள் என்ற பணத்தாசை எல்லாமே சுக்குநூறாக உடைந்து போயின.

தன் வேலை தான் முக்கியம் என்று ஓடிய வேளையில், வேளாவேளைக்கு உணவின்றி தவித்திருக்கிறான் பிள்ளை என்ற விஷயம், அவளை முற்றிலும் நிலைகுலையச் செய்தது.

பிற்காலத்தில் அவன் ஆசைப்பட்ட படிப்பைப் படிக்க வேண்டும் என்றெண்ணிய தான், நிகழ்காலத்தில் அவன் ஒழுங்காக உண்ண வேண்டும் என்றெண்ணவில்லையே என்று உள்ளம் உடைந்து போனாள், அந்தத் தாய்.

சுவற்றையே அழித்துவிட்டு, சித்திரத்திற்கான வண்ணங்களை சேகரிக்க ஓடிய தன் மடத்தனத்தை எண்ணி, தலையில் அடித்துக் கொண்டு, கதறினாள் பத்மா.

ஓரளவிற்கு வயிறு நிறையும் வரை, தாயை விடாது பற்றிக் கொண்டிருந்த சின்னக் கண்ணன், கால் வயிறு நிறைந்ததும், கையைக் காலை ஆட்டி... தன் லீலைகளில் இறங்கினான். ஆனால், பாலமுதத்தை மட்டும் விடவில்லை!

பசியால் காந்திய வயிறு சாந்தமடையும் வரையில், பால் மட்டுமே குறியாக இருந்த சின்னப்பையனுக்கு, இப்போது பாலுடன் சேர்ந்து விளையாட்டும் சேர்ந்து கொண்டது.

தனக்கான உணவை உண்டு கொண்டே, கால் இரண்டையும் உதைப்பதும்... கையை மேலே தூக்கி ஆட்டுவதுமாய் இருந்தான் அவன்.

அப்படி ஆட்டியதில், ஒருமுறை இடது கால் தொடையை விட்டு நழுவி, கீழே சரிய, “சச்சு... வேதும்மா... ஒழுங்கா குடி ராஜா...” என்றபடி, பிள்ளையைத் தூக்கி மடியில் போட்டுக் கொண்டாள் பத்மாவதி.

காலால் விளையாடி முடித்தவன், கையை ஆட்டித் தன் விளையாட்டைத் தொடங்கினான்.

தாயின் உடைக்குள் மறைந்திருந்த கள்வனுக்கு, ஏதோ அவளது கண்ணை விட்டு மறைந்துவிட்ட குஷி போலும்.

யசோதையை ஏமாற்றும் மாயக்கண்ணனாய் மாறி, சின்னச் சின்னக் குறும்புகள் செய்ய ஆரம்பித்தான்.

“வேது… விளையாடாத ராஜா… பால் போதுமா? அம்மா எழுந்துக்கட்டா?” என்று பத்மா, செல்ல அதட்டலுடன் கேட்க,

தாயின் அதட்டலைப் புரிந்து கொண்டவன் போல், வேகவேகமாய் இரண்டு இழு… பாலை இழுத்துக் கொண்டான்.

கண்ணீர் கரை புரண்டு ஓடியது, பத்மாவிற்கு.

“இந்தச் சின்னக் கண்ணனை… யாரையோ நம்பித் தவிக்க விட்டு விட்டோமே?” என மனம் வெம்பியது.

பசிக்கும் போதெல்லாம், என்னைத் தேடியிருப்பானோ! இல்லையென்றதும், அழுதிருப்பானோ!? அழுகிறான் என்றதும் அடித்திருப்பார்களோ! ஹய்யோ!!! பெருமாளே!!! என்னவொரு பாவம் செய்துவிட்டேன்!!

கண் கலங்கிய அந்த வேளையில், அவளது மைந்தன்… ஒரு வேலை செய்தான்.

தன் பிஞ்சுக் கைகளையாட்டி… அவளது தாலிக் கொடியைப் பற்றினான்.

பற்றியவன், அதை தனக்கிருந்த திக்கிளியூண்டு பலத்தைக் கூட்டி, இழுக்க, பத்மாவின் மூச்சு நின்று போனது!

“ஹய்யோ ஸ்ரீனி!? ஸ்ரீனி எங்கே?” – இப்போது தான், கணவனின் நினைப்பே அவளுக்கு வந்தது.

தன்னை விட… மகனை இந்தக் கோலத்தில் பார்த்ததில், மிகுந்த அதிர்ச்சியடைந்த கணவனைக் காணவில்லை என்பதே அவளுக்கு அப்போது தான் உரைத்தது.

மகன்… மகன் என்று உயிருக்கு உயிராய் மகனை எண்ணியவன், இவ்வளவு நேரம் வரை… மகனைப் பார்க்க வராமல் இருக்கிறான் என்றால்??!!!

ஹய்யோ!! ஸ்ரீனி!!! என்று மனம் பதறியது! ஆனாலும், துவண்டு கிடக்கும் பிள்ளையை விட மனம்வரவில்லை! ஆனாலும்….!!!

இரண்டு பக்கமும் கிடந்து மனம் தத்தளித்து தடுமாறியது.

ஒரு முடிவுக்கு வந்தவளாய், பிள்ளையைத் தன் உடைக்குள் இருந்து வெளியே கொண்டு வந்தாள். அவன் “ம்ம்ம்ம்…. ங்கா…ம்ம்ம்ம்” என்று சிணுங்க, அவனது நெற்றியில் ஒரு சின்ன முத்தம் வைத்து, “அப்பாவைப் பார்த்துட்டு வந்து… தரேன்டா ராஜா” என அவனுக்கு சமாதனம் சொன்னவள், உடையைச் சரி செய்து கொண்டு, அந்த கடையை விட்டு வெளியே வந்தாள்.

வெளியே வந்து பார்த்தால், அங்கே ஒரு பெரிய கலவரம் கடந்த சுவடே இல்லை.

வாகனங்கள் சர்…சர் என்று சென்று கொண்டிருக்க, மக்கள் தங்கள் பணி நோக்கி விரைந்து கொண்டிருக்க, தள்ளு வண்டியில் வியாபாரம் செய்பவர்கள் கூவிக் கொண்டிருக்க, தெரு நாய்கள் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருக்க, சற்று நேரம் முன்னர் இந்த இடத்திலா இருந்தோம் என விழித்தாள் பத்மாவதி.

ஆனால், ஸ்ரீனி அங்கே?

சுற்றுப்புறம் சுரமிழந்து போக, மாலை சூடியவனின் நினைவு மனதைத் திருப்பியது.

அவள் கண்களைச் சுழட்டி, கணவனைத் தேடும்போதே, அவளுக்கு உதவி செய்தானே ஒரு இளைஞன் அவன் அவளருகே விரைந்து வந்தான்.

“உங்க ஆத்துக்காரரை தேட்றேளா? அவருக்கு அடி பட்டிருக்கு… பக்கத்தில இருக்க ஹாஸ்பிடல்ல சேர்த்திருக்கோம். போய் பாக்கலாம். வரேளா?” என நேரடியாக விஷயத்திற்கு வந்தான்.

“அடி பட்டிருக்கா? எப்படி?? ஹய்யோ… பெருமாளே!” என அவளது பதட்டம் அதிகரிக்கவும்,

“வாங்கோ… வண்டில போயிண்டே பேசலாம். அங்க… போய்ப் பார்த்தா… தேவலாம் போல இருக்கும்” என அவளை, அங்கே நின்றிருந்த அவர்களது காரில் அழைத்துக் கொண்டு, மருத்துவமனையை நோக்கி விரைந்தான்.

போகும் வழியில், நடந்தது முழுதையும் அவன் விளக்க, விக்கி… விக்கி அழுவதைத் தவிர பத்மாவதியால் எதுவுமே செய்ய முடியவில்லை.

காரில் இப்படியென்றால், மருத்துவமனைக்குச் சென்றதும்… கிட்டத்தட்ட நான்கு மணி நேரம், கணவனைக் கண்ணிலேயே காட்டாமல்… இந்த டெஸ்ட்… அந்த டெஸ்ட் என்று அலைக்கழிக்கவும், பத்மாவதியின் பயம் கூடிப் போனது.

அந்த ஆட்டோகாரன் அடித்த வேகத்தில், தலையில் பலமாய் அடிப்பட்டிருந்தது ஸ்ரீநிவாசனுக்கு. அது மட்டுமில்லாமல், அடியின் வேகத்தால்… தடுமாறி கீழே விழுந்தவனின் பின்னந்தலையிலும் அடி பலமாய் பட்டிருக்க, முதுகு தண்டிலும் பலத்த அடி என்றார்கள்.

நினைவு தப்பி விட்டிருந்தது.

எப்போது கேட்டாலும், “we can tell anything positive only after a hour” என்றே நான்கு மணி நேரத்தை அவர்கள் கடத்திவிட, பத்மாவதி பயத்தில் உறைந்து போனாள்.

இந்த நாளின் நூறாவது முறையாக, “பெருமாளே!!!” என்று எம்பெருமானை அவன் வேண்ட, நூற்றியோராவது “பெருமாளே!!” என்ற நாமம் வெளிவருகையில், அந்த மருத்துவமனையின் வரவேற்பு பகுதியில் நுழைந்தார் – ராஜகோபாலன். பாலாஜி மற்றும் மாலதியுடன்

வரவேற்பறையில் நடந்த சலசலப்பை உணராமல், கையில் குழந்தையுடன் ஸ்ரீனி இருந்த அறைவாயிலிலேயே அமர்ந்திருந்தாள் பத்மாவதி.

தனி ஒருத்தியாக, இந்த சூழ்நிலையை எப்படி கையாளப் போகிறோம் என்ற பயம் அவளை மென்று தின்றது.

கையில் குழந்தை... படுக்கையில் கணவன்... சுற்றியாருமில்லாத அவலம்... இது நாள் வரை வண்ணமயமாய் தெரிந்த உலகம், இப்போது வெறிச்சென்று இருந்தது.

அவளது நண்பர்களுக்கு அழைக்கலாம் தான். அழைத்தால் வருவார்கள் தான். ஆனால், நடந்த அனைத்தையும் விளக்கும் தைரியம் பத்மாவதிக்கு இல்லை. தைரியம் என்பதை விடவும், என் பிள்ளை பிச்சை எடுப்பதைக் கண்டு... அதைத் தடுக்கச் சென்ற என் கணவனுக்கு அடி பட்டுவிட்டது என்பதைக் கூற அவமானமாய் இருந்தது, அவளுக்கு.

மருத்துவர்கள், இங்கும் அங்கும் வேகமாய் நடக்க... பத்மாவதியின் நெஞ்சு மின்னல் வேகத்தில் அடித்துக் கொள்ளத் தொடங்கியது.

உலகத்தில் உள்ள ஒட்டுமொத்த தப்பையும் செய்துவிட்டோம் என மனம் குற்ற உணர்வில் கொஞ்சம்... கொஞ்சமாய் செத்தது.

கள்ளம் கபடமற்ற சின்னக் கண்ணனாய் கையினில் உறங்கும் மகனையும்... சுயநினைவின்றி படுக்கையில் கிடக்கும் கணவனையும் பார்க்கையில், குற்ற உணர்ச்சி இமையமென உயர்ந்துநின்றதுடன் மட்டுமல்லாமல், "என்ன செய்யப் போகிறோம்... என்ன செய்யப் போகிறோம்" என்ற தவிப்பை அவளுள் ஆழமாய் விதைத்தது.

Sitalakshmi's

இதுநாள் வரையில், உறவில்லா உலகத்தில் வாழ்ந்துவிடலாம் என்று இறுமாப்பு கொண்டிருந்த நெஞ்சம், மன ஆறுதலுக்கேனும் யாராவது ஒரு உறவு துணை வாராதா என்று ஏங்க ஆரம்பித்தது.

எந்தவொரு தாயும் காணக் கூடாத நிலையில் மகனைப் பார்த்தபோதே உடைந்து போயிருந்த மனம், இப்போது கணவனையும் கவலைக்கிடமாய் காண்கையில், முற்றிலுமாய் தன் தப்பை உணர்ந்தது.

பெரியவர்களின் ஆசியுடன் திருமணம் செய்து... அவர்களின் ஆதரவுடன் குடும்பம் நடத்தி... அவர்களது வழிகாட்டலில் குழந்தையை வளர்த்திருந்தால், இப்படியொரு நிலைமை தங்களுக்கு வந்திருக்காது என்பதை... இவ்வளவு வலிகள் அனுபவித்த பின்னர் உணரவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டாள் பத்மாவதி.

உலகத்திலேயே தாயின் மடியை விட பாதுகாப்பான இடம் வேறில்லை என்பதைப் போல், அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த மகனை மார்போடு அள்ளி அனைத்துக் கொண்டவள், "ஹய்யோ!!!! தப்பு பண்ணிட்டினே... பெருமாளே!!!" என வாய்விட்டே அரற்றியபோது,

"பத்மாவதி!!!" என்ற அழைப்பு, அவளைத் திடுக்கிட்டு நிமிரச் செய்தது.

"பத்மாவதி" என்ற குரல் கேட்பதற்கும், அவள் நிமிர்வதற்குமான அரை செகண்ட் இடைவெளியில், மனம் காத தூரம் ஓடிவிட்டு வந்தது.

"இது... இது... ஸ்ரீனியோட தாத்தா குரல் இல்ல?"

"அவர் எப்படி இங்க?"

"எப்படியா இருந்தாலும், எனக்கொரு துணையை அனுப்பி வச்சதுக்கு... நன்றி பெருமாளே!" - கடகடவென ஓடிய எண்ணங்களின் ஊடே, தலையை நிமிர்ந்து பார்த்தாள் பத்மாவதி.

அவர்கள் வீட்டுத் தலைவர், கண்ணில் கனிவுடன் அங்கே நின்றிருந்தார்.

வாய் தானாக "தாத்தா" என்று உதிர்க்க,

கைகள் தானாக உயர்ந்து மார்பில் துவண்டிருந்த பிள்ளையை அவரிடம் நீட்டின.

சுகமாய் உறங்கிக் கொண்டிருந்த பிள்ளை... தாய் தன்னை மார்போடு அணைத்துக் கொண்டு அழத் தொடங்கியதுமே, தூக்கம் கலைந்து, "ஹ்ஹ்ஹ்ம்ம்ம்...." என்று சிணுங்கத் தொடங்கியிருந்த சமயத்தில் தான், ராஜகோபாலனின் வருகை நிகழ்ந்தது.

தாயைத் தன்னைத் தூக்கி யாரிடமோ கொடுக்கிறாள் என்பதை உணர்ந்தவனாய், கண்ணை உயர்த்தி, தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த பெரியவரின் கண்ணைச் சந்தித்தான் சின்னக் கண்ணன்.

தன் கொள்ளுப் பேரன், தன்னைப் பார்க்கிறான் என்பதை உணர்ந்தவராய், கண்ணைச் சிமிட்டி... தலையை லேசாய் ஆட்டி... "சிட்டு கண்ணா..." என்று அவர் ஆசையாய் அழைக்கவும்,

Sitalakshmi's

கண்ணில் தூக்கத்துடன் "யாராடா நீ... சிறுவன்? என் தூக்கத்தைக் கலைத்து விட்டாயே?" என்பது போல், கண்ணைச் சுருக்கிக் கொண்டு அவரைப் பார்த்தவன், அவரது பாவனையைக் கண்டதும் கண்ணில் சிரிப்பு புக, பொக்கை வாய் மலர்ந்து சிரித்தபடி, கையை நீட்டி அவரிடம் தாவினான்.

ஆனானப்பட்ட ராஜகோபாலனின் கண்ணோரத்தில் சிறிதாய் நீர் கோர்த்து நின்று விட்டது.

"நோக்கு... என்னைத் தெரியுமாடா ராஜா" என்றபடி, அவனை அவர் வாங்கியபோது, பத்மாவதிக்கு தொண்டையைத் தாண்டி... அழுகை பீறிட்டு வந்து விழுந்தது.

"என்னை மன்னிச்சுடுங்கோன்னு சொல்லக் கூடத் தகுதியில்லாது நிக்கிறேன்... தாத்தா" என்றவள், சட்டென இருக்கையை விட்டு எழுந்து, அவரது காலில் விழுந்தாள்.

"என்னடியம்மா இது... எழுந்துக்கோ... எழுந்துக்கோ கொழந்தே!" என்றவர், "மாலதி... சின்னக் கண்ணனைப் பிடி" என்றபடி மாலதியிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு, பத்மாவைத் தூக்கினார்.

"தாத்தா..." என அவள் கூனிக் குறுகி நிற்க,

"சீனு எப்படி இருக்கான்?" என்றார் அவர், நிகழ்காலத்தை உணர்ந்தவராய்.

Sitalakshmi's

"அவர்... அவர்... தாத்தா... நாங்க..." - பத்மாவால் எதையுமே கோர்வையாய் பேச முடியவில்லை. கண்ணும் கையும் மட்டும், ஸ்ரீனிவாசன் இருந்த அறையை நோக்கி நீண்டு கொண்டிருந்தன.

அப்போது பார்த்து, ஸ்ரீனி இருந்த அறையிலிருந்து ஒரு மருத்துவர் வெளியே வர, கண்ணில் பீதியுடன் அவரை ஏறிட்டாள் பத்மாவதி.

"அவர்... அவர்... நன்னா... தானே..." என அவள் பதட்டத்துடன் இழுக்க,

மாலதி முன்னே வந்து, அவளை ஆதரவாய் அணைத்துக் கொண்டாள்.

"அப்பாவும் பாலாஜியும் பாத்துப்பா, பத்மா. பச்சை உடம்போட... நீ இவ்வளவு பதறினாக்க... கொழந்தைக்கு ஆகாதுடியம்மா" என்றபடி, அவளை அங்கிருந்து நகர்த்திக் கொண்டுபோய், வேறு ஒரு இருக்கையில் இருத்தி வைத்தார்.

"அம்மா... அவர்...." என பத்மா இழுக்க,

"அதெல்லாம்... சீனுக்கு ஒன்னும் ஆகாது. பெருமாள்... நம்ம குடும்பத்தை அப்படியெல்லாம் விட்டுட மாட்டார்" எனக் கூறி, அவளை எழ விடாமல் செய்தார்.

அங்கே, மருத்துவரிடம் ராஜகோபாலனும்... பாலாஜியும் ஏதோ தீவிரமாய் பேசுவது தெரிந்தது.

Sitalakshmi's

பத்மா அலைப்புருவது புரிய, "கொழந்தே... ரொம்ப அழகா இருக்கான், பத்மா. அப்படியே கண்ணன் ஜாடை தான் போ! அவன்... பார்த்தா... ரொம்ப சந்தோஷப்படுவான். மூக்கு... மட்டும்... ராதா மாதிரி எடுப்பா இருக்கு..." என அவளது கவனத்தைப் பிள்ளையின் புறம் திருப்பினாள் மாலதி.

ஆனால், அதுவுமே பத்மாவின் நெஞ்சை ரணமாய் கிழித்தது.

"உங்களண்ட காமிக்காது வளத்த பாவத்துக்குத் தான்... அவனை இப்படியொரு நிலமையில பாக்க வேண்டியாதாகிப் போச்சு போலம்மா. ஹய்யோ!!!" என அவள் முகத்தை மூடிக் கொண்டு கதற

"ஷ்... என்ன பத்மா இது? கஷ்டமா தான் இருக்கும். அவனை... நடு ரோட்டில ஒரு பிச்சைக்காரி கையில பாக்கும் போது... அம்மாவா நோக்கு எப்படி இருந்திருக்கும்ன்னு நினைச்சுப்பாக்கவே நேக்கு முடியலைடி. ஆனா... அதையே நினைச்சிண்டு இருந்தா முடியுமா சொல்லு?" என அவளது முதுகை வருடினார் மாலதி.

"நா... அம்மாவாவே நடந்துக்கலையேம்மா!" – அதற்கும் கதறினாள் பத்மா.

"பத்மா... அழாதடி கொழந்தே!!" – மாலதிக்கு எப்படி தேற்றுவது என்றே தெரியவில்லை.

பத்மாவதியின் குழந்தையை மார்பிலும், அவளை வயிற்றிலும் சாய்த்துக் கொண்டு, மெல்ல அவளது முதுகை வருடிக் கொடுத்தார் அந்தப் பெரியவர்.

Sitalakshmi's

கொஞ்சம் கொஞ்சமாய் அழுகை சமனுக்கு வர, முழுதாய் அவரிடமிருந்து பிரிந்து விடாமல், முகத்தை மட்டும் உயர்த்தி "நீங்க... எப்படிம்மா வந்தேள்? எப்படி தெரிஞ்சது?" எனக் கேட்டாள் சின்னவள்.

தனிமையில் துவண்டு போய், எப்படி சமாளிக்கப் போகிறோம் என்ற பெரிய கேள்விக்கு முன்னர் "எனக்குப் பதில் தெரியவில்லை" என்ற பதில் பலகையைத் தாங்கி நின்றவளுக்கு, அவர்கள் வந்ததே பெரிய விஷயமாய் இருந்தது. எப்படி வந்தார்கள்... ஏன் வந்தார்கள் என்றெல்லாம் ஆராயத் தோன்றவில்லை.

ஆனால், அவர்கள் வந்து... நிலைமையை தங்கள் கையில் எடுத்துக் கொண்டதும், அவர்கள் வந்த விதத்தை அறிந்து கொள்ள வேண்டும் போல் சிறு ஆர்வம்.

அதற்கு மாலதி பதில் சொல்ல எத்தனிக்கும் முன்னர், "மாமா தாத்தா... அவா கேட்ட மருந்து வாங்கிண்டு வந்துட்டேன்" என்றபடியே அவர்களைக் கடந்து சென்றான், ஒருவன். அவன் – வேதாந்தைத் தூக்கிக் கொண்டு ஓடிய பெண்ணைப் பிடிக்க, பத்மாவதிக்கு உதவி செய்தானே அவனே தான்.

"இவர்... இவர்..." என பத்மா இழுக்க,

"ஸ்ரீதர்... அப்பாவோட தங்கை இருக்கா இல்லையா... அவாளோட பிள்ளையாத்துப் பேரன்" என அவனுக்கு அறிமுகம் கொடுத்தவர்,

"ஹோ!!!" – ஒற்றைச் சொல்லைப் புரிந்தும் புரியாமலும் வெளியிட்டாள் பத்மா.

Sitalakshmi's

“உன்னையும் சீனுவையும் சிக்னல்ல பார்த்த நொடியே… அவனுக்கு யாருன்னு புரிஞ்சிடுத்து போல. அதுவுமில்லாம… பிள்ளையைப் பார்த்து நீ ஓடினதும் ஸதம்பிச்சுப் போயிட்டானாம். உன்னண்ட பிள்ளையை வாங்கிக் கொடுத்த நிமிஷமில்லாது… அப்பாவுக்கு ஃபோன் அடிச்சுட்டான். அப்பா… ஆடிப் போய்ட்டார். உடனே… பெருமாளுக்கும் ஆண்டாளுக்கும் பணத்தை எடுத்து வச்சுட்டு… பாலாஜியை வேலையிடத்தில இருந்து வரச் சொல்லி… கிளம்பிட்டார். மொதல… அவா ரெண்டு பேரும் தான் வரதா இருந்தது… நேக்குத் தான்… உன்னை நினைச்சு மனசு கேக்கல. ரெண்டு சேலையை எடுத்து வச்சுண்டு… அவாளோட வந்துட்டேன்” என்றார் முன்னோட்டம் போல்.

பத்மாவிற்கு கண் கலங்கி விட்டது.

இவருடைய பெண்ணின் வாழ்வு, தன் திருமணத்தால் கேள்விக்குறியாகும் அபாயம் இருந்தபோதும், தன் நிலைமையை மனதில் வைத்து வந்திருக்கும் அவரது மனதின் முன்னே தான் குறுமிளகாய் சிறுத்துப் போய் நிற்பது போல் தோன்றியது.

“அம்மா… நா… வைஷ்ணவி மன்னிய…” என பத்மா மீண்டும், குற்ற உணர்வில் தொடங்க,

“அந்த விஷயத்தில… நேக்கு உம் மேலையும்… சீனு மேலையும் வருத்தம் தான். ஆனா… ஒரு கஷ்டம்ன்னு வரும் போது… நல்லா வேணும்ன்னு பாத்துண்டு இருக்கிற அளவுக்கு நேக்கு கல்நெஞ்சு இல்லடி கொழந்தே” என்றார் அவர் சிறு புன்னகையுடன்.

அப்படியே, பூமிக்குள் போய் விடமாட்டாமோ என்றிருந்தது பத்மாவிற்கு.

Sitalakshmi's

ஆனால், நிலத்தடி தண்ணீரைத் தன் கண்ணீரால் அவள் ஏற்றிவிடும் நல்ல செயலைத் தடுக்கும் வண்ணம், ராஜகோபாலனும் பாலாஜியும் அவர்களிடத்து வந்து சேர்ந்தனர்.

"டாக்டர்ஸ்... என்னப்பா சொல்றா?" என மாலதி ஆரம்பித்து வைக்கவும்,

"ஒண்ணும் அபாயமில்லையாம். இன்னும் மூணு மணி நேரத்தில... கண்ணு முழிச்சிடுவான்னு சொல்லியிருக்கா. ஒரு வாரம் கழிஞ்சு... ஆத்துக்கு அழைச்சிண்டு போலாமாம்" என விஷயத்தைச் சுருங்கச் சொன்னார் ராஜகோபாலன்.

"பாலாஜி... சீனுவோட இருப்பான். நாம... ஆத்துக்குப் போலாம்" என்றார் அடுத்த காரியங்களைப் பட்டியலிட்டு.

பேரன் தன்னை மீறி திருமணம் செய்து கொண்டான் என்பதையோ... கிட்டத்தட்ட இரண்டரை வருடங்களாய் தொடர்பே இல்லாமல் இருந்தான் என்ற விஷயத்தையோ துளியும் நினைக்காமல், வெகு சாதாரணமாய்... சிறு கோபம் கூட இல்லாமல், காரியங்களைத் தன் கட்டுப்பாட்டுக்குள் அவர் கொண்டு வந்த விதத்தை வியக்காமல் இருக்க முடியவில்லை, பத்மாவால்.

பேரனது குடும்பத்திற்கு ஒரு கஷ்டம் என்றதும், அவன் செய்த காரியங்களை மறைந்துவிட்டு, "நான் இருக்கிறேன்" என்று வந்து நிற்பதென்றால், எவ்வளவு பக்குவம் இருக்க வேண்டும்!? பத்மாவின் குற்ற உணர்ச்சி கூடிக் கொண்டே சென்றது.

Sitalakshmi's

"என்னம்மா கொழந்தே... என் முகத்தையே பாத்துண்டே இருக்கே? ஆத்துக்குப் போலாமா? எழுந்திரு... புள்ளையாண்டானும் காத்தால இருந்து வெயில நின்னு அலுத்துப் போயிருப்பானோ இல்லையோ?" என்றார் அவர்.

ராஜகோபாலன்... என்னவோ சாதாரணமாய் தான் சொன்னார்.

ஆனால், பத்மாவிற்குத் தான் அவரது வார்த்தைகள் ஊசியாய் இறங்கின.

காலை தொட்டு, பசியில் வாடியபடி அவன் பிச்சை எடுத்த அந்தக் காட்சி, மனக்கண் முன்னே மின்னி மறைய, சற்று உள்ளே சென்றிருந்த அழுகை... வெடித்துக் கொண்டு வெளியே வந்தது.

அங்கே தான், பத்மாவின் பிரச்சனை துவங்கியது.

பிள்ளையைப் பற்றி எந்தவொரு பேச்சு தொடங்கினாலும், அதை... அவனைப் பிச்சைக்காரியின் கையில் கண்ட காட்சியுடன் இணைத்து, அவனை அந்த நிலைமைக்குத் தள்ளிய தன்னுடன் சேர்த்து கோர்த்து, மனம்... மறுகிப் போக ஆரம்பித்தாள்.

அந்த நேரத்திற்கு, அவளைச் சமாதனம் செய்து வீட்டிற்கு அழைத்துச் சென்றதோடு, அன்றைய தினம் முடிந்தது.

அடுத்த நாள் காலை விடிவதற்காக காத்திருந்தவர் போல, ஐந்து மணிக்கே கிளம்பி மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தார் ராஜகோபாலன்.

Sitalakshmi's

“கண்ணு முழிச்சானாடா?” எனக் கேட்டபடியே வந்த தாத்தாவை பரிவுடன் பார்த்த பாலாஜி, “நாந்தான்… மயக்கம் தெளிஞ்சதும்… ஃபோன் போடறேன்னு சொன்னேன் இல்லையா தாத்தா? அதுக்குள்ள… ஏன் கெளம்பி வந்தேள்?” என்றான் அக்கறையுடன்.

“ராத்திரி முழுக்க அவன் நினைப்பாவே இருந்துச்சுடா கண்ணா. அதான்… ஓடி வந்துட்டேன். நீயும்… எத்தனை நாழி தான் ஆஸ்பிட்டலேயே இருப்பே?” என இரு பேரன்களின் மீது அக்கறையைத் தெளித்துப் பேசியவர்,

“நீ… ஆத்துக்குப் போய் தூங்கி ரெஸ்ட் எடுடா. நா… அவனைப் பார்த்துக்கிறேன்” என்றபடி, சீனுவிற்குத் துணையிருக்கத் தொடங்கினார்.

அதன் பின்னரும், ஸ்ரீனி கண் விழிக்க ஏழு மணியானது.

பிரிக்க முடியாதது போலிருந்த இமைகளைப் பிரித்து… அவன் மெல்ல அசைவு கொடுத்தபோதே, சிறு பரபரப்புடன் அவனருகே வந்து நின்று கொண்ட ராஜகோபாலன், அவனது நெற்றி காயத்தை மீறிக் கொண்டு வெளியே படர்ந்திருந்த சிகையை மெல்ல ஒதுக்கிவிட்டு “சீனு…கண்ணா” என்றார் மெல்ல.

சிரமப்பட்டு பிரிந்து கொண்டிருந்த இமைகள், பூஸ்ட் குடித்தது போல் தெம்புடன் விலுக்கென மலர்ந்தது.

தன் நேரெதிரே, கனிவே உருவாய் நின்ற தாத்தாவைக் கண்டதும், திறந்த இமைகள் மீண்டும் மூட, இரு விழிகளின் வழியேவும் விழிநீர் வழிந்தோடியது.

Sitalakshmi's

உருகித் தான் போனது, ராஜகோபாலனுக்கு.

இருந்தாலும், ஏற்கனவே பலகீனப்பட்டுப் போயிருக்கும் பேரனை... மேலும் மேலும் குற்ற உணர்ச்சியில் தவிக்கவிடக் கூடாது என முடிவு செய்தவராய்,

“கண்ணைத் துடைடா படவா” என்று செல்லமாய் அதட்டியவர்,

“என்னடா நீ... ஆத்தில இருந்து வரும் போது, புலி மாதிரி கிளம்பி வந்தே. இப்ப என்னடான்னா குழைஞ்சு போன புளிசாதமாட்டம் இருக்கியேடா?!!” என்றார் வியப்புடன்.

ஸ்ரீனியின் விழிகள் பட்டென விரிந்து, சிறு கேள்வியைத் தாங்கி நிற்க,

“இல்லை... புலி மாதிரி வந்தவன் புளிசாதமாட்டம் இருக்கியேன்னுட்டு கேட்டேன்” என அவர் அழுத்தம் கொடுத்துச் சொல்ல, ஸ்ரீனியின் விழியோரம் இருந்த கண்ணீருக்கு ஈடாய், அவனது உதட்டோரம் புன்னகை வந்து ஒட்டிக் கொண்டது.

Sitalakshmi's

“உறவோவியம்” – அத்தியாயம் 16

முகத்தில் தோன்றிய சிரிப்பின் சாயலைத் தன்னுடனே நிறுத்தி வைத்துக் கொள்ள, ஸ்ரீனியால் முடியவில்லை. அவன், முயலவுமில்லை.

ரத்தம் ஏறிக் கொண்டிருந்த கையை மெல்ல உயர்த்தி, தன் நெற்றியைக் கோதிக் கொண்டிருந்த தாத்தாவின் கையைப் பிடிக்க முயன்றான்.

“என்னடா கண்ணா… என்ன பண்றே” என அவர் பதற,

“தாத்தா…” என்றான் மெல்ல. கைகள் இன்னமும் அவரது கையின் ஆதரவிற்காக துழாவிக் கொண்டிருந்தன.

சட்டென கையைக் கீழே இறக்கி, பேரனின் கையை இறுகப் பற்றிக் கொண்ட ராஜகோபாலன், அவனது கையை நேராக வைத்தார்.

ஆனால், அவனோ மீண்டும் கையை உயர்த்தி அவரது கையைப் பிடித்துக் கொண்டான்.

“என்ன கண்ணா?” என அவர் ஆதுரமாய் கேட்கவும்,

கண்ணில் நீர் கோர்க்க, “தேங்க்ஸ் தாத்தப்பா” என்றான் ஆத்மார்த்தமாய்.

அவனது “தேங்க்ஸ்”ஸை விட, அவனது “தாத்தப்பா” என்றழைப்பு, ராஜகோபாலனை என்னவோ செய்தது. அவன் முன்னிலையில் அழுது விடக் கூடாது என்று வைராக்கியமாய் இருந்தவருக்கு, கண்ணின் ஓரம் லேசாய் அரிப்பது போலிருந்தது.

அவரது பேரன்-பேத்திகளில் இளையவளான வைஷ்ணவி மட்டுமே, அவரை “தாத்தப்பா” என அழைப்பாள். பாலாஜியும் கோதையும் “தாத்தா” என்பார்கள். ஸ்ரீனி எப்போதுமே முறைப்பு… பகட்டும் தான்.

அப்படியிருக்கையில், தன்னை விட்டு விலகி நின்ற பேரனிடமிருந்து இப்படியொரு அழைப்பு வரவும், அந்த முதியவரின் பாச நாளங்கள்… இன்னிசையில் மீண்டன.

“என்னடா இது… தேங்க்ஸ் எல்லாம் சொல்லிண்டு. எல்லாம் சரியாகிடும்…” என்றார் அவர், அவனது கையை ஆதரவாய் பற்றியபடி.

“இல்ல தாத்தா… சரியாகாது. சரியாகதபடி செஞ்சு வச்சிருக்கேன் தாத்தா… என் குழந்தையை… என் வேதுவை… பிச்சை….” – அந்த வார்த்தையைச் சொல்லும் போதே, ஸ்ரீனிக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது. கண்களை இறுக மூடி, தன் வேதனையை முகத்தில் பிரதிபலித்தான், அவன்.

“ஷ்… அதான் கொழந்தையே காப்பாதிட்டோமேனோ? இனிமேல்…அப்படி நடக்காது பாத்துப்போம்டா, சீனு. கவலைப்படாதே…” என அவர் தேற்ற,

“நடந்துடுத்தே… தாத்தப்பா! நடந்துடுத்தே!!” – மறுகித் துடித்தான் ஸ்ரீனி, ஒரு தந்தையாய்.

“நம்பக் கூடாதவாள நம்பின பாவத்துக்கு… அவனுக்கு ஆஸ்துமா வந்துடுத்தே! அவனுக்கு உயிர் கொடுத்த நாங்களே… அவன் மூச்சுக்கு சிரமப்படும்படி வச்சுட்டோமே… அய்யோ தாத்தா… என்னால தாங்க முடியலையே” என்று அரற்றிய பேரனைச் சமாதானம் செய்வது, ராஜகோபாலனுக்குப் பெரும்பாடாய் ஆனது.

அவனும் சரி… பத்மாவும் சரி… வேதாந்தைப் பார்க்கும் போதெல்லாம், கண்ணைக் கண்ணீருக்குத் தாரை வார்த்துக் கொடுத்தனர்.

இப்படியே ஒரு வாரம் கழிந்த நிலையில், வீட்டிற்குச் செல்லலாம் என மருத்துவர்கள் அறிவித்த பின்னர், “நம்ம ஆத்துக்கே என்னை… அழைச்சிண்டு போறேளா.. தாத்தா?” எனக் கேட்டான் ஸ்ரீனிவாசன்.

“நம்ம ஆத்துக்குத் தான்டா சீனு… போறோம். எவ்வளவு பெரிய ஆம்… வாங்கியிருக்கே… விஸ்தாரமா நன்னா இருக்குடா. அங்க தான் போறோம்… நோக்கு… கீழ ஒரு அறையை சுத்தம் பண்ணி வைக்கச் சொல்லியிருக்கேன்” என்றார் ராஜகோபாலன், பேரன் வாங்கிய வீட்டை சிலாகித்தபடி.

ஸ்ரீனியின் மனம் குற்ற உணர்ச்சியேனும் குழிக்குள் மூழ்கிப் போனது.

இந்த வீட்டை… அவருக்குப் போட்டியாக அல்லவா வாங்கினான். வீடு வாங்கியதைக் கூட அவரிடம் சொல்லவில்லை. அவருக்கு நிகராக… பெரிய வீட்டில் வாழவேண்டும் என்ற பேராசையில் இந்த வீட்டை

வாங்கிய தனக்கு… அவரளவிற்கு மனம் பெரிதல்ல என்பது புரிய, “ப்ளீஸ் தாத்தப்பா, வீட்டை விட்டு வந்தியே… பார்த்தியா எப்படி சீரழிஞ்சு நிக்கிறன்னு… எதையானும் சொல்லி என்னைத் திட்டிடுங்கோ, தாத்தப்பா. நேக்கு… கில்ட்டினஸ் கொஞ்சமானும் குறையும்” என்று மன்றாடியவன்,

“நீங்க… என் தப்பிச் சுட்டிக் காட்டாது… பெரிய மனசு பண்ணி மன்னிக்க மன்னிக்க, என்னால தாள முடியல தாத்தப்பா. ரொம்ப வலிக்கறது” என்றான் நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

“ச்சீ! அசடாட்டம் பேசாத, சீனு. நீ என் குழந்தேடா கண்ணா… நோக்கு ஒரு கஷ்டம்ன்னா… நேக்கும் அதில பங்குண்டு. அதைவிட்டுட்டு… கஷ்டப்படுறியா… நன்னா படு… நோக்கு நல்ல வேணும்ன்னு திட்டிண்டே… நோக்கு உதவி பண்ணினேன்னு வை… போற பாதைக்கு புண்ணியம் சேராதுடா” என்றார் அவர் கண்டிப்பும் கனிவுமாய்.

ஸ்ரீனிக்கு வார்த்தைகள் ஏதும் வரவில்லை.

வெறுமனே அவரை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தவன், “நா… நங்கநல்லூர்ல இருக்க நம்ம ஆத்துக்குப் போலாம்ன்னுட்டு சொன்னேன், தாத்தா. இங்க இல்லை” என்றான் தரையைப் பார்த்தபடி.

“ஏன்டா கண்ணா…” என அவர் பேசத் தொடங்க,

“கூட்டிண்டு போக மாட்டேளா… தாத்தா?” என்றான் அவன், கண்ணில் வலியுடன்.

“ச்ச்சே… அது உன்னுடைய ஆம்டா… எப்பனாலும் வரலாம். நா… எதுக்கு சொல்றேனா…” என அவர் மீண்டும் விளக்கம் கொடுக்க ஆரம்பிக்க,

“எப்பனாலும் வரலாம் தானே… நேக்கு இப்பவே வரணும் போல இருக்கு. அழைச்சிண்டு போங்கோ” என்றான் அவன், ஒரே பிடியாக.

“அதில்ல ராஜா… இங்கன்னா உன்னை ட்ரீட் பண்ணின டாக்டர்ஸே இருக்கா… ஏதானும் ஒரு எமர்ஜென்சின்னா, டக்குன்னு வந்து பாத்துடலாம்” என அவர் தன் பக்க விவாதத்தை எடுத்து வைக்க,

“சென்னையில இல்லாத டாக்டர்ஸா? ஏன் தாத்தா… தயங்குறேள்? அப்பா… ஏதானும் சொல்வார்ன்னு பயப்பட்றேளா? அவர் என்ன சொன்னாலும்… கேட்டுண்டு இருக்க பாத்தியப்பட்ட தப்பைத் தான் செஞ்சிருக்கேன். அதனால கேட்டுக்கிறேன். அவரண்ட சண்டை பிடிக்க மாட்டேன்” என்று சீனு, அவரது தயக்கத்தை வேறு விதமாய் எடுத்துக் கொண்டு பதில் சொல்லவும்,

“அவன் என்னடா… என் பேரனைச் சொல்றது? அதெல்லாம் மாட்டான். நீ கிளம்பு” என்று விவாதத்தை முடிவுக்கு இட்டு வந்தவர், பேரனின் குடும்பத்தை அழைத்துக் கொண்டு, சென்னைக்குச் சென்றார்.

பத்மாவும் இந்த முடிவுக்கு எந்த மறுப்பும் சொல்லவில்லை.

தன் துணிமணிகள்… வேதாந்தின் துணிமணிகள் என்று அனைத்தையும் மூட்டைக் கட்டி எடுத்து வந்தவளை,

“என்னம்மா பத்மா இது? எல்லாத்தையும்… எடுத்திண்ட மாதிரி இருக்கே? சீனு குணமாகுற வரைக்குமானதை எடுத்துண்டு வாம்மா கொழந்தே. அப்புறம்… இங்க வேலைக்கு வரணுமோ இல்லையோ?” என மாலதி கேட்க,

“நா… வேலையை விட்டுடுறதா இருக்கேன்மா” என்றாள் பத்மா, தலையைக் குனிந்தபடி.

“வேலையை விடாதே!” என்று சொல்ல முடியாமல், வேதாந்தின் ஒட்டிய வயிறு மாலதியை தடுத்தது.

அதே சமயம், “வேலையை விடு” என்றும் அவரால் சொல்ல முடியவில்லை.

“இல்லடி கொழந்தே! நல்ல வேலையில்லையோ… அதைப் போய்… ” என அவர் இழுக்க,

“இல்லம்மா… வேலையை விட வேது முக்கியம்ன்னு நேக்கு புரிஞ்சிடுத்து” என்றாள் அவள், கையிலிருந்த மகனின் நெற்றியில் முத்தம் வைத்து.

பதிலேதும் பேசாமல், கழிவிரக்கத்துடன் மாலதி பார்த்திருக்க, "நேக்கு… இது புரியுறதுக்காக… இந்தக் குட்டிக் கண்ணன்… இவ்வளவு கஷ்டத்தை அனுபவிச்சுட்டான். பசில… எத்தனை நாழி கத்தினானோ… அம்மா… அம்மான்னு அழுதானோ… ஹய்யோ… எவ்வளவு பெரிய மடத்தனம் பண்ணிட்டேன்" என அவள் அழத் தொடங்க,

"ஷ், பத்மா! என்ன இது… எப்பப் பாரு… அதே நினைப்பாவே இருந்துண்டு. கண்ணைத் துடை" என்று அதட்டிய ராஜகோபாலன்,

"வேலையை விடுற சரி, ஆனா… ஸ்ரீனியோட வேலை இங்க தானே இருக்கு. திரும்ப இங்க வரவேண்டாமோ?" என்றார் புரியாமல்.

பத்மாவதி மெல்ல நிமிர்ந்து ஸ்ரீனியைப் பார்க்க, "நா… இனிமே இங்க வேலை செய்யப் போறதில்ல, தாத்தா" என்று அறிவுப்பு விடுத்தான் ஸ்ரீனிவாசன்.

"புரியாது பேசப்படாது… சீனு! வேலையை விட்டுட்டு… என்ன செய்வே? ஆத்துக்கு வாங்கின கடனையானும் கட்ட வேண்டாமோ?" என அவர் அதட்ட,

"அதை விக்கப் போறேன்" என்றான் அவன், நிதானமாய்.

"ப்ச்! பெத்த குழந்தை… பிச்சை எடுக்கிறதைப் பாக்கிறதுங்கிறது கஷ்டம் தான். அதுக்காக… மனை… உத்தியோகம் எல்லாத்தையும் தொலைச்சிண்டு நிக்கிறதா?" – நிதர்சனம் உணர்ந்தவராய் அதட்டினார் ராஜகோபாலன்.

"நங்கநல்லூர் ஆத்தில… நேக்கும் என் பிள்ளைக்கும் இடம் தர மாட்டேளா, தாத்தா?" என சீனு, அவரது வார்த்தைகளை வேறுவிதமாய்,

"அடி பிச்சுடுவேன், படவா! நா… என்ன சொல்லிண்டு இருக்கேன்… நீ என்ன பேசிண்டு இருக்கே? அங்க… நோக்கு இடமுண்டு தான். என் முதல் கொள்ளுப் பேரனுக்கு… உன்னை விட அதீத உரிமையுண்டு. அதுக்காக… இந்த ஆமை ஏன்டா விக்கணும்ன்னு?" என அவர் பாய,

"இந்த ஆமை நினைச்சாலே… வேது ட்ராபிக் சிக்னல்ல நின்ன கோலமும்… அவன் ஆஸ்துமாவில கஷ்டப்பட்டதும் தான் தாத்தா ஓடறது. என்னால…

இந்த ஆத்துல சரியா மூச்சு கூட விட முடியல தாத்தா...” என ஸ்ரீனி வார்த்தையில் கதற, பத்மாவதி கண்ணீரில் கதறினாள்.

ராஜகோபாலன், என்ன சொல்லுவார்?!

“வீடு சரி... உத்தியோகம்?” என்றார் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத் தாவி.

“சென்னைக்கு மாத்தி வாங்கிக்கிறேன். இல்லைன்னா... அங்க ஒரு வேலையைத் தேடிக்கிறேன். ஆனா... பெங்களூர்ல இருக்க மாட்டேன்” என்றான் அவன் பிடிவாதமாய்.

“எல்லாத்துக்கும் பிடிவாதம். அடம்” என்று முணுமுணுத்தவர்,

“அதுக்கேன்டா இவ்வளவு பெரிய ஆமை விக்கிறே? யாருக்கானும் வாடகைக்கு விடு... அதில வர வாடகையை வாங்கி, கடனை அடைச்சிடு” என்றார் யோசனையாய்.

ஸ்ரீனிக்கும் சரியென்று பட்டது போலும்.

“சரி.. தாத்தா. நீங்க சொல்றாபடியா செய்றேன்” என்றவன், குழந்தை மற்றும் மனைவியோடு சென்னைக்குப் பயணப்பட்டான்.

சென்னைக்குச் சென்றால், வீட்டிலிருந்த ஒவ்வொருவருமே அவர்களிடம் பரிவுடன் நடந்து கொண்டனர். கமலக்கண்ணன், வங்கியில் ஒரு பயிற்சிக்காக டெல்லி சென்றிருந்ததால் அவர் மட்டும் வீட்டில் இல்லை. மற்ற அனைவருமே... அவர்களிடம் கனிவுடனே நடந்து கொண்டனர். சின்ன முகச் சுளிப்போ... குத்திக்காட்டலோ எதுவுமே இல்லாமல், அவர்கள் சாதாரணமாய் இருந்ததே, ஸ்ரீனி – பத்மா இருவரையும் கொன்று தின்றது.

வந்த ஒரே நாளில், தாங்கள் செய்த ஒவ்வொன்றையும் எண்ணி... எண்ணி... மறுகி மறுகி செத்தே போனார்கள் இருவரும்.

அதன் உச்சக்கட்டமாய், தன்னிடமிருந்த பத்து... பதினைந்து டிசைனர் சுடிதார்களை எடுத்து, ராஜகோபாலனிடம் கொடுத்த பத்மா, “நீங்க... பக்கத்தில ஆசிரமத்துக்குப் போவேளாமே. அப்படி போனா...

இதெல்லாத்தையும் அவளாண்ட கொடுத்துடுங்கோ” என்றாள் தரையைப் பார்த்தபடி.

“எல்லா துணியும் நன்னா இருக்க மாதிரி இருக்கேடிம்மா” – ஒரு உடையைக் கையில் எடுத்துப் பார்த்தபடி ராஜகோபாலன் சொல்லவும்,

கண்ணில் நீர் கோர்க்க, “வேதுக்கு… வேதுக்கு…” எனத் திக்கியபடி ஆரம்பித்தவள், “அன்னைக்கு… அன்னைக்கு… இந்த டிரஸ் தான் போட்டுண்டு இருந்தேன். வேது பாலுக்காக அழறான்… ஆனா… என்னால டிரெஸ்ஸை தளர்த்திண்டு பால் கொடுக்க முடியல. ரொம்ப சிரமமா இருந்தித்து. அதான்… இந்த டிரஸ் எல்லாம் இனிமே போடக் கூடாதுன்னு முடிவு பண்ணிட்டேன். எல்லாத்தையும் கொடுத்துடுங்கோ” என்றவள், கண்ணைத் துடைத்தபடி அடுக்களைக்குள் சென்று மறைந்து கொண்டாள்.

புருஷன் – பொண்டாட்டி இருவருமே யாரையும் நிமிர்ந்து பார்ப்பதில்லை.

உலகத்திலேயே பெரிய பாவத்தைச் செய்துவிட்ட குற்ற உணர்வில், யாருடனும் கலகலவென்று பேசுவதில்லை.

கலகலவென்று சிரிப்பதில்லை.

கண்ணைப் பார்த்து பேசுவதில்லை.

பிள்ளையைப் பற்றி என்ன கேட்டாலும், முகத்தில் வலி பரவ வெறித்துப் பார்க்க வேண்டியது.

யார் என்ன சொன்னாலும்… சரி என்றோ தவறென்றோ ஆராய்வதில்லை. எல்லாவற்றுக்கும் மண்டையை ஆட்டிக் கொண்டு… ஆட்டு மந்தை போல் ஆகிவிட்டிருந்தது அவர்களது மனம்.

முக்கியமான விஷயமாய், கணவன் – மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ள முயலவில்லை. அவன் வரும் பக்கம் இவள் செல்வதில்லை. அவள் அறையில் இருந்தால்… இவன் அங்கே செல்வதில்லை. பிள்ளையை அவள் வைத்திருந்தால், இவன் வாங்குவதில்லை. பிள்ளை… தாத்தா கையிலோ வேறு யாரது கையிலோ கை மாறும் வரை, பத்மாவும் அவனிடமிருந்து பிள்ளையைக் கேட்பதில்லை. மொத்தத்தில் இருவரும் பேசிக் கொள்ளவில்லை.

அன்று காலை ஒன்பது மணியிருக்கும்.

அடுக்களையில், மாலதியும் சாவித்திரியும் சமைப்பதை வேடிக்கை பார்த்தபடி நின்று கொண்டிருந்த பத்மாவதியை,

"அம்மா... பத்மா..." என்று விளித்தார் ராஜகோபாலன்.

"வந்துட்டேன் தாத்தா..." - பரபரப்பின் பிள்ளையாகி, அவரிடம் விரைந்தாள் பத்மா.

"வேலையா இருக்கியா கொழந்தே?" என அவர் கேட்கவும்,

"வேலையா? ஒண்ணுமே இல்லை தாத்தா... சும்மா... அவா சமைக்கிறதை வேடிக்கை பார்த்துண்டு இருக்கேன்" என்றாள் அவள், சிறு சங்கடத்துடன்.

"அப்பன்னா... நானும் நீயும் வேதாந்தைத் தூக்கிண்டு, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலுக்குப் போயிட்டு வரலமாடி கொழந்தே?" என வினவிய ராஜகோபாலனை, பத்மாவதி மட்டுமல்ல வீடே அதிசயமாய் பார்த்தது.

முதலில் பேசியது ஸ்ரீனிவாசன் தான்.

"என்னது? பத்மாவோட கோவிலுக்குப் போறேளா?" என்றவனின் குரலில் பொறாமையைத் தவிர வேறெந்த உணர்வுமே விரவி இருக்கவில்லை.

Sitalakshmi's

"உனக்கேன்டா பொறாமை... பாலாட்டம் பொங்கி வழியுறது ?" - அவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல், அவனைச் சீண்டினார் ராஜகோபாலன்.

"பொறாமையா... அதெல்லாம் ஒண்ணுமில்லே! நன்னா போய்ட்டு வாங்கோ!" என்றான் ஸ்ரீனியோ முகத்தை முழ நீளத்திற்குத் தூக்கி வைத்துக் கொண்டு.

"ஏண்டிமா கொழந்தே... உன் ஆம்படையானண்ட பெர்மிஷன் கேட்டியா என்ன? போயிட்டு வாங்கோன்னு வழியனுப்பி வைக்கிறானே ?" - ராஜகோபாலன் வியந்த விதத்தில், பத்மாவதிக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.

ஸ்ரீனி தன்னால் முடிந்த மட்டும் முறைக்க, "ஓடு... ஓடு... வேது பையனைக் கிளப்பு. உச்சிகாலம் ஆறதுக்குள்ள போயிட்டு வந்துரலாம்" என அவளை விரட்டினார் பெரியவர்.

குழந்தையைக் குளிக்க வைத்து, வேறு உடை மாற்றி, அவனுக்குத் தேவையானவற்றை எடுத்து வைத்து, தானும் கிளம்பி என்று வேகவேகமாய் அனைத்துக் காரியங்களையும் செய்தபோதும், ஒன்பதே முக்கால் ஆகிவிட்டது மணி.

"ஒரு வாய்... சாப்பிட்டு வாடிம்மா" என ராஜகோபாலன் கூற, "இல்ல தாத்தா... மூச்சு முட்றது. ஒண்ணும் வேணாம்" என்றாள் பத்மா, நெஞ்சில் கை வைத்து.

Sitalakshmi's

"பிள்ளைக்காரி... சாப்பிடாமையா போவே? இந்தா... நாலு இட்லியை டப்பால போட்டு, மிளாகா பொடி போட்டிருக்கேன். போற வழியில சாப்பிட்டுண்டே போ" எனக் கூறி, கையில் சின்ன சில்வர் டப்பாவைக் கொடுத்தார் சாவித்திரி.

"நோக்கு... அன்னபூரணின்னு பேர் வச்சிருக்கணும். மறந்து... சாவித்திரின்னு வச்சுட்டா" - மருமகளை மெச்சிய மாமனார், தன் பேரன் மனைவியை அழைத்துக் கொண்டு, திருவல்லிக்கேணி பயணமானார்.

அவர்களுக்கு வாடிக்கையாக வரும் ஆட்டோவை வரச் சொல்லி, இருவருமாய் அதில் சென்றனர்.

நங்கநல்லூர் எங்கே? திருவல்லிக்கேணி எங்கே? மதுரைக்கும் சென்னைக்கும் கூட ஒரு மணி நேரத்தில் சென்று விடலாம். ஆனால், சென்னைக்குள்ளேயே... அதுவும் காலை ஒன்பது மணி நேரத்து ட்ராப்பிக்கில், ஒரு மூலையில் இருந்து அடுத்த மூளைக்குச் செல்வதென்றால், மனிதனுக்கு அசாத்திய பொறுமை வேண்டும்!

இயல்பிலேயே பொறுமைமிக்க ராஜகோபாலனும், வாழ்க்கை கொடுத்த அடியினால் பொறுமையைக் கடைபிடிக்கத் தொடங்கியிருந்த பத்மாவும் ஒருங்கே செய்த அப்பயணம், பத்மாவின் வாழ்க்கையில் ஒரு பெரும் திருப்பத்தை உண்டு பண்ணியது.

வெளிப்பார்வைக்கு, பத்மா சாதாரணமாகத் தான் தெரிந்தாள்.

Sitalakshmi's

ஆனால், ஒரோர் சிக்னலிலும் வண்டி நிற்கும் போதும், கண்கள் இரண்டும் பீதியுடன் சுற்றுப் புரத்தை ஆராய்ந்தன.

கைகள் தாமாகவே பிள்ளையை இறுக்கிக் கொண்டன.

தலை மெல்ல தாழ்ந்து, உதடுகள் பிள்ளையின் நெற்றியில் ஈரமான முத்தம் ஒன்றை அழுத்தமாய் இட்டு விலகின.

உடல் லேசாய் தூக்கிப் போட்டது.

போட்டிருந்த காலணியையும் மீறி, இரு பெருவிரல்களும் நிலத்தில் அழுந்தப் பதிந்தன.

எல்லாவற்றுக்கும் மேலாய், மூளை... மனம் என எல்லாவற்றிலும், அழுக்குத் துணியுடன்... "ஹ்ஹாஆன்...." என்று அழுது கொண்டிருந்த தன் மகனே வந்து போனான்.

அவளது ஐம்புலன்களையும், பெங்களூரில் அவள் கண்ட அந்தக் காட்சியும்... அதன் தாக்கமுமே முழுதாய் ஆக்கிரமித்து இருந்தது.

ஒரோர் அணுவும், "தூ... உன்னையெல்லாம் அம்மான்னு சொல்லிக்கவே வெட்கமா இருக்கு?" என்று காறித் துப்புவது போல், உடலே அறுவெறுத்துப் போனது.

மொத்தத்தில், பத்மா தன் வசமிழந்தாள்.

Sitalakshmi's

அவள் படும் பாட்டை, ஒரு பார்வையாளனின் நோக்குடன் பார்த்துக் கொண்டிருந்த ராஜகோபாலன், ஐந்தாவது சிக்னலில் ஆட்டோ நிற்கும் போது, "கொழந்தே!" என்றார் மெல்ல.

திடுக்கிட்டு விழித்தவள், "என்ன...என்ன" என்றாள் பதட்டமும் பயமுமாய்.

கண்கள் கலவரத்துடன் சுற்றுப்புறத்தை கணக்கிட, கைகளோ பிள்ளையை நெஞ்சோடு அணைத்துக் கொண்டன.

"வேது பையனை என்னண்ட கொடுக்கறயா" என்றார் அவர், கைகளை அவள் புறம் நீட்டி.

தன்னுணர்வே இல்லாமல், பிள்ளையை இன்னமும் இறுக்கமாய் தன்னுடன் இணைத்துக் கொண்டவள், "ம்ஹூம்" என்று பலமாய் தலையை ஆட்டி மறுத்தாள்.

"ஏன் கண்ணா?" - மிக மிருதுவாய் வெளி வந்தது, பெரியவரின் குரல்.

"ம்ஹூம்... மாட்டேன்... மாட்டவே மாட்டேன்" என்றவள், குழந்தையின் தலையை வலது கையால் அழுத்தி, அவனைத் தன் நெஞ்சோடு புதைத்துக் கொண்டாள்.

தாயின் செய்கையில், பாவம் பாலகன் தான் தவித்துப் போனான்.

sitalakshmi's

"ஷ்ஷ்ஹாம்... ஹாம்... ஷ்ஷ்ஷ்ஹா" என்று திணறி... திமிறி, அவளது பிடியிலிருந்து விடுபட முயன்று, தோற்றுப் போன அச்சிறு கன்று, "ஆஅ....ஆஆ.....நன்" என்று பெரும் சப்தமிட்டு அழத் தொடங்கியது.

"புள்ளையாண்டான் அழறான் பாரு... என்னண்ட கொடும்மா" என்றவர், வலுக்கட்டாயமாக பிள்ளையை அவளிடமிருந்து பிரித்தெடுத்துக் கொண்டார்.

"இல்ல... இல்ல... அவன்... அவனை..." என்று தடுமாறியபடி, அவனை அவரிடமிருந்து பறிக்க முயன்றாள் பத்மா.

வாடிக்கையாக வரும் ஆட்டோக்காரர் என்பதால், பின்னாடி நடந்த களேபரத்தைப் பார்த்த ஆட்டோ ஓட்டுனர், "சார்... இன்னா சார்... இன்னா பிரச்சனை... வண்டியை ஓரம் கட்டவா?" என்று பயந்தபடியே பறந்தார்.

"இல்லப்பா... முருகேசா! பயப்படறதுக்கு ஒண்ணுமில்லே... நீ ஓட்டு" என்றவர், அப்போதும் தன்னிடமிருந்து பிள்ளையைப் பறிப்பதே தன் வாழ்வின் லட்சியம் என்பது போல் செயல்பட்டுக் கொண்டிருந்த பத்மாவதியை இரக்கத்துடன் பார்த்தார்.

ஆனால், பாவம் பார்க்க வேண்டிய வேளையல்ல என்று மூளை எச்சரித்தது!

தன் திடம் முழுதையும் ஒன்று கூட்டி, "பத்மாவதி!!!" என அவர் போட்ட அதட்டலில், முருகேசனின் கையிலிருந்த ஆட்டோவே ஆட்டம் கண்டது எனும்போது, வேதாந்தின் மீதிருந்த பத்மாவின் கைப்பிடி தளர்ந்திருக்காதா என்ன?

Sitalakshmi's

"தாத்தா!!!" - அதிர்ந்து வெளிவந்த அக்குரலில், பத்மாவதியும் நினைவுக்கு மீண்டு வந்தாள்.

சூழ்நிலையின் தாக்கத்தில் தன்னைத் தொலைத்திருந்த மனம், முழுதாய் மீண்டு வர, பெக்க... பெக்கவென விழித்துக் கொண்டிருந்தாள் பத்மா.

"என்ன கண்ணா?" - எதுவுமே நடக்காது போல், ராஜகோபாலன் கேட்க,

"ஹான்... தாத்தா... நா... வேது..." என்று நடந்து அனைத்தையும் உணர்ந்தவளாய், அதே சமயம் விளக்க முடியாதவளாய் அவரைப் பரிதாபமாய் பார்த்துக் கொண்டிருந்த பத்மாவைப் பார்த்து கேலியாகச் சிரித்தவர்,

"ஏன்டி கொழந்தே... இப்படி பாக்கிறே? பசிக்கிறதுன்னா... இட்லியை எடுத்துச் சாப்பிடு..." என்றார் அது தான் முக்கியம் போல.

முருகேசன், லேசாய் திரும்பி... ஒரு நமட்டுச் சிரிப்பை உதிர்த்துவிட்டு, சாலைக்குக் கவனத்தை இட்டுச் செல்ல, மீண்டும் முழிப்பது பத்மாவின் முறையாகிற்று.

"இல்ல தாத்தா... நா... வேதுவை உங்களண்ட..." என மீண்டும் பத்மா தொடங்க,

"பசியில... அவா... அவாளுக்கு காதை அடைக்கும்பா... நோக்கு வாயை அடிக்கிறதேடி கொழந்தே! சாப்பிடு!" என உந்தியவர்,

Sitalakshmi's

"டேய் வேது பையா... அம்மா சாப்பிடட்டும். நீயும் நானும் வண்டியேல்லாம் பார்த்துண்டே வருவோமா?" என்றார் சின்னவனின் முடியை ஒதுக்கி விட்டபடி.

பத்மாவதி இன்னமும் விழித்த நிலையிலேயே இருக்க, "சாப்பிடு கொழந்தே" என்றார் அவர் மீண்டும் உந்துதலாய்.

மந்திரம் போட்டது போல், டிப்பன் டப்பாவை எடுத்து, இட்லியை பிட்டு வாயில் போட்டன பத்மாவின் கைகள்.

இரண்டு விள்ளல் உள்ளே செல்லும் வரை பொறுமையாக இருந்த பெரியவர், "அம்மாவோட பேசினியாடிம்மா?" என்றார் மென்மையாக.

விக்கியது பத்மாவிற்கு.

"ஜலம் எடுத்துண்டு வந்திறிக்கியோனோ... எடுத்து குடி" என்றவர், அவள் சமன் நிலைக்கு வரும் வரை, ஒன்றும் பேசவில்லை.

"அம்மா... அம்மாவாண்ட... எப்படி... எப்படி பேசறதுன்னே தெரியலை தாத்தா!"

"ஏன்?"

கேள்வி என்னவோ ஒரே வார்த்தையில் முடிந்துவிட்டது.

Sitalakshmi's

பதிலுக்குப் பத்மா எங்கே போவாள்?!

"ஏன்னா... அசிங்கமா... அவமானமா இருக்கு தாத்தா... பயங்கர கில்டியா இருக்கு...' என்றவளின் முகம் கசங்கியது. கைகள் மார்பை அழுத்திப் பிடித்துக் கொண்டன.

முகத்தில் காட்டும் அதே வலியை மனதிலும் அனுபவிக்கிறேன் என்பதை உணர்த்தியவள், “பெரியவாளை எதித்துண்டு கல்யாணம் பண்ணிண்டதுக்கு... பயங்கர... பெரிய தண்டனை கிடைச்சுடுத்து. அதைத் தூக்கி... சுமந்துண்டு... அங்க போக அசிங்கமா இருக்கு தாத்தா..." என்றாள் வேகமாய் வெளிவந்த கண்ணீரை அடக்க முடியாதவளாய்.

ராஜகோபாலன் ஒன்றும் சொல்லாமல் அவளையே பார்த்துக் கொண்டிருக்க , பத்மாவின் மனக்குமுறல் இன்னமும் கொட்டியது.

“நீங்க... மாலதிம்மா... சாவித்திரிம்மா... பெரிய மாமா... சேது மாமா... பாலாஜி அத்திம்பேர்... எல்லாரும் எங்கள ஒரு வார்த்தை சொல்லாது இருக்கதே... மனசைப் போட்டுப் பிழியறது... இதில... என் தோப்பனாரண்ட போனா... காறித் துப்புவார்... வாங்கிக்கப் பாத்திப்பட்டவா தான்... ஆனா..." – குற்ற உணர்வில் குரல் தடுமாறியது பத்மாவிற்கு.

அப்போதும் ராஜகோபாலன் எதுவும் பேசவில்லை.

பத்மாவின் முகத்தையே கூர்ந்து பார்த்தபடி அமர்ந்திருந்தார். கைகள் தன் போக்கில், கொள்ளுப் பேரனின் தலை முடியைக் கோதியபடி இருந்தன.

Sitalakshmi's

அதற்கு மேல், என்ன சொல்வதென்று தெரியாமல், உதட்டைப் பற்களால் கடித்து, கண்களை இறுக மூடி, மூக்கு விடைக்க, கைகள் போட்டிருந்த சுடிதாரின் தோள் புறம் கசக்கிப் பிழிய, “வலிக்கறது தாத்தா... ரொம்ப வலிக்கறது” என்றாள் பத்மா, உள் நெஞ்சின் பாரம் தாங்க முடியாமல்.

கொள்ளுப் பேரனின் சிகையை அலைந்தபடி இருந்த ராஜகோபாலனின் கைகள் மெல்ல உயர்ந்து, பத்மாவின் தலையை வருடிக் கொடுத்தன.

அந்த நொடி, பத்மா முற்றிலுமாய் உடைந்து போனாள்.

ஏற்கனவே, தப்பு செய்து விட்டோம்... தப்பு செய்துவிட்டோம் என்ற குற்ற உணர்வு, தன்மானத்தை முழுதாய் அரித்துவிட்டிருந்தது.

இப்போது, சிக்னலில் தென்பட்ட சில பிச்சைக்காரர்கள், இயர் பட்ஸ்... கார் ஷீல்ட்... பிள்ளைகளுக்கான புஸ்தகங்கள் என்று வண்டிகளின் ஊடே புகுந்து வியாபாரம் செய்தவர்கள் என்று பலரைக் கண்டதில், மனம் அதீத கற்பனையில் இன்னமும் துவண்டு போயிருந்தது.

அதை விடவும் மேலாய், ராஜகோபாலனின் பேச்சு... பேச்சு என்பதை விட அர்த்தமும் அன்பும் நிறைந்த அந்தப் பார்வை... அவளை நிலைகுலையச் செய்தது.

உள்ளத்தின் துன்பத்தையெல்லாம் அழுதே ஆற்றி விடுபவள் போல், ராஜகோபாலனின் தோளில் தலை சாய்த்து, சிறகனைத்தும் வெட்டப்பட்ட வெண்புறாவாய், கதறித் தீர்த்தாள் பத்மாவதி.

Sitalakshmi's

அந்த சமயம், ஒரு அதிசயம் நடந்தேறியது.

தன் கொள்ளுத்தாத்தாவின் மடி மீதமர்ந்து, சாலையில் ஓடும் வாகனங்களையும்... அதிலிருக்கும் மனிதர்களையும் விட்டுவிட்டு, மேலே பறக்கும் காக்கையையும்... சிலையாய் நிற்கும் குதிரையையும் வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருந்த வேதாந்த்,

அழுகிறேன் என்ற பெயரில், பக்கத்து ஆட்டோவில் போவோரை எல்லாம் திரும்பிப் பார்க்க வைக்கும் படி, சத்தமாய் அழுது கொண்டிருந்த அம்மாவைத் திரும்பிப் பார்த்தான்.

அவன் பார்த்தான். ஆனால், தாய் எங்கே பார்த்தாள்? அவள் தான் அழுவதில் பிஸியாக இருந்தாளே! கொள்ளுத்தாத்தாவும் பார்க்கவில்லை. அவர் தான், அழும் பேத்தியின் முதுகை வருடிக் கொடுப்பதில் தன்னைத் தொலைத்திருந்தாரே!

செல்வன், இருவரையும் மாறி... மாறி பார்த்தான்.

தாயும் அழுவதை நிறுத்துவதாய் தெரியவில்லை. தாத்தாவின் கவனமும் அவனிடம் திரும்பவில்லை.

என்ன செய்வதென்று யோசித்தது, செல்லச் சிட்டு.

ஏதோ புரிந்தவனாய், கையை மெல்ல உயர்த்தி... தன் தாயின் கன்னத்தைத் தொட்டான்.

Sitalakshmi's

அதில் கண்ணீரின் சாரல் தெரியவும், "ச்ச்ஹ்ச்...ச்ச்ஹ்ச்...." என்று சத்தம் எழுப்பியவன், அந்த ஈரத்தைத் தன் சட்டையில் துடைத்துக் கொண்டான்.

பத்மாவதியின் கண்ணீர் ஒரு நிமிடம் நின்று, மீண்டும் பொழிய ஆரம்பித்தது.

"பார்த்தியாடிம்மா... உன் புள்ளையாண்டானுக்கு... நீ அழுதினாக்க பிடிக்கலை" என்று ராஜகோபாலன் சொன்னது வேறு, அழுகையை ஜாஸ்தி பண்ணியது.

"இதுக்குமா அழை?" என்று அவர் கடிந்து கொள்ள,

"இந்தச் செல்லக்கண்ணன், வளர்ந்து பெரியவனானதுக்கு பின்னாடி... ஏம்மா என்னை... சின்ன வயசில பிச்சை எடுக்க விட்டியான்னு கேட்டா... நா என்ன தாத்தா சொல்றது? தூக்கில தொங்கிடலாமான்னுட்டு வரது தாத்தா" – கடந்த காலத்தில் நடந்த தவறு எதிர்காலத்தில் எவ்வித எதிர்வினையை உண்டாக்குமோ என்ற பயம், அவளை நிகழ்காலத்தை வாழ விடாமல் செய்தது.

"ச்சே... அசடாட்டம்... பேசப்பிடாது! எட்டு மாசக் குழந்தையா இருக்கிறச்சே நடந்ததெல்லாம்... அவனுக்கு நினைப்பே இருக்காதுடி கொழந்தே! வருத்தப்படாதே" என்றார் தேறுதலாக.

ஆனாலும், பத்மாவின் முகம் தெளியாமல் இருக்கவே, "ஹ்ம்ம்... நோக்கு ரியல் டைம் எக்சாம்பிள் காட்டினா தான் ஒத்துப்பே போலவே. இரு" என்றவர், பாக்கட்டில் கைவிட்டு, தனது கைப்பேசியை எடுத்தார்.

Sitalakshmi's

ஏதோவொரு எண்ணை அழுத்திவிட்டு, அந்தப் பக்கம் “ஹலோ... சொல்லுங்கோ தாத்தா” என்ற ஸ்ரீனியின் குரல் கேட்டதும்,

“டேய் படவா, நா கேக்கறதுக்கு... ஏன் எதுக்கு கேள்வி கேக்காது... ஆமாவா இல்லையான்னு பதிலை மட்டும் சொல்லணும். புரியறதா?” என்றார் ஆணையிடம் குரலில்.

“என்ன கேக்க போறேள்? எங்க இருக்கேள்?” என சீனு தொடங்க,

“கேள்வி கேக்கப்பிடாதுன்னுட்டு சொன்னேனோ இல்லையோ. சும்மா இரு” என்றவர்,

“எல்.கே.ஜி படிக்கிறச்சே... நீ எத்தனை ஸ்லேட் தொலைச்சே... ஞாபகம் இருக்காடா?” என்றார் முதல் கேள்வியாக.

“என்ன தாத்தா இது? இப்பப் போயிட்டு...” என சீண்டு சலித்துக் கொள்ளவும்,

“இருக்கா இல்லையா? சொல்றா!” – அதிகாரமாய் ஓங்கி நின்றது பெரியவரின் குரல்.

“இல்ல...” – வேறு வழியில்லாமல் பதில் சொன்னான் ஸ்ரீனிவாசன்.

“சரி...விடு, செவன்த் படிக்கிறச்சே... ஸ்கூல் டேல நீ எத்தனை மெடல் வாங்கினேனாயும் நினைப்பிருக்கா?”

Sitalakshmi's

"ஹ்ம்ம்...ஹ்ம்ம்... தெரியல தாத்தா... ஒண்ணு வாங்கினேனா?"

"அசடு! ஒண்ணா... அஞ்சு வாங்கினேடா. கிளாஸ் டாப்பர்... கணக்குல எல்லா டெஸ்ட்லையும் சென்டம்... தமிழ் கட்டுரை... டிராயிங்... அப்புறம் குயூஸ்..." எனப் பட்டியல் வாசித்தவர், அடுத்த கேள்வியைக் கேட்டார்.

"அதை விட, பத்தாம் கிளாஸ்ல சயின்ஸ் டூல நீ எத்தனை மார்க் வாங்கினே சொல்லு"

"ஹான் இது தெரியும். 194" என அவன் பெருமையாகச் சொல்லவும்,

"மண்ணாந்தை. 197" எனத் திருத்தினார் பெரியவர்.

"ஹோ!"

"சரி... +2ல நீ நல்ல மார்க் வாங்கினதுக்கு... சாவித்திரி வீட்டில ஒரு ஸ்வீட் செஞ்சாளே? அதுனாச்சும் நினைப்பிருக்காடா?" என அவர் கேட்க,

பல வினாடி மௌனத்தின் பின்னர் "நேக்குத் தெரியல தாத்தா. ஏன்... இப்படி நா மறந்து போன விஷயத்தையா கேக்கிறேள்?" என்று அழுது வடிந்தான் ஸ்ரீனிவாசன்.

"நோக்குப் பிடிச்ச... அக்காரவடிசல் செஞ்சாடா படவா! அதைக் கூட மறந்து போயிட்டியேடா கொழந்தே!" என்று வருத்தம் கொண்ட ராஜகோபாலன்,

Sitalakshmi's

“சரி… கடைசியா ஒண்ணே ஒண்ணு கேக்கிறேன். நீ… எட்டு மாசமா இருக்கும் போது… உன் அம்மா வழி பாட்டியாத்துல இருந்து… நோக்கொரு சட்டை வாங்கிண்டு வந்தாளே. அது… என்ன கலர்” என்றாரே பார்க்கலாம்,

“தாத்தப்பா” என்று ஸ்ரீனி பல்லைக் கடித்தது, இங்கே ஆட்டோவில் கிணுகிணுத்தது.

அவனது கடுப்பின் எதிரொலி, சிரிப்பின் சங்கீதமாய் பத்மாவின் இதழிலும், எதிர்காலத்தின் அரிச்சுவடியாய் அவளது மனதிலும் நீக்கமற குடி கொள்ள ஆரம்பித்தது.

அதே நேரம், ஸ்ரீனிவாசனின் மனதிலும் பற்பல எண்ணங்கள் வந்தமர்ந்து கொண்டன.

Sitalakshmi's

“உறவோவியம்” – அத்தியாயம் 18

பேரனுடனான தன் சம்பாஷணையை முடித்துக் கொண்டு, பேத்தியின் புறம் திரும்பிய ராஜகோபாலன், “என்னடிம்மா… இப்போ நிம்மதியா இருக்கியா?” என்றார் சிறு முறுவலுடன்.

பத்மாவின் தலை ஆமோதிப்பாய் ஆடியது.

ஆனாலும், ஒரே ஒரு பேச்சு வார்த்தையில்… அவள் முழுதாய் மாறிவிடுவாள் என்று பெரியவரும் நம்பவில்லை. அவளுக்குமே எதிர்காலத்தைப் பற்றிய தனது பயம் முழுதாய் போய்விட்டது என்ற எண்ணம் இருக்கவில்லை. இது ஒரு விதை… போகப் போக வேரூன்றி, நல்மரமாய் வளரும் என்ற நம்பிக்கை மட்டுமே, அவளை லேசாய் புன்னகை பூக்க வைத்தது.

“உன் ஆம்படையான்… புத்திசாலினாலும் அவசரக்காரன். அவசரமும்… ஆத்திரமும் அவன் புத்தியை மழுங்கப் பண்ணிடும். ஆனா… உன் புள்ளையாண்டான் இருக்கானே… சமத்துக்கண்ணன். நீ…அழறேன்னுட்டு தொடைச்சு விட்டவன்… கையில ஈரம் பட்டுடுத்துன்னு தொடைச்சுன்னுட்டான் பாரேன். மத்தவாளையும் பார்த்துக்கத் தெரியறது… அதே சமயம் தன்னையும் பேணிக்கத் தெரியறது. அதனால… பிற்காலத்தில உன்னை நோகப் பண்ண மாட்டாண்டி கொழந்தே” என்றார் அவர், தன் கொள்ளுப் பேரனைத் தூக்கித் தோளில் சுமந்தபடியே.

பத்மாவின் புன்னகை அர்த்தமுள்ள ஒரு சிரிப்பாய் விரிந்தது.

கை நீட்டி, தாத்தாவின் தோளில் ஒய்யாரமாய் சாய்ந்து கொண்டிருந்த செல்லக்கண்ணனின் கன்னத்தை வருடிக் கொடுத்தாள், தாய்.

அச்செயலில் வெட்கம் கொண்ட பாலகனாய், “கிக்கி…” என்று சிரித்துவிட்டு, தாத்தாவின் தோளில் முகம் புதைத்துக் கொண்டு விளையாடினான் வேதாந்த்.

சற்று நேரம், அவனது குறும்புகளில் தங்களைத் தொலைத்திருந்தனர் தாத்தாவும் பேத்தியும்.

சாந்தோம் அருகே வந்து விட்டிருந்தது ஆட்டோ.

இன்னமும் பதினைந்து இருபது நிமிடங்களில் திருவல்லிக்கேணி கோவில் வந்துவிடும் என்ற நிலையில், ராஜகோபாலன் அடுத்த இன்னிங்க்ஸிற்கு தயாரானார்.

“பத்மா… நோக்கு ஸ்ரீனியாண்ட என்ன கோபம்?” – நேரடியாகவே விஷயத்திற்கு வந்துவிட்டார் பெரியவர்.

“ஹான்!!!! கோபமா?!” – நிஜமாகவே பத்மாவிற்கு ஸ்ரீனியின் மீது கொபமிருக்கவில்லை. பிள்ளை விஷயத்தில் விழுந்த அடி, அவர்களுக்குள் பல அடி தூரத்தை உண்டு பண்ணிவிட்டிருந்தது. அதற்குக் காரணம், கோபமா என்றால் பத்மாவால் சொல்ல முடியவில்லை.

“அவரண்ட… என்ன தாத்தா கோபம்?” – வியந்தபடியே கேட்டாள் பத்மா.

“கோபமில்லைன்னா… அவன் முகத்தை உன் கண்ணு நேரா பாக்க மாட்டேங்கிறதேடி, கொழந்தே” என அவர் கொக்கி போட,

“அது… அது… வந்து…” எனத் திக்கிய பத்மாவிற்கு, இவர் கண்ணிற்கு மட்டும் எப்படி எல்லா விஷயமும் தெளிவுற படுகிறது என்று வியப்பாய் இருந்தது.

அவளைப் பேசத் தூண்டும் முயற்சி எதிலும் ஈடுபடாமல், அவள் கண்களை நேர் கோட்டில் சந்தித்தபடி, மௌனமாய் அமர்ந்திருந்தார் ராஜகோபாலன்.

உள்ளத்தில் உள்ளதெல்லாம் அவரிடம் கொட்டியதாலோ… இல்லை அவரிடம் சொன்னால் ஒரு நல்ல முடிவு கிடைக்கும் என்றெண்ணியதாலோ, “அது… அது… தாத்தா… இப்ப நடக்கிற கஷ்டத்துக்கெல்லாம் மூலக் காரணம்… எங்க கல்யாணம் தானே! நானும்… அவரும் வீட்டை எதுத்துண்டு… கல்யாணம் கட்டிண்டு இருக்கலைன்னு வைங்கோ… வாழ்க்கை வேற மாதிரி ஆயிருக்குமோனோ! அவரைப் பாக்கும் போதெல்லாம்… நம்ம தப்போடு தொடக்கம் இதான்ன்னு நெஞ்சை அரிக்கறது தாத்தா. அவரை… நிமிந்தே

பார்க்க முடியலை” என்று குனிந்த தலையும், சங்கடத்தில் சுதி குறைந்த தவறுமாய். கொஞ்சம் அழுகை கூட வந்தது.

அவள் அழுது முடிப்பதற்கு சற்று நேரம் கொடுத்த ராஜகோபாலன், “தப்போடு தொடக்கம் அதான்கிறதால… அதை முடிவுக்குக் கொண்டு வந்திரலாம்ன்னு நினைக்கிறியோ?” என்றார் கூர்மையாக.

அவர் கேட்பதன் அர்த்தம், முழுதாய் புரிய, மொத்தமாய் இரண்டு நிமிடங்கள் பிடித்தன பத்மாவிற்கு.

அர்த்தம் புரிந்த மறுவினாடி, “தாத்தா!!!!” என அதிர்ந்து அறைகூவியவள்,

“ஒரு தப்பைப் பண்ணிட்டு… ஜென்மா முழுசுக்கும் ரணப்பட்றது போரும் தாத்தா. இனிமேயும்… அவரை விட்டுப் பிரிஞ்சு… டைவர்ஸ்… அது இதுன்னு வாழ்க்கையில தப்பு மேல தப்பு பண்ண விரும்பல” என்றாள் பத்மாவதி, கைகளை உயர்த்தி… அவரைக் கும்பிட்டப்படி.

“காசு… பணம் தான் முக்கியம்ன்னு நினைச்சிண்டு… என் பையனை யாரோ ஒரு பிச்சைக்காரி கையில வளர விட்டுட்டேன். அதுவே… இந்த ஜென்மாவுக்கான பாவத்தை நேக்கு அள்ளிக் கொடுத்துடுத்து. இனிமேயும்… அவன் அம்மா – அப்பா ரெண்டு பேரும் ஒண்ணா இல்லாத சூழ்நிலையில வளர்ந்தான்னு வைங்கோ…நேக்கு சாகற காலத்தில நல்ல வழியே கிடைக்காது தாத்தா. வேண்டாம்! எங்களால… எங்க பையன்… அனுபவிச்ச வேதனையெல்லாம் போரும். அவன்… இன்னமும் மனசு நோக வேண்டாம்” என்றாள் தீர்மானமாய்.

“அசடு!! பெரிய வார்த்தையெல்லாம் பேசப்பிடாது! வாழ வேண்டிய காலத்தில… சாகற வழியைப் பத்தி பேசுவாளா?” என அவளை அதட்டிய ராஜகோபாலன்,

“தப்பு பண்ணிட்டோம்… தப்பு பண்ணிட்டோம்ன்னு சொல்லிண்டே இருக்கியே ஒழிய…அதை சரி பண்றதுக்கு ஒண்ணும் செய்யக் காணோமேடிம்மா” என்றார் மர்மமாய்.

“தாத்தா…!!!” – மீண்டும் அதிர்வது பத்மாவின் முறையாகிற்று.

“வேலையை விட்டுட்டே… பையனோடவே இருக்க… சென்னைக்கே மாத்தி வந்துட்டேள்… இதெல்லாம் சரி பண்ற கணக்கில சேர்த்தியில்லையாடா ராஜகோபாலான்னு கேட்கறியா கொழந்தே!” – அவளது மனம் எண்ணியதைத் தானே கூறிய ராஜகோபாலன்,

பத்மாவின் கண்களில் ஆமோதிப்பிற்கான ஒளி தெரியவும், “இதெல்லாம்… வேதாந்த் விஷயத்தில நடந்த தப்பை சரி செய்யறதுக்காக… செஞ்சது! ஆனா… நீ சொன்னையே… மூலக் காரணம்… தப்பின் தொடக்கம்ன்னு… அதுக்கு ஒண்ணும் செய்யக் காணோமே?” என அவர் வினவியபோது, நடு மண்டையில் யாரோ ஓங்கி அடித்தது போலிருந்தது பத்மாவிற்கு.

“தாத்தா!!!” என அவள் அதிரும் போதே, பார்த்தசாரதி கோவில் வந்துவிட்டிருக்க,

“டேய்… வேதாந்த் பையா! கோவில் வந்துடுத்துடா…! இறங்கலாமா?” என்றபடி, பேரனைத் தூக்கிக் கொண்டு, ஆட்டோவை விட்டு இறங்கினார் ராஜகோபாலன்.

“இங்க இருக்காரில்ல உம்மாச்சி… அந்த உம்மாச்சி… மீசை வச்சிருப்பார்டா ராஜா! பெச்சு மீசை…!!” என்று கண்ணை உருட்டி, சின்னக் கண்ணனுக்குக் கதை சொல்லியபடி, அவர் நடக்க, வேறுவழியில்லாமல் அவர் பின்னே ஓடினாள் பத்மாவதி.

“தாத்தா… தாத்தா… என்ன செய்றது தாத்தா…” என அவள் மூச்சிரைக்கக் கேட்க,

“கோவில்ல என்னடி கொழந்தே செய்வா? பெருமாளை நன்னா செவிச்சிட்டு வா… ” என்றார் அவரோ புரியதவராய்.

“அதில்ல தாத்தா… ஒண்ணும் செய்யக் காணோமேன்னு சொன்னேளே! அதுக்குக் கேக்கிறேன்…” என்ற பத்மாவதிக்கு, மீண்டும் மீண்டும் தாங்கள் செய்த தப்பைச் சொல்லிக் கொண்டே இருக்க ஒரு மாதிரியாக இருந்தது.

“எல்லாத்தையும் சொல்லிட்டா… நான் ஆச்சாரியன் ஆகிடுவேன்டி கொழந்தே! நீங்க… தான் பார்த்துக்கணும்” என்றவர், இரண்டெட்டு வேகமாய் எடுத்துவைத்து, பத்மாவைக் கடந்து சென்றுவிட்டார்.

பத்மாவிற்குப் புரிந்து போயிற்று. “நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன். இனிமேல், அதை சரி செய்வதும்… சரி செய்யாமல் போவதும் உன் பாடு” என்ற அவரது எண்ணம் பரிபூரணமாய் விளங்க,

கோவிலில் பெருமாள் முன்னே நின்ற ஓரோர் வினாடியும், “எப்படி? எப்படி? என்ன செய்யலாம்?” என்று அதிலேயே மனம் தவித்துக் கொண்டிருந்தது.

சந்நிதியில் நின்று கொண்டு, என்னை வணங்காமல்… உன் கவலையிலேயே உழன்று கொண்டிருக்கிறாயே என்று எந்தக் கடவுளும் பக்தனை வைவதில்லை. பக்தனின் மனதில் இருக்கும் சஞ்சலத்தைப் போக்க ஏதாவது செய்யலாம் என்றெண்ணுவதாலேயே, அவர் கடவுளாகி விடுகிறார். நாம் மனிதராகி விடுகிறோம்.

பத்மாவின் மனதினுள்ளும், தாங்கள் செய்ய வேண்டிய பிராயச்சித்தத்தின் தொடக்கம் சிறு ஒளியாய் பரவியது.

கலங்கிய மனதுடன் வீட்டிலிருந்து புறப்பட்டவள், தெளிந்த மனதுடன்… அடுத்து செய்ய வேண்டிய காரியங்களைப் பட்டியலிட்டபடி வீட்டிற்குத் திரும்பி வந்தாள்.

கோவிலுக்குச் சென்ற ஆட்டோவிலேயே அவர்கள் வீடு திரும்பியபோது, வாசலில் நின்று கொண்டிருந்தான் ஸ்ரீனிவாசன்.

“பொறாமையில உன் ஆம்படையான் ரெண்டு கிலோ இளைச்சுட்டான் போலவே” என்று கிண்டல் செய்தபடி, ஆட்டோவை விட்டு இறங்கிய ராஜகோபாலன், முருகேசனிடம் பணக்கணக்கை சரி பண்ணிக் கொண்டிருந்த வேளையில்,

தூங்கி வழிந்த பிள்ளையை மட்டுமல்லாது, மற்ற சாமான்களையும் சுமந்து கொண்டு, பத்மா இறங்க சிரமப்படுவதைக் கண்ட ராஜகோபாலன்,

“தடிமாடாட்டம் நிக்கிறியேடா… அவளண்ட குழந்தையை வாங்கலாமோனோ” எனக் கடிந்து கொள்ளவே,

சிறு சங்கடத்துடன், முகத்தை நிமிர்ந்து பாராமல், மெல்ல நடந்து வந்தான் ஸ்ரீனிவாசன்.

“வேணாம் தாத்தா… அவருக்கே முதுகில அடி பட்டிருக்கில்லையா? நா தூக்கிப்பேன்” – கணவனுக்காக பரிந்து வந்தாள் பத்மா.

“டாக்டரண்ட போய்… இதைச் சொன்னேன்னு வையு… வாயிலேயே ரெண்டு போடுவார்! நன்னா… எழுந்து நடக்கலாம்… ஓடலாம்… ஆடலாம்ன்னு ஏகப்பட்ட லாம் போடறார். நீ… என்னவோ புள்ளையைத் தூக்குறதுக்கு… அவனுக்குப் பரிஞ்சிண்டு வரே?!” – பேத்திக்கு ஒரு கொட்டு வைத்தவர்,

“நீ… இன்னும் அவளண்ட பிள்ளையாய் வாங்கலியாடா படவா?” என மீண்டும் அதட்டினார்.

வேகமாய் இரண்டெட்டு வைத்து, பத்மாவின் கையிலிருந்து மகனை வாங்கினான் ஸ்ரீனிவாசன்.

ஆனால், கண்கள் மட்டும்… பத்மாவை நேர் கோட்டில் சந்திக்கவே இல்லை. தலையே நிமிரவில்லை என்கையில், கண்கள் எங்கே பார்ப்பது! உதடுகள் எங்கே துடிப்பது!

அவளுக்கு நேரே நிற்கும் சந்தர்ப்பங்களைத் தவிர்க்கும் எண்ணத்துடன், குழந்தையை வாங்கிக் கொண்டு வேகமாய் வீட்டினுள் சென்றான் ஸ்ரீனிவாசன்.

பத்மாவும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

அதன் பின்னர், கால் மணி நேரத்திற்கு அவளை வரவேற்பறையில் காணவில்லை.

சாவித்ரியிடமும் மாலதியிடமும் கோவில் பிரசாதத்தை கொடுத்துவிட்டு, சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தவள், மெல்ல வரவேற்பறைக்கு வந்தாள்.

ராஜகோபாலனைக் காணவில்லை.

ஏனோ, “ஹப்பா…” என்ற பெருமூச்சு அவளையும் அறியாமல் வெளியே வந்தது.

என்னவோ போல்… ஹ்ம்ம்… கொஞ்சம் தயக்கமாகத் தான் இருந்தது.

ஆனாலும்!

இதென்னடா இது, புது பொண்ணாட்டம் என்று அவளுக்கே சற்று வியப்பாகத் தான் இருந்தது. இருந்தாலும், தயக்கத்தை வெளிக்கொணர முடியவில்லை.

“ஹ்ம்ம்… போ… போ…” என்று கோவிலில் எடுத்த தீர்மானம் குரல் கொடுக்க,

“ஏன்னா…” என மெல்ல அழைத்தாள், பத்மா.

மகனை மடியில் போட்டபடி, எதிரே இருந்த தொலைக்காட்சியை வெறித்தபடி அமர்ந்திருந்த ஸ்ரீனிவாசன், திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

அவன் அடிப்பட்டு கிடந்த நாள் தொட்டு, பத்மா அவனை விளித்ததே இல்லை. நிமிர்ந்தே பார்ப்பதில்லை எனும்போது, எங்கே பார்ப்பது! எங்கே விளிப்பது! எங்கே பேசுவது!

பல நாட்களுக்குப் பின்னர், அவள் தன்னை அழைப்பதைக் கண்டு, அதிர்ந்து விழித்தான் ஸ்ரீனிவாசன்.

அவனது பார்வை புரிந்தபோது, அதற்கு பதில் சொல்லாமல், மடக்கியிருந்த தன் வலது உள்ளங்கையை விரித்தபடியே அவன் புறமாய் நீட்டியவள், “பெருமாள் பிரசாதம். இட்டுக்கோங்கோ” என்றாள் அவன் கண்ணையும் தன் கையையும் மாறி மாறிப் பார்த்தபடி.

அதிர்ச்சி மறைந்து வியப்பு மனதை ஆக்கிரமிக்க, “பத்து….” என்றான் ஸ்ரீனி. மகனை அணைத்திருந்த இரு கைகளில் வலது கை லேசாய் உயர்ந்து, மனைவியின் வலக்கையை நோக்கி நீண்டது.

“இட்டுக்கோங்கோ” என்றாள் பத்மா மீண்டும்.

சாவித்திரி, மாலதி இருவருக்கும் கொடுத்தது போக, கையில் இருந்ததோ கொஞ்சூண்டு பிரசாதம். குங்குமப் பிரசாதம் என்கையில், பெண்களுக்கு அதை இடுவதற்கு ஏகப்பட்ட இடங்கள் உண்டு… நெற்றி… நெற்றி வகிடு… தாலிக்கொடி என குங்குமத்தை மங்களத்தின் அடையாளமாய் எண்ணி,

எல்லா இடங்களிலும் வைத்துக் கொள்வதால், ஸ்ரீனிக்கு கொஞ்சமே மீதமிருந்தது.

அதனால், அவனால் பட்டும் படாமல் அதை எடுக்க முடியவில்லை.

கொஞ்சம் அழுத்தமாய்… பத்மாவின் கைகளில் தன் விரல்களை அதிக நேரம் பதித்து, குங்குமத்தை எடுத்துக் கொண்டான் ஸ்ரீனிவாசன்.

அவன் குங்குமத்தை எடுக்க எடுத்துக் கொண்ட நேரம் முழுதும், ஸ்ரீனியின் விழிகள் பத்மாவின் விழிகளுடன் கலந்தபடியே இருந்தன.

இருவருக்குள்ளும் புதிதாய் ஏதோ புரள்வது போலிருந்தது.

அவன் குங்குமத்தை எடுத்துக் கொண்டதும், முதுகிற்குப் பின்னால் மறைத்து வைத்திருந்த இடது கையை முன்பக்கம் நீட்டியவள், “உங்களுக்கு…அக்காரவடிசல்ன்னா அலாதிப் பிரியம்ன்னு நேக்கு இப்போ தான் தெரிஞ்சது. கோவில்ல பிரசாதமா கொடுத்தா… உங்களுக்காக எடுத்துண்டு வந்தேன்…” என்றாள்.

அவளையும் அறியாமல், சிறு வெட்கம் ஒன்று அவள் முகத்தில் தவழ்ந்தது.

அதே சமயம், அவனையும் அறியாமல் சிறு புன்னகை ஒன்று அவன் இதழோரம் குடி வந்தது.

“உறவோவியம்” – அத்தியாயம் 19

பெருமாள் கோவில் அக்காரவடசலின் சுவையே அலாதி தானோ… இல்லை தனக்காக மனைவி தனியே எடுத்து வந்திருக்கிறாள் என்ற எண்ணம் அதன் சுவையை கூடியதோ… இல்லை பல நாட்களுக்குப் பின்னர் பத்மா தன்னுடன் பேசிவிட்டாள் என்ற நிம்மதியோ… ஸ்ரீனிவாசன் பத்மாவதி கொடுத்த அக்காரவடசலை பருக்கை விடாமல் உண்டான்.

அவன் ரசித்து… ருசித்து உண்பதை சிறு சிரிப்புடன் பார்த்திருந்த பத்மா, “உங்களண்ட கொஞ்சம் பேசணும்…” என்றாள்.

“நேக்கும் தான்…” என்றவன், மடியில் இருந்த பிள்ளையைத் தூக்கப் போகவும்,

“நா… வேதுவை ரூம்ல படுக்க வச்சுட்டு… அங்க இருக்கேன். நீங்க கை அலம்பிட்டு…அங்க வாங்கோ…” எனக் கூறி, மகனை அவனது கையிலிருந்து வாங்கிக் கொண்ட பத்மா, அறை நோக்கி நடந்தாள்.

நாம் பேச வேண்டிய விஷயம், கூடத்தில் வைத்துப் பேச வேண்டியதல்ல… அறைக்குள் வைத்துப் பேசவேண்டியது என்பதைச் சொல்லாமல் சொல்லிச் சென்ற மனைவி எண்ணி, முகம் சிரிப்பில் விரிந்தது ஸ்ரீநிவாசனுக்கு.

சிரிப்புடனே கைகளைத் துடைத்தபடி வந்தவனை, “என்னடா சீனு? முகமெல்லாம் சிரிப்பா இருக்கு?” என்ற மாலதியின் சிரிப்பு தடுத்து நிறுத்தியது.

என்ன சொல்வதென்று தெரியாமல், “அது…அது மாலதிம்மா…” என்று தடுமாறியவன், தன்னைச் சுதாரித்துக் கொள்வதற்குள்

“அக்காரவடசலோட இனிப்பு… உதட்டுப் பக்கமா சிரிப்பா ஒட்டிண்டுத்துடி மாலு! என்னடா சீனு… அப்படித் தானே?” என்று கேலி செய்தார் சாவித்திரி.

பெரியன்னை கூறியதன் அர்த்தம் மூலையில் பதிவதற்குள், கைகள் வேகவேகமாய் மேலே உயர்ந்து, உதட்டைத் துடைத்து விட்டன.

“ஹஹ்ஹஹா!!!” – இரு பெண்மணிகளும் மனம் மலர சிரிக்கவும் தான்,

சாவித்திரி கேட்ட கேள்வியின் அர்த்தமும், தான் செய்த செயலின் அபத்தமும் முழுதாய் புரிந்தது சீனுவிற்கு.

“என்னடா கண்ணா… புரிஞ்சுடுத்தா?” என்று அதற்கும் கேலி செய்தார் மாலதி.

என்ன சொல்லுவான்? இல்லை… என்ன தான் சொல்ல முடியும்? “ஹிஹிஹி…” என்று அசடு வழிந்தபடி அங்கிருந்து நகர்வதைத் தவிர, அவனால் வேறு என்னதான் செய்ய முடியும்!?

அவன் முகத்தில் தங்கியிருந்த மறையா சிரிப்பு, அறைக்குள் நுழைந்ததும் உறைந்து போனது.

உறங்கிக் கொண்டிருந்த மகனின் அருகே அமர்ந்து, கண்ணில் சொல்லொண்ணா வலியுடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் பத்மா.

பதுமையென சமைந்திருந்த பத்மாவின் கைகள் மட்டும், மகனின் முதுகை வருடியபடியே இருந்தன.

“ஹய்யோ… அம்மா… இப்படியாகி விட்டதே” என்று கதறவில்லை…

பிள்ளையை மார்போடு அணைத்துக் கொண்டு, “என்னை மன்னித்துவிடடா மகனே!” என்று மன்னிப்பு கோரவில்லை…

“எல்லாம் என்னால் தான்… எல்லாம் என் மோகத்தாலும் ஆசையாலும் தான்” என்று நெஞ்சில் அடித்துக் கொண்டு அழவில்லை…

குற்ற உணர்ச்சி… தலை தாழ்ந்து நிற்கவில்லை…

ஆனாலும், பத்மாவின் நெஞ்சுக்குள் அடைத்துக் கொண்டிருக்கும் துயரம், ஸ்ரீனிக்குப் புரிந்தது.

ஒரு தாயாய், அவளது தவிப்பை உணர்ந்து கொள்ள முடிந்தது.

கண்ணில் கண்ணீர் இல்லாத போதும், கண்ணீரையும் மீறி அங்கே கனமாய் ஒரு துயரம் குடி கொண்டிருந்தது.

உறங்கும் மகன்… தன் கண்ணை விட்டு அகன்று போய்விடுவானோ என்ற பயத்தில், கண்களைக் கூடச் சிமிட்டாமல்… மகனையே பார்த்திருந்த அவளது அலைப்புருதல் ஸ்ரீனியை எட்டியது.

ஆயிரமாயிரம் வார்த்தைகளும்… கதறித் துடிக்கும் கண்ணீரும் வெளியிட்டிராத துயரத்தை, பத்மாவின் அந்த மோனநிலை… ஸ்ரீனிக்கு உணர்த்தியது.

அதிலும், மகனை வருடிய அக்கரங்களில் தென்பட்ட நடுக்கம்… அவனது உள்ளத்தை சம்மட்டி கொண்டு அடித்து… மெல்ல மெல்ல நகர்த்தியது.

வேதுவை… அந்த சிக்னலில் பார்த்த நாள் தொட்டு, பத்மா அழுது பார்த்திருக்கிறான். தலை குனிந்து நின்று பார்த்திருக்கிறான். புலம்பிப் பார்த்திருக்கிறான். “தப்பு செய்துவிட்டேன்… தப்பு பண்ணிட்டேன்…” என்று அரற்றிப் பார்த்திருக்கிறான். “இனிமேல் செய்ய மாட்டேன்” என்று மன்னிப்பு கேட்டுப் பார்த்திருக்கிறான். ஆனால், இப்படியொரு நிலையில்… மகனையும் அவளையும் கண்டதில்லை.

நெஞ்சுக்குள் ஏற்கனவே இருந்த பாரம், கூடுதல் கனம் பெற்றது போல் தொண்டையை அடைத்தது ஸ்ரீனிக்கு.

“ப….” என்று அடைத்த தொண்டையைச் செருமிக் கொண்டு, அவன் அழைக்கத் தொடங்கியவனின் வார்த்தைகள், தன் எதிரே திரையிடப்பட்ட காட்சியில் தொண்டையிலேயே சிக்கிக் கொண்டன.

கட்டிலின் மையத்தில் வேதாந்த் உறங்கிக் கொண்டிருக்க, அவனது வலப்பக்கமாய் அமர்ந்து… பிள்ளையையே பார்த்துக் கொண்டிருந்தாள் பத்மா.

அப்போது, மல்லாக்க படுத்திருந்த வேதாந்த், சட்டென ஏற்பட்ட மாற்றத்தினால் குப்பறப் படுத்துக் கொண்டான்.

குப்பறப்படுக்க முற்பட்ட வேளையில், அருகே தாயின் சேலையை அவனது ஓரவிழிகள் கண்டு விட்டன போலும்.

லேசாய் இதழ் விரித்து, புன்னகையை உதிர்த்தவன், கையை நீட்டி… தாயின் சேலையை இழுத்துக் கொண்டான்.

இழுத்துக் கொண்டதோடு மட்டுமல்லாது, சேலையை கையில் சுற்றிக் கொண்டு, கட்டை விரலை எடுத்து வாயில் வைத்து சூப்ப ஆரம்பித்தான்.

இரண்டு தரம் சூப்பியவன், “ஹ்ஹாஹ்…” என தன் மழலைக்கே உரிய விதமாய் சத்தம் எழுப்பிக் கொண்டு, கொஞ்சம் நகர்ந்து, தாயின் அருகே வந்தான்.

“ஹ்ஹ்ஹ்…ஹீ…. ” என்று முனங்கிய பிள்ளை, தலையை மெல்ல முண்டி… முண்டி முன்னேறினான்.

ஒரு நிலையில், பத்மாவின் தொடையோடு அவனது தலை சண்டை போடும் நிலை வர,

வந்தவனின் நாக்கில், சரஸ்வதி தன் வாசத்தைத் துவங்கினாள் போலும்!

அவனாகவே தலையை மெல்ல உயர்த்தி, தாயின் மடி மீது தலை வைத்துக் கொண்டு, “ம்மா… ” என்றான் தூக்கக் கலக்கம் மாறாத குரலில்.

பத்மாவின் கண்ணிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வழிந்து, பிள்ளையின் உச்சந்தலையை ஈரமாக்கியது.

அதற்கு மாறாய், முகத்திலிருந்த வேதனை மறைந்து… எதையோ சாதித்துவிட்ட புன்னகையொன்று அவளது முகத்தில் மலர்ந்தது. அன்பின் உன்னதத்தை வெளிப்படுத்தும் வார்த்தையன்றோ – அம்மா!

அதுவும், தன் வயிற்றில் உதித்த பிள்ளை… தன் செல்ல மகவு… தன் ரத்தத்தின் வடிவம்… தன் உயிரின் நிழல்… தன்னை முதன்முதலாக “அம்மா” என்றழைக்கும் தருணங்கள், எத்தனை எத்தனை இனிமையானது என்பதை வர்ணிக்க, தமிழ் மொழி என்ன… எந்த மொழியிலுமே வார்த்தைகள் இல்லை.

ஸ்ரீனிக்கும், கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது. வலியால் வந்த கண்ணீர் அல்ல. பாசத்தால் வந்த கண்ணீர் அது.

இந்த உணர்வு, அவனுக்குப் புதிது.

பணம்… புகழ்… அந்தஸ்து… சொத்து… வீடு என்று ஓடிக் கொண்டிருந்தவனின் வாழ்க்கை, வேதுவின் நிலையால் தலைகீழாய்

புரண்டது என்றால், இப்போது அவன் கண்ட காட்சி… தலைகீழாய் புரண்ட வாழ்க்கையைத் தூக்கி நிறுத்தி, “இதான்டா வாழ்க்கை!” என்று தெலுங்கு பட வசனம் போல், அவனைப் பார்த்து நரம்பு புடைத்தது!

பணமெனும் அலங்காரப் பொருளைப் பூசியபடி மினுமினுத்துக் கொண்டிருந்த அவர்களது வாழ்க்கை, இடியுடன் கூடிய மழையினால் மேல்துணியையே இழந்துவிட்டு நிற்க,

அவனது குடும்பத்தின் ஆதரவு, மானத்தைக் காக்கும் துணியாய் மாறியது எனில்,

அவனது பிள்ளையின் அணைப்பும் அழைப்பும், அவர்களுக்கு பட்டாடையை பரிசளித்தது.

முந்தைய ஆடையைப் போல்… ஜகஜோதியாய் மின்னாவிடினும், ஒரு பாந்தமான அழகை… இந்த ஆடை ஏந்தி வந்தது.

உடலெல்லாம் ஜரிகை வேய்ந்த புடவையே ஆனாலும்… அதன் விலை பல லட்சங்களே ஆனாலும், “இதென்ன… இத்தனை காடியா இருக்கு?” என்ற விமர்சனத்திற்குத் தான்… அப்புடவை ஆளாகும்!

அதுவே, ஆயிரத்திலோ… ஏன் ஐநூறிலோ வாங்கிய புடவையை, பாந்தமாய்… படியும் படியாய்… மடிப்பு கலையாது கட்டினாலே போதும். “ரொம்ப அழகா இருக்கு!” என்ற விமர்சனம் தானாய் வரும்.

அதே போன்ற நிலை தான், ஸ்ரீனிக்கும் பத்மாவிற்கும் நேர்ந்தது.

“பணமே பிரதானம்!” என்ற அவர்களது நினைப்பை விட,

“பாசமே பிரமாதம்!!” என்ற இன்னத்திய செயல், வாழ்வை மாற்றியது.

கண்ணில் வழிந்த கண்ணீரைத் துடைக்க மனமில்லாமல், தன் மடியில் தலை சாய்த்துப் படுத்துக் கொண்டு, செல்லம் கொஞ்சிக் கொண்டிருந்த மகனின் தலை மீது தலை வைத்து குனிந்து அமர்ந்திருந்த மனைவியை ஆரத் தழுவிக் கொண்டான், ஸ்ரீனிவாசன்.

பிள்ளையுடனான பாசப் பிணைப்பில், கணவனின் வரவைக் கூட உணராதிருந்த பத்மாவிற்கு, அந்த அணைப்பு திகைப்பைக் கொடுத்தப் போதும், அதிர்ச்சியைக் கொடுக்கவில்லை.

தனக்கும் அந்த அணைப்பு பிடித்திருக்கிறது என்பதைக் காட்டுபவள் போல், பிள்ளையை அணைத்திருந்த கையில் ஒன்றை உயர்த்தி, சற்றே பின்னால் வளைத்து, தன்னைப் பின் புறமாய் அணைத்திருந்த கணவனின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள் பத்மாவதி.

அங்கே, ஒரு குடும்பம் சங்கமித்தது!

“பத்து… ” என்றவனின் குரலில் நிரம்பியிருந்த பாசம், அவனது முந்தைய “பத்ஸ்!” என்ற அழைப்பை மழுங்கடிக்க, பத்மாவின் மனம் கனமற்ற சிறகானது.

அவளும், “வேது கண்ணா…” எனவும், “ஸ்ரீனிப்பா” எனவும் மனதார, தன் வாழ்வின் இரு முக்கிய ஆண்களையும் விளித்து சந்தோஷப்பட்டாள்.

இவர்கள் சந்தோஷப்படலாம்! ஆனால், பிள்ளை!

அறுபது கிலோ பத்மாவும், எழுபது கிலோ ஸ்ரீனியும் ஒருவர் மேல் ஒருவராக… எட்டு கிலோ கூட இல்லாத சின்னஞ்சிறு பாலகனை நசுக்கினால், அவன் என்ன செய்வான்?!

பாரம் தாங்க முடியாமல், “வீல்!!!!” என்று அழுவான்! அவ்வளவே!

அதையே தான், வேதாந்தும் செய்தான்.

“அச்சச்சோ!!” – பெற்றோர் இருவரும் பயந்து விலக, பிள்ளை முகத்தை உயர்த்தி, இருவரையும் மாறி மாறி பார்த்தது! இல்லை, முறைத்தது!

அவனது முறைப்புக்கு முதலில் செவிமடித்தது பத்மா தான்.

“சாரிடா… வேது! அம்மா… சாரி! அப்பா… சாரி! சரியா? நீ… தூங்குடா ராஜா!” என்றாள் கைகளைக் குவித்துக் கெஞ்சியபடி.

ஸ்ரீனிக்குத் தான் என்ன சொல்வதென்று தெரியவில்லை.

சேட்டை செய்து மாட்டிக் கொண்ட சிறுவனைப் போல், மகன் முன்னே விழித்துக் கொண்டு நின்றான் அந்தத் தந்தை.

தாயின் பேச்சில் ஓரளவு சமாதானமடைந்த பிள்ளை, ஒன்றுமே சொல்லாமல் நின்று கொண்டிருந்த தந்தையின் பக்கம் பார்வையைத் திருப்பி, குறுகுறுவென்று பார்த்தான்.

“ஹே… பத்து… என்னடி இப்படி பாக்கறான்…” – கொஞ்சம் பயந்து தான் போனான், ஸ்ரீனிவாசன்.

கணவனின் பாவனையில், பத்மாவின் கவலையெல்லாம் இருந்த இடமில்லாமல் மறைந்து போக, “ஹ்ஹஹஹா” என்று மனம்விட்டுச் சிரித்தாள்.

“என்னடி சிரிக்கறே?” என்று அழாத குறையாக மன்றாடிய தந்தையைப் பார்த்தோ, இல்லை கண்ணில் நீர் வரச் சிரித்துக் கொண்டிருந்த தாயைப் பார்த்தோ, “க்கீக்க்கீ” என்று சிரித்தான் செல்வன்.

அதைக் கண்டதும், பத்மாவின் சிரிப்பு மேலும் விரிவடைந்தது.

“ஏய்… என்னடி அவனும் சிரிக்கறான்…” – மிகவும் பாவமாய் ஸ்ரீனி மீண்டும் கேட்க,

“ஹய்யோ! ஹய்யோ! என்ன தெரியும் உங்கப்பாவுக்கு!!” என்று தலையில் அடித்துக் கொண்டாள், பத்மா.

தாயைப் பின்பற்றி, வேதாந்தும் தன் இடக்கையால் தலையில் அடித்துக் கொண்டான்.

தன் கலக்கம்… பாவம் எல்லாம் மறைய, “ஹ்ஹஹ்ஹம்ம்ம்” என்று வாய் விட்டுச் சிரித்த ஸ்ரீனி, ஒரு கையால் மகனை வாரியணைத்துக் கொண்டு, மறு கையால் மனைவியை அணைத்துக் கொண்டான்.

பக்கம் பக்கமாய் பேச்சு வார்த்தைகளும்… சமாதான முயற்சிகளும்… செய்ய வேண்டிய சமரசத்தை, மூவருக்குள்ளும் நடந்தேறிய அந்தச் சிறு சம்பவம் செய்து விட்டிருந்தது.

நூறு வார்த்தையை விட, ஒரு புகைப்படம் பெரிது என்று சும்மாவா சொன்னார்கள்!

வார்த்தைகளில் உண்டாக முடியாத பிணைப்பு, அணைப்பில் உண்டானது.

வருடக் கணக்கானாலும், சில காயங்களுக்கு வார்த்தை வடிவம் கொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்க வேண்டிய மனங்கள், இப்போது சிறகடித்துப் பறக்க ஆரம்பித்தன.

“ஐ அம் சாரிடி… பத்து…” என்றான் ஸ்ரீனி, குழந்தையின் கன்னத்திலும் மனைவியின் உச்சியிலும் மாறி மாறி முத்தம் வைத்தபடியே.

“ப்ச்! நானும் தான்னா தப்பு செஞ்சேன்… சொல்லப் போனா உங்களை விட அதிகமான தப்பு…” என்று பத்மா தொடங்க,

தன்னுடனான அவளது அணைப்பை கொஞ்சம் கூட்டியவன், “ஷ்… இனிமேல் செஞ்ச தப்பைப் பத்தி பேசப்படாது. அதை சீர் பண்ண என்ன செய்யலாம்ன்னு யோசிக்கணும்” என்றான்.

“ஹே! தாத்தாவும் இதே தான் சொன்னார்” என்று பத்மா அதிசயிக்க,

“ஹ்ம்ம்… அதுக்குத் தான் உன்னை அழைச்சிண்டு போயிருக்கார்ன்னு நேக்குத் தோணித்து” என யோசனையுடன் சொன்னவன்,

“பத்மா… நா ஒண்ணு யோசிச்சு வச்சிருக்கேன். செய்யலாமா சொல்லு…” என்று தொடங்கி, தன் எண்ணங்களை வெளியிட்டான்.

“சூப்பர்ன்னா! நேக்கு… இது தோணவே இல்லன்னா. நீங்க சொல்றாபடியே செஞ்சுடலாம்” எனத் தானும் ஒப்புக் கொண்ட பத்மா,

அதை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்றாள்.

“இப்பவேவா?” என்று தயங்கியபோதும், மனைவியையும் மகனையும் அழைத்துக் கொண்டு கூடத்திற்குச் சென்றான் ஸ்ரீனிவாசன்.

அங்கே, நடுநாயகமாய் போடப்பட்டிருந்த ஊஞ்சலில் அமர்ந்து கொண்டு பேப்பர் படித்துக் கொண்டிருந்தார் ராஜகோபாலன்.

மகன் ஒரு கையிலிருக்க, மனைவியை மறு கரத்தால் அணைத்தப்படி பேரன் கூட்டி வருவது ஓரக்கண்ணில் பட்டபோதும், முகத்தில் எதையும் காட்டாமல், பேப்பரிலேயே கவனமாய் இருந்தார் பெரியவர்.

வேதாந்தை பத்மாவின் கையில் கொடுத்துவிட்டு, பின்வாசலில் அமர்ந்து, ஜாதி மல்லிச் சரங்களைத் தொடுத்துக் கொண்டிருந்த மாலதியையும் சாவித்திரியையும் அழைத்து வந்தான் ஸ்ரீனி.

“என்னடா கண்ணா, விஷயம்?” என சாவித்திரி ஆரம்பிக்கக் காத்திருந்தவன் போல்,

“வேதுக்கு நாமகரணம் பண்ணனும்ன்னு நினைக்கிறேன் தாத்தா. நீங்க என்ன சொல்றேள்?” என விஷயத்திற்கு நேரடியாகவே வந்தான், பேரன்.

“ஏன்டா… நாமத்தைச் சொல்லி அழைச்சுண்டே… நாமம் வைக்கணும்ங்கிறையே!?” என அவர் சிரிக்க,

“ஜோக்கா?!” என்றான் பேரன், பல்லைக் கடித்தபடி.

“ஜோக்கில்லைடா படவா! ஃபாக்ட்!” என்றான் ராஜகோபாலன், பட்டென.

பெண்களும் மூவரும் அவரைப் பின்பற்றி சிரிக்க,

“ஷ்! வேதுக்கு… எதுவுமே முறையா சாஸ்திரப்படி நடக்கல. நாங்க நடத்தலை. அதான்… குழந்தைகளுக்கு முதல செய்ற சம்பிரதாயம் தொட்டு…எல்லாம் செய்யணும்ன்னு நினைக்கிறேன்” என்றான் ஸ்ரீனி, சிறு குரலில்.

“ஹ்ம்ம் செய்! வேதாந்த்ங்கிற பேரு தானே?” – ஏன் கேட்டார் என்று தெரியவில்லை. ஆனால், கேள்வியில் கூர்மையிருந்தது.

“ஹ்ம்ம். இல்லை” என்றவன்,

சிறு இடைவேளைக்குப் பின்னர்,

“ராதாகிருஷ்ணன்!” என்றான் முற்றத்தில் தொங்கிக் கொண்டிருந்த தன் தாயின் படத்தைப் பார்த்தபடி.

“உறவோவியம்” – அத்தியாயம் 20

வேதாந்திற்கு “நாமகரணம்” செய்வதென்று, ஸ்ரீனி முடிவு செய்து விட்டதை, ராஜகோபாலனும் ஒப்புக் கொண்டார்.

சாவித்திரி… மாலதி மட்டுமல்லாது, ராஜகோபாலனின் பெரிய மகன்கள் இருவருக்குமே, ஸ்ரீனி இவ்வளவு தூரம் மாறி வந்ததில் ஏகப்பட்ட சந்தோசம்.

தப்பை சரிசெய்பவனை ஏற்றுக் கொள்ளவும், ஒரு நல்ல மனம் வேண்டும்! அது, இப்போதைய சமூகத்தில் பலரிடத்தில் இருப்பதில்லை.

தங்களை மீறிக் கொண்டு செல்லும் பிள்ளைகள், வாழ்வில் அடிப்பட்டு வந்து நிற்கையில்,

“நான் சொன்னேன்ல… கேட்டியா?”

“என்னை மீறிட்டுப் போனே இல்ல… அதான் இப்படி அடிப்பட்டு வந்து நிக்கிறே!”

“நல்லா வேணும்! என்னை… மதிக்காம போனே இல்லையா? அதுக்குரிய தண்டனை தான் இது! அனுபவி!” என்று பேசும் பெற்றோர்கள் தான் அதிகம்.

முதலில் திட்டினாலும், “சரி… போனது போகட்டும்!” என்று அவர்களை அரவணைத்துக் கொள்ளும் பெற்றோர்களின் சதவீதம், குறைவே!

அப்படியே ஏற்றுக் கொண்டாலும், சமயம் வரும் போதெல்லாம் “என்னை மதிக்காம போனான். இப்ப… உங்களை விட்டா ஆளே இல்லைன்னு என்ட்டையே வந்து நிக்கிறான்” என்று பிள்ளைகளைப் பிறர் முன்னிலையில் தலை குனிய வைப்பவர்கள், அந்தக் குறைந்த சதவீதத்தில் அதிக விகிதம்!

மேற்கூறிய மூன்று தரப்பிலும் வராமல், துயரத்தில் கை கொடுத்து… அறிவுரை என்ற பெயரில் அவர்களைக் கூனிக் குறுகி நிற்க விடாமல் செய்து… நல் வாழ்க்கைக்கு வழிகாட்டுபவர்கள் வெகு வெகு சிலரே! ராஜகோபாலனைப் போல்!

ஆனால், ராஜகோபாலனின் மகனும்… அவரைப் போலவே இருக்க வேண்டும் என்று என்ன அவசியம்!? ஆம், கமலக்கண்ணனால் ஸ்ரீனியின் தப்பை இயல்பாய் மன்னிக்க முடியவில்லை.

அதனாலேயே, வேலை நிமித்தமாக டெல்லி சென்றிருந்தவர், சென்னைக்கு வரப் பிரியப்படவில்லை.

தன்னால் எவ்வளவு தூரம் முடியுமோ, அவ்வளவு தூரம் வேலையை நீட்டித்தார். அங்கிருந்து வேறு ஊர்களுக்குச் செல்ல வேண்டி வந்தால், அதையும் தானே முன்வந்து செய்தார்.

அவருக்கு, மகன் மீதும் கோபமிருந்தது. அவனைச் சுலபமாய் மன்னித்த தந்தை மீதும் கோபமிருந்தது. தந்தையைப் பின்பற்றிய தமையன்மார் மீதும் கோபமிருந்தது. மொத்தமாய், மூட்டைக் கணக்கில் கோபம்! கோபம்! கோபம்! அவ்வளவே!

“நாமகரணம்” என்ற பேச்சு வந்ததும், “அப்பாவண்ட… சொல்லணுமே தாத்தப்பா” என்று மென்று முழுங்கினான் ஸ்ரீனிவாசன்.

“ஹ்ம்ம். சொல்லலாம்” என ராஜகோபாலன் யோசனையாய் இழுக்க,

“நானே சொல்லட்டுமா, தாத்தா!? செஞ்சதுக்கெல்லாம் மன்னிப்பு கேட்டுட்டு… நானே சொல்லிடுறேன்” என முன்வந்தான் பேரன்.

“இல்ல வேணாம். நா அவனண்ட பேசுறேன்” என அப்பேச்சை அத்தோடு முடிவுக்கு இட்டு வந்தார்.

ஆனால், ஸ்ரீனி அதை உணர்ந்தபடாய் இல்லை.

“இல்ல தாத்தப்பா! எம் மேல இருக்க கோபத்தில தான்… அப்பா இத்தனை நாள் ஆத்துக்கே வரலைன்னு தோணறது! அதான்… நானே…” என அவன் மீண்டும் இழுக்க,

“கோபமா இருக்கான்னு தோணறதில்லையோ? பின்ன… என்னடா அவனண்ட பேசுறேன்… பேசுறேன்னு தவ்விண்டு இருக்கே? நீ… பேசினேன்னு வை… ருத்ரதாண்டவம் தான் ஆடுவான். அவனண்ட… பேச்சு

வாங்கனும்ன்னு நோக்கென்ன தலையெழுத்தா?! பேசாதிரு!” என அவனை அடக்கினார் பெரியவர்.

“இல்ல தாத்தப்பா! நா… செஞ்ச தப்புக்கு…” என சீனு தொடங்க,

“சும்மா… இதையே சொல்லாதேடா! மனுஷான்னா தப்பு செய்றது தான்…!” என்று அவனை அதட்டியவர்,

“மனுஷாள்ல எத்தனை பேர்… செஞ்ச தப்பை உணர்ந்து… திருத்திக்கிரா… சொல்லு?! நூத்தில ரெண்டு பேரு கூட… திருத்திக்கறது இல்லை. செஞ்ச தப்பை… நிவர்த்தி செய்றேன்னு சொல்ற உன்னை… அவன் ஏதானும் சொல்லுவான்டா. நீ தாங்கிப்பியோ என்னவோ… என்னால முடியாது!” என்றார் பேரனின் முதுகில் தட்டி.

அவரது பேச்சில் மனம் நெகிழ்ந்தவனாய், அவரது தோளோடு தோள் சேரும் படி நின்று கொண்டு, “நேக்கு… நம்பிக்கையிருக்கு தாத்தப்பா! வேதுவை பார்த்துட்டா… அப்பாவோட கோபமெல்லாம் காணாது போய்டும்” என்றான் உறுதியான குரலில்.

“எப்படிடா கண்ணா?” – தெரிந்து கொண்டே கேள்வி கேட்கும் கலை, ராஜகோபலனுக்கு மட்டுமே கை வரும்.

“நா… உங்களை எத்தனை வாட்டி தூக்கியெறிஞ்சு பேசியிருக்கேன். ஆனா… நீங்க? என்னோட செவன்த் ஸ்டாண்டர்ட்ல நடந்ததைக் கூட மறக்கல! அதே போல… ஒரு பாண்டிங்… வேதுக்கும் அப்பாக்கும் நடுவே ஸ்டார்ட் ஆகும் தாத்தப்பா! நேக்குத் தோணறது” என்றான் அவனோ, பெரியவரின் கையை விரித்து, அதற்குள் தன் கையை வைத்தபடி.

தனக்குள் இருந்த பேரனின் கையை அழுத்திக் கொடுத்தவர், “நீ… நன்னா இருப்பேடா!” என்றார் வாழ்த்தாக.

“ஹ்ம்ம் தேங்க்ஸ் தாத்தப்பா!” என்றவன், அவர் சுதாரிக்கும் முன்னர், கன்னத்தில் சின்னதாய் ஒரு முத்தம் வைத்து நிமிர்ந்தான்.

“ச்சீ… என்னடா படவா இது? எச்சில் பண்ணிண்டு!” என அவர் அடிக்க,

“ஹான்! வைஷூ பண்ணா மட்டும்… என் கண்ணாட்டின்னு கொஞ்சுறேள்! நா செஞ்சா மட்டும்… தப்போ!?” என்று சட்டைக் கையை மடக்கிவிட்டுக் கொண்டு, அவருடன் மல்லுக்கு நின்றான் பேரன்.

சட்டென சிரித்துவிட்டார், பெரியவர்.

“இன்னும்… நோக்கு இந்தப் பொறமை போகலையாடா படவா?” என அவர் சிரிக்க,

“ஹான்! இன்னொன்னு… உங்களண்ட சொல்லணும்ன்னு இருந்தேன். வைஷூன்னு சொன்னதும் தான் நியாபகம் வர்றது. பத்மாவோட ஆத்துக்குப் போயிட்டு வந்துடுறோம் தாத்தா. அவாளையும் நாமகரணத்துக்கு அழைக்கணுமோனோ?! முக்கியமா… அவா ஆத்துலையும் மன்னிப்பு கேட்கணுமே?” – சிறு சங்கடத்துடன் இழுத்தான், ஸ்ரீனி.

“ஹ்ம்ம்! குழந்தையை அழைச்சிண்டு போ” என்றார் பெரியவர், யோசனையுடன்.

“தாத்தப்பா, பத்மாவோட அப்பா என்ன சொல்லுவாரோன்னு யோசனையா இருக்கே?” என அவன் தயங்க,

“என்ன சொல்லுவாரா? அவர் பொண்ணை இழுத்துண்டு போனியோ இல்லையோ… நல்லா கேட்டுண்டு வா! நாலு சாத்து சாத்தினா கூட… வாங்கிக்கோ!” என்றார் காரமாய்.

ராஜகோபலனே இப்படிச் சொன்னதும், பெருத்த சேதாரத்தை எதிர்நோக்கியே, மாமியார் வீட்டிற்குச் சென்றான் ஸ்ரீனிவாசன்.

காயங்கள் ஆறிவிட்டபோதும், சீனு வண்டி ஓட்டுவதை விரும்பாத ராஜகோபாலன், வாடிக்கையாக வரும் ஆட்டோவை அழைத்தே, இருவரையும் பத்மாவின் தாய் வீட்டிற்கு வழியனுப்பி வைத்தார்.

போகும் வழியாவும், பத்மாவிற்கும் ஸ்ரீனிக்கும் ஏக பயம் தான்!

என்ன மாதிரியான வரவேற்பு கிடைக்குமோ என்று மனம் தடதடத்தது.

“ஏன் வந்தே?” என்று கேட்பார்களோ!?

“வெளிய போங்கோ!” என்று விரட்டுவார்களோ!?

“நீ… என் பொண்ணே இல்லை!” என்று மூஞ்சியில் அறைந்தது போல், கதவை அடைப்பார்களோ?!

“நா சொல்றதைக் கேட்டிருந்தா… இப்படி பிள்ளையைப் பிச்சைக் காரி கையில பாக்க வேண்டி வந்திருக்குமா?” என்று கேவலப்படுத்துவார்களோ?!

“எங்க ஆசியோட கட்டிண்டு இருந்தா… பிள்ளையை நாங்க வளர்த்திருப்போம் இல்லையா? இப்ப… அவனை அனாதை மாதிரி வளர விட்டுட்டியே?!” என்று சாடுவார்களோ!

“அப்பா… அம்மாவை மனசு நோகப்பண்ணிட்டு போனியோ இல்லையோ? அதான்… அம்மாவா உன் மனசு நொந்து போச்சு!” என்று சபிப்பார்களோ!?

இப்படி ஏகப்பட்ட எண்ணங்களின் நடுவே, தாய் வீடு வந்து சேர்ந்தாள் பத்மாவதி.

“வைஷ்ணவி பாப்பா வீடு தானே சார்? இந்தா… வந்துடுச்சு” என்று ஆட்டோக்காரர் சொன்னதும், இருவரும் தத்தம் பயத்திலிருந்து வெளிவந்து, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

“வெயிட் பண்ணுங்கோ… முருகேசன். வந்துடுறோம்” என்றபடி ஆட்டோவில் இருந்து இறங்கிய ஸ்ரீனியைப் பின்பற்றிய பத்மாவதி,

“ஏன்னா… நேக்கு… நேக்கு… பயமா இருக்கேன்னா!” என்றாள் அவனது கையைப் பற்றியபடி.

அவள் கையைத் தட்டிக் கொடுத்தவன், “எதனாலும் ஃபேஸ் பண்ணித் தான் ஆகணும், பத்து! என்ன… ஒண்ணு… சேர்ந்து ஃபேஸ் பண்ணுவோம். தட்ஸ் இட்! இனி… நீ தனியாள்… நா தனியாள்ன்னு இல்லாம… ரெண்டு பேருமா… ம்ஹூம் இந்தக் குட்டி மாஸ்டரும் சேர்ந்து மூணு பேருமா ஃபேஸ் பண்ணலாம். வா” என்றான் அழுத்தமாய்.

அக்குரல், உள்ளுக்குள் தைரிய விதையை தாராளமாய் தூவ, “சரின்னா!” என்ற பத்மா, அவனது கையிலிருந்த மகனை வாங்கிக் கொண்டு, தன் பிறந்த வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்தாள்.

அவள் உள்ளே நுழையக் காத்திருந்தவர்கள் போல்,

“மன்னி, வாங்கோ!”

“சீனு… வாடா!” என்று வைஷ்ணவியின் உற்சாகக் குரலைத் தொடர்ந்து,

“வாங்க ஸ்ரீனி. வாடி… பத்து. டேய்… குட்டிக்கண்ணா… மாமாவண்ட வர்ரையா?” என்ற விஜயின் குரல் சந்தோஷத்துடன் ஒலித்தது.

ஆச்சரியம் பொங்கி வழிய, ஸ்ரீனியும் பத்மாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்ட நேரத்தில்,

“சத்த நில்லுங்கோ! ஆரத்தி… கரைச்சு எடுத்துண்டு வரேன்” என்று உள்ளே ஓடினார் கோமளவல்லி.

“அதெல்லாம் வேணாம்மா…” எனத் தொடங்கிய பத்மாவை,

“அவா ஆசைப்படி செய்யட்டும், பத்து. விடு” என்று தடுத்தான் ஸ்ரீனிவாசன்.

“ஹே… குட்டிக்கண்ணா! நோக்கு… இனிமேல் தான் பேர் வைக்கப் போறாளாமே? அது வரைக்கும்… உன்னைக் கண்ணன்னே கூப்பிடட்டுமா?” என்று வேதுவிடம் பேசியபடியே, அவனை பத்மாவிடமிருந்து வாங்கினாள் வைஷ்ணவி.

“மன்னி!!!” – பத்மாவிற்கு ஏகப்பட்ட ஆச்சரியம்.

“வைஷூன்னே கூப்பிடுங்கோ மன்னி. நா… உங்களை விடச் சின்னவா தான்” என்று சிரித்தாள் வைஷ்ணவி.

“என்னை… மன்னிச்சுடுண்ணா! அண்ணா… நீங்களும்!” எனப் பத்மா ஆரம்பிக்க,

“விடு பத்து! நாங்களே… உங்களை வந்து பாக்கணும்ன்னு இருந்தோம். தாத்தா தான்… ” என்று மெல்ல இழுத்து, சிறுது இடைவேளை விட்டான்.

“ஏண்ணா தயங்குற? தாத்தா என்ன சொன்னாலும்… நல்லதுக்குத் தான் சொல்லுவார். சொல்லு” என்று உந்தினாள் பத்மா.

தாத்தாவின் தொலைப்பேசி பேச்சு, இன்றும் அச்சரம் பிசகாமல் விஜயின் காதில் ஒலி பரப்பாகியது.

“சீனு… எங்காத்து பையன், விஜய். அவன்… கொலைக்குத்தமே பண்ணிட்டு நின்னாலும்… அவனை அரவணைச்சுக்க வேண்டியது, எங்களோட கடமை!”

“ஆனா… நீங்க அப்படியில்ல! இப்போ… நீங்க வந்தேள்ன்னு வைங்கோ… தப்பை விடப் பெருசா ஒரு கஷ்டம் வந்துட்டா… எல்லாரும் பாவம்ன்னு ஓடி வந்து, நம்மளை அணைச்சுப்பாங்கிற நினப்பு அவன் மனசில வந்துடும்”

“அது வரப்பிடாது! அவன்… அவனோட தப்பை உணர்ந்து… அதுக்கு என்ன பண்ணனும்ன்னு யோசிச்சு… முதல் கோணல்ல இருந்து திருத்தணும்”

“சுத்தி வளைச்சு என்ன சொல்ல வரேன்னா… அவனா உங்காத்துக்கு வந்து மன்னிப்பு கேக்கட்டும். அப்புறம்… நீங்க வாங்கோ!”

என்ற ராஜகோபாலனின் பேச்சை மனதில் ஓட்டிப் பார்த்தவன், அதன் சாரம்சத்தை மட்டும் ஸ்ரீனியிடமும் பத்மாவிடமும் பகிர்ந்தான்.

ஸ்ரீனிக்குக் கோபமோ வருத்தமோ துளியுமில்லை.

மாறாய், ஒரு நிறைவான புன்னகை ஒன்று இதழில் குடி கொள்ள, விஜயின் கையைப் பற்றிக் கொண்டவன், “சாரி அத்திம்பேர்! என்னோட அவசரப்புத்தியால… உங்களோட கல்யாணத்தையும் கெடுக்க இருந்தேன்” என்றான் குற்ற உணர்வுடன்.

“ஷ். விடுங்கோ… ஸ்ரீனி! ஆல் தட் என்ட்ஸ் வெல் இஸ் வெல்!” என அவன் கையைத் தட்டிக் கொடுத்தான் விஜய்.

அதற்குள் ஆரத்தியும் எடுத்து முடித்தாகியிருக்க, ஸ்ரீனியின் குடும்பம் உள்ளே நுழைந்தது.

தாயும் மகளும் பாசப்பிணைப்பில் கரைந்திருந்த சமயம், “விஜய்… உங்கப்பா எங்க?” என்றான் ஸ்ரீனி, கண்களைச் சுழல விட்டபடி.

“ஹ்ம்ம்!!! அவருக்கு… இன்னும் பத்மா மேல கோபம் போகலை, ஸ்ரீனி. அதான்… நீங்க வரேள்ன்னு தெரிஞ்சதும்… கோவிலுக்குக் கிளம்பிப் போய்ட்டார்” என்றான் விஜய், சிறு உதட்டுப் பிதுக்கலுடன்.

“நாங்க வேணா… கோவில்ல போய்…” என ஸ்ரீனி தொடங்க,

“இல்ல… இல்ல வேண்டாம்” என்று அவசரமாய் தடுத்தான், விஜய்.

“இல்ல… கிருஷ்ணஜெயந்திக்கப்புறம் ரெண்டு நாள் கழிச்சு… வேதுக்கு நாமகரணம் வச்சிருக்கோம். அவர் வந்தா… தான் நன்னா இருக்கும்” என்றான் ஸ்ரீனி, வேண்டுதலாய்.

“கவலைப்படாதேள்! நா… அழைச்சிண்டு வரேன்” என்று உறுதி கொடுத்தான் விஜய்.

“நானும்… வேணா…” என ஸ்ரீனி இழுக்க,

“வொர்ரி பண்ணிக்க வேண்டாம் ஸ்ரீனி. அவரை அழைச்சிண்டு வர வேண்டியது… என் பொறுப்பு. கவலைப்படாம இருங்கோ” என்று அவன் கையைப் பிடித்து, வாக்குக் கொடுத்தான் விஜய்.

அதற்குமேல், வற்புறுத்த முடியாமல் சற்று நேரம் அமைதியாய் இருந்த ஸ்ரீனி,

தாங்கள் கொண்டு வந்த பையிலிருந்து, வைஷ்ணவி… விஜய் இருவருக்கும் வாங்கி வந்த புது துணிகளை எடுத்து வெளியே வைத்தான்.

“வைஷூவைக் கூப்பிடுறேளா?” என அவன் கேட்டு, வைஷ்ணவி வந்ததும்,

“வைஷூ… அத்திம்பேர்… இது… வேதுவோட நாமகரணம் ஃபங்கஷனுக்கு… நாங்க எடுத்துத் தர்றது. வாங்கிக்கணும்” என்றான் சிறு வற்புறுத்தலுடன்.

“நீ… ஸ்ட்ரெஸ் பண்ணவே வேண்டாம்ண்ணா. நாங்க வாங்கிப்போம்” என்றவள், “சீக்கிரமே… நாங்களும் நோக்கும் மன்னிக்கும் இதே மாதிரி ஒரு

ஃபங்க்ஷனுக்கு டிரஸ் வச்சுத் தருவோம். வாங்கிக்கணும். ஓகே” என்றாள் வைஷ்ணவி, குறும்பாக.

“ஹே! நிஜமாவா?! சூப்பர்… வைஷூ! கண்டிப்பா!” என்று தங்கையின் கன்னம் தட்டிக் கொஞ்சிய ஸ்ரீனி,

“ஹே வைஷூ… தாத்தா ஒரு வாட்டி… ஆண்டாள் கோவில் கதை சொன்னாரே? நியாபகம் இருக்கா?” என்றான் எதிர்பார்ப்புடன்.

“நிறையக் கதை சொல்லியிருக்கார். எதைண்ணா கேக்கிற?” என அவள் யோசிக்க,

“அக்காரவடசல் கதைடி” என்று நினைவு படுத்தினான் ஸ்ரீனி.

“ஹோ! ஆமா… ராமானுஜர் ஆண்டாளோட பிரார்த்தனையை நிறைவேத்தினாரே… அந்தக் கதை தானே?” – வைஷ்ணவியின் தெளிவான பதிலுக்குப் பின்னர்,

“அப்போ… உன்னை ஆண்டாளாவும்… என்னை ராமனுஜராவும் நினைச்சு பேசினாரே?”

“ஹ்ம்ம்!!! ஆமா… நீ கூடக் கோச்சுண்டியே?” – உதடு பிதுக்கினாள் வைஷ்ணவி.

“ஹ்ம்ம்!! ஆமா… அதை விடு! ஆனா… இப்போ… நோக்கு இந்த அண்ணன் சீர் எடுத்துண்டு வந்திருக்கேன்டி… வைஷூ” என்றான் ஸ்ரீனி, அவளது கன்னம் வருடி.

“ஹே! சீரா? அக்காரவடசலாண்ணா?” என வைஷூ, வாயைப் பிளக்க, தலையில் அடித்துக் கொண்டான் விஜய்.

வைஷ்ணவி முறைக்க, விஜய் பதுங்க, சிரிப்புடன் தான் வாங்கி வந்த முத்து நகை செட்டை துணியின் மீது வைத்த ஸ்ரீனிவாசன், கூடவே ஒரு டப்பா அக்காரவடசலையும் எடுத்து வைத்தான்.

“உறவோவியம்” – அத்தியாயம் 21

அன்று கிருஷ்ணஜெயந்தி.

அன்று தான், ஸ்ரீனியும் வேலையில் சேர்வதாய் இருந்தது.

அவன் வேலை செய்த நிறுவனத்தில், தன் குடும்பத்திற்கு நேர்ந்த பாதிப்பை எடுத்துக் கூறி, இனி வரும் காலங்களில் சென்னையில் வேலை செய்ய அனுமதி பெற்றிருந்தான் ஸ்ரீனிவாசன்.

ஸ்ரீனி,சொந்த வாழ்வில் எப்படியோ! ஆனால், வேலையில் படு கெட்டி என்பதாலும், ஏற்கும் பொறுப்புகளை செவ்வனே செய்யும் அவனது கடமையுணர்வும் அவர்களைச் சம்மதிக்க வைத்திருந்தது.

கிருஷ்ணஜெயந்தி என்பதாலும், சிறு இடைவேளைக்குப் பின்னர் ஸ்ரீனி வேலைக்குச் செல்வதாலும், காலையிலேயே குருவாயூரப்பன் கோவிலுக்குச் சென்று வந்தனர், அனைவரும்.

கோவிலிலிருந்து வீடு வந்ததும், ஆண்கள் அனைவரும் கூடத்தில் அமர்ந்திருந்தனர்.

அப்போது, “தாத்தா… அப்பா இன்னும் ஆத்துக்கு வரலையே!? நா வேணும்ன்னா பேசட்டா?” என்று ஆரம்பித்தான் ஸ்ரீனிவாசன்.

ராஜகோபாலன் பதில் சொல்லும் முன்னர், “சித்தப்பா… பூனேல இருந்து கிளம்பிட்டார்டா, சீனு! நேக்கு… மெசேஜ் பண்ணியிருந்தார்” என்றான் பாலாஜி, அறிவிப்பாக.

“ஹோ! எதில வரார் பாலாஜி? ஃப்ளைட்லையா? எப்பயும்… கிருஷ்ணஜெயந்திக்கு வீட்டில இருக்கிறாப்ல பார்த்துப்பார் தானே! இந்த வாட்டி… நா இருக்கேனுட்டு வராது இருக்கார்…” – ஸ்ரீனி வருத்தம் கொள்ள,

“டேய்… கண்ணா! நீயே சொல்றாப்ல… அவன் கிருஷ்ணஜெயந்திக்கு ஆத்துக்கு வராது இருந்ததில்லை… சாயந்தரம் தானே வீட்டில பூஜை… அதுக்குள்ளே வந்துடுவான்” என்று சமாதானம் செய்தார், அவனது பெரிய தந்தை.

“ஃப்ளைட்ல வந்தா… வந்துடலாம். இல்லைன்னா…” – அப்போதும் ஸ்ரீனிக்கு நம்பிக்கை இருக்கவில்லை.

“வந்துருவான்டா சீனு! நீ… மனசைப் போட்டு வருத்திக்காது வேலைக்குக் கிளம்பு” என்று அவனது தோளைத் தட்டிக் கொடுத்தார், சேது மாதவன்.

“நா… வேணா இன்னைக்கு வேலைக்குப் போகாது ஆத்திலே இருக்கட்டா? அவர் வர சமயம்… பத்மாவும் வேதுவும் மட்டும் இருந்தா… அவாளை ஏதானும் சொல்லிடுவாரோன்னு பயமா இருக்கு… பெரிப்பா! என்னை… என்ன வேணும்ன்னாலும் திட்டட்டும்… ஆனா… பத்மா… அவ ஏற்கனவே வேதனைப் பட்டுண்டு இருக்கா… அப்பா ஏதானும் சொல்லி… பூஜை நேரத்தில அழுது வைக்கப் போறா…” – வெகுவாய் கவலைப்பட்டான் ஸ்ரீனிவாசன்.

“ஷ். நாளும் கிழமையுமா… புலம்பிண்டு இருக்காத. எல்லாரும்… அவா… அவா வேலையைப் பார்த்துக் கிளம்புங்கோ. சீனு… நீயும் தான்” – அனைவரையும் அங்கிருந்து அகற்றியவர்,

“பத்மா… நேக்கு ஒரு மடக்கு காப்பி எடுத்திண்டு வாடி கொழந்தே” என்று குரல் கொடுத்தபடி, நாளிதழை எடுத்துக் கொண்டு ஊஞ்சலில் அமர்ந்தார்.

“அப்பாக்கு… உன்னண்ட ஏதோ பேசணுமாட்டு இருக்கு. அதான்… உன்னைக் கூப்பிடுறார். இந்தா… இதை எடுத்திண்டு போ” என்று மாமானருக்காக கலந்து வைத்திருந்த காப்பியை, மருமகள் கையில் கொடுத்து அனுப்பி வைத்தாள் சாவித்திரி.

“இந்தாங்கோ தாத்தா” என அவள் நீட்டியதை வாங்கியவர்,

“இன்னைக்கு… வேது பையனுக்கு… ராதையாட்டம் டிரஸ் பண்ணி விடுடி கொழந்தே!” என்றார் ஆசையாக.

“ராதையாட்டமா? சாவித்திரிமா… கிருஷ்ணனாட்டம் செய்யலாம்ன்னு சொன்னா… அதனால பைஜாமா… ஜிப்பா… புல்லாங்குழல் எல்லாம் வாங்கிண்டு வந்தோம். மயிலிறகுல செஞ்ச கீரிடம் ஒண்ணு… ஆத்தில இருக்காம்… அதை வச்சுக்கலாம்ன்னு” என பத்மா யோசனையோடு தங்கள் திட்டத்தை விளக்கினாள்.

“கோதையும்… வைஷூவும் பெரிய மனுஷி ஆகுற வரைக்கும்… வருஷா வருஷம் ராதை வேஷம் போடுவோம். நேக்கு… எப்படா கிருஷ்ணஜெயந்தி

வரும்… பொண்களுக்கு ஜோடிச்சு பாக்கலாம்ன்னு ஆசையா இருக்கும். ஆனா… அவா கல்யாணமாகிப் போன பின்னாடி… வீட்டில… குட்டிக் கிருஷ்ணனோ… ராதையோ ஓடியாடவே இல்லை. அதான்… வேது பையனுக்கு ராதை வேஷம் கட்டிப் பாக்க ஆசையா இருக்கு… பெரியவனாயிட்டா நேக்கு பொண் வேஷம் போடாதேள்ன்னு உன் புள்ளையாண்டான் அடம் பிடிப்பான். இப்பன்னா சின்னக் குழந்தை… நம்ம ஆசைப்படி செய்யலாமோனோ…” என இழுத்தார் ராஜகோபாலன்.

அதற்குள் மேல், பத்மா வாதாடவில்லை.

“செய்!” என்றால் மறுக்காமல் செய்யப் பாத்தியப்பட்டவள் தான் என்றபோதும், கட்டளையாய் சொல்லாமல் தன் விருப்பத்தை இவ்வளவு தூரம் அவர் விளக்கிய பின்னர், பத்மாவால் எப்படி மறுக்க முடியும்?!

“சரி தாத்தா… அப்போ கடைக்குப் போய்… குட்டி பாவாடை சட்டை தாவணி எல்லாம் வாங்கிண்டு வந்துடுறேன்” என்றாள் பத்மா.

“அதெல்லாம் வேணாம். நானே வச்சிருக்கேன். வா” என்று அவளை அழைத்துக் கொண்டு, தன்னறைக்குச் சென்றவர், தான் உபயோகப்படுத்தும் அலமாரியின் அடித்தட்டில், அழகாக அடுக்கி வைத்திருந்த துணிக்கட்டுகளில் தேடி, ஒரு சின்னஞ்சிறு பாவாடையையும்… குட்டி சட்டையையும்… பொருத்தமான மேல் துணியையும் எடுத்துக் கொடுத்தார்.

“ஹாய்… சூப்பரா இருக்கு தாத்தா! இதெல்லாம்… வைஷூ போட்டுண்டதா?” என பத்மா கேட்க,

“ஹ்ம்ம். அவளும் போட்டுண்டு இருக்கா…” என்றார் பெரியவர்.

அவர் வார்த்தையில் இருந்த விளையாட்டைக் கவனிக்கும் மனநிலையில், பத்மா இருக்கவில்லை.

அவள் கவனம் முழுதும், அந்த உடையிலேயே நிலைத்து இருந்தது.

அந்த உடையின் பிராதன வண்ணம், சிவப்பு வண்ணமாய் இருந்தபோதும், அது பிரதானமாய் தெரியாத வண்ணம், ஆங்காங்கே பச்சை வண்ணத்தில்

பூ வடிவங்கள். பச்சை வண்ணப் பூக்களின் நடுவே தங்க நிறத்தில் சிறு வேலைப்பாடுகள்.

மேல்ச்சட்டையோ…கரும்பச்சை வண்ணத்தில் தங்கப் பூ வேலைப்பாடு செய்யப்பட்டதில், அழகாய் ஜொலித்தது.

இரண்டுக்கும் ஏற்ற முக்காடாய், அந்த பாவாடை – சட்டைக்கு ஒரு தாவணியும் இருந்தது.

சிறு துண்டு அளவு இருந்த அந்தத் தாவணியைப் பார்க்கவே பத்மாவிற்கு சிரிப்பாக வந்தது.

முழங்கை அளவு தான் தாவணி. ரொம்ப கனமாக இல்லாமல், இந்தப் பக்கம் இருப்பதை அந்தப் பக்கம் காண முடியும் அளவிற்கு… கண்ணாடி போல் இருந்தது அது. அதிலும், சிவப்பும் பச்சையும் மாறி மாறி வேலைப்பாடு செய்த அந்த தாவணியின் கரையில் தங்க ஜரிகை வேறு.

“சூப்பரா இருக்கு தாத்தா” என்று மூன்றாவது முறையாக, அப்பாவடையைப் புகழ்ந்துவிட்டு, “வேதுக்கு வச்சுப் பார்க்கிறேன்” என்று திரும்பினாள்.

சின்னக் கண்ணனுக்கு, வெகு பொருத்தமாய் இருந்தது.

மாலை ஐந்தரை மணியிருக்கும்.

“மாலதி… பூஜைக்கு எல்லா ஏற்பாடும் பண்ணிட்டியாடிம்மா” எனக் கேட்டார் ராஜகோபாலன்.

“ஆச்சுப்பா. உன்னியப்பம் மட்டும் போட்டுண்டு இருக்கோம்”

“திரட்டுப்பால் கிண்டியிருக்கேள் தானே?”

“ஆச்சுப்பா!”

“கண்ணனுக்கு (கமலக்கண்ணன்)… உப்புச் சீடை கொஞ்சம் போட்டேளா? அவன்… இனிப்பு சாப்பிட மாட்டேன்டிம்மா”

“ஆச்சுப்பா!”

“சரி… கிருஷ்ணன் பாதம் போடா வேண்டாமோ? யாரானும்… ஆத்து வாசலில இருந்து போட்டுண்டு வாங்கோ… அவா எல்லாம் வேலை முடிஞ்சு ஆத்துக்கு வரதுக்குள்ள போட்டேள்ன்னா தானே தேவலை. அவா வந்ததும்… பூஜையை ஆரம்பிச்சுடலாம்” என அவசரப்படுத்தினார்.

“பாதம் வச்சு வரத் தான்… நம்ம ஆத்துலேயே ஒரு கண்ணன் இருக்கானே! அவனையே நடந்து வர வச்சுடலாம்” என்றார் சாவித்திரி ஆசையுடன்.

“கொழந்தே… நடப்பானா?” – சந்தேகமாய் கேட்டார் ராஜகோபாலன்.

“கையைப் பிடிக்காது… நாலடி எடுத்து வைக்கிறானே! நாலடி… நலடியா நடந்து வரட்டும். என்ன அவசரம்…” என்றார் சாவித்திரி.

“சரி… செய்ங்கோ!” என்றார் ராஜகோபாலனும் சிரிப்பு நிரம்பிய குரலில்.

வேதாந்தும் மதிய உறக்கம் முடிந்து, குளித்து உடை மாற்றியிருந்தான்.

ராதை வேஷம் போடப் போவதாய் முடிவாகியிருந்த போதும், கிருஷ்ணன் வேஷத்திற்காக வாங்கி வந்திருந்த பைஜாமா ஜிப்பாவை போடாமல் இருக்க மனமில்லாமல் போகவே, அதை மகனுக்கு அணிவித்து, “பாட்டியண்ட போய்… காட்டிட்டு வருவோமா?” என்று கொஞ்சியபடி அழைத்து வந்தாள் பத்மா.

பாட்டி என்றவுடன், சாவித்திரியைக் கை காட்டி, “க்கிக்க்கி…” என்று சிரித்தான் பிள்ளை.

“பாரேன். நான்தான் பாட்டியாம்! கொழந்தைக்குத் தெரியறது… பாரேன்டி…” என்று வியந்த சாவித்திரி, “வாடா ராஜா…” என்றபடி அவனை வாங்கினார்.

அவன் கன்னத்தில் அழுந்த முத்தம் வைத்தவர், “பாதம் வைக்கலாமா? வர்ரையா?” என்று கேட்டபடி, அவனை வாசலுக்கு அழைத்துச் சென்றார்.

வேதாந்த் கால் வைக்கும் அளவிற்கு ஒரு பெரிய பாத்திரத்தில், பச்சரிசி மாவு கோலக்கூட்டைக் கரைத்து எடுத்து வந்தார் மாலதி.

அந்தப் பெரிய பாத்திரத்திற்குள் அவனை நிற்க வைத்தார், சாவித்திரி.

காலில் புதிதாய் ஏதோ திரவம் பாடவும், “ஹ்ஹ்ஹ்ஹஹ்ஹ்ச்ஹச்க்” என்று ஒலியெழுப்பியபடி, காலை மேலே தூக்கினான் குட்டிப் பையன்.

“ஒண்ணுமில்லைடா கண்ணா! நீ… நம்மாத்து கிருஷ்ணனோனோ? அதான்… பாட்டி உன்னை ஆத்துக்குள்ள ஆசையா அழைக்கிறேன். நடந்து வாடா கண்ணா” என்று கொஞ்சிய சாவித்திரி,

கோலத்தில் முக்கிய அவனது காலை அப்படியே தூக்கி, தரையில் வைத்தார்.

அப்போது, காலில் ஒட்டியிருந்த கோலக்கூட்டு… சொட்டுச் சொட்டாய் கீழே வடிய, பத்மா வேகமாய் வந்து அதைத் துடைத்தாள்.

“ஷ்ஷ்ஹ். வேது… காலை ஆட்டாது ஒழுங்கா இருடா… சிந்தறது பாரு…” – தாயாய் அவள் அதட்ட,

“சிந்தினா சிந்தட்டும்டி பத்து! நாம… என்ன ஓவியப் போட்டிலேயா… இந்தப் பாதத்தை வைக்கப் போறோம்? அங்கங்க சிந்தி… சிந்தி இருந்தா தான்… கிருஷ்ணன் பாதத்துக்கே அழகு! ஆசையா… ஆடியாடி வரான்…” என்றார் மாலதி, கண்டிப்புடன்.

அந்தப் பெரிய வீட்டு பூஜையறைக்கு வருவதற்கு, அந்தக் குட்டிக் கண்ணன் கிட்டத்தட்ட ஐம்பது அறுபது காலடிகள் வைக்க வேண்டியிருந்தது.

பத்து காலடிகள் வரை, காலில் ஏதோ ஒட்டியிருக்கிறது என்ற நினைப்பிலேயே “ஹ்ம்ம்…ஹ்ம்ம்ம்ஹ்ஹ்ம்ம்ம்” என்று சிணுங்கிக் கொண்டிருந்த வேதாந்த், அதற்குப் பின்னர், தான் ஏதோ பெரிய சாதனை செய்வது போன்ற எண்ணத்திற்குக் கொண்டு செல்லப் பட்டான்.

அவனுக்கே, ஒரே குஷியாகப் போய்விட்டது.

காலை… இங்கேயும் அங்கேயும் வைத்து, சாவித்திரியின் கைகளுக்கு அகப்படாமல்… தன் போக்கில் நடக்க ஆரம்பித்தான்.

அதிலும், தன் காலிலிருந்து… புதிதாய் ஏதோ வெளிப்பட்டு, வெள்ளை வண்ணத்தில் தரையில் தெரியவும், அந்தச் சிறுவனுக்கு ஒரே குதூகலமாய் போய்விட்டது.

ஒரு அடி எடுத்து வைப்பான். உடனே அங்கேயே நின்று, தான் எடுத்து வாய்த்த காலடியைத் திரும்பிப் பார்ப்பான்.

அந்த வெள்ளை வண்ணப் பொருள், அவனைத் தொடச் சொல்லி ஆசை மூட்டும்.

உடனேயே கையை நீட்டி, அதைத் தொடுவான்.

பத்மா “ஷ்ஷ். வேது. தொடாதே!” என்று அதட்டுவாள்.

அவளது அதட்டல் புரிந்தோ… புரியாமலோ, அவளையும் அந்தக் காலடியையும் மாறி மாறிப் பார்ப்பான்.

பின்னர், “கிகிக்கி…” என்று சிரித்துக் கொண்டு, அக்காலடியில் மிதக்கும் கோலமாவில் கை வைத்து, அதிலிருந்து ஒரு கோடு இழுத்து விடுவான்.

“சேட்டை பண்ணாத கண்ணா” – மீண்டும் அதட்டுவாள் பத்மா.

இப்போது அடுத்த அடி எடுத்து வைப்பான்.

பின்னர், அவனால் பாலன்ஸ் பண்ணி, நிற்க முடியாது.

தொப்பென, தான் வைத்த காலடியிலேயே அமர்ந்துவிடுவான்.

“போச்சு… அழுச்சிட்டியா?” என்று கோபித்துக் கொண்டு, அவனை எழுப்பி விடும் பத்மா, மீண்டும் கோலமாவில் அவனது பாதத்தை முக்கி, மீண்டும் அவனை நிற்க வைப்பாள்.

அவனது விளையாட்டு, மீண்டும் முதலிலிருந்து ஆரம்பமாகும்.

இப்படியே, வீடு முழுதும் காலடிகளால் நிரப்பி, ஒருவழியாக பூஜையறைக்கு வந்து சேர்ந்திருந்தான் செல்வன்.

மணி ஆறரையாகி இருந்தது.

வேலை முடிந்து, ஆண்கள் அனைவரும் ஒவ்வொருவராய் வீடு திரும்பத் தொடங்கினர்.

முதலில் வந்தது சேதுமாதவன் தான்.

வந்தவர், வீடு நிறைய இருந்த காலடிகளைப் பார்த்து, இன்பமாய் அதிர்ந்து போனார்.

அதுவும், “ஏன்னா… கிருஷ்ணன் பாதத்தை மிதிக்காது… கை-கால் அலம்பிட்டு வாங்கோ” என்று மாலதி சொல்லவும்,

“வீடு முழுக்க… பாதமா தான்டி மாலதி இருக்கு! எப்படி போறது?” என்று நிஜமாகவே யோசனையாக இருந்தது அவருக்கு.

“குதிச்சு… குதிச்சு போங்கோன்னா! கொழந்தே… என்னழகா போட்டிருக்கான் பாருங்கோ. அடுத்த வருஷம்… வைஷூவோட பையனும் போட வேண்டாமா? மிதிக்காது போங்கோ!” என்று விரட்டினாள் தர்மபத்தினி.

வந்தவர்கள் அனைவருக்கும் இதே அதட்டல் தான் விழுந்தது. ஸ்ரீனிவாசன் உட்பட.

“என்னடி பத்து… பையன் பயங்கரமா வேலை பார்த்திருக்கிறான் போல இருக்கு…” என்ற ஸ்ரீனியிடம், பூஜையறையில் அமர்ந்து கொண்டு, கோலமாவு கிண்ணத்தில் கை விட்டபடி அமர்ந்திருந்த பிள்ளையைக் காட்டி சிரித்தாள் பத்மா.

மனம் நிறைந்திருந்தபோதும், தந்தை இன்னும் வரவில்லை என்ற உறுத்தல் மனதின் ஓரத்தில் அரித்தபடி இருந்தது.

“அப்பாவை இன்னும் காணலையேடி… பத்து” என ஸ்ரீனி மயங்க,

“வந்துடுவார்ன்னா. கவலைப்படாதேள்” என அவனை சமாதானம் செய்த பத்மாவிற்கும் சற்றே கலக்கமாகத் தான் இருந்தது.

அவர்களது கலக்கத்தை உணர்ந்தவர் போல், “பத்மா… குட்டிக் கண்ணனுக்கு ராதே வேஷம் போட்டுத் தூக்கிட்டு வாடிம்மா. பூஜை ஆரம்பிச்சுடலாம்” என்று குரல் கொடுத்தார், பெரியவர்.

“இதோ தாத்தா” என்றபடி, பூஜையறைக்குள் நுழைந்த பத்மா, அங்கிருந்த வேதாந்திடம் இருந்து கோலமாவு கிண்ணத்தைப் பறிப்பதற்குள் அரும்பாடு பட்டுப் போனாள்.

“டிரஸ் மாத்திட்டு வந்து… தரேன்டா ராஜா” என்று அவனிடம் கெஞ்சிக் கூத்தாடி, அதட்டி உருட்டி வெளியே அழைத்து வந்து, உடம்பு துடைத்து, உடை மாற்றி விட்டாள்.

கண் படும் அளவிற்கு, பிள்ளை கொள்ளை அழகாக இருந்தான்.

அவனை ஆண் பிள்ளை என்று யாராலும் சொல்லிவிட முடியாதபடி, ராதை வேஷம் அவனுக்கு வெகு பொருத்தமாக இருந்தது.

பாவாடை சட்டையை விட, அந்த தாவணித் துணியை… முக்காடு போல் தலையில் போட்டு, அவனுக்கிருந்த கொஞ்சூண்டு முடியுடன் சேர்ந்து இரண்டு ஹேர்பின் குத்தி, அதை நிற்க வைத்தபோது, சாட்சாத் “ராதையே!” தான்.

அதற்கும் மேலாய், அவனது புருவங்களுக்கு மேல்… வெள்ளை சாந்திலும்… சிகப்பு சாந்திலும் மாற்றி மாற்றி புள்ளிகள் வைத்து, அழகாய் ஜோடித்தார் மாலதி.

“வைஷூ கூட இப்படி சமத்தா உக்காந்துண்டு இருக்க மாட்டா தெரியுமோ? பையனா இருந்தாலும்… ஆசையா இட்டுக்கிறான் பாரேன்” என்று அவருக்கு ஒரே வியப்பு.

நடுவே, கோபிகளுக்கு இடும் கோபி வேறு!

கோகுலத்தில் இருந்து கண்ணன் ஓடி வந்து, ராதையை இழுத்துக் கொண்டு ஓடிவிடும் அளவிற்கு, இந்த ராதை அழகு கொட்டினாள்.

பூஜை ஆரம்பாமனது.

கமலக்கண்ணன் இன்னமும் வரவில்லை.

பூஜையறைக்குள் அனைவரும் நின்றிருக்க, வேதாந்தின் கண்கள் அந்தக் கோலமாவு கிண்ணத்திலேயே நிலைத்து இருந்தன.

சில நிமிடங்கள், தன் பெரியப்பா பாலாஜியின் கையில் இருந்தவன், அவனிடமிருந்து இறங்கி, வேகமாய் தவழ்ந்து சென்று, அக்கிண்ணத்தை எடுத்தான்.

பத்மா ஓடி வந்து தடுக்கவும், “பத்மா… அவனைக் கொண்டு போய்… ஹாலில விட்டுட்டு வா. கூடவே, அந்தக் கோலக் கிண்ணத்தையும் கொடு. நாம செவிச்ச பின்னாடி… அவனை அழைச்சிண்டு வரலாம்” என்றார் ராஜகோபாலன்.

அவரது குரலை மீற முடியாமல், பிள்ளையையும் அவனுக்குப் பிடித்த மாவுக் கிண்ணத்தையும் ஹாலில் கொண்டு போய் வைத்தாள்.

“டேய்… வேது… மாவை எடுத்து சட்டையில அப்பிடாதடா… அழகான சட்டை…” என்று பத்மா கெஞ்ச,

“அப்பினா அப்பட்டும்… அலசினா போய்டப் போறது… நீ வா” என்று உள்ளிருந்து அதட்டினார் பெரியவர்.

ஓட்டமாய் உள்ளே ஓடிப் போனாள், பத்மா.

அவ்வப்போது, ஹாலில் இருந்த பிள்ளையைக் கண்காணித்துக் கொண்டிருந்தன பத்மாவின் கண்கள்.

சிறுது நேரத்திற்குப் பின்னர், அவன் எங்கேயும் நகராமல், ஒரே இடத்திலேயே உட்கார்ந்திருப்பது ஊர்ஜிதப்பட்டுவிட, பூஜையில் கவனமானாள் அவள்.

பூஜையும் முடிந்தது.

அனைவரும் ஒருவர் பின் ஒருவராக, பூஜையறையில் இருந்து வெளியே வந்தனர்.

பார்த்தால், ஹாலில் பிள்ளையைக் காணவில்லை.

“எங்கே? எங்கே?” என்று அனைவரும் சிறு பதட்டத்துடன் தேட,

“வாசல் பக்கம் பாருங்கோ!” என்று கை காட்டினார் ராஜகோபாலன்.

வாசலில் உள்ள பெரிய மரக்கதவருகே, வேதாந்த் இருந்தான். மடியில், கோலமாவு கிண்ணம்! ஆனால், அவனோ கமலக்கண்ணன் மடியில்!

கோகுலத்துக் கண்ணனே ராதையின் அழகில் மயங்கிவிடுவான் என்கையில், கமலக்கண்ணன் எம்மாத்திரம்!?

“உறவோவியம்” – அத்தியாயம் 22

கமலக்கண்ணனுக்கு, அன்று மாலை நான்கரை மணிக்கு பூனேவிலிருந்து ஃப்ளைட்.

இரண்டு நாட்கள் முன்னே, தந்தையிடமிருந்து அழைப்பு வந்ததும், சற்றே சுதாரித்துக் கொண்டே அழைப்பை எடுத்தார்.

ஸ்ரீனிவாசனைப் பற்றியோ… அவனது மனைவி பற்றியோ பேச்சு வந்தால், “அவர்களைப் பற்றி பேசுவதானால், அழைப்பை வைத்து விடுகிறேன்” என்று சொல்லிவிடவேண்டும் என்றுமனத்தில் உருப்போட்டுக் கொண்டே, அவர் “அப்பா, சொல்லுங்கோ!” எனவும்

“என்னடா கண்ணா?! எப்படி இருக்கே? உடம்பெல்லாம் சுகமா இருக்கா?” என்ற ராஜகோபாலனின் குரல், சாதாரணமாய் ஒலித்தது.

“ஏன் வீட்டுக்கு வராமல் இருக்கிறாய்? அப்படி… இப்படி?” என்று தந்தை கோபித்துக் கொள்வார் என்று பயந்திருந்தவருக்கு, ராஜகோபாலனின் பேச்சு சிறு வியப்பை அளித்தது.

“நன்னா இருக்கேன்பா. நீங்க எப்படி இருக்கேள்?”

“நேக்கேன்னடா? பேருக்கு ஏத்தாப்ல… ராஜா மாதிரி இருக்கேன். பையன்கள் மட்டுமல்லாது… பேரன்… கொள்ளுப் பேரன்னு மூணு தலைமுறை பார்த்துட்டேன். வேறென்ன வேணும் சொல்லு!” – பொடி வைத்தார் பெருந்தலைவர்.

ஒன்றும் பேசாமல், கமலக்கண்ணன் மௌனம் சாதிக்கவே,

“வர திங்கட்கிழமை… கிருஷ்ணஜெயந்தி வர்றதே! நீ… ஆத்துக்கு வர தானே?” என அவர் வினவ,

“அது அப்பா…”

மகன் பேசவே இல்லை போல் பாவித்து, ராஜகோபாலன் தானே தொடர்ந்தார்.

“எந்தப் பண்டிகைக்கு வரலைன்னாலும்... கிருஷ்ணஜெயந்திக்கு வராது இருக்க மாட்டியே நீ... அது தெரியாம வர தானேன்னு கேட்கிறேன் பாரேன். எப்பயும் போல... ஆத்துல ஆறு மணி... ஆறரைக்குப் பூஜையாகும். அதுக்குள்ள ஆத்துக்கு வந்துடுற மாதிரி பாத்துக்கோடா கண்ணா! நோக்குப் பிடிச்ச... உப்புச் சீடை செய்யச் சொல்றேன். அதைச் சாப்பிடவேனும் வந்துடு... வேற யாரும் உப்பைச் சீண்ட மாட்டா... எல்லாருக்கும் இனிப்பு தான் இஷ்டம்” என நீளமாய் பேசியவர், மகன் பதில் சொல்வதற்குக் காத்திருக்கவே இல்லை.

“சரிடா கண்ணா, வச்சுடுறேன்....” என்றவர், அழைப்பை அணைக்க மறந்து போனார்.

கைப்பேசி கமலக்கண்ணனுடன் இணைப்பிலேயே இருக்க, இங்கே ராஜகோபாலன் வேறு பேசலானார்.

“டேய்... வேது பையா... இங்க வா... இங்க வா...”

“தாத்தாவண்ட வா... ஹான்... அப்படித் தான்...”

“இந்தா... இந்தா... இந்தா... தாத்தா ஃபோன் வச்சிருக்கேன் பாரு. நடந்து வந்து வாங்கு...”

பின்னர் சற்று நேரம் சத்தமே இல்லை.

“அப்பா... அப்பா” என்று கமலக்கண்ணன் சற்று கத்திப் பார்த்தார்.

மறுபுறம் பதிலே இல்லை.

கமலக்கண்ணன் நினைத்திருந்தால், அவர் பக்கத்து அழைப்பைத் துண்டித்து இருக்கலாம். ஆனால், ஏனோ அவரால் அதைச் செய்ய முடியவில்லை.

அவரது கோபத்தையும் மீறி, கைப்பேசியைக் காதோடு இறுகப் பிணைத்தன கைகள்.

சட்டென மறுபக்கம் சத்தம் கேட்டது.

“தட்... தட்... தட்...”

யாரோ கை தட்டினார்கள்.

“ஹையா… வேது பையன் அவனா நடந்துட்டானே… தாத்தா கையைப் பிடிக்காது நடந்துட்டானே!” என்று ராஜகோபாலனின் குரல் கேட்டது.

“ஹான்! வேது பையன்… அவனா நடந்ததுக்கு… என்ன ப்ரைஸ் கொடுக்கலாம்… ஹான்… இந்தா… இந்தா மொபைலை வச்சுக்கோ…” என அவர் கூறுவதும்,

“ப்ப்ப்பச்ச்ஹ்ச்” என்று சத்தத்துடன், கைப்பேசி கை மாறுவதும் கேட்டது.

பின்னர், “கி…”, “கீ…”, “பீ…”, “பீன்”, “தக்…”, “சக்…” என்று ஏகப்பட்ட ஒலிகள்.

வேது பையன், கைப்பேசி பொத்தான்களில் மிருதங்கம் வாசித்துக் கொண்டிருந்தான்.

கமலக்கண்ணனின் உதடுகள் தாமாய் மலர்ந்தன.

“அச்சோ… தாத்தாவோட மொபைலை ஓட்டையாக்கிடாதடா… வேது…” என்று ராஜகோபாலன் சிறு பிள்ளை போல் சிணுங்குவதும்,

“ஹா… தா…” என்ற ஒலியும் கேட்க,

“சமத்துக் கண்ணன். கேட்டதும் கொடுத்துட்டியே!” என்று பெரியவர், சின்னப் பையனின் கன்னத்தில் தட்டும் சப்தம் கூட, கமலக்கண்ணனின் காதுகளில் துல்லியமாய் ஒலித்தது.

“வேது பையன் சமத்து இல்லையாடா” என்றுவிட்டு,

“ஹான்! வேது பையன் சொல்லக் கூடாதே! ஹ்ம்ம்… நோக்கு வேற பேர் வைக்கப் போறா இல்லையா?” எனக் கொள்ளுப் பேரனை நோக்கிக் கேள்வி கேட்டார் ராஜகோபாலன். என்னவோ அவனுக்குப் பதில் தெரியப் போவது போல!

அவனோ, “கிக்கிக்கீகீஇ” என்று கிளுக்கிச் சிரிக்க,

“ஹோ! உன் பேரு… ராதா கிருஷ்ணனா? உம் பாட்டி பேரை வச்சுக்கப் போறையா? ஹ்ம்ம்… நீயும் அவளை மாதிரியே தான்டா ராஜா இருக்கே…

அதே மூக்கு… அதே கண்ணு… அதே புருவம்…" என்று வர்ணிக்க ஆரம்பித்தார் பெரியவர்.

அதற்குமேல், கமலக்கண்ணனால் கைப்பேசி அழைப்பைப் பிடித்து வைக்க முடியவில்லை.

கண்கள் கண்ணீரில் நனைய, கைகள் கைப்பேசியை அணைத்தன.

சற்று நேரம் சென்றதும், ட்ராவெல் ஏஜென்சிக்கு அழைத்து, கிருஷ்ணஜெயந்தி யன்று சென்னைக்கு ஒரு டிக்கெட் போடும் படி சொன்னார்,

என்னதான், சென்னைக்குப் போவது என்று முடிவாகிவிட்டபோதும், ஸ்ரீனியின் பேச்சையும் செயலையும் அத்தனை சுலபத்தில் அவரால் மன்னிக்க முடியவில்லை. அதற்காக, சென்னைக்குச் செல்லாமல் இருக்கவும் மனம் வரவில்லை.

இரு தலைக் கொல்லி எறும்பாய், சென்னையை அடைந்தவர், விமனாநிலைய சோதனைகள் எல்லாம் முடிந்து, வீட்டை அடையும் போது மணி ஏழுக்கு மேல் ஆகிவிட்டிருந்தது.

அவர் நுழைந்த நேரம், நிலை வாசலருகே அமர்ந்து, கையிலிருந்த கோலக்கிண்ணத்திலிருந்து மாவை எடுத்து, தரையில் தேய்த்துக் கொண்டிருந்தான் வேதாந்த். ம்ஹூம் இல்லையில்லை ராதா! ராதாகிருஷ்ணன்!

கமலக்கண்ணனால், ராதாவிடமிருந்து பார்வையை எடுக்கவே முடியவில்லை!

அழகு கொட்டிய அந்த ராதை, அவரது ராதையை நினைவு படுத்தினாள்.

எப்போதுமே அவர்கள் வீட்டில் கிருஷ்ணஜெயந்தி விமர்சையாக கொண்டாடப்படும் பண்டிகை தான் என்றாலும், அவருக்குத் திருமணமாகி ராதா (ஸ்ரீனியின் தாய்) இந்த வீட்டிற்கு வந்ததில் இருந்து, கிருஷ்ணஜெயந்தி அவருக்கு மிகவும் நெருக்கமான நாளாக மாறிப் போயிருந்தது.

ராதாவிற்கு, நன்றாக கை வேலை செய்யவரும்.

எம்ப்ராய்டரி… பூ வேலை… வீட்டிலிருக்கும் விக்கிரகங்களுக்கு குட்டிக் குட்டி உடை தைப்பது என்று மிகுந்த ஆசையோடும் சிரத்தையோடும் செய்வார் அவர்.

திருமணம் முடிந்து வந்த முதல் கிருஷ்ணஜெயந்தியில், பாலாஜிக்கு கிருஷ்ணன் போல் உடையும்… கோதைக்கு ராதையைப் போல் உடையும் தைத்து, அதை அணிவித்து… பூச்சூடி… பொட்டிட்டு என்று அற்புதமாய் அலங்காரம் செய்துவிட்டிருந்தார் ராதா.

குடும்பமே மகிழ்ச்சியில் தத்தளித்தது! தத்தக்கா… பித்தக்கா என்று பிள்ளைகள் நடக்கும் அழகை நாளெல்லாம் ரசித்தப்படி, ராஜகோபாலனும் அவரது மனைவியும் இருப்பார்கள்.

இதே பழக்கம், அடுத்து வந்த வருடங்களும் தொடர, ஸ்ரீனி கருவுற்ற நேரத்தில், “ஏன்னா… நமக்குப் பெண் குழந்தை பிறந்தா நன்னா இருக்கும்ல” என்ற ராதாவின் ஏக்கமான குரல், இப்போதும் கமலக்கண்ணனின் காதில் ஒலித்தது.

ஆனால், ஸ்ரீனி ஆணாய் பிறந்துவிட, ராதா பெரிதாய் வருத்தம் கொள்ளவில்லை.

அவனை ஆட்சேபனை தெரிவிக்காத வரை, கிருஷ்ணஜெயந்தி வந்தால் ஸ்ரீனிக்கு ராதை வேஷம் தான்! வருடத்திற்கு ஒரு பாவாடை என்று அழகாய் கை வேலை செய்து, மகனுக்கு அணிவிப்பதில் அத்தாய்க்கு கொள்ளை இஷ்டம்!

அதனாலேயே, கிருஷ்ணஜெயந்தி என்றால்… கமலக்கண்ணனுக்கு எப்போதுமே ஸ்பெஷல்!

இதோ, இந்தக் கிருஷ்ணஜெயந்தி அதை விட ஸ்பெஷலாக இருந்தது.

அவரது மனைவியின் மினியேச்சர் உருவம் ஒன்று தரையில் அமர்ந்து, அதுவும் அவர் மனைவி தைத்த பாவடையை அணிந்து கொண்டு அமர்ந்து, சேட்டை செய்வதைப் பார்த்தவரின் மனதிலிருந்த மற்ற எண்ணங்கள் எல்லாம் மறைந்தே போயின.

அதுவும் கமலக்கண்ணன் வருகையில், கால்கள் இரண்டையும் அகல விரித்து அமர்ந்துகொண்டு, இரண்டு கால்களுக்கும் நடுவே கோலமாவு கிண்ணத்தை வைத்து, தலையை லேசாய் குனிந்து அதற்குள் கையை விட்டுக் கொண்டிருந்தான் சின்னவன்.

வாசல் பக்கம் அவர் வந்த அரவம் கேட்கவும், தலையை ஒரு பக்கமாய் சரித்து, யார் வந்திருக்கிறார்கள் என்பது போல் அவன் பார்க்க,

தலை மீது அவன் அணிந்திருந்த கண்ணாடி தாவணியின் வழியே கமலக்கண்ணன் தெரிந்தார்.

அவருக்கும், அவனது முகம்... அக்கண்ணாடி துணி வழியே தான் முதலில் தெரிந்தது.

சொக்கித் தான் போனார், கமலக்கண்ணன்!

அகன்ற விழிகளும், அக்கண்களில் தெரிந்த பாவனையும் அவரைக் கொக்கி போட்டு இழுத்தன.

முகம் முழுக்க புன்னகையுடன், வேதாந்தை நோக்கி அவர் இரண்டெட்டு எடுத்து வைக்க, அவனுக்கும் அவர் பரிச்சயமாய் தெரிந்தார் போலும்.

கிண்ணத்தில் விட்டிருந்த கையை வெளியே எடுத்து, அவர் பக்கமாய் நீட்டினான்.

கையிலிருந்து கோலமாவு... சொட்டு சொட்டாய் கீழே வடிந்தது. கொஞ்சம் உடையிலும் கூட.

சட்டென தன் வலக்கையை நடுவே விட்டு, அப்பிஞ்சு விரல்களிலிருந்து வழிந்த கோலமாவைத் தன் கைகளில் தாங்கிக் கொண்டார் கமலக்கண்ணன்.

“க்கிக்கீக்கி!” – வேதாந்திற்கு ஒரே சந்தோசம்.

மீண்டும், கோலமாவிற்குள் கைவிட்டு... மீண்டும் சிந்தி... அதை கமலக்கண்ணன் மீண்டும் பிடித்து... இப்படியே விளையாட்டு நீடித்தது. கோலமாவு அவன் மடிக்கும்... அவன் அவர் மடிக்கும் இடம் மாறிய பின்னரும் கூட!

இந்தச் சிறு பிஞ்சையா பிச்சை எடுக்க விட்டார்கள்!?

பாதகர்கள்!? ச்சே, இவர்களுக்கெல்லாம் மனுஷத் தன்மையே இல்லாமல் போய்விட்டதா?!

உலகம் எங்கே செல்கிறது?! இப்படிப்பட்ட குரூர மனம் படைத்த மனிதர்கள் மத்தியிலா வாழ்கிறோம்?! ச்சே!!

பெருமாளே, கலியுகத்தை நிறைவு செய்து… ஒரு புதுயுகத்தை இட்டு வரக் கூடாதா?!

பாலுக்கு அழும் குழந்தைகளை வைத்து பணம் சம்பாதிக்கும் அரக்கர்களை, ஏதேனும் அவதாரம் எடுத்து வந்து அழிக்கக் கூடாதா?

வேதாந்துடன் கைகள் விளையாட, மனமோ… தன் பேரனை இம்சித்த அரக்கர்களை சபித்துக் கொண்டிருந்தது.

இச்சிறு வயதில்… எப்படிப்பட்ட கஷ்டம் நேர்ந்துவிட்டது!

பட்டிளம் பிஞ்சு… எங்கனம் தாங்கியதோ!?

மனம் வெம்பிப் போன வேளையில், அவரது கரங்கள்… பேரனின் மேனியை மெல்ல வருட ஆரம்பித்தன.

பூஜை முடிந்து வந்த அனைவரும் கண்டது இக்காட்சியைத் தான்!

ஸ்ரீனிக்கும் பத்மாவிற்கும் ஏகப்பட்ட ஆச்சரியம். ஒருவர் கையை மற்றவர் இறுகப் பிடித்து, தங்கள் உணர்ச்சிகளை வெளியிட்டுக் கொண்டனர்.

ஸ்ரீனி, தந்தையையும் மகனையும் நோக்கி விரைந்தான்.

அரவம் உணர்ந்து திரும்பியவர், பேரனைத் தூக்கிக் கொண்டு எழுவதற்கும், அவர் காலடியில் ஸ்ரீனி நீள விழுவதற்கும் சரியாக இருந்தது.

“என்னை மன்னிச்சிடுங்கோப்பா” என அவன் கெஞ்சுதலாய் வேண்ட,

“அவனை எந்திரிக்கச் சொல்லுங்கோப்பா” என்று தந்தையிடம் பேசினார் கமலக்கண்ணன்.

“கண்ணா… அவன் திருந்திட்டான்டா…” என ஆரம்பித்தார் அவரது மூத்த அண்ணன்.

“ப்ச்!” என அவர் முகம் சுளிக்க,

“நிஜமாப்பா… உங்களை மதிக்காம பேசினதுக்கு… தாத்தாவை எடுத்தரிஞ்சு பேசினதுக்கு எல்லாத்துக்குமா நன்னா பட்டுட்டேன்பா… ரொம்பவே பட்டுட்டேன்…”

“ஒரு அப்பாவா… உங்க மனசை எவ்வளவோ நோகப் பண்ணியிருக்கேன். அதுக்குத் தான்… நோக்கு அப்பாவா இருக்கவே தகுதியில்லைன்னு பெருமாள் தண்டுச்சுட்டார்…” – ஸ்ரீனியின் குரல் கமறியது.

“நீங்க… என்னை சரியா வளர்க்கலைன்னு உங்களைக் குத்தம் சொன்னேன். ஆனா… என் பையனை ஒரு வருஷம் கூட என்னால ஒழுங்கா வளக்க முடியலைப்பா… வளக்கத் தெரியல” – ஸ்ரீனியின் கைகள் மார்போடு அழுந்திக் கொண்டு, வேதனையை வெளியிட்டன.

“என்னைத் திட்டினாலும்… அடிச்சாலும்… என்னைப் பாதுகாப்பா… நல்ல சாப்பாடு கொடுத்து… நல்ல படிப்பு கொடுத்து… எல்லாம் செய்தேள்!”

“யார்க்கிட்டயும்… எதுக்காகவும்… கையேந்தி நிக்கும்படி நீங்க விட்டதே இல்லை!”

“ஆனா… நா… உங்களண்ட கையேந்தி நிக்கிறதா நினைச்சிண்டு… அதைக் கௌரவக் குறைச்சல்ன்னு நினைச்சு… உங்களைப் பேசக் கூடாத பேச்செல்லாம் பேசினேன்!”

“அதுக்குத் தான் பெருமாள், ஓங்கி மண்டை மேலேயே போட்டார் போல!”

“என் பிள்ளை… பால் இல்லாது… பசியோட… நடு ரோட்டில… தூசிக்கும் அழுக்குக்கும் மத்தியில… மத்தவாட்ட பிச்சை எடுத்துண்டு… ஹய்யோ!” என அவன் கதற, வீட்டிலிருந்தவர்கள் அனைவருக்கும் அவன் அனுபவித்த வலி, நெஞ்சை அறுத்தது.

“இப்போ… கூட… ஆபீஸ் போறச்ச… யாராவது பிள்ளைகள் பிச்சை எடுத்துண்டு இருந்தா… அடிவயித்தில இருந்து பகீர்ங்கிறது!”

“ரத்தமெல்லாம் வடிஞ்சு… சுத்தி இருக்க உலகமே மங்கி… அங்க என் பையன் நின்னு பிச்சை எடுக்குறாப்ல பிரம்மை தோணறது!”

“அந்த எண்ணம் வரும்போதெல்லாம்… நா உங்களைப் பேசின பேச்சு தான்பா நியாபகம் வர்றது!”

“கஷ்டமா இருக்குப்பா!”

“ப்ளீஸ்… என்னை மன்னிச்சுடுங்கோளேன்! என்னால… இந்த வேதனையைத் தாங்க முடியலைப்பா” என்று மன்றாடினான் ஸ்ரீனிவாசன்.

அதற்கு மேலும், கமலக்கண்ணனால் கேட்க முடிந்திருக்குமோ என்னவோ?! ராஜகோபாலனால் கேட்க முடியவில்லை.

“போதும்டா கண்ணா! கிருஷ்ணஜெயந்தி அதுவும்… மனசைப் போட்டு வருதிக்காத! அந்தப் பெருமாளே அதை விரும்ப மாட்டார்” என்று பேரனின் முதுகில் தட்டிக் கொடுத்தவர்,

“கண்ணா… நீயும் ராதாவுமா போய் பெருமாளை சேவிச்சிட்டு வாங்கோ!” என்றார் மகனின் பக்கம் திரும்பி.

கமலக்கண்ணன் திகைப்புடன் பார்க்க, “என்ன முழிச்சிண்டு நிக்கிறாய்? உன் பேரன்… ராதாகிருஷ்ணன் என்ற ராதாவை அழைச்சிண்டு போய்… பெருமாளை சேவி! சேவிச்சதும்… அவனுக்குத் துளி திரட்டுப்பாலை ஊட்டி விடு… நீ பாட்டுக்கு உப்புச் சீடையைக் கொடுத்து… அவனுக்கிருக்க ரெண்டு பல்லையும் உடைச்சிடப் போற!” என்றார் இயல்பாக.

குடும்பத்தினர் அனைவரது முகத்திலும் சந்தோசம் இழையாய் ஓடியது.

அதன் பின்னர், கமலக்கண்ணன் ஒரேடியாக மாறிவிட்டார் என்று சொல்ல முடியாது.

மகனிடம் பேசவில்லை என்றாலும், அவன் இருக்கும் பக்கமே வராமல் இல்லை. முன்புமே, ஸ்ரீனியும் அவரும் அவ்வளவாய் பேசிக் கொள்வதில்லை என்பதால், அது பெரிய விஷயமாகவும் தெரியவில்லை.

அவருக்குத் தான் அவரது ராதை இருந்தாளே! ம்ஹூம் இருந்தானே!

வீட்டிலிருக்கும் நேரமெல்லாம், கண்ணனும் ராதையும் ஒரே கும்மாளம் தான்! கொண்டாட்டம் தான்! குதூகலம் தான்!

வேதாந்தின்… இல்லையில்லை ராதாகிருஷ்ணனின் நாமகரணம்.

குடும்பமே சந்தோஷமாய் கூடியிருந்தது.

“பத்து… உங்கப்பா வருவாராடி? அப்பாவண்ட மன்னிப்பு கேட்டது போல… அவரண்டையும் கேட்டிருக்கலாம். நாலு அடி அடிச்சிருந்தா தான் கூட தேவலாம்… இப்போ வரலைன்னா… வருத்தமா இருக்குமேடி…” என்று ஸ்ரீனி, வருத்தம் கொள்ள

“அப்பா வருவார்! நேக்கு நம்பிக்கையிருக்கு!” – உறுதியுடன் கூறிவிட்டு, வேலைகளைக் கவனிக்கச் சென்றாள் பத்மாவதி.

பெண்ணின் நம்பிக்கையை வீணாக்காமல், பலராமன் வந்தார்.

அனைவரது வரவேற்பையும் பெற்றுவிட்டு, மெல்ல ஓரமாய் அவர் ஒதுங்க, குறிப்பை உணர்ந்தவள் போல் பத்மா அங்கே சென்றாள்.

“என்னடி பத்மா இது!? இப்படியொரு லெட்டெர் எழுதிட்டியே! நா… ஆடிப்போயிட்டேன்” என்றார் பலராமன், பெண்ணின் கையில் ஒரு காகிதத்தை திணித்தபடி.

“அதில… நா எழுதியிருந்த ஒண்ணொண்ணும் நூறு சதம் உண்மைப்பா…. உங்களைப் புரிஞ்சுண்ட ஒரு பொண்ணா தான் எழுதினேன்… என்னை மன்னிச்சுடுங்கோ” என பத்மா, அவரது காலில் விழ,

“எழுந்திருடிம்மா! இனி… நோக்கொரு கஷ்டம் கொடுக்காம அந்தப் பாண்டுரங்கன் பார்த்துப்பான். நான் பிரார்த்தனை பண்ணிக்கிறேன்” என்றவர், கண்ணைத் துடைத்துக் கொண்டு நாமகரணம் நடக்கும் இடத்திற்குச் சென்றுவிட்டார்.

அப்போது அங்கு வந்த விஜய், “என்னடி பத்மா இது? அப்பா… ரொம்ப நாழி… இந்த லெட்டரை நெஞ்சில போட்டுண்டு யோசிச்சிண்டே இருந்தார். அப்புறம்… கிளம்பி வந்துட்டார். நீ தான் அனுப்பினியா?” என்று கேட்க,

“படிண்ணா! மாலதிம்மா ஏதோ கேட்கிறா… நா போறேன்” – தான் எழுதிய கடிதத்தை அவனிடம் கொடுத்துவிட்டு, அங்கிருந்து நகர்ந்தாள் பத்மா.

அக்கடிதத்திலிருந்த வரிகள்:

“அன்புள்ள அப்பா!”

“அன்பில்லை என்று நான் நினைத்திருந்த அன்புள்ள அப்பா!” – இதான் சரி.

இந்த லெட்டெரைப் படிக்கறதுக்கு முன்னாடி, இதோட நா வச்சிருக்க நியூஸ்பேப்பர் கட்டிங்கை படிச்சிடுங்கோ. ப்ளீஸ். எனக்காக.

விஜயின் கண்கள், கடிதத்துடன் பின் செய்யப்பட்டிருந்த செய்தி துணுக்கை ஆராய்ந்தன.

அது சமீபமாய் நாட்டை உலுக்கிய ஒரு கொடூரச் சம்பவம்.

பெங்களூரில் உள்ள ஒரு மிகப் பிரபலமான தனியார் பள்ளியில், ஒன்றாம் படிக்கும் ஒரு மாணவியை, அங்கிருந்த ஆசிரியர்கள் இருவர் பாலியல் பலாத்காரம் செய்திருந்த சோகம் அது.

ஒரு குழந்தை… வீட்டில் செலவழிக்கும் நேரத்தை விட, அதிகமான நேரத்தைப் பள்ளியில் செலவு செய்கிறது.

அப்படிப்பட்ட பள்ளியில்… அதுவும் வருடத்திற்கு ஒரு லட்சம்… ஒன்றரை லட்சம் என்று பணம் வாங்கும் பெரும் பள்ளியில், பிள்ளைகளைப் பெற்றோர் சேர்ப்பதே, நல்ல கல்வி கிடைக்கும் என்பதால் மட்டுமல்ல. பிள்ளைகள் பாதுகாப்பாகவும்… அதே சமயம் பல்துறை வல்லுனர்களாகவும் வருவார்கள் என்ற நம்பிக்கையால் தான்.

ஆனால் அந்த நம்பிக்கை, முற்றிலுமாய் அல்லவா உடைந்து போயிருக்கிறது!

நம்பிக்கை உடைகிறது என்பதை விட, ஆறு வயது குழந்தைக்குக் கூட கலாச்சாரம் நிரம்பிய பாரத மண்ணில் பாதுகாப்பில்லை என்பது தான் முக்கிய விஷயம்!

குழந்தையென்று பார்ப்பதில்லை… கிழவியென்று ஒதுக்குவதில்லை… பெண்ணாய் பிறந்தாலே காமப் பொருளாய் பார்க்கும் இந்த உலகத்தைச் சாடியது விஜயின் மனம்!

இன்னமும் எட்டு மாதத்தில், தந்தையாகப் போகும் விஜயாலேயே அதைப் படிக்க முடியவில்லை என்கையில் பெண்ணைப் பெற்ற எந்தவொரு தாயாலும் தகப்பனாலும் அந்தச் செய்தியின் தாக்கத்திலிருந்து வெளிவர முடியாது.

“அப்பா… இதை எப்படி படிச்சாரோ?” என்று நினைத்துக் கொண்டே, மீண்டும் தங்கை எழுதிய கடிதத்தைப் படிக்கத் தொடங்கினான் விஜய்.

“படிச்சேளாப்பா! என்ன கொடுமை பார்த்தேளா?!”

“இப்படிப்பட்ட கொடுமை நேக்கு நேர்ந்திடக் கூடாதுன்னு பயந்து தான்… என்னை அடக்கியிருக்கேள்!”

“ஒரு ஆறு வயசு குழந்தைக்கே… இங்க பாதுகாப்பு இல்லைங்கும் போது, ஒரு டீனேஜ் பொண்ணைப் பேணிப் பாதுகாக்கிறது எவ்வளவு கஷ்டம். இல்லையாப்பா!”

“நேக்கு… இப்பப் புரியுறதுப்பா! நன்னா புரியுறது!”

“உங்களோட… ஓரோர் திட்டுக்குப் பின்னாடியும்… உங்களுக்கு இருந்த பயம் நேக்கு நன்னா புரியறது! இந்தப் பொண் குழந்தையை நல்லபடியா கரை சேர்க்கணுமேங்கிற உங்களோட பயத்தை என்னால இப்பப் புரிஞ்சுக்க முடியுறது…”

“அதுவும்… பொண்ணு கூட இல்லை… ஒரு பையனை… எட்டே மாசம் கூட ஆகாத பையனை… ரோட்டில பிச்சை எடுக்க விட்டேன் பாருங்கோ! அப்போ… ஆணி அடிச்சாப்ல புரிஞ்சது!”

“எட்டு மாசக் குழந்தையையே என்னால ஒழுங்கா பார்த்துக்க முடியாம… போய்டுத்து! ஆனா.. நீங்க… பதினெட்டு வயசு பொண்ணை… ஒரு குறையில்லாம வளர்த்திருக்கிறேள்!”

“நல்லவேளைக்கு… வேது நேக்கு பொண்ணா பிறக்கலை! பிறந்து… இப்படியொரு கொடுமையை நான் அனுபவிக்கிற மாதிரி இருந்திருந்தா… ஹய்யோ பெருமாளே! என்னால தாங்கவே முடியாது போயிருக்கும்!”

“சாரிப்பா! ரொம்ப ரொம்ப சாரி!”

“நேக்கு வேற என்ன சொல்றதுன்னே தெரியல. இதை… உங்களண்ட நேரா சொல்லா… ஒரு பொண்ணா நேக்கு ஒரு மாதிரி இருந்தது. ஆனா… மனசில இருக்கிறதை… இந்த ஷணம் நான் உணர்றதை சொல்லியே ஆகணும் போல இருந்தித்து. சொல்லிட்டேன்.”

“நீங்க… மன்னிக்கிறதும் மன்னிக்காதும், உங்க பிரியம்”

உங்கள் மகள்,
பத்மாவதி.

விஜயின் கரங்கள், கடிதத்தை மடித்து, சட்டைப் பைக்குள் திணித்தன.

யாரும் கவனிக்கவில்லை என்பதை ஊர்ஜிதம் பண்ணிக் கொண்டு நிமிர்ந்தவனின் கண்கள் பனித்திருந்தன.

மனம் தங்கைக்காக உருக, பனித்த கண்களால் பத்மாவைத் தேடினான் விஜய்.

தந்தைக்குக் காப்பியாற்றிக் கொடுத்துக் கொண்டிருந்தாள், பத்மா! அவர் மடியில், வேதாந்த்!

“உறவோவியம்” – அத்தியாயம் 23

ஒரு மாதம் கழிந்த நிலை.

இரவு பத்து மணியிருக்கும்.

சாவித்திரி மற்றும் மாலதியுடன் சேர்ந்து, வீட்டு வேலைகளை முடித்து விட்டு, தங்கள் அறைக்குள் நுழைந்து, கதவைத் தாழிட்டாள் பத்மாவதி.

“ஹே பத்து! கிருஷ்ணா எங்கடி? நீ மட்டும் வர?” என்று வியந்தான் ஸ்ரீனிவாசன்.

“அவன்… அப்பாவோட இருக்கான்னா! நா கூப்பிட்டா வரலையாம்… தத்தா… தத்தான்னு அவரு கழுத்தைக் கட்டிண்டு என்னை விரட்டறது கழுதை!” என்று நொடித்தவாறே, அலமாரியிலிருந்து நைட்டியை எடுத்துக் கொண்டு, அதன் ஓரமாய் திரும்பி நின்று உடை மாற்ற ஆரம்பித்தாள்.

“ஹோ! வர வர… சார் நம்மளைக் கண்டுக்கவே மாட்டேங்கிறார் இல்லையா பத்து? அதுவும்… நைட்ல நீ ஃபீடிங் நிறுத்தினதில இருந்து… ஒரேடியா அப்பாவோடவே ஒட்டிண்டு இருக்கான்” என்றான் ஸ்ரீனி, விரிந்த முறுவலுடன் கட்டிலில் சாய்ந்து படுத்தபடியே.

“ஹ்ம்ம்!!” – பத்மாவின் குரலும் சந்தோஷத்துடனே ஒலித்தது.

“அப்பா வேலைக்குக் கிளம்பும் போது… எப்படி அழறான் தெரியுமா? தாத்தா கூடச் சொல்லிண்டு இருந்தார்… அவன் அப்பா கிளம்பும் போது கூட… டாட்டா சொல்லிட்டுப் பேசாது இருக்கான். தாத்தா கிளம்பும் போது… அழறானேன்னு…” – மகனுக்கும் அவனது தாத்தாவுக்கும் ஏற்பட்டிருக்கும் பந்தத்தை மகிழ்வுடன் கூறினாள் தாய்.

“ஹ்ம்ம்!! அவர்… அவனை ராதான்னு கூப்பிடறதே ஒரு தனி அழகா இருக்குடி!” – ரசித்துச் சொன்னான் ஸ்ரீனி.

வாழ்க்கையில் ஒரு நிறைவு ஏற்பட்டது போல், மனம் லேசானது!

“லைட்டை அணைச்சிடவான்னா?” – சுவிட்ச் போர்டின் அருகே நின்றபடி கேட்ட பத்மாவிற்கு ஒரு தலையசைப்பைப் பதிலாகக் கொடுத்தவன், அவளருகே வந்து படுத்ததும்

“நேக்கு… ரொம்ப சந்தோஷமா இருக்குடி பத்து” என்றான் அவளை அணைத்தபடியே.

அவனது அணைப்புக்கு இசைந்து கொடுத்து, அவனுடன் ஒண்டிக் கொண்டபோதும், பத்மா அவனது சந்தோஷத்தைப் பிரதிபலிக்கவில்லை.

அவன் மார்பில் முகம் புதைத்தவள், “ஆனா… நேக்கு பயமா இருக்கேன்னா” என்றாள் கலக்கமாக.

“ஹே! என்னடி பத்து இது? ஏன்?” என்று வியப்புடன் கேட்ட ஸ்ரீனி, அவளது முகத்தை நிமிர்த்தினான்.

ஜன்னல் வழியே வந்த நிலவொளி, அவளது முகத்தில் படர்ந்திருந்த கவலை ரேகைகளைப் படம் பிடித்துக் காட்ட,

“என்ன பத்து?” என்றான் அவளது முகத்தை ஏந்தி.

“நாளைக்கு… நீங்க பெங்களூர் போறேள் இல்லையா? அதை நினைச்சா… பகீர்ங்கிறதுன்னா!” என்றாள் அவள், அவனது கண்ணோடு கண் நோக்கி.

“பின்ன… போகாது இருக்க முடியுமா? நம்ம… வேது… ஹ்ம்ம் கிருஷ்ணா குட்டியைக் கஷ்டப்படுத்தினவளை சும்மா விட முடியுமா சொல்லு?” எனக் கேட்டவனின் குரலில், வேதனையுடன் சேர்ந்து கோபமும் கலந்திருந்தது.

“விடக் கூடாது தான். அவளுக்குத் தண்டனை வாங்கித் தரணும் தான்… ஆனா…” என இழுத்தாள் பத்மா.

“ஹ்ம்ம்… ஆனா…” என மனைவியை ஊக்கினான் ஸ்ரீனிவாசன்.

“நேக்கு… உங்களை நினைச்சா தான் பயமா இருக்குன்னா. ஏற்கனவே… அவாளைப் பிடிக்கப் போன உங்களை… எப்படி அடிச்சுப் போட்டுட்டா… ரெண்டு நாள் கண்ணு திறக்காம இருந்தேளே! அப்படி… எதுனா ஆகிடுமோன்னு பயமா இருக்குன்னா” என்றாள் அவனது கன்னம் வருடி.

“அதெல்லாம் ஒண்ணும் ஆகாதுடி, பத்து! அவாளுக்குப் பயந்துண்டு… இந்த கேசை இப்படியே விட்டுட்டா… நம்ம வேது மாதிரி எத்தனை குழந்தைகள் கஷ்டப்படுமோ!?” என்றான் ஸ்ரீனி, சமாதானம் போல்.

“ஹ்ம்ம். இருந்தாலும்… அவளைப் பிடிச்சுட்டதா போலீஸ்கிட்ட இருந்து ஃபோன் வந்ததில இருந்து… நேக்கு உடம்பெல்லாம் நடுங்கறதுன்னா. அவளைச் சேர்ந்தவா… உங்களை ஏதானும் செஞ்சுடுவாளோன்னு அடிச்சுக்கிறது” என்றபோது அவளது குரலில் நடுக்கமிருந்தது.

“ச்சே… ச்சே! அசடட்டாம் பயப்படக்கூடாது. ராணியை மட்டுமல்லாது… அவளோட சேர்ந்தவா எல்லாரையும் சுத்தி வளைச்சுப் பிடிச்சுட்டதா தானே

சொல்லியிருக்கா! அதனால... கவலையில்லடி... பத்து” என்றவன், அப்போதும் மனைவியின் முகம் தெளியாமல் இருக்கவே,

“இனிமே நோக்கு... சமாதானம் சொல்ற அளவுக்கு என்னண்ட மேட்டர் இல்லை... அதனால ஆக்க்ஷன்ல இறங்கிடவா?” எனக் கேட்டு, அவளை அணைத்து, கன்னத்தில் ஓர் முத்தம் வைத்தான்.

“ப்ச்... விடுங்கோப்பா... நா எவ்வளவு கவலைப்பட்டுண்டு இருக்கேன்... நீங்க...” என பத்மா அவனைத் தள்ள,

“நா கவலையைப் போக்கிறேன்டி... பத்து!” என்றவன், அவளது கழுத்தில் முகம் புதைத்தான்.

“ஷ்ஹ்...” என முனங்கியபோதும், பத்மாவின் விரல்கள் ஸ்ரீனியின் முதுகில் படரவே செய்தன.

அதன் பின், அவர்கள் நினைவுலகிற்கு மீண்டு வந்தது காலை ஆறு மணிக்குத் தான்.

குளித்துவிட்டு வந்த பத்மா, ஸ்ரீனியை எழுப்பி “நானும் உங்களோட பெங்களூர் வரட்டான்னா?” என்றாள் சிறு பயத்துடன்.

“நீ... இன்னும் அதை விடலையா?” என்று சிரித்தவன்,

“நாளைக்குத் தானே...பாலாஜி கல்யாணத்துக்கு புடவை எடுக்கப் போறதா... பெரியம்மா சொல்லிண்டு இருந்தா? அதுக்கு... நீ இல்லைன்னா நன்னா இருக்காதுடி.. பத்து. நம்ம கல்யாண டையத்தில... பாலாஜியையும் பெரியம்மாவையும் ரொம்ப நோகப் பண்ணியிருக்கேன்... அதை சரி செய்ய முடியலைன்னாலும், முடிஞ்சளவு பாலாஜி கல்யாணத்தில உதவியா இருக்கனும்ன்னு நினைக்கிறேன். இப்போ... புடவை எடுக்கிற டையத்தில... நானுமில்லாது... நீயுமில்லாது இருந்தா நன்னா இருக்காது பத்து. நீயானும் அவாளோட கடைக்குப் போறது... கூடமாட ஒத்தாசை பண்றதுன்னு இரு... என்ன?” என நீளமாய் விளக்கியபோது, பத்மாவால் மறுக்க முடியவில்லை.

“பார்த்துப் போயிட்டு வாங்கோ!” என்று ஆயிரம் வாட்டிச் சொல்லுவதைத் தவிர.

ஸ்ரீனிவாசனும் சேதுமாதவனும் பெங்களூர் செல்வதாய் முடிவாகியிருந்தது.

ஆனால், திடீரென வயிற்றுப்போக்காகி அவர் துவண்டு போய் படுத்திருக்கவும், “உடம்பு இருக்க நிலையில… நீங்க ட்ராவல் பண்ண வேண்டாம் சேதுப்பா. நா பார்த்துக்கிறேன்” என்று அவரைத் தடுத்தான் ஸ்ரீனிவாசன்.

“அவன் வர முடியாட்டி என்னடா… நா வரேன்” என்று முன்வந்தார் பெரிய பெரியப்பா.

“நாளைக்கு… பாலாஜி கல்யாணத்துக்கு புடவை எடுக்கப் போகணும் இல்லையா? அதுக்கு… நீங்க இருக்க வேண்டாமோ?! ஐ வில் மேனேஜ் பெரிப்பா” என அவரை ஸ்ரீனி சமாதானம் செய்து கொண்டிருக்கும் போதே,

“நா வரேன்டா கண்ணா” என்று முன்வந்தார் ராஜகோபாலன்.

“தாத்தா… ” எனத் தொடங்கி, ஸ்ரீனி ஏதோ சொல்வதற்கு முன்னர், “யாரும் போக வேண்டாம். நா அவனோட போறேன்” என்றார் கமலக்கண்ணன் உறுதியான குரலில்.

ஆச்சரியத்தில் விழி விரித்தபோதும், யாரும் ஆட்சேபிக்கவில்லை.

ஸ்ரீனிக்கோ பெருத்த சந்தோசம் என்றே சொல்லவேண்டும்.

தந்தையும் மகனுமாய் பெங்களூருக்குக் கிளம்பினர். காரில் செல்வதாக இருந்தமையால், டிக்கெட் பிரச்சனையும் இல்லாது போகவே, பயணம் இனிதே ஆரம்பித்தது.

அளவான பேச்சுக்கள். ஆழமான பார்வைகள். அவ்வளவே.

பெங்களூர் செஷன்ஸ் நீதிமன்றம்.

ராணியும்… அவளது சகாக்கள்…களத்தில் வேலை செய்யும் பிச்சைக்காரிகள்… களத்தின் பின்னே இயங்கும் தரகர்கள் என்று ஏகப்பட்ட பேரை சுத்தி வளைத்துப் பிடித்திருந்தனர் காவல் துறையினர்.

ராணி தப்பிச் சென்ற ஆட்டோ எண், பத்மா பிடித்த பிச்சைக்காரி, ராணி மற்றும் உமேஷ் (அவர்கள் வீட்டு டிரைவர்) பற்றி ஸ்ரீனி கொடுத்த தகவல்கள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டும், இது போலவே பதிவு செய்யப்பட்ட மற்றும் சில வழக்குகளை அடிப்படையாக கொண்டும், அக்கூட்டத்தைப் பிடித்திருந்தனர்.

அதனால், ஸ்ரீனியை சாட்சி சொல்லவும்... அடையாளம் காட்டி உறுதியாக உண்மை சொல்லவும், கோர்டில் ஆஜாராகும் படி கேட்டிருந்தனர்.

அதற்காக தான், பெங்களூர் வந்திருந்தான் ஸ்ரீனி.

வந்த வேலையும் செவ்வனே முடிந்து, ராணி மற்றும் அவளது கூட்டத்தினர் அனைவருக்கும் தண்டனை உறுதி செய்யப்பட்டது. ஆனால், இன்ன தண்டனை என்பது அடுத்த வாய்தாவில் சொல்லப்படும் என்று அறிவிக்கப் பட்டது.

நீதிமன்ற விசாரணை முடிந்து, வெளியே வந்த ஸ்ரீனியிடம் சில பத்திரிகை நிரூபர்கள் மைக்குடன் வந்தனர்.

“சார்... இந்த சம்பவத்தால நேரடியா பாதிக்கப்பட்டவர் நீங்க? என்ன சொல்ல விரும்புறீங்க?” என்று ஒருவர் ஆங்கிலத்தில் கேட்க,

மற்றொருவரோ “பெத்த பிள்ளையை... வேறொருத்தி கையில...அதுவும் பிச்சை எடுக்கிற நிலையில பார்க்கிறதுங்கிறது எந்தவொரு பேரென்ட்க்குமே கஷ்டமான விஷயம் தான். நீங்க எப்படி அதில இருந்து மீண்டு வந்தீங்க?” என்று கேள்வியை விரிவாக்கினார் மற்றொருவர்.

“ஹ்ம்ம்! எப்படி மீண்டு வந்தேன்?! என்னோட குடும்பம்...என் பின்னாடி இருந்தது! உனக்கொரு கஷ்டமான்னா நாங்க கூட இருக்கோம்ன்னு எனக்குத் துணை இருந்தாங்க... அவங்களோட துணை இல்லாம... நானும் என் மனைவியும் குற்ற உணர்ச்சில கொஞ்சம் கொஞ்சமா புழுங்கிப் புழுங்கி... ஒரு நாள் செத்தே போயிருப்போம். குடும்பங்கிறது... எவ்வளவு முக்கியம்ன்னு புரிய வச்சாங்க. எங்களை மீட்டு எடுத்துட்டு வந்தாங்க.” என்றான் உணர்வுப் பூர்வமாக.

“ஒரு கூட்டுக் குடும்ப சூழல் இல்லாததால தான்… இப்படிப்பட்ட குற்றங்கள் நடக்குதுன்னு சொல்ல வரீங்களா?” என்றார் அவர் மீண்டும்

“கண்டிப்பா! இதுவே… பெரியவங்க துணையிருந்திருந்தா… யாரு கெட்டவங்க… யாரு நல்லவங்கன்னு பகுத்தறிஞ்சு இருப்பாங்க. ஆனா… நாம… ஜஸ்ட் லைக் தட்… பணத்தைத் தூக்கிப் போட்டா எல்லாம் நடக்கும்ன்னு நினைச்சுட்டு… என்னென்னவோ செஞ்சுடுறோம்” என அவன் கூற,

“இந்த சம்பவம் மூலமா… நீங்க ரொம்பப் பக்குவப்பட்ட மாதிரி தெரியுதே? ரொம்பவே மனசளவில பாதிக்கப் பட்டுட்டீங்களோ?” என்று ஒருவரும்,

“as a victim of this incident, what do you want to tell people who are sailing in the same boat as you were at that time?” என இன்னொருவரும் துருவ,

“உங்க முன்னாடி ரெண்டு கோலமிருக்கு. அதில ஒண்ணில ரெண்டே ரெண்டு கோடும்… ரெண்டுக்கும் நடுல கொஞ்சம் கலரும் இருக்கு. இன்னொரு கோலமிருக்கு… அதில ஏகப்பட்ட கோடு… அதுக்கு நடுல ஏகப்பட்ட நெளிவு… சுளிவு… கிராசிங்ன்னு நிறைய இருக்கு. அந்த கிராசிங் இடையே உள்ள இடத்தைப் பல கலர்ஸ் இருக்கு. இதை… நீங்க நல்லா இருக்குன்னு சொல்வீங்க? வெளிப் பார்வைக்குப் பார்க்கும் போது, அந்தச் சின்னக் கோலம்… complicated-ஆ இல்லாது மாதிரியும் அழகாவும் தோணும். ஆனா… அடுத்த கோலத்தில கோடுகள் நிறைய இருந்தாலும்… அதெல்லாம் சங்கமிச்சு உருவாக்குற ஒரு வடிவத்தோட அழகுக்கு முன்னாடி அந்தச் சின்னக் கோலம் நிக்கக் கூட முடியாது.”

“சோ…”

“சின்னக் கோலம்… தனிக் குடித்தனம்! பெரிய கோலம் – கூட்டுக் குடும்பம்!”

அத்தோடு தன் பேச்சை முடித்துக் கொண்டு, அவர்களிடம் விடை பெற்று வந்த ஸ்ரீனியின் தோளில் கைபோட்டு, காருக்கு அழைத்துச் சென்றார் கமலக்கண்ணன்.

அவர் முகத்தில் அப்படியொரு பெருமிதம்!

உறவுகளின் சங்கமத்தால் உருவான ஓவியத்தில் பின்னப்படாமல் இருந்த கடைசி இழையும், மகனின் தோளில் அழுத்தமாய் பதிந்த கமலக்கண்ணனின் அணைப்பில் உறுதி பெற்று மிளிர்ந்தது!